ஆனந்த போதினி

41 1-2

ஜூலை - ஆகஸ்ட், 1955

7L
059.11;N15AB
N55.41.1-2
209051

நதபோதின
மனமதவரு ஆடி மீ
1188
3 அணா

மதிமோச விளக்கம்

(தூசி இராஜகோபால பூபதி அவர்கள் இயற்றியது)

தருமமே தழைத்தோங்கி வளர்ந்துவந்த மகா புண்ணிய பூமிய பரத கண்டத்தில், கலிகாலந் தொடங்கியதிலிருந்து, மனிதர் காலவ மன மாறுபட்டுத் தருமத்தில் செலுத்தும் சிந்தையை மிகுதியும் அத செலுத்தி வருவதால் அறநெறி குறைந்து மறநெறி வளர்ந்து வரு அதற்கேற்ப வஞ்சமும் சூதும், பஞ்சமாபாதகமும், அவற்றிற் கஞ்ச மும் படைத்த மனிதரே நாள்தோறும், நாடுகள்தோறும், ஊர்தோறு கள்தோறும் மலிந்து விநோதம், விநோதமான படுமோசம், ம நிதிமோசங்களையும், சூது வஞ்சனைகளையும் செய்துவருகின்றனர். செல்லச் செல்ல இதற்குமுன் கண்டும், கேட்டுமிராத எண்ணிறந் நாசச் செயல்கள் எங்கும், என்றும் நூதனம் நூதனமாகத் தோன் யற்புதத்துடன் வளர்ந்துகொண்டே வருகின்றன; அவற்றைச் மனிதர்களும் உற்பாத பிண்டங்களாய் ஒருவரை யொருவர் எடுத்து வோராய் அற்புதமாக உற்பவித்து மலையை விழுங்கிய மகாதேவ வளர்ந்து சிறந்து ஜெகஜாலப் புரட்டர்களாயும், அண்டப் புரட் திடீர்ப் புளுகர்களாயும் பரவி வருகின்றனர். இவர்களுடைய மக செயல்களால் சூது வாதறியாத உலகத்தார் அடையும் கஷ்ட நஷ்ட களவேயில்லை. வியாபாரத்தொழில் முழுவதிலும் மோசம்; விவசாய மோசம்; உத்தியோகத் துறைகளிலும் ஒப்பில்லா மோசம்; வித்தை மோசம்; வேடிக்கையிலும் மோசம், வைத்தியத்திலும் மோசம்; மாந்திரீக லும் மோசம்; சோதிடத்திலும் மோசம்; சோற்றுக் கடையிலும் மோச கப்பலிலும் மோசம்; ரெயிலிலும் மோசம்; நீதிச்சபைகளிலும் மோச தேசச்சேவையிலும் மோசம்; கோயிலிலும் மோசம்; குளத்திலும், வீட்டி மோசம்; காட்டிலும் மோசம்; நாட்டிலும் மோசம்; நகரத்திலும் மோச இப்படியே மனிதர் தலைநீட்டுமிடங்களெல்லாம் மோசமாகவே யிருக்கின் இப்படிப்பட்ட மோசங்களிலிருந்து தப்பிப் பிழைப்பதற்கான நீதிமந்திர இதில் விரிவாக விளக்கப்பட்டிருக்கின்றன.

இதன் விலை ரூபா 1—0—0

இரத்தினபுரி இரகசியம்

இதில் மிக்க ஆச்சரியமும், நெஞ்சு திடுக்கிடகூடியவையும், ஆதிமு அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளுமான சம்பவங்கள் நிற துள்ளன. அநேக நீதிகளும், புத்திமதிகளும் தக்க திருட்டாந்த பூர்வ நிரூபிக்கப்படுகின்றன. நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரிகளும் அ மாய் உணரவேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப் பற்றி ஆங்க விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. 9-பாகங்கள்

விலை ரூ. 18—14—0

ஔவையார் அருளிச்செய்த

பெட்டகம்

விலை அணு 0—4—0

5-அணு போஸ்டேஜ் ஸ்டாம்பு அனுப்புவோருக்கு போஸ்டில் ஒ பிரதி அனுப்பப்படும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167 மதராஸ்

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 41 | மன்மதஞு ஆடிமீ கஉ | 1955ஞு ஜூலைமீ 15உ | பகுதி 1

உள்ளுறை.

என்.		பக்கம்.
1.	கடவுள் வணக்கம்	2
2.	தாய் மொழிக்கு அந்தஸ்து அளியுங்கள் (தலையங்கம்)	3
3.	தமிழ் இலக்கியம் கூறும் புதுமைச் செய்திகள்	6
4.	'மொழிக் கலை'	12
5.	யார் அந்தப் பெண்?	15
6.	புலவர் நான்மணி மாலை	17
7.	சூழ்ச்சி	23
8.	மதியொடு பேசும் மங்கை	31
9.	வள்ளி	33
10.	சிக்கனம்	37
11.	இரவில் நகர்	43
12.	பசி	45
13.	பட்டணத்தில் ஓரிரவு	49
12.	வாழ்க்கைப் புயல் (தொடர் கதை)	52
13.	பஞ்சாங்கம்	60

போதினி

209051

கடவுள் வணக்கம்

கதிக்குவழி காட்டுகின்ற கண்ணே என் கண்ணில்
கலந்தமணி யேமணியில் கலந்த கதிர் ஒளியே
விதிக்கும் உலகுயிர்க்குயிராய் விளங்குகின்ற சிவமே
மெய்யுணர்ந்தோர் கையகத்தே விளங்கிய தீங்கனியே
மதிக்குமதிக்கு அப்புறம் போய் வயங்கு தனிநிலையே
மறைமுடியா கமமுடிமேல் வயங்கு இன்ப நிறைவே
துதிக்கும் அன்பர்தொழப் பொதுவில் நடம்புரியும் அரசே
சொன்மாலை சூட்டுகின்றேன் தோளில் அணிந்து அருளே. (1)

அண்டஅளவு எவ்வளவோ அவ் வளவும் அவற்றில்
அமைந்தசரா சர அளவுஎவ் வளவோஅவ் வளவும்
கண்டதுவாய் ஆங்கு அவைகள் தனித்தனியே அகத்தும்
காண்புறத்தும் அகப்புறத்தும் புறப் புறத்தும் விளங்க
விண்டகுபேர் அருட்ஜோதிப் பெரு வெளிக்கு நடுவே
விளங்கியொரு பெருங்கருணைக் கொடி நாட்டி அருளாம்
தண்டகும் ஓர் தனிச்செங்கோல் நடத்தி மன்றில்நடிக்கும்
தனியரசே என்மாலை தாளில் அணிந்து அருளே. (2)

தன்பெருமை தான் அறியாத் தன்மையனே எனது
தனித்தலைவா என்உயிர்க்குள் இனித்த தனிச் சுவையே
நின்பெருமை நான் அறியேன் நான்மட்டோ அறியேன்
நெடுமால் நான்முகன் முதலா மூர்த்திகளும் அறியார்
அன்புறும் ஆகம மறைகள் அறியாவே எனினும்
அவரும் அவைகளும் சிலசொல் அறைகின்றார் நினக்கே
என்பருவங் குறியாதே எனை ஆண்ட அரசே
யானும் அவர்போல் அணிகின்றேன் அணிந்துஇங்கு அருளே. (3)

உண்ணஉண்ணத் தெவிட்டாதே தித்தித்து என் உடம்பொடு
உயிர் உணர்வும் கலந்துகலந்து உள்ளகத்தும் புறத்தும்
தண்ணிய வண்ணம் பரவப் பொங்கி நிறைந்துஆங்கே
ததும்பி என்றன் மயமெல்லாம் தன்மயமே யாக்கி
எண்ணிய என் எண்ணமெலாம் எய்தவொளி வழங்கி
இலங்குகின்ற பேரருளாம் இன்னமுதத் திரளே
புண்ணிய மேஎன் பெரிய பொருளே என்அரசே
புன்மொழி என்றுஇகழாதே புனைந்து மகிழ்ந்து அருளே. (4)

தாய் மொழிக்கு அந்தஸ்து அளியுங்கள்

இந்தியாவில் பல பகுதி மக்களாலும் பேசப்படும் மொழிகள் பல. அவற்றில் முக்கியமாகக் குறிப்பிடத்தக்கவை பதின்மூன்று மொழிகளாகும். அவற்றில் நம் தமிழ் மொழியொன்று என்று சொல்ல வேண்டுவதில்லை. தமிழ் உட்பட இம்மொழிகள் தேசிய மொழிகளாக அரசியல் சட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்றன. ஆதலால், இம்மொழிகளின் முழு வளர்ச்சிக்கு மத்திய அரசாங்கமும் மற்ற ராஜ்ய அரசாங்கங்களும் வேண்டுவன செய்யக் கடமைப்பட்டவைகளாகும். இம்மொழிகளில் ஒவ்வொன்றும் அதனதன் பிரதேசங்களில் உரிய தகுதியைப் பெற்று முதலிடம் பெற்று முழு வளர்ச்சி அடைவதற்கு மேற்குறித்த இரு சர்க்காருமே நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டியது அவசியம். அரசியல் சட்டத்தில் அரசாங்கத்தின் இம்முக்கியக் கடமை வற்புறுத்திக் கூறப்படாமலில்லை. ஆகவே, ராஜ்ய நிர்வாகமும் சர்வகலாசாலை போதனையும் அந்தந்தப் பிரதேச மொழியில்—அதாவது தாய் மொழியில்-நடக்க வேண்டுமென்று வற்புறுத்துவது அரசியல் சட்டத்துக்குப் புறம்பானதொன்றல்ல. ஆகையால், அரசாங்க ஆட்சி மொழியும் கல்லூரி போதனை மொழியும் தாய் மொழியிலேயே நடைபெற வேண்டுமென்று மக்கள் கோருவதை ஆட்சியிலுள்ளோரோ மற்றவர்களோ குறுகிய புத்தி, மொழி வெறி என்று குறை சொல்ல முடியாது.

அரசியல் சட்டத்தில் குறிப்பிட்டுள்ளபடி, மத்திய சர்க்கார்—முக்கியமாக ராஜ்ய சர்க்கார்கள் ஒவ்வொரு ராஜ்யத்திலும் அந்தப் பிரதேச மொழிக்கே அரசாங்க நிர்வாகத்திலும் கல்லூரி பாட போதனையிலும் முதலிடம் கொடுத்து வந்திருக்க வேண்டும். ஆனால், சென்னை ராஜ்யம் போன்ற ஒரு சில ராஜ்யங்கள் மட்டும் பிரதேச மொழியை ஆட்சி மொழியாகவும் கல்லூரி போதன மொழியாகவும் ஆக்காமல் ஏதேதோ சாக்குப் போக்குச் சொல்லிக் காலங் கடத்தி வருகின்றன. நம் சென்னை ராஜ்யத்தைப் பொறுத்த மட்டில், தமிழை ஆட்சிமொழியாகவும் கல்லூரி போதனமொழியாகவும் ஆக்காமல் இருந்து வருவதற்கு, பிற மொழி பேசும் மக்களும் இருந்து வருவதே முக்கிய காரணம் என, சர்க்கார் சார்பில் கூறப்பட்டு வருகிறது. ஆந்திரர்கள் சென்னை ராஜ்யத்தில் இருந்து வந்தவரை இது

போன்று காரணம் சொல்லப்பட்டு வந்ததென்றால் அந்
தச் சமயத்துக்கு அது நியாயமென்று அதை ஒப்புக்
கொண்டிருக்கலாம். தமிழ் மக்களுக்கு அடுத்தபடியாக
இருந்து வந்த ஆந்திரமக்கள் தங்களுக்கெனத் தனி ராஜ்
யம் ஏற்படுத்திக்கொண்டு போய்விட்ட பின், இவ்விதக்
காரணம் சொல்வது சிறிதும் சரியல்ல; முறையுமல்ல. இப்
போது சென்னை ராஜ்யத்திலிருப்பது, மலபார் ஜில்லாவில்
வாழும் சில ஆயிரம் மலையாளிகளும், தென்கன்னட ஜில்
லாவில் வாழும் சில ஆயிரம் கன்னடர்களும் மட்டுமே
தான். இந்த இரு ஜில்லாக்களையும் ஆந்திரர் பிரிந்து
போய்ச் சொந்தமாக ராஜ்யம் ஏற்படுத்திக் கொண்ட
போதே பிரித்து விட்டிருந்தால் அதாவது மலபார் ஜில்
லாவைத் திருவாங்கூர் கொச்சி ராஜ்யத்திலும், தென்கன்
னட ஜில்லாவை மைசூர் ராஜ்யத்திலும் சேர்த்து விட்டிருந்
தால் இந்தத் தொல்லை கூட இருந்திருக்காது. நிர்வாக
அசௌகரியங் காரணமாக அவ்விதம் உடனடியாக ஒரு
மாறுதலை செய்ய முடியாமலிருக்கலாம். அதற்காக ராஜ்யத்
தின் பெரும்பகுதி மக்களான தமிழ்மக்களின்-இந்த ராஜ்
யத்துக்கே உரியவர்களான தமிழ்மக்களின் தாய் மொழி
யான தமிழ்மொழியை ஆட்சி மொழியாகவும் கல்லூரி
போதனமொழியாகவும் ஆக்காமலிருப்பது எவ்வகையிலும்
நியாயமில்லை. பிற மொழியினரும் இருக்கிறார்கள் என்று
பார்த்துக்கொண்டே யிருந்தால், எப்போதும் எம்மொழி
யினராயினும், இருந்துகொண்டே தான் இருப்பார்கள்.
மொழிவழியாக ராஜ்யங்களைப் பிரித்து விட்டால் கூட,
வேற்று மொழியினர் ஒரு சிலர் வியாபாரங் காரணமாகவும்
தொழில் காரணமாகவும் வேறு பல காரணங்களாகவும்
இருந்து கொண்டேதான் இருப்பர். ஆகவே, பெரும்
பான்மையான மக்கள் யார் இருக்கிறார்கள் எனப் பார்த்து-
அவ்வப் பிரதேசத்துக்குச் சொந்தமான மக்கள் எந்த
இனத்தார் எனப் பார்த்து அவர்களுடைய தாய்மொழி
எது என்று பார்த்து அம்மொழியை ஆட்சிமொழியாகவும்
போதன மொழியாகவும் ஆக்குவதே உடனடியாகச் செய்
யக்கூடிய காரியமாகும். பிற மொழியினர் கலந்து வாழ்
கிறார்கள் என்று காரணங் காட்டிக்கொண்டே தமிழ்மொழி
ஆட்சிமொழி யாவதையும் கல்லூரி போதன மொழி யாவ
தையும் தள்ளிப் போட்டுக்கொண்டே போவது சரியல்ல.

பிற நாடுகளில் நம் தமிழ்மொழிக்குத் தகுந்த ஸ்தானம்
கொடுக்கப் படுகிறது; கௌரவம் கொடுக்கப்படுகிறது. தமி
ழர்கள் பிழைப்புக் காரணமாக—வியாபாரங் காரணமாகக்
குடியேறியுள்ள இலங்கை, மலேயா முதலிய வெளிநாடு

களில் தமிழ் அரசாங்க மொழியாக வழங்கி வருகிறது.
கோலாலம்பூர், சிங்கப்பூர், முதலிய பகுதிகளில் மலேயா
மொழி ஆதிக்கம் பெறவேண்டிய பகுதிகளில் தமிழ்
மொழியே முதன்மை பெற்று விளங்குகிறது. இலங்கை
யில் சிங்கள மொழியும் தமிழ்மொழியும் சம அந்தஸ்து
பெற்று விளங்குகிறது. இலங்கையில் தமிழ் ஆட்சிமொழி
யாவதை எதிர்க்கும் குறுகிய புத்தி படைத்த சிங்களர் சில
ருடைய கிளர்ச்சியைக் கண்டிக்கும் முறையில், பிரதமர்
கொத்தலவாலை இலங்கை பார்லிமெண்டில், 'சிங்களமொழி
யோடு செந்தமிழும் ஆட்சிமொழியாக இருக்கும்' என்று
உறுதி கூறி யிருக்கிறார்.

இவ்விதம், வெளிநாடுகளில் தமிழுக்குத் தகுந்த மதிப்புக்
கொடுத்து வழங்குவதைப் பார்த்தும் சென்னை சர்க்கார்
தமிழை ஆட்சிமொழியாக்கத் தயங்குவது வெட்கக்கேடான
விஷயமாகும்.

தமிழை உடனே ஆட்சிமொழியாக்க வேண்டுமென்று
தமிழ் எழுத்தாளர் சங்கம் தீர்மானஞ் செய்து சர்க்காருக்கு
அனுப்பியது. தாய்மொழிப் பற்றுள்ள அறிஞர்களும்
மக்களும் அவ்வப்போது வற்புறுத்திக் கூறி வருகின்றனர்.
சர்க்கார் இந்நியாயமான கோரிக்கையை நிறைவேற்ற மூன்
வராமல், கல்லூரிகளில் தமிழைப் போதன மொழியாக்க எவ்
வித நடவடிக்கை எடுத்துக்கொள்ளலாம் என அறிஞர்களை
யும், பத்திரிகாசிரியர்களையும் யோசனை கேட்பதாகச் சொல்
லிச் சமீபத்தில் கல்விமந்திரி போதனமொழி மாநாடென்று
ஒன்றைக் கூட்டிக் கண்துடைப்பு வேலை செய்யலானர்

உண்மையில், சர்க்காருக்குத் தமிழுக்கு உரிய அந்தஸ்
தைக் கொடுக்க உள்ளமிருக்குமானல், தமிழை உடனே
ஆட்சி மொழியாகவல்லவா செய்திருக்க வேண்டும்? தமிழ்
ஆட்சி மொழியாய் விட்டால், தானே கல்லூரிகளில்
போதன மொழியாகிவிடுகிறது. தும்பை விட்டு வாலைப்
பிடிப்பதுபோல், செய்ய வேண்டிய தொன்றை முதலில்
செய்யாமல், பின் இயற்கையாக—எளிதாக—நடக்கக்
கூடிய ஒரு காரியத்துக்கு மாநாடென்று ஒரு சடங்கை
அந்தரங்கமாகச் செய்ய வேண்டிய அவசியமில்லை. தாய்
மொழிக்கு உரிய அந்தஸ்தை-ராஜ்ய நிர்வாக மொழியாகும்
கௌரவத்தைத் தருவதில் அரசியல் சட்டமே அங்கீகாரம்
அளித்திருப்பதால், மத்திய அரசாங்கம் என்ன கருதி
விடுமோ என்று அஞ்சவேண்டிய அவசியமுமில்லை.
துணிந்து தமிழை ஆட்சி மொழியாக்கிச் சென்னை சர்க்கார்
நற்பெயர் வாங்கவேண்டும். அதற்கு இது ஒரு நல்ல சந்
தர்ப்பம் என நாம் கூற விரும்புகின்றோம்.

தமிழ் இலக்கியம் கூறும் புதுமைச் செய்திகள்

அறிவு ஒளி

★

புதியவைகளை அறியவேண்டும் என்னும் ஆவலே உள்ளத்தின் 'பகுத்தறிவு'டைமையை அறிவிக்கும்; மக்களுக்கும் மற்றவைகட்கும் வேற்றுமை கற்பிக்கும் "அறிகொறும் அறிதொறும் அறியாமை காண்பது அறிவின் சிறப்பு" என்பர் குறள் மேதை.

தமிழிலக்கியம் இருண்ட உலகமாக இருக்கிறது. பண்டைய ஐரோப்பியர் தம் ஐரோப்பா தவிர, ஏனைய நாடுகளைப் பற்றி ஏதும் அறியாதிருந்தனர். சீனரும் தம நாட்டைத் தவிர, ஐரோப்பா முதலிய நாடுகளை அறியாதிருந்தனர்.* 'உலகம்' என்று அவர்கள் குறிப்பிடும்போது ஐரோப்பாவு(ம்) அதன் தொடர்புடைய நாடுகளை மட்டுமே தம் எண்ணத்தில் கொண்டிருந்தனர். அவர்களைப் போலன்றி தமிழ்கத்தினர் ஞால நாடுகள் யாவையும் உணர்ந்திருந்தனர். இன்றோ, தம் தாயகம்—தமிழ்ப்பண்பு—தமிழ் இலக்கியம்—தமிழ்க் கலை—தமிழ் மரபு ஆகியவைகளை முற்றும மறந்து—புறக்கணித்து மற்றைய நாடுகளின் செயதிகள, வரலாறுகள் ஆகியவைகளையே போற்றி கற்றுக் களிக்கின்றனர். இத்தகைய இருள் நிலை அகலும் நற்காலமான தற்காலம், வருங்காலத்திறகு ஒரு நன்னம்பிக்கை அளிக்கிறது. தமிழ் இலக்கியங்களில் பல புதுமையும் சுவையும் கனிந்த காட்சிகளும, கருத்துக்களும் அளவின்றி மலிந்து கிடக்கின்றன. அவற்றுள் சிலவற்றை விளக்குவது என் நோக்கம்.

தமிழர்கள் 'எண்' கலையிலும், வான ஆராய்ச்சி, நில நூற் கலை, கால ஆராய்ச்சி, அறிவியல, கணக்கியல் ஆய பல்வகைத் துறைகளிலும் மேதைகளாய் விளங்கினர். கூடலூர் கிழார் என்பவர் விண்மீன்களை ஆராய்ந்தறியும் ஆற்றல் வாய்ந்தவர்

* இக் கருத்துக்கு அரண் செய்யும் E. H. Carter என்ற வரலாற்றாசிரியரின் மொழிகளை உன்னி அறிக:

"The Greeks and Chinese of that time knew nothing about each other. The highest mountains in the world; the Himalayas, and other ranges, stood between them by land and no one had yet travelled so for by sea."

என்பதற்குப் புறநானூறு பாடல் சான்று கூறும்.† கணியன் பூங்குன்றன் என்ற அறிவியல்—ஆய்வியல்—கொள்கை இயல்—இயற்கை இயல் மேதை ஒரு கணக்குப் பேரறிஞர். 'கணியன்' என்போர் வான்—கோள்—மீன்—பருவம்—காலம் ஆகியவைகளை ஆராய்ந்தறிந்து வாழும் புலமை சான்றவர்கள். பூங்குன்றனாரின் "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற 192-ம் புறநானூற்றுப் பாடல் சான்றாண்மையின் கொடு முடியிலே விளங்கி நிற்பது யாவரும் அறிந்ததே. அப்பாட்டுக்கு ஒப்பதுமில்லை; மிக்கதுமில்லை என்று மூதறிவாளர் யாவரும் வேறுபாடின்றி நிலை நாட்டிய முற்றும் முடிந்த முடிபு. பண்டைத் தமிழர் நேரம் அறிதற் பொருட்டு 'பொழுது அறிபொறி" அமைத்திருந்தனர். "காலக் கணக்கர், நாழிகைக் கணக்கர்" எனப் பெயரிய அரசியல் பணியாளர்கள் விளங்கியதைக் கல்வெட்டு—பட்டயங்கள்—நூற்கள்—வரலாறுகள் கூறும் மேற்கோள்களால் அறியலாம். அவ்வுண்மைக்கு அரண் செய்யும் இலக்கியக் குறிப்பு அகநானூறு—களிற்றியானை நிரை 43-ம் பாடலில் மதுரையாசிரியர் நல்லந்துவனரால் பொறிக்கப்பட்டிருக்கிறது. பண்டைநாளில் கதிரவனைக் கொண்டும் பருவ இயற்கை இயக்கங்கள், விண்மீன்களின் நிலைமாற்றம் ஆகியவை கொண்டும் பொழுதை அளந்தறிந்தனர். அதா அன்றி மாரிகாலத்தே—இருள் உலகைக்கவ்வி காலமறியாது தடுத்த காலத்தே நாழிகை அளந்தறிய ஒரு பொறி கண்டு பிடித்து வழங்கி வந்தனர். கன்னல் "கன்னல்" என்ற பெயரில் அஃது அழைக்கப்பட்டது. கன்னல் எனின் நாழிகை வட்டில் (கன்னல் என்ன நாழிகை எனவும் பொருள் உண்டு) இவ்வாறு 'கன்னலால்' கால மளக்கும் அறிவியலாரைக் "கன்னல் எண்ணுநர்" எனப் பாடல் குறிப்பிடுகிறது.

† கோச்சேரமான் யானைக்கட் சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறையின் சாவை முன்னதாகக் கூறியவர் இவர். புறம் 229ம் பாடல் இவர் வான ஆராய்ச்சி யறிவினை விரிக்கும்:

"ஆடுஇயல் அழற்குடத்து
ஆர்இருள் அரை இரவின்
முடப்பனையத்து வேர் முதலா
கடைக்குளத்துக் கயம்காயப்
பங்குனி உயர் அழுவத்துத்
தலைநாள் மீன் நிலைதிரிய
நிலைநாள் மீன் அதன் எதிர்ஏர்தரத்
தொல்நாள் மீன் துறை படியப்
பாசிச்செல்லா தூசி முன்னுறு
தளக்கர்இனை விளக்காகக்
கனையெரி பரப்பக் கால் எதிர்பு பொங்கி
ஒருமீன் விழுந்தன்றால் விசும்பினானே."

[புறம் 229—1—12-ம் அடிகள்]

"கட்டல் முகந்துகொண்ட கமஞ்சூல் மாமழை
சுடர்நிமிர் மின்னொடு வலனேர்பு இரங்கி
என்றூழ் உழந்த புன்தலை மடப்பிடி
கைமாய் நீத்தம் களிற்றொடு படீஇய
நிலனும் விசும்பும் நீரியைந்து ஒன்றிக்
குறுநீர்க் கன்னல் எண்ணுநர் அல்லது
கதிர் மருங்கறியா தஞ்சுவரப் பாஅய்த்
தளி மயங்கின்றே தண்குரல் எழிலி."

[அகம்; 43 பாலை. மதுரையாசிரியர் நல்லந்துவனார்.]

["குளிர்ந்த முகத்தைக் கொண்ட கார்முகில்கள் மழை பெய்யும் காலம், கடலின் நீரை முகந்து நிறைந்த சூலினையுடைய கருமுகில் சுடர் வீசும் மின்னலோடு வலமாக எழுந்து சென்று ஒலித்து, கதிரவனின் வெப்பத்தால் துன்புற்ற புற்கென்ற தலையுடைய இளம் பெண் யானை, மேலே தூக்கிய தன் கையும் மறையத்தக்க ஆழமான வெள்ளத்தில் களிற்றுடன் வீழ்ந்து விளையாட, நிலத்திலும், வானத்திலும் மழைநீர் பொருந்திச் சேர்ந்திட, சிறிதளவே நீர் உடைய நாழிகை வட்டிலால் நாழிகை அளந்து கூறுவார் கூறினாலன்றி, பகலவன் உள்ள இடம் இது என்று அறிய முடியாமையின் உலகம் அஞ்சுமளவிற்கு எங்கும் பரவிப் பெய்யும் மழையொடு பொருந்தியது."]

பண்டைய மேதைகள் அறிவியலின் நெடுங்கணக்கைத் துவக்கி அறிந்த உண்மைகளை இலக்கியம் கூறும் இன்சுவைச் செய்தியால் அறியும்போது வியப்பும் ஒருங்கே உலுக்குகிறதன்றோ!

மக்கள் நாகரிகத்தின் தலைவாயிலை அடைந்த அப்போது முதற்கொண்டே அழகு புனைந்து கொள்ளுவதிலும், ஒப்பனை பூணுதலிலும் பெருவிருப்பும் ஆர்வமும் காட்டினர். உலகில் முதன்முதலில் கண்ணாடி இல்லாத காலம் ஒன்று இருந்தது. அப்போது தெளிந்த தண்ணீரில் தங்கள் உருவத்தின் நிழலைக் கண்டு அழகைச் சுவைத்தனர். இக் காலங்களிலும் வாய் அகன்ற பானைகளில் தெளிந்த நீரை ஊற்றி, அசையாது ஓரிடத்தே வைத்து அதில் முகம் பார்த்துக் கொள்வதும், தலைவாரிப் பூச்சூடி, பொட்டிட்டுக் கொள்வதும் நிகழ்வதைக் காணலாம். நீரும், அதில் தோன்றும் நிழலையும் பற்றித் திருக்குறள், கலித்தொகை ஆகிய பேரின்பப் பேரிலக்கியங்களில் பாட்டுக்கள் பல குறிப்புக்களைக் கொடுக்கின்றன. அந்நாளிலேயே மக்கள் தம் உருவத்தின் எதிரொலிப்பைக் காண்பதற்காக 'கண்ணாடி' செய்ய அறிந்திருந்தனர் என்பதற்கு இலக்கியம் சான்று கூறுகிறது. அக்காலத்தினர் 'ஆடி' என்ற சொல்லால் கண்ணாடியை வழங்கினர். ஆலங்குடி வங்கனார் என்ற புலவர் பெருமான் குறுந்தொகையில்

"கையும் காலும் தூக்கத் தூக்கும்
ஆடிப் பாவை போல."

என்று கண்ணாடியையும், அதன் நிழலோவியத்தையும் உவமையாக எடுத்தாள்கிறார். அந்தி இளங்கீரனார் என்ற இன்னிசைப்

புலவர் அகநானூறு களிற்றியானை நிரை 74-ம் பாட்டில் கண்ணாடியைச் செய்யும் கலையையும்—அதில் பல வகைகள் இருந்தமையையும் குறிப்பாலுணர்த்துகிறார். அதா அன்றி, கண்ணாடியில் ஆவியைப் படவைத்தால் (நம் மூக் கருகில் கொண்டு சென்று மூச்சு விட்டால்) அந்த ஆவி, தெள்ளிய தூயகண்ணாடியில் பட்டு சற்றே கறை உண்டாக்கும். பொழுது செல்லச் செல்ல அந்நீராவி காற்றின் வெப்பத்தால் காய்ந்து உலர்ந்து விடும். இந்தக் காட்சியைத் தலைவனைப் பிரிந்த தலைவி; அவன் பிரிவின் ஏக்கத்தால் வாடி சிறிது சிறிதாக உடம்பின் ஆற்றலும் அழகும் வன்மையும் குறைந்து மாய்வதற்கு உவமையாகக் கூறுகிறார். ஆடியில் பட்ட ஆவி காற்றின் வெம்மையால் விரைந்து மறையுமாப் போலத் தலைவனைப் பிரிந்த தலைவி பிரிவென்ற வெம்மையால் உடல் நலிந்து விரைந்து மாய்கிறாள் என்று அழகொழுக புலவர் புதிய செய்தியை அரிய ஓவியமாக்கி அழகிய வாழ்விலக்கியம் படைக்கிறார்.

"எள் அறஇயற்றிய நிழல் காண் மண்டிலத்து
உள் ஊது ஆவியில் பையப்பைய நுணுகி
மதுகை மாய்தல் வேண்டும்........"

—(அகம். 71—அந்தியிளங் கீரனார். 13-15 அடிகள்)

நம் நாட்டில் விடியற் காலையில் தெரு, வீடு, வாயில், முற்றம் ஆகியவைகளைத் திருவலகு (விளக்குமாறு) கொண்டு பெருக்கித் தூய்மை செய்து, நீர் தெளித்து மாக் கோலம் புனைவதை இயல்பாகக் கொண்டிருக்கிறோம். இத்தகைய ஒப்பரிய நாகரிகம் பண்டை நாளிலிருந்தே பயின்று வருகிறது என இலக்கியம் கூறும் இன்னிசைச் செய்தி அறிவிக்க; அறியலாம். மதுரைமா நகரின் முற்றங்களை ஞாயிற்றின் பொற் கதிர்கள் விரியக்கூடிய வைகறைப் போதில் அலகு கொண்டு செற்றை, குப்பையாகிய தூராலைப் பெருக்கி வாருதலைப் பற்றி கலித்தொகையில் மருதக் கலி 96ம் பாட்டில் குறிப்பிடப் படுகிறது.

"......கதிர் விரி வைகலின் கை வாரூஉக் கொண்ட
மதுரைப் பெரு முற்றம் போல......"

—(மருதக்கலி. 96-22-23.)

பண்டைக் காலத்திருந்தே மக்கள் நகரத் தூய்மை செய்து வந்துள்ள நனிநாகரிகம் எண்ணற் குரியது. பண்டை நாகரிகம் இன்றும் நம்மிடை வழக்காற்றில் நிலவி வருவதை ஓர்ந்து உள்ளார்ந்த உவகையால் பொங்குவோமாக!

உலகில் இறப்பும் பிறப்பும் எளிமையான என்பர் அறிவிற் சிறிய ஆன்றோர். ஆயின், உணர்வின் மிக்க ஏனையோர் இறப்பைத் தாங்கரும் இன்னாவாகக் கருதிக் கலுழ்வது வைகலும் காணுமோர் மெய்மை. ஆடவரினும் மகளிரே சாவுக்கு அஞ்சி, அல்லற்பட்டு அவமுற்று ஆற்று அலறி அழுது, மார்பில் அறைந்தடித்து ஆற்றாமை புலப்படுப்பர். இக்காட்சியினை

இன்றளவும் நாம் வீடுதோறும் காணல் இயல்பு. பன்னூற்றாண்டுகட்கு முற்பட்ட காலத்திலும் பெண்பாலர் இவ்வியற்கையோடிலங்கிய உண்மையினை இலக்கியக் காட்சி காட்டும். பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் தன்னோடு மாறுபட்டுப் பொருத மாற்றலரைப் போரில் தூறியடித்து வென்றான். அம்மாற்றார் படைகளை இரக்கமின்றிக் கொன்றான். அதனால் பகை நாட்டுக் கற்புடை மகளிர் கைம்மை கொண்டு கணவருக்காக முலை பொலி ஆகத்தில் அறைந்து அழுதும், கருமணலென நிறைந்து விளங்கும் செழித்த கூந்தலைக் கொய்தும் காணரும் கொடுமைக் காட்சியரான இரங்கத்தக்க நிலையைப் புறநானூறு 25ம் பாட்டில் புலவர் கல்லாடனார் புகல்கிறார்.

> "முலைபொலி அகம் உருப்ப நூறி
> மெய்ம் மறந்து பட்ட வரையாப் பூசல்
> ஒண்ணுதன் மகளிர் கைம்மை கூர
> அவிர் அறல் கடுக்கும் அம்மென்
> குவை இருங் கூந்தல் கொய்தல் கண்டே."
>
> —(புறநானூறு 25. கல்லாடர். 10—14.)

தமிழகம் வளமைக்கு வைப்பு; செழுமைக்குச் சான்று. நிலமும் தாயும் தந்தையுமாக விளங்கித் தமிழக மக்களைப் புரந்து காக்கும் பொய்யாப் புகழ் சான்ற பெருமைக்குரியது தண்டமிழ்த் திருநிலம். இந்நாட்டில், அக்காலத்தில்) குறைந்த உழைப்பால் மிகுந்த செல்வம் ஈட்டி வாழ்த்த இனிய செய்தியினை இலக்கியம் காட்டுகிறது. "உழைப்பால் வியர்க்காத உடம்புடைய தமிழர் உணவு உண்டு வியர்ப்பர்" என்ற இன்பமான உண்மையை கோவூர்கிழார் புறநானூறு 386ம் பாடலில் கூறுகிறார். இன்றும் காவிரியனைய யாறுகள் வளஞ்செய்யும் வளமார்ந்த நிலத்தின் வாழும் மக்கள் குறைந்த உழைப்பினராகவும் நிறைந்த திருவினராகவும் பொலிந்து சிறப்பதைக் காண்கிறோம். கோவூர் கிழாரும் சோழன் குள முற்றத்துத் துஞ்சிய கிள்ளிவளவனைப் புகழ்ந்து பாடிய பாடலில் சோழ நாட்டு மக்களின் உழையாப் பிழைப்பைச் செம் மாதது பாடுகிறார்.

> "வெய்து உண்ட வியர்ப்பு அல்லது
> செய்தொழிலான் வியர்ப் பறியாமை."
>
> —(புறம். 386. 7—8.)

மிக்க வெம்மையான உணவை உண்டதால் உண்டான வியர்வையைத் தவிரத் தொழில் செய்வதால் உண்டாகும் வியர்வை அறியாத சிறப்புடைய வாழ்வைச் சோழன் செங்கோல் அளித்ததாகப் புகல்வர் புகலுவார்.

அக்காலத்தில் சோழ நாட்டில் நெற் கழனிகளைச் சுற்றிலும் கரும்பை வேலியாகப் பயிரிடுவார்களாம். இக்கூற்றினை மேற் பாடலில் கோவூர் கிழார் பாடுகிறார்.

"வயலே, நெல்லின் வேலி நீடிய கரும்பின் பாத்தி....." (புறம். 386. 10—11) என்பர். இதனால் தள்ளாவிளையுள தாழ்விலாச் செல்வரும் சீரும் சிறப்பும் செம்மையும் வாய்க்கப் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்த வாழ்வை எண்ணின் ஏக்கத்தால் நம்மகம் விம்மிப் பொருமுகினறதன்றோ?

சோழ நாட்டுத் துறைமுகங்களிலே எண்ணற்ற பிற நாட்டு மரக்கலங்கள் தமிழகப் பொருள்களை வாங்குதற்காக வந்து தங்கும் அம்மரக்கலங்களை விளையாட்டுக்கார இளம் பெண்கள் எண்ணிப் பார்த்து மகிழ்வர். இன்றும் சிறுவர் சிறுமியர் புகை வண்டியின் பெட்டிகளை எண்ணிக் களிப்பதைக் காண்கிறோமன்றோ!

> "கடலே, கால்தந்த கலம் எண்ணுவோர்
> கானல் புன்னைச் சினை அலைக்குந்து."
>
> (புறம் 38?. 14—15)

நெய்தல் நிலத்தின் கடற்கரையிலே, காற்றின் ஆற்றலை உதவிபெற்று வந்த மரக்கலங்களை எண்ணும் மகளிர் உறையும் கனற்சோலையில் இருக்கும் புன்னை மரங்களின் கிளைகளைக் கடலலைகள் அலைக்கும் காட்சியைக் கோவூர் கிழார் காட்டும் மாட்சியை விளக்கலும் ஆமோ?

இஃதனைய இனிய புதுமைச் செய்திகள் பண்டைத் தமிழ்ப் பனுவல்கள் யாவற்றினும் செறிந்து கிடக்கின்றன. கற்பார்க்குப் பல்லாற்றானும் பேரின்பம் நல்கும் புதையலாம் தமிழ்ச் செல்வ அரண்மனையில் ஆராய்ச்சியாளர்க்கு அரும்பொருள் வைப்பும் அளவற்றன உண்டு. காலமும் கருத்தும் அந்நுண் பொருட்களை ஞாலத்திற்கு வழங்குமாக!

கற்பக சுந்தரி

அல்லது

மூன்று கறைகளின் மர்மம்

இதில் பொதுவாய் ஆண்பாலார் பெண்பாலார் யாவர்க்கும் பல நற்புத்திகளைப் புகட்டத்தக்க விஷயங்களே அடங்கியிருக்கின்றன. நம் சகோதர சகோதரிகள் அவசியம் படிக்கத்தக்க கதை.

இரண்டு பாகங்கள் அடங்கியது

இதன் விலை ரூபா 3. (தபாற் செலவு வேறு.)

ஆனந்தபோதினி ஆபீஸ்,

தபால் பெட்டி நெ. 167, சென்னை-1.

‘மொழிக் கலை’ ★

செந்தமிழ்ப் பித்தன்

★

உணர்வு என்னும் ஆற்றல் இயங்கத் தொடங்கிய காலத்திருந்து உலகம் இயற்கையின் நுண்மையும், உண்மையும், தன்மையும் கற்று; அறிவுவள முற்றது. புலன்கள் ஐந்தும் பொய்யாது உணர்ந்து, துய்த்து அறிந்த பின்பே பண்பு நனி சிறந்தோங்கியது.

உணர்வின் சீரிய வெற்றியானது; உணர்ச்சி தானே இயங்கும் நிலையினின்றும் மாறி, மற்றதையும் இயக்கும் நிலையை அடைந்த பின்பே அமைந்தது.

உணர்வு வெளிப்பாட்டை முறையான முறையில் வெளியிட மக்கள் பல்லாண்டுகள் புலனாலும் இயற்கையாலும் விலங்கு புள்ளினங்கள் ஆய பிறவாலும் அறிந்து, சிறிது சிறிதாகத் தன்னைச் செம்மையும சீர்மையும் செய்துகொண்டு, இயங்கவும் இயக்கவும் முயன்றனர். இம் முயற்சியே வாழ்க்கையை அமைத்தது. வளர்ச்சியையும் இன்பத்தையும் சமைத்தது. இவ் வளர்ச்சியின் முயற்சியே ‘இலக்கியம்’, ‘கலை,’ ‘வாழ்வியல்’ ஆகியவைகளை உண்டாக்கியது.

மொழி உண்டாக்க முனைந்த முயற்சியிலேயே கலை தோன்றியது. கலைகள் உண்டாவதற்கு முன்னர் மொழியை உண்டாக்க முயன்றார் மூத்தோர்.

ஓவியக்கலை ஈன்ற அரு நல்லமிழ்தக் குழந்தையே மொழி.

உணர்ச்சியை முதன்முதலில் உணர்த்த முயன்ற மக்கள் மொழியையே அதற்குரிய சீரிய செவ்வழியாகக் கண்டனர். உணர்ச்சி மிக்கபோது இயல்பில் காற்றின் இயக்கத்தால் ஒலி உண்டானது. உடலும் இயங்கி அசைவதாயிற்று. என்னையெனில் கூச்சலும் (ஓசை) ஆட்டமும் (அசைவு) உணர்வை வெளியிடும் முதல் வழிகளாய் அமைந்தது.

இன்றும் அப் பண்டையநாள் இயல்பு மாறாது வழங்குவதை நன்குணரல் கூடும்.

துன்பம் மிகுந்தபோது நெஞ்சின் துடிப்புணர்வு தாளாது (குழந்தை முதல் முதியவர் வரை) எவரும் ‘ஓ’வெனக் கதறி அழுவதைக் காண்டல் இயல்பு. இறப்பு நிகழ்ந்த வழி அழுகையும், விம்மலும், பொருமலும், அரற்றலும் ஏற்படல் உலக இயல்பன்றோ? அஃதொப்ப எதிர்பாராத வகையில் ஏதேனும் இடரோ, தீமையோ நேரின் ‘ஆ!’ என்றோ ‘ஓ’வென்று, “ஐயோ!” என்றோ “ஊ”வென்றோ “வீ”லென்றோ ஒலித்தல் இயல்பு.

சீற்றம் வந்துற்ற காலை, “உம்...ஊம்...” எனவும், குரல் உதறலும், பதறலும் ஏற்படுதலை யாவரும் அறிவர். அஃதன்றி இன்பமோ, நகைச்சுவையோ மிகுங் காலத்தும் “இ...இ...ஈ...” “ஓ...ஓ...”, “ஆ...அ...ஆ...” என்பன போன்ற சிரிப்பொலியும். “கக்...கக்...” “...நக்க்...நக்க்...” போன்ற மெல்லிய ஓசையும், வல்லினப்ஒலியும் சிரிப்புணர்வின் நிலைமைக்கேற்பவும் உள்ளத்து உவகையின் அளவைக் கேற்பவும் வலிந்தும், மெலிந்தும்; உயர்ந்தும், அமர்ந்தும்; விரைந்தும், அதமர்ந்தும்; வேறுவேறு யிருக்கின்றமை இயற்கை.

அச்சம், அயர்வு, அன்பு, இரக்கம், ஏக்கம் ஆகிய உணர்வு நிலைகளிலும் “ஐ...அ...” ஆகிய ‘கேவி’ ஒலிக்கும் ஒலியும், “உச்,... உம்...” எனவும், ‘அ...இ...’ எனவும்; ‘ஐயோ!’; “த்சொ”; “உம்;” எனவும்; ‘ப்ச்’ எனவும்; ‘ப்ச்’ என ஏக்கத்திற்கு நாக்கினால் முன் அண்ணத்தில் மெள்ள விரைந்து இணைத்து பிரித்து புதுமையான ஓசை எழுப்பியும்; சுவை யுணர்வை உணரும் காலத்தில் நாக்கைச் சப்பிக் கொட்டியும், மூச்சையும் நாக்கையும் வாயையும் குவித்துக் காற்றை உள்ளிழுத்தோ; வெளிவிட்டோ; குளிர்—வெம்மை ஆகிய உணர்வுகளையும் ஒலிக் குறிப்பினாலே உணர்ந்தும், உணர்த்தியும் வாழ்கிறோம். இவ்வொலிகளுக்கு ‘எழுத்து’—(உருவம்) இல்லை. எனவே இவை மொழியில் சேரவில்லை. மேற்கூறிய ஒலிகளும், இவை போன்ற பிற (உணர்வு-கருத்து இவைகளை வெளியிடும்) ஒலிகளும் ஏதோ ஒரு நோக்கத்தோடு வெளிப்பட்டுப் பயன் விளைத்தும், வாழ்க்கைக்கு மிக இன்றியமையாது அமைந்திருந்தும்! பன்னெடுங்காலம் சற்றும் மாறாது வழக்காற்றில் பயின்று வாழ்ந்திருந்தும் இவ்வொலிகளைத் தெளிவாகக் குறிக்க ஞாலமொழிகள் எதனிலும் சீரிய எழுத்தில்லை. அஃது மட்டுமின்றி இவ்வொலிகளை ‘மொழி’யாகவும் மக்கள் கருதவில்லை, இவ் வகையினவைகளை ‘நடிப்பு மொழி’ எனலாம்.

இவண் குறிக்கப்பெற்ற ஒலிக் குறிப்புக்கள், (ஓசை நடிப்புக்கள்) உலக மக்கள் அனைவருக்கும்—வேறு வேறான பலமொழி பேசும் மக்களுக்கும், மேற்குறித்த உணர்ச்சிகளுக்கு ஒலிக் குறிப்புக்கள் பொதுவாகவும் இயல்பாகவும் அமைந்துள்ளன. எனவே இவ் வொலிக்குறிப்பு மொழிகளை ‘உலகப் பொதுமொழி எனல் சாலப் பொருந்தும். எம்மொழியினரும் மேற்குறித்த உணர்ச்சிகளுக்கு மேற்குறித்த ஒலிக்குறிப்பை—மொழி நடிப்பையே பயன்படுத்துகின்றனர். ஈண்டு யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்னும் பெருங்கொள்கை பொதுவாயமைந்த நிலைமை எண்ணி வியத்தற்குரிய தொன்றாம்!

எனவே உணர்ச்சியை முதன்மையாகவும், சிறப்பாகவும் வெளியிட வல்லதும்; உணர வல்லதும் மொழியே (ஒலியே) என்பது தெற்றென விளங்கா நிற்கும்.

இவண் நாமாய்ந்தவையின்று ஒன்று மிகச் செம்மையாகத் தேற இடனுண்டு. அஃதென்னையோ வெனின், உணர்வின் எழுச்சியால் ஒலியும் (இசைக்கலை) ஒலியின் உணர்ச்சிக்கேற்ப உடலியக்கமும் (நடிப்புக்கலை, ஆடற்கலை, கூத்து)=(அசைவும்) ஒலியை நிலையாக—உணர்வை நிலையாக—தெளிவாக அறிவிக்கவோ, பிற்காலத்தவருக்கு உணர்த்தவோ எழுத்து (வரை உருவம்)=(மொழி) (ஓவியக்கலை) உண்டாக்கினர் மக்களின் முதல்வர்.

இதனால் இசைக்கலை, மொழிக்கலை, இலக்கியம் ஆடற்கலை (நாடகம்) ஓவியக்கலை ஆகியவை மக்கள் மக்களாகத் தோன்றத் துவங்கிய காலத்திருந்தே தாமும் தோன்றி மாண்போடு மாநிலத்

தில் மக்கள் வாழ்க்கையோடு ஒன்றிப் பயின்று, வாழ்வும், வையகமும், வளமும், நலனும் நனி சிறக்க வாழ்ந்து, வளர்ந்து ஓங்கலாயிற்றென்பது நன்குணரப்படும்.

ஒலிக்கேற்ற உருவக்குறிப்பே எழுத்தாக—மொழியாக மாறிற்று. அவ்வொலியைக் குறிக்கும் எழுத்தை 'ஒலி ஓவியம்' என அழைப்பது சால அமையும்.

மொழி ஒலியின் உடம்பாகும். (மெய் ஆகும்) மொழி ஒலி ஓவிய மன்றோ? ஆம், ஆகவே, இயற்கையின வெளிப்பாடான ஒலி உயிராகவும், அவ்வுயிர் இயங்க உதவும். (உயிர் இருப்பதை உணர்த்த உதவும்) மொழி—எழுத்து உடலாகவும் (மெய்யாகவும்) அமைந்த நிலைமை எண்ணுதற் குரியது.

உயிரும் மெய்யும் கூடினலல்லது உலகமோ, இயக்கமோ, செயலோ, நிகழாதன்றோ! எனவே 'மொழி' என்னும் உலகம் (மக்கள்) இயங்க, 'ஒலி' என்னும் உயிரும்; எழுத்தென்னும் மெய்யும் (உடல்) புணர்ந்து ஒருமையாகிப் பினைப் தொழிற்படலாயிற்று. இஃது இயற்கையின் கூட்டுப்புணர்ச்சி இயற்கையின் அடிப்படைக் கொள்கை.

உயிரும் மெய்யும் ஒன்றாகி இயங்குங்காலத்தே தான் மொழி, உரிமையாக வினை செய்ய முற்படுகிறது. எனவே அதன கண்ணிருந்து 'உயிர் மெய்' தோன்றிப் பயன் தருவதாயிற்று.

மொழித்தோற்றத்தின் முதல் நிலை இஃதாம். ஒலியாயியங்கியமொழி உருவாக (எழுத்து) இயங்கி, உருவும் செம்மையும் சீர்மையும் பெற்று அழகுற்று, பண்பும் நலனும் மாண்பும் மிக்கதாகி; கொள்கையும், நோக்கமும் பொலிந்து விளங்க, 'இலக்கணம்—இலக்கியம்' என்னும் செம்மை வாழ்க்கை வாழ்வதாயிற்று.

இவ்வண்ணம் இலக்கியமும் இலக்கணமும் அமைந்த நிலைமையானது; உயிரிழுக்கத்தின் பாற்பட்ட உயிர்கள் கூடி வாழ முயன்று உறவும் நட்பும் முதிர்ந்து, இயற்கையின் உண்மையைப் புலன்களால் ஓர்ந்துணர்ந்து, அறிந்து, ஒழுக்கம் மிக்குயர்ந்து, உயர்நிலை யுற்று அறிவியலும், புலனும் செவ்வையுற்ற பின்னர் வீடும் நாடும் அமைத்து மக்கள் மன்றத்தை அமைத்த நிலையை ஒப்பதாகும்!

இவ்வகையாய் மொழியின் வரலாறு வளர்ந்து சிறக்கின்றது.

மொழிக்கலை தன்னோடு பிற கலைகளையும் உடன்பிறந்தோராய்ப் பெற்றே ஞாலத்தில் தோன்றிற்று.

இவ்வுண்மையை இன்றும் கலைகளின் உறவு நிலைகளிலிருந்து நாம் எளிதில் அறிதல் கூடும்.

ஏனைய கலைகளை கலைக்குரிய சிறப்புத் தகுதியின் கண் நிறுத்திய மக்கள்; வாழ்க்கையின் முழுமையிலும் நிறைந்து பயன்படும் மொழிக்கலையை மட்டும் 'கலை' உணர்வு இன்றி—கலைத்தகுதி இன்றிப்பயன் படுத்துகின்றனர். மக்களோடு இரண்டறக் கலந்து விட்ட மொழிக்கலையின் பெருமையை மக்கள் செம்மையாய் உணரவில்லை. 'பழகப் பழகப் பாலும் புளிக்கும்' என்ற பழமொழி பொய்க்குமா?

யார் அந்தப் பெண்?

கோமகள்

மணி நான்கு அடித்தது. சத்திய மூர்த்தி ஆபீஸ் விட்டு வந்தான். டிபன் தட்டை அவன் எதிரில் வைத்த சாரதா தன் கணவனை நோக்கி, "கொஞ்சம் போய்ட்டு வரவா? செடிகளுக்குத் தண்ணீர் ஊற்றிக்கொண்டிருந்தேன். நீங்கள் சாப்பிட்டு முடிவதற்குள் கொஞ்சம் பாக்கி யிருக்கிறது. அதற்கும் ஊற்றிவிட்டு வந்துவிடுகிறேன்" என்று குடத்துடன் முன்பக்கம் சென்றாள்.

சத்தியமூர்த்தி தட்டை நகர்த்தினான். சாரதாவிற்குத் தோட்டக் கலையில் ஆர்வமதிகம். வீட்டின் முன்புறம் கேட், அதையடுத்து பூச்செடிகள்—நடு மையத்தில் வீடு இப்படி சாரதாவின் மனதில் பட்டதோ சத்தியமூர்த்தி இன்ஜினீயராதலால் அப்படியே ஒரு வீட்டைக் கட்டிக் கொடுத்து விட்டான். முன்புற கேட்டைத் திறந்தால் முதலில் மூக்கிற்கு நறுமணம், பின் கண்கட்கு களிவிருந்து, கடைசியாக இதயத்திற்குக் குதூகலம்தான்! அத்தனை அழகாக அமைத்து விட்டாள் சாரதா.

காலையில் ஆபீஸ் சென்றால் மாலையில் திரும்பும் சத்தியமூர்த்தி கொல்லையில் நடந்திருக்கும் புதிய சீர்திருத்தத்தைக் கண்டு சாரதாவின் பொழுதே கொல்லையில்தான் கழியுமோ என்று சந்தேகப்படுவான். நண்பர்கள் தோட்டத்தைப் பார்த்து விட்டுப் புகழும்போது பெருமிதம் கொள்வான், மனைவியை நினைத்துச் சந்தோஷப்படுவான்.

தட்டிலிருந்த ஐந்தாறு மசால்வடையும், தீர்ந்து விட்டது. எதிரே கிளாஸிலிருந்த பாதாம்கீரையும் உறிஞ்சி விட்டான். அடுத்த இஷ்டமான காப்பிக்காக அவன் வாய் பரபரத்தது. ஆனால் எதிரே காப்பியைக் காணோம். சத்தியமூர்த்திக்கு எப்போதுமே ஞாபகமறதி அதிகம். 'ஏன் சாரதா இன்னும் காபி கொண்டுவரவில்லை' என்று மண்டையைக் குடைந்து கொண்டதும் விடை கிடைத்தது. சாரதா தண்ணீர் ஊற்றிவிட்டு வருகிறேனென்றவள் இன்னும் வரவில்லை.

அவன் எழுந்து முன் ஹாலிற்கு வந்தான். முன்பக்க ஜன்னலோரம் மாணிக்கம் பூவும், கொடி சம்பங்கியும் 'ஆர்ச்'சாக அடர்ந்தவிடத்தில் சாரதா யாரோ ஒரு பெண்மணியுடன பேசிக்கொண்டிருந்தாள். "ஓகோ, அவள் சீக்கிரம் வாராததில் வியப்பில்லை. யாரோ பால்ய சிநேகிதை வந்திருக்கிறாள் போலிருக்கிறது." என்று அவன் எண்ணியதுதான் தாமதம். அவர்கள் பேச்சு அவனைக் கவர்ந்தது.

"உங்கள் கணவர் உங்கள் தோட்டக் கலைக்கு உதவி செய்கிறாரா?" என்றாள் வந்தவள்.

"ஓ, இப்போதுகூட உள்ளே அவரை டிபன் சாப்பிட வைத்துவிட்டுத் தண்ணீர் ஊற்ற வந்துவிட்டேன்."

"அவர் கோபித்துக் கொள்ளமாட்டாரா?"

"அவருக்குப் பெண்களை அடக்கியாள்வதே பிடிக்காது. அவரவர்களுக்குப் பிடித்தவாறு வாழவேண்டுமென்ற கொள்கையுடையவர்."

"அடுப்பங்கரை வேலை செய்த நேரம் போகத்தானே தோட்ட வேலை செய்கிறீர்கள்."

"இல்லை; சமயற்காரன் இருக்கிறான்."

"நீங்கள் கொடுத்து வைத்தவர்கள். இந்த அழகான புஷ்பத் தோட்டத்தை விட்டுச் செல்லவே எனக்கு மனமில்லை. எனக்கானால் வீட்டில் ஒழிவே கிடையாது. நீங்கள் மட்டுமா இந்த அழகிய தோட்டத்தை உருவாக்கினீர்கள்,"

"அந்தப் பெருமை என்னை மட்டும் சாராது. என் கணவரின் அண்ணனும், அவர் மனைவியும் எல்லோரும் ஒன்றாக இருக்கிறோம். அக்காவும், நானுமாகத்தான் இந்தத் தோட்டத்தை நிர்மாணம் செய்தோம்."

"அவர்களை நான் பார்க்கலாமா?"

"இப்போது அவர்களிருவரும் ஊருக்குப் போயிருக்கிறார்களே. உள்ளே வாருங்கள். டிபன் சாப்பிட்டுவிட்டுப் போகலாம்."

அப்பெண்மணி டிபன் சாப்பிட்டுவிட்டு விடை பெற்றுச் சென்றுவிட்டாள். கேட்டை மூடிவிட்டு வந்த சாரதா மகிழ்வதனத்துடன் 'காபி' கொணர்ந்து சத்தியமூர்த்தியின் எதிரில் நின்றாள்.

சத்தியமூர்த்தி அவளைப் பார்த்துச் சிரித்தவாறே "அந்தப் பெண்ணின் புகழ்ச்சியில் உன் தலையில் ரொம்பவும் குளிர்ந்து விட்டது போலிருக்கிறதே. உன் தலையில் ஒரு பொட்டு நீர் தெளித்தால் ஐஸ் கட்டியாய் மாறினால் நான் ஆச்சரியப்பட மாட்டேன்" என்றான்.

"போதுமே உங்கள் பரிகாசம்! அக்கா இல்லாமல் எனக்குப் பிடிக்கவேயில்லை. இன்று ராத்திரி வண்டிக்காவது வந்து விடுவார்களா?" என்று பேச்சை மாற்றினாள்.

"அது போகட்டும். சாரதா! வந்த பெண் யார்? உன் பால்யத் தோழியா?"

"இல்லையே! ஐயய்யோ, அது யாரென்றே எனக்குத் தெரியாதே! சும்மா தோட்டத்தைப் பார்க்க வந்தாள்......"

"பெயர் தெரியாதவளா? நாசமாய்ப் போச்சு போ. நாலு மணிக்குப் போனவள் ஐந்தரை மணிவரையிலும் அடுப்பங்கரையிலிருந்து அரசியல் வரை அலசிப் பிழிந்தீர்கள். பார்த்தால் பழக்கமாகாத புதிய பெண். பெயர் என்னவென்று கூடக் கேட்கவில்லை. இன்னும் தெரிந்த பெண்ணானால் சாரதா எனக்கு நீ எத்தனை மணிக்கு வந்து காபி தருவாயோ?" என்று நகைத்தான் சத்தியமூர்த்தி.

சாரதா அசடு வழிய நின்றாள்!

புலவர் நான்மணி மாலை

கே. ஆர். வைத்தியலிங்கம்

★

காப்பு

நேரிசை வெண்பா

சீராரும் செந்தமிழின் தேவி திருமலர்த்தாள்
பாரோரும் போற்றப் பரவி—வாராரும்
நன்முலையாய் நற்புலவர் நான்மணி மாலை தன்னை
தென்றமிழில் செப்புகின்றேன் தேர்.

நேரிசை வெண்பா

செந்தமிழ் வான்மிசைத் திங்களெனத் தோன்றிநற்
பைந்தமிழின் சிறப்பெல்லாம் பாடியே—சந்ததமும்
நாட்டின் துயர்நீக்க ஞாலமிசை நின்றார்த்தப்
பாட்டுக் கொருபுலவன் பார். 1

கட்டளைக் கலித்துறை

பாரெலாம் போற்றப் பணிபுரி நேசிகன் பைந்தமிழின்
சீரெலாம் நாட்டிற் குணர்த்திச் சுவைபெய்து பொன்கவி
ஊரெலாம் போற்றிப் பணிந்திடும் 'ஆசிய ஜோதி' தனை
பாரெலாம் வாழ்த்த அளித்தனன் பண்புடன் வாழியவே! 2

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வாழ்க உலகம் எஞ்ஞான்றும் மாதவன் 'காந்திப் போத'மதை
தாழ்வும் கலப்பும் இன்றியிந்தத் தாரணி யெங்கும் மகிழ்ந்திடவே
வாழ்வு தமிழர் செழித்தோங்க வண்டமிழ்ப் பாவாற் கவிசொற்ற
வாழ்வு ஓங்க நாமக்கல் கவிஞா! நும்புகழ் பரவுகவே! 3

நேரிசை யாசிரியப்பா

பரவியே வாழ்த்தும் பைந்தமிழ் நாட்டின்
அறனெறி யெல்லாம் அவனியில் விரித்துப்
போலி வேடம் சீலம் கெட்டக்
காலிகள் தன்னைக் கடுத்துத் தாக்கிச்
சாதி மதத்தின் சூதினை யுரைத்து
'யாதும் ஊரே யாவரும் கேளிர்!'
என்னும் தண்டமிழ்க் கொள்கை விளக்கி
மன்பதை யுய்ய மணித்தமிழ் தன்னால்
புரட்டினைத் தவிர்க்கும் அறப்பொறி
புரட்சி பாரதி தாசன் வாழ்கவே! 4

நேரிசை வெண்பா

'வாழ்கநீ எம்மா'னிவ் வையத்து ளென்றகவித்
தாழ்வொழித்த காந்திக்குத் தக்கதேயாம்—ஆழ்ந்திடுநம்
பொன்கவிக்கு நேரிந்தப் பூதலத்தில் இல்லையென்றும்
உன்கவிக்கு நேரார் உரை. 5

கட்டளைக் கலித்துறை

உருகியாம் நிற்கின்றோ மென்னி லுயர்வுள்ள நின்கவியைப்
பருகியாம் என்று மகிழ்வோடுப் பைந்தமிழ்ச் சோலையது
தருகின்ற இன்பத் தண்ணமுதை மாந்தித் தருக்குடனே
திரிகின்ற தேனமுதைத் தந்திட்ட வெங்கள் தேசிகனே! 6

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

ஏட்டில் எழுதி யிந்நாட்டின் இயல்பை மாந்தர்க் கறிவித்தாய்
பாட்டில் வரைந்து பழந்தமிழின் பண்பை யாண்டும் பரப்புவித்
நாட்டின் நிலையை நன்குணர்ந்து நலமார் காந்தி போதமதை [தாய்
தேட்ட மிக்க தென்றுரைத்த செம்மை நாளும் மறவோமே! 7

நேரிசை யாசிரியப்பா

ஓதும் வேதம் உலகிடைச் சிறந்தது
யாதும் அதற்கு நிகரில யென்றச்
சூதினை விரித்தும் சூத்திரம் உரைத்தும்
வேதியர்க் குகந்ததே வேதம் அன்றித்
தண்டமிழ் மாந்தர்க் குகந்ததே யன்றென
வண்டமிழ் நீதி நூல்பல காட்டி
பார்ப்பனன் உயர்ந்தோன் எனும்பழ மொழியை
ஆர்த்து நொறுக்கிய அஞ்சா நெஞ்சன்
ஆரியர் தம்மைப் புகழும் சாத்திரம்
வீரப் போர்முறை விரித்திடும் நூலெலாம்
நூறி யெறியென நுவலிய கவிஞன்
பாரில் செந்தமிழ் உயர
நாளும் பணிபுரி நற்றமி ழோனே! 8

நேரிசை வெண்பா

நற்றமிழில் பாட்டிசைத்து நல்குரவை நீக்கவென்ற
பெற்றியையா மென்னென்போம் பெட்புடனே-நற்கவியைக்
கேளாச் செவியும் கிளத்தாத நாவுமெந்த
நாளுமுறும் துன்பமென நாட்டு. 9

கட்டளைக் கலித்துறை

நாட்டினாய் சொற்சுவைப் பாவால் உலகத் துயரொழியத்
தீட்டினாய் தண்டமிழ்க் காவில் திசையெட் டுமேதிளைக்கக்
காட்டினாய் நன்மார்க்கப் பல்துறை யுங்கே ளெனப்புகன்ற
நாட்டுக் கொருவள்ளல் நீயே கவிமணி நாஞ்சிலோயே! 10

எண் சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

கலைபலவுங் கற்றறிந்து உலக மீது
காசு பணத் தாசையின்றிக் கடமை யாற்றி
மலையன்ன துன்பங்கள் நேர்ந்த போதும்
மக்களுக்கு நல்வழியே காட்டி நின்ற
நிலைதளரா உத்தமனும் காந்தி யார்தம்
நேர்மைக்கோர் நற்புலவன் தியாகச் செம்மல்
கலைதிகழும் காந்தீயக் கவிபு னையும்
கள்ளமிலா நாமக்கல் புலவ னம்மா! 11

நேரிசை யாசிரியப்பா

புலமைக் கனவே பாரதி தாசன்
அலகில் அவனுக் கிணையா ரென்போம்
செந்தமிழ்ப் பகைக்குச் செங்கொருப் பாவான்
வந்திடும் பகைக்கு மார்தட்டி நிற்பவன்
தண்டமிழ் என்றால் தழைக்க! என்பான்
வண்டமிழ் என்றால் வாழ்க! என்பான்
அடக்கு முறையின் ஆணைக் கஞ்சிடான்
துடுக்கு மொழியிலும் தோல்வி யுற்றிடான்
மொழிக்குயிர் என்றால் முடியுமுன் கொடுப்பான்
இழிவு செய்பவர் யாவ ராயினும்
தயங்கிட மாட்டான் தாக்குதற் கஞ்சான்
பயப்படும் வித்தையைப் படித்தறி யாதவன்
பிறநாட் டறிஞரைப் புகழ்ந்திடத் தவறான்
பிறமொழி தனையும் பொன்னெனப் போற்றுவான்
ஆனால்,
தாய்மொழி யிருக்கத் தன்திரு நாட்டில்
பேய்மொழி யாட்சியின் பெற்றியைச் சாடுவோன்
நீறு பூத்த நெருப்பாம் பாரதிப்
பேறினை விளக்கும் தாசன்
புதுவைக் கிழவோன் புரட்சிக் கவிஞனே! 12

நேரிசை வெண்பா

கற்றோரும் காமுறுவர் கல்விநலம் காணாத
மற்றோரும் சொக்கிநிற்பர் மாநிலத்தில்—முற்றுணர்ந்த
பாரதியின் இன்பப் பனிமலர்ச் சோலைதனில்
யாருக்கும் உண்டு விருந்து. 13

கட்டளைக் கலித்துறை

உண்டோ 'மலருமாலை'க்கு நிகர்தா னுலகிடையே
விண்டோ ரெவரையுங் கண்டில மேதினி லென்றுகனி
பண்ணார் கவிமணி செம்மால்! உனது புலமைகற்றில்
தண்டைச் சிலம்பொலி கேட்குதே தாயி னிடமிருந்தே! 14

எண் சீர்க்கழி நெடிலடியாசிரிய விருத்தம்

இருட்படலம் தமிழ்நாட்டைச் சூழ்ந்து நிற்க
இன்றமிழர் இயங்கிவழி யறியா தந்தோ!
துரும்பெனவே யலைகின்ற போழ்தில் வெற்றிச்
சங்கொலியால் நாமக்கல் தன்னில் நின்று
பெரும்பகையைப் போக்கிடவே முழக்கம் செய்து
பேசுகின்ற சிவகிராமம் தன்னில் வாழ்ந்த
அருந்தவனும் மகாத்மாவின் அகிம்ஸா தீபம்
அனைத்துலகும் இன்பமுற ஏந்தி நின்றாய்! 15

நேரிசை யாசிரியப்பா

ஆய்புகழ் வளர்க்கும் அருந்தமிழ்ப் புதுவைத்
தாய்மடி வளர்ந்த தகைசால் புலவன்
இயற்றிய கவிதையில் யாண்டும் புரட்சிப்
பயிற்றுவள் வீரத் தாய்வளர் சேய்க்கு
நாட்டிற் பிறந்தும நற்பணி யின்றியும்
தேட்ட மின்றியும் திரிதரு மாந்தரோ(டு)
உலகையும் ஊரையும் ஏய்த்துப் பிழைப்போர்
நலமின்றி வாழ்ந்து நாட்டையே மாற்றி
வாழும் தீயரை வாளால் சாய்த்து
நாளும் உழைத்து நல்லுண வின்றி
பட்டினி கிடந்தும் பாருக் குழைத்துச்
சட்டத் தின்கீழ் தயங்கியே நசுங்கும்
பாட்டா ளிசமு தாய மோங்க
நாட்டிற் சமத்துவந் தன்னை நிறுவி
உழவும் தொழிலும் உலகிடை யோங்க
இழிவும் இன்னலும் நீங்கிச் சிறப்புற
ஓதும் கவிஞன் உழைத்திடும் புலவன்
நீதி யென்றால் யார்க்கும் ஒன்றெனப்
பாட்டுரை பகரும் கலைஞன்
ஏட்டுச் சுரையை எடுத்தெறி வானே! 16

நேரிசை வெண்பா

வான்மிசை வள்ளுவனை வைத்து வணங்கியதும்
தேன்சொட்டும் பாடலினால் திக்கெட்டும்—ஆன்றதமிழ்
கோவினுக்கு இல்லைநிகர் கம்பனுக்கும் என்றிசைத்த
பாவினுக்கும் உண்டோ புகல்? 17

கட்டளைக் கலித்துறை

புகலுவ தென்னே குமரியந் தூதன் புதுப்பணியை
மகிழும் வனிதையர் இன்ப மயக்கத் துறைவிடுத்தே
மகிபன் கவிமணி தேசிகன் தீந்தமிழ்ப் பாவிசைத்து
அகில முழுதும் திரிகின்றா னென்னேயிவ் வற்புதமே! 18

அறுசீர்க்கழி நெடிலடி யாசிரிய விருத்தம்

என்னே யவளும் அவனென்னும்
இனிய காதை உவமைகளும்
பொன்னி யன்ன புகழ்ப ரப்பும்
புதுமைச் சங்கொலி போதமதும்
உன்னும் மாதவன் சரிதைதன்னை
உரைத்த மாண்பின் பெற்றியெலாம்
ஒன்றாய்ச் சேர்த்து ஆஸ்தானப்
புலவ னாக ஆக்கியதோ? 19

நேரிசை யாசிரியப்பா

புலவன் புதுவைத் தொன்னகர் வாழ்வோன்
உலகில் நேர்மையை உரைத்திடும் புரட்சி
பாரதி தாசன் பைந்தமிழ்க் கடலெனும்
வாரிதி வோர்நாள் வழுக்கி வீழ்ந்தனன்
அச்சத் தாலென் ஆகமம் சில்லிட!
மெச்சும் அறிவுடை மேன்மக்க ளென்போர்
கரையும் சொற்கள் காதினிற் பட்டது
'தரையினி மீளான் சாக்கடை விழுந்தான்
பாரினில் கற்றும் பலரிகழ்ச் சாக்கடை
வாரிதி வீழ்ந்தான் என்னே யிவன்மதி!'
என்றனர் சிலவர் ஏற்றுவோம் கரையென
நன்றியில் சாதிக் கொடுமைக ளென்னும்
கயிற்றை வீசிப் பிடித்துக் கொள்ளென
மயக்கும் பழைய புராணங் களென்னும்
தோணியைப் பக்கலிற் தள்ளி விட்டனர்
ஆணுக் குப்பெண் அடிமைதா னென்னும்
பண்டைய ஏணியைப் பற்றிவா வென்றனர்
உண்டு கழித்து ஒருதொழி லின்றி
உறங்கியே நாளை யொழித்திடும் பார்ப்பனன்
திறத்தினால் திரும்பவும் செம்புகழ் பெறலாம்
என்றெலாம் இயம்பும் ஏச்சுக டனுக்கு
என்றனைக் கரைக்கு இழுத்திடும் சக்தி
இல்லை யென்பதைக் கண்டனன் யானும்
சொல்லெனும் புரட்சி அலைகளுக் கிடையே
செங்கரம் ஓய்ந்து திக்குமுக் காட
பொங்கும் கடலுள் ஆழ்கின னம்மா!
நன்றுசேர் மதிரவி நண்ணிய தென்னும்
என்றும் காணா வினிய ஒளியிடை
பொன்னெனச் சுடர்விடும் பூந்துகி லுடையொடு
மின்னிடைத் தாங்கி யன்ன நடைபயில்
வில்லெனும் புருவத் தல்லெனும் குழன்மிசை
மெல்லிதழ் விரிய வரிவண் டார்ப்ப!
மெல்லிழை நுழையா மணிபுரள் பூந்தன

நல்லியல் புள்ள நங்கை யொருத்தி
சங்க இலக்கியம் செந்தமிழ்க் காவியம்
இங்கிதப் பண்டை யின்னருங் கோவைத்
தன்னொடு என்னைத் தழுவினள் ஆகமம்;
கன்னல் மொழியுடன் புன்னகை தவழும்
இன்னறு வதனமும் எழிலுடை சோபையும்
என்னை யீர்த்திட இதயம் கவர்ந்தனள்
இன்பத் தமிழின் இலக்கியத் தேறல்
தன்னொடு புதுமைக் கண்டெனும் தீஞ்சுவை
மதுவினை யூட்டினள் மாத்தமிழ்க் கன்னி
கதுமெனப் பருகினன் கனித்தமிழ்க் கள்ளை
உண்டபின் மங்கிய ஒளியிலோர் காட்சி
கண்டனன் அதனைக் கழறுவ தென்னே!
விதவை மகளிர் விரும்பிய புருடரை
இதமுடன் மணந்து இன்பத் திருந்தனர்
சாதி மறைமை சழக்குக ளின்றி
'ஏதிலார் போல பொதுநோக்கு நோக்குதல்
காதலர் கண்ணே யுள' வெனும் வள்ளுவன்
ஆதவன் உரையை அனைவரும் போற்றி
புகழ்ந்திடும் காட்சியைக் கண்டு மகிழ்ந்தேன்
இகழ்ந்திடும் பொருந்தா இச்சையில் மணத்தை
வெட்டிச் சாய்த்திடும் வீரரைக் கண்டேன்
சட்டம் செந்தமிழ் திட்டம் பைந்தமிழ்
காணும் இடமெலாம் கனித்தமிழ் பேச்சு
பண்ணும் இசையும் பைந்தமிழ் ஆஹா!
எண்ணும் எண்ணமும் நினைவும் வண்டமிழ்
காலின் ஓசையும் நீரின் ஒலியும்
நூலின் தன்மையும் நுவலும் கவிதைகள்
சிங்க கர்ஜனை சிறுத்தையின் சீற்றம்
இங்கிதக் குயிலொடு எழில்கருங் காகமும்
பட்சிகள் மிருகம் பாரிடை யாவும்
வெட்சி சூடிய தென்றமிழ் இயற்கை
மொழியினில் இசைக்கும் நற்றிறம் கண்டனன்
அழிவில் தமிழென யானும் மாற்றினேன்
தமிழுக் கழிவெனும் சப்தம் கேட்டது
இமைநொடிப் போழ்தில் வேலொடு தோன்றினன்
மேனி யழகும் வீரமுங் கண்டு
நாணினேன் போதை தெளிந்திடப் புரண்டேன்
பாரதி தாசன் கவிதைகள்
பார்மிசை யிருந்து மசங்கிட வீழ்ந்ததே!

(அடுத்த இதழில் முடிவுறும்.)

சூழ்ச்சி ★

கே. வி. நடராஜன

★

மழை வெளியே கொட்டிக்கொண் டிருந்தது.

சில் என்ற காற்று ஜன்னல் வழியாய் அவன் முகத்தில் அடித்தது என்றாலும் வியர்வை முத்தாக அரும்பி நின்றது. அவன் அதைக் கவனியாது இருந்தான்.

அவிழ்த்து விடப்பட்ட குதிரைபோல அவன் மனம் வெளியே அலைந்தது. எண்ண அலையின் மீது தாவித்தாவி மனம் நீந்தியது.

அவன் மனச்சாட்சி ஆரம்பித்தது.

"என்ன, இன்னுமா தயக்கம்? தாமதிக்காதே! ஒரு நிமிஷமும் வீணாக்காதே! சமயம் தவறினால், திரும்பி வராது. முள்ளை முளையிலேயே மக்க அடிக்க, அதைப் பிடுங்கி வேரோடு வெளியே எறியவேண்டும். மலர்ந்த மொட்டு மறுபடியும் முகையாகாது. சென்ற வெள்ளம் மீண்டு திரும்பாது. நீ அசட்டுத்தனம் செய்கிறாய். பிறகுதான் சும்மா உட்காரேன். எழுந்திரு; மனத்திலே அசட்டுத்தனம் அலையிட, எண்ணக்குமிழிகள் குவிய, உணர்ச்சிச் சுழலிலே சிக்கிக் கொள்ளாதே. காலமறிந்து காரியங்களைக் கைக்கொள்ளவேண்டும்."

"சரிதான், நீ நினைத்தவுடன் காரியம் ஆகிவிடுமா என்ன? கைக்கொண்ட காரியத்தைப் பிறகு கைவிடுவது கயமைத்தனமாகும். இடம், பொருள், ஏவல், ஆவன கண்டு, கருமம் புரிய வேண்டும்."

அவன் சந்தேகப் பேய், ஜாக்கிரதைத் தன்மையை எச்சரித்தது.

மனச்சாட்சி மேலும் எண்ணத்தைப் பின்னியது. "தூங்கின வன் கன்று போலத்தான், போ! அவள் கட்டாயம் உன் வலையில் விழ மறுத்து விடுவாள்! கண்ணி வைத்தால் மட்டும் போதுமா? பட்சியைப் பக்குவமாக வசியப்படுத்த முயற்சிக்க வேண்டும். அதற்குரிய சந்தர்ப்பம் நாளை மாலை காலமும் கருதவேண்டும். உடனே அவளை வர ஏற்பாடு செய்! பிறகு எல்லாம் ஆறுதான். தைரியம்தான் வேண்டும்! ஏன் உடனே தாருகவே சாதகமாகும்! எழுந்திரு, மேல் ஆவனவற்றைக் கவனி"......ஹஹ்ஹா!......"

என்ன பயங்கரப் பேய்ச்சிரிப்பு, கோரச்சிரிப்பு! சைத்தானின் அகமலர்ந்த மகிழ்ச்சி!

அது வரை நாற்காலியில் உட்கார்ந்திருந்த அவன் திடுக்கிட்டு விழித்தான்! "யார் சிரிக்கிறது? ஒருவரையும் காணோமே!—சுற்றுமுற்றும் திகிலுடன் பார்த்தான் அவன். இருட்டைக் கண்ட குழந்தை பயத்துடன் பதறுவது போலப் பார்த்தான்.

'சீ பயமென்ன?" என்று தேற்றிக்கொண்டான் தன்னையே!

"பயமென்னவா? நான்தான்—உன் மனச்சாட்சி—பேசுறேன்! அங்கு மிங்கும் பார்க்காதே. உனக்குள்ளேயே கவனத்துடன் பார்த்துக் கொள்! உனக்குப் பயமில்லையா? நாளை வருந்

வெள்ளிக்கிழமை உனக்குத் திருமணம்! ஆனால் அவள்—உன் 'முதல்' மனைவி—சீ மனைவியா, முதல் மலர், முகர்ந்த மலர்—உலகின் முன் 'கன்னி'—உன்னிடம் வந்தால்? உன் பட்டம் பதவி, பவிஷு, கவுரவம், நட்பு, சுற்றத்தார், பிறகு உன் புது மனைவி—அவள் அன்பு, ஆர்வம், ஆசை, அழகு, குணம்—எல்லாமே, காற்றில் பட்டம் விடும்போது அறுந்து போவதுபோல, ஒருவிதப் பிடிப்புமின்றி அதோகதமான பாதாளத்தில் தள்ளப்படுவதுபோல இழந்துவிட்டு, அனாதையாக யாவரும் தூற்றும் நிலையிலே வாழ உனக்கு விருப்பமா? உன்னைக் கண்டு உலகம் எள்ளி நகையாடுமே! அப்படி எல்லாம் ஆக நீ உண்மையாக விரும்புகிறாயா? 'உண்மை' என்ற ஒரு பொருள் 'மருந்துக்காவது' உன்னிடம் இருந்தால்! வேண்டாம்! நான் சொல்வதைக் கேள்! நீ மிகவும் ஜாக்கிரதையாகச் சகுந்தலாவை—உன் முதல் மலரை-உலகத்திலிருந்து அகற்றிவிடு!—இவ்வுலக பந்தத்திலிருந்து உன்னைப் பிடித்திருக்கும் தளையிலிருந்து அகற்றி விடு. அதற்குரிய நேரம் நாளை மாலைதான். இல்லாவிடில் நீ—இன்றைய அவலமான ஆடம்பர அழுக்கில் புழுங்கிக் கிடக்கும் நீ—நாளை எப்படி வெளியே புகழ் தாங்கி வருவாய்? அவள் முன்—உன் அகல்யாமுன்—எப்படி தலைநிமிர்ந்து நடப்பாய்? நீ இல்லாவிட்டால், அவள் வேறு யாராவது துணை கொள்வாள். ஆனால் அவள் பணம், என்ன ஆவது?

"சீ, மேன்மேலும் என்னென்னவோ பேசிக்கொண்டே போகிறாய்? யோசனை யற்றும் பிதற்றுகிறாய்?"

"ஆமாம், நீ முன்னமேயே யோசனையுடன் சகுந்தலையோடு தொடர்பு கொள்ளாமல் கவுரவமாய் இருந்திருந்தால், நான் ஏன் பேசவேண்டும்? ஊசி வழிதானே நூல் செல்லும்?"

உண்மை சவுக்கடி போல் தோன்றியது.

"மண்ணாங்கட்டி, நீ சும்மா இரு! யோசனை செய்யவிடாமல் அடிக்கடி குட்டியிட்ட பூனைபோல நீ......

"நீ ஓர் எலி; அவள் ஓர் பூனை; அப் பூனையிடம் நீ அகப்பட்டுக்கொண்டு இருக்கிறாய்! ஆனால் அவளை நீ சாதாரணப்பூச்சி என நம்புகிறாய்! சரி; குப்பையைக் குருவிக்கிறை, நெளியும் புழுக்கள்போல பல எண்ணங்கள் உன் மனத்திலே தோனறுகின்றன. நான் சொல்வதைக் கேள். மனிதன் எப்போதுமே "காவலமைந்த கட்டமைந்த, பாதுகாப்பைத்தான் விரும்புகிறான். சிறு வயதிலே மனிதன் பிறரைக் கண்டு அஞ்சுகிறான்; வயது வந்ததும் உணவு, உடை, வீடு இவை தரும் பணத்திற்குப் பாழாகிறான்; ஏன், இவை இல்லாத பயங்கரத்தைப பார்க்கச் சகிக்காத தன்மையால்! மனிதனின் வாழ்க்கையே 'பயத்தால்' சூழப்பட்டுள்ளது. அந்தப் பயத்தினின்று "பாதுகாப்பை" அவனுக்கு அளித்தால் அவன் ஆனந்தம் அடைகிறான. ஆனா அவன் அந்தப் பாதுகாப்பில் தான் படுமோசமான பயங்கர மரணம் இருக்கிறது என்பதை அறிவதில்லை. ஏனெனில், மனி

தன் அவற்றை நம்பி மோசம் போகிறான். ஆகவே சேகர், பேசாமல் சகுந்தலாவிற்குப் பாதுகாப்பைக் கொடு. அவள் உன்னை நம்புவாள். குருவிக்குத் தானியம் வீசி அதன் மீது வலை வீசினால் தான் நீ 'வேட்டைக்காரன் ஆவாய்!"

"நாளை காலை சகுந்தலாவை ஓர் ஓட்டலுக்கு வரச் செய். இருவரும் ஓர் அறை ஏற்பாடு செய்து கொள்ளுங்கள். உன் பெயரை மாத்திரம் பதிவு செங்துகொள். பிறகு மாலை காற்று வாங்குவதுபோல இருவரும் ஊருக்கு வெளியே போங்கள். மேற்கேயுள்ள, மூன்று மைலுக்கப்பாலுள்ள சிறு கிணற்றுக்குப் போங்கள். நீ சாதாரணமாகக் கரையில் அமர்ந்துகொண்டு அவளையும் உன் பக்கத்தில் ஆத்திரத்துடன் உட்கார வைத்துக்கொள். பிறகு அவளுடன் அவளுக்குப் பிடித்த விஷயங்களாகப் பேசி வா. ......பிறகு......"

"என்ன பிறகு?" ஆவலை அறிவிக்கும் அவன் குரல் அவனுக்கே ஆச்சரியமாக இருந்தது. அவன் திடுக்கிட்டுத் தன்னைச் சமாளித்துக் கெண்டான்.

"பிறகு நீ எழுந்தவாறே கிணற்றைச் சுற்றி வா! கிழக்குப் புறத்திலுள்ள ஆழ்ந்த, குறுகலான இருண்ட குகைமாதிரி உள்ள "கவலை" அடிக்கும் பாகத்திற்கு வந்து நில். அவள் பேச்சைக் கவனிக்கக் கட்டாயம் வருவாள். பிறகு கரையின் மேல் அமரு. அப்புறம் அவளையும் அருகே, ஆனால் உன்னைப் பிடித்துக்கொள்ள முடியாதபடி, உட்கார வை. பேசிக்கொண்டே மெதுவாக, அவசரப்படாமல் ஆனால் திடீரென்று அவளைக் கிணற்றினுள்ளே அதல பாதாளத்திலே"......

"கிரீச்" என்று தன்னை அறியாமலே அவன் அலறி விட்டான். பயம் அவனைப் பதறவைத்தது. வியர்வை வழிந்தது!

"நினைவே இப்படியானால், செயல் எப்படி இருக்கும்? எப்படி நான் அவளை—என்னை நம்பி வரும் அவளை, என்னை வாழ்நாள் முழுவதும் துணை என நம்பும் அவளை, என்னால் கெட்ட அவளை, என் உணர்ச்சி வெள்ளத்தில் பாதிக்கப்பட்டு அகப்பட்டுக்கொண்ட அவள் வாழ்க்கைப் படகை துடுப்பிழக்கச் செய்வதுமல்லாமல் மூழ்கடிப்பதா?—அவளையா நான் அழிப்பது? உண்டாக்க முடியாத உயிரை உலகத்திலிருந்தே ஒழிபபதா? அன்று ஆத்திரத்துடன், அன்புடன் அணைத்த அவளையா அடியோடு அழிப்பது? உதவிய விளக்கையா ஊதுவது? அணைத்த இக்கரமா அவளை அழிக்கும்! மாட்டேன், மாட்டேன், வருவது வரட்டும்! ஆனால் அகல்யா! அப்பப்பா, என்ன அழகு, என்ன குணம், சகுந்தலா அவளுடைய கால் தூசி ஆக மாட்டாளே! போதும் உன சகுந்தலா!"

அவன் மனம் தட்டிவிட்ட தராசு போலத் தடுமாறியது.

"அப்படி செய்ய நினைத்தாலும் அக் கிணற்றுக்கருகே யாராவது இருந்தால்? யாராவது நாங்களிருவரும் தனியே செலவதைக் கண்டு, பிறகு நான் மாத்திரம் தனியே வருவதைக் கண்டால்,

நான் பிடிபட்டால், நான் அகப்பட்டுக் கொண்டால், அல்லது அவளைப் பிடித்துத் தள்ளும்போது மெதுவாகத் தள்ள பாறைகளிலே பட்டு அடியுண்டு அவள் அலறினால்? அல்லது நானே தவறி வீழ்ந்தால்? அப்பப்பா! என் கை தடுமாறினால்? நான் வெற்றி பெறுவிட்டால், நான் தோல்வி அடைந்தால்?"

முத்து முத்தாக வியர்வைத் துளிகள் அவன் முகத்தில் நிறைந்தன. அவன் கடூரம் பாய்ந்த மனத்தின் கண்ணாடி போன்ற முகத்தில் ஈயாடவில்லை! கண்ணாடி அழுக்கினால் ஒளி மங்குவதுபோல அவன் மனமும் முகமும் மங்கின.

"சீ, இதை எல்லாம் எண்ணாதே! உன் மனத்தை நன்றாகத் தைரியம் செய்து கொண்டு, தோல்வியே அடையக்கூடாது என்ற உறுதி கொண்டு காரியம் செய்தால் ஏன் வெற்றி கிட்டாது? சந்தேகங்கள் எல்லாம் துரோகிகள்! நமக்கு வரக்கூடியவைகள் எல்லாவற்றையும் வராமல் தடுக்கும் பீடைகள் அவை! தடைகள் நிரம்பியவைகள் இச் சந்தேகங்கள்!"

"அப்போது?" அவன் குரல் ஊசலாடியது.

"சரிதான் போ, நான் சொல்லி முடியாது உனக்கு! ஏதோ நான்... ...!"

அவனுடைய பயங்கர எண்ணச் சுழல்களில் கடைந்தெடுத்த விஷ உணர்ச்சிச் சத்துக்கள் நீர்த்திவலைகள் போலக் கறுத்த மனப்பாத்திரத்திலிருந்து பொங்கி எழுந்தன. அவன் தடுமாறினான்.

"நம்பிக்கையை இழக்காதே, சேகர். சிறு உபயோகமற்ற நம்பிக்கையே அற்ற நிலையைவிட மேலல்லவா?

"அன்புடன் ஆவலுடன் காதலிக்கக் கன்னியைக் கொல்வதா? நம்பிக்கைத் துரோகம் செய்வதா?" என்ற எண்ண மீன்கள் அவனுடைய மன உணர்ச்சி வலையிலே அமுங்கி விட்டன. சூரியன் சாய்ந்தான்.

என்றும் போல் அன்றும் சூரியன் உதித்தான்

நன்றாகத் தன்னைச் சேகர் அலங்கரித்துக் கொண்டான். விளக்குச்சுடர் சிறிது நேரம்தானே எரியப் போகிறது? அழுக்கை மறைப்பதற்கு வாசனைப் பொருள்களையல்லவா உபயோகப் படுத்துகிறோம்? வேஷம் உலகில் சிறிது நேரம்தான் செல்லும்! கண்ணாடியில் தன்னைப் பார்த்துக் கொண்டான். அங்குமிங்கும் அவன கண்கள அலைந்தன. வீட்டை விட்டு வெளியேறினான்.

பூனை ஒன்று குறுக்கே விழுந்து ஓடியது! 'அட சீ, இதென்ன பூனை உபயோக மற்றவர்களைப் போல அடிக்கடி குறுக்கே ஓடுகிறது. அவன் மனம் அலைந்தது குற்றம் செய்ய நினைக்கும் போது சிறு சிறு விஷயங்கள் கூட மனதிற்கு ஆயாசத்தைத் தருகின்றன. வண்டை ஒரு பாத்திரத்தில் அடைத்து வைத்தாலும், சட சடவென்ற அதன் சப்தம், துடிக்கும் அபலை உயிரின் துன்பம், கேட்கிறதல்லவா? திரவத்தில் மிதக்கும் கார்க்கை அடக்கி வைத்தாலும் அது மிதப்பதுபோல அந்த எண்ணம்—

மனத்துடிப்பின் மீது எழுந்த சகுனத்தடை—அவனை உலுக்கியது!

"அட, இதற்கெல்லாமா, பயப்படுவது? ஒரு அடி பூனைக்கு, ஆறு அடி அறிவுள்ள மனிதன் பயப்படுவதா? அவளை அழித்த பிறகு, இப் பூனையைப் பார்த்துக் கொள்ளலாம்."

அவள் வண்டியிலிருந்து இறங்கினாள்.

"சகுந்தலா!" விஷம் தேனுருவில் குதித்தது. அவள் மயங்கினாள்—தாமரை மலர் சூரியனைக் கண்ட உணர்ச்சியும், பிறகு அந்த சூரியன் மறைந்தபோது அம்மலரின் உணர்ச்சியும், இரண்டும் அவள் முகத்தில் ஓடின. அவள் கண்கள் நீண்டு பெரியதாக இருந்தாலும், அவளை அப்படியே அள்ளிப் பருகும் அளவிற்குப் பெரிதாக இல்லை! இருப்பது பிளாட்பாரம் அல்லவா? ஆடு அறியாமலே பூனைபோன்று பதுங்கும் புலியிடம் புகலிடம் பெற்றது! கசாப்புக்காரன் கையை அல்லவா ஆட்டுக்குட்டி நக்குகிறது—எதிர்கால உணர்வு அற்றதால்?

"சகுந்தலா, நாம் காற்று வாங்க வெளியே போகலாமா?"

அவனுடைய அழகிய ஆடை அவளை அயரச் செய்தது.

"அடே யப்பா, என்ன டிரஸ்! கல்யாணப்பிள்ளை மாதிரி" அவள் சிரித்தாள்—மலர் வாடி விழுவதற்கு முன்னாலும் சிரிக்கும் அல்லவா?

"கலியாணப் பிள்ளை!" என்று அவன் தனக்குள்ளே சொல்லிக் கொண்டான்—"சகுந்தலைக்கு அல்ல அகல்யாவிற்கு!" என்று மேலும் சொல்லிக்கொண்டான். அவன் ஒரு "துஷ்யந்தன்" அல்லவா?

"காற்று வாங்க"—ஆமாம், உன் காற்றை—மூர்ச்சை வாங்கத்தான்!" என நினைத்துச் சிரித்தான் மெதுவாக;

அவள் அவன் முக மலரையே மயங்கிப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"ஹைஹும், கரும்பு தின்னக் கூலியா தரவேண்டும்? சரி; புறப்படுங்கள்!"

அவன் கண்கள் அவளைக் கடைசித் தடவையாக முற்றும் பார்த்துவிட முயன்றன. நெடிதுயர்ந்த உடல்; பூரிக்கும் பருவம்; சிரிக்கும் முகம், பளபளக்கும் கண்கள்; வெண்ணிற மேனியை மறைக்கும் கருநிறச் ஸில்க் புடவை; உள்ளே தெரியும் வெண்ணிறப் பூப்பார்டர் உடைய பாவாடை; காலில் செருப்பு; கூந்தலில் அனாயசமாக வைத்திருக்கும் பூ—இவை எல்லாமே மணக்கோலத்திற்குரியவை—பிணக்கோலத்திற்குத் தான் என்ற அருவருப்பான எண்ணம் அவனை ஆட்டியது!

"என்ன யோசனை, புறப்படுங்கள்!" ஆடு தானாகவே பலி பீடத்திற்குக் குதித்துக்கொண்டு சந்தோஷத்துடன் போகிறதல்லவா? அதற்குத் தெரியுமா, பலிபீடத்திற்குத்தான் என்று? அல்லது யார்தான் அதற்குச் சொல்வார்கள்? ஆட்டைப் படைத்தவன் புலியையும்தான் படைத்துள்ளான்? என்று.

"என்ன, குழந்தை மனம் படைத்த இவளையா அழிப்பது? வேண்டாம்!" அவன் மனம் ஆடியது.

'உன் நலம் கனி! இவளைப் போலத்தான் அகல்யாவும் அழகியடா! அசடே, கடைத்தேனுக்கே இவ்வளவு ஆசைப்பட்டு விட்டால், கொம்புத் தேனுக்கு என்ன சொல்வாயோ! பச்சாத் தாபம், பரிவு—தகாத இடத்தில் வைக்காதே......" மனத்தின் சவுக்கடி உணர்ச்சியின் மீது விழ, அவன் அதால் பிடித்துத் தள்ளப்பட்டான்.

"உன்னத வாழ்வின் இலட்சியத்தைப் பிடித்து விட்டோம்." இனி இவர் என்னைக் கைவிட மாட்டார் என்ற எண்ணம் அவள் முகத்தில் ஒளி விட்டது!

இருவரும் பேசியவாறே கிணற்றடியிலே வந்தனர்.

'சேகர், என்ன அழகான மாலை! அதோ பாருங்கள்; மேற்கே; குங்குமச் சிவப்பு போன்ற "இரத்தம்" பூசி வைக்கப்பட்ட மேகக் குவியல்களின் நடுவே சிரிக்கும் செஞ்சூரியன்!' எங்கும் ஒரே இரத்தச் சிவப்பு! தேவதாருவின் பூக்கள்போல அவள் மனம் மகிழ்ச்சியில் மயங்கிச் சிரித்தது.

"இரத்தம்" என்ற வார்த்தை அவனை அலட்டியது. 'குப்' என்று வியர்வை வழிந்தது. குரல் குறைந்தது.

"சகு!" இங்கே வா, இந்தக் 'கவலை' அடிக்குமிடத்திலேதான் வந்து உட்கார்; அடாடா, என்ன அமைதியான ஆழ்ந்த மௌனம்!"

"எல்லாம் ஒரே 'மயானத்'தின் மவுனம் போல இருக்கு! ஆனால் மனத்திற்கு மகிழ்ச்சி அளிக்கிறது. காதலர்களுக்கு வேண்டியது அழகிய சுற்றுப்புறம், ஆழ்ந்த அமைதி, தகுந்த தனிமை, பிறகு........."

சேகருக்கு 'மயானம்' என்ற வார்த்தை பயமூட்டியது.

"என்ன சனியன், பிணம்! இவள்! தானறியாமலேயே 'சாவை'ப் பற்றியே பேசுகிறாளே! ஒருவேளை அவளுக்கு அறிவுறுத்தப்படுகிறதோ, கடவுளால்?" என்று அவன் எண்ணினான்.

அவள் அவனருகில் அமர்ந்தாள்.

"என்ன சேகர், பேசாமல் 'மனைவி யிழந்தவரைப் போல, உம் என்று இருக்கிறீர்கள்? இதோ, சிரியுங்கள்! அப்பாடி! இப்பத்தான் நன்றாயிருக்கிறது." அவள் கல கல வெனச் சிரித்தாள்.

அவன் அசந்து விட்டான்!

"சேகர், என்று என்னை மணம் செய்து கொள்ளப் போகிறீர்கள்? இப்படியே யிருப்பது வேலியற்ற பயிரைப் போன்றது' கட்டற்ற காதல் அல்ல நான் வேண்டுவது; அக்காதலைப் பல்லோரும் புகழும் வண்ணம் 'திருமணம்' என்ற பந்தத்தில் அடைக்க வேண்டும்; நம்மிருவருக்குமே—நம்மிருவரிடையே

மட்டும்—காதல் கூடாது. அக்காதல் அன்பாகப் பரிணமித்து குழந்தைகள், சுற்றத்தார், ஊரார் எனப் பரவி 'நன்மையிலே' திற்க வேண்டுகிறேன் நான்! அளவற்ற அமைதியற்ற ஆற்றை அணைபோட்டு பயன் படுத்துவது போல நம் காதலைக் கல்யாணத்தினால் கரை கட்டி, உலக நந்தவனத்திலே பாடும் பறவைகளை—ஆடும் குழந்தைகளை—உண்டாக்குவது என் ஆசை! இப்படி யிருப்பது நல்லதல்ல, சேகர்! என்ன பேசாமல் இருக்கிறீர்கள்?

"அன்புடைக் கணவரழிதகச் செயினும்
பெண்பிறந்தோர்க்குப் பொறையே பெருமை"

என்கிறீர்களா?"

"சகு! உன் எண்ணங்கள் நன்றாக இருக்கின்றன. ஆனால் அவ்வெண்ணங்களுக்கு உரமிடுவதுபோல உலகத்திலே வேண்டுவது பணம். அதற்கு நான் எங்கே போவேன்? இருக்கும் உத்தியோகமோ பயனில்லை.—அப்போது நான் ஒருவன், நாமிருவருமாக மாறி, பிறகு மூன்று நான்கு என்று ஆவதா? செடி செழிப்பாகச் சீருடன் சிறந்து விளங்க வேண்டுமானால் அளவற்ற செழிக்கும் உரம் வேண்டும்......மேலும் மணம் முடியவில்லை!" என்றான் அவன்.

"உரம் இருந்தால் மட்டும் போதாது அவ்வுரத்தை உணவாக்கும் தண்ணீர் வேண்டும். அத்தண்ணீர்தான் நம் இருமனம்! உலகத்திலே பணமில்லாவிட்டாலும், பலர் உற்சாகத்துடனும் ஊக்கத்துடனும் ஆனந்த வாழ்க்கையை நடத்தவில்லையா? கல்யாணத்திற்குப் பிறகு முக்கியமாக வேண்டுவது ஒருவர் மற்றொருவருக்கு ஒத்தாசையுடன் அறிவுடன் உதவி அளித்து ஒன்றிப் போவதுதான், பணம் அல்ல; பணத்தையும் நாம் தேடினால் போச்சு; உழைக்க ஊதியம் வரும்; பிழைக்கப் பணம் சேரும்; ஆனால்; தழைக்கக் காதலர்கள் சேருவது கஷ்டம்; நீங்கள் இல்லாத இவ்வுலகம் ஊசி நுனி போலச் சிறிதாகிவிடும் எனக்கு; அவ்வூசி முனையே நீங்கள் இருந்தால் "பதினான்கு உலகம் ஆக" ஆகிவிடும். அன்புதான் உலகைக் கட்டுப் படுத்தும் தளை; பணம் அவ்வுலகத்தைப் பிரிக்க உபயோகப்படும். யோசிக்காதீர்கள். ஏன் நீங்கள் அவ்வளவு தூரம் நகர்ந்து உட்கார்ந்திருக்கிறீர்கள். இப்படி அருகே வாருங்கள். அல்லது நீங்கள் அங்கே இருங்கள்; நான் வந்து அமருகிறேன்."

—என்று கூறியவாறே அவள் நகர்ந்தாள். ஆனால் அவன்,

"சகு, அப்படியே உட்கார், என்னருகே வராதே. சொல்வதைக் கேளு!"

அவள் அவனைக் கேட்கவில்லை.

அவள் நகர்ந்தாள்!

அவன் இன்னதுதான் செய்கிறோம் எனக் கவனிக்காமல் பின்னால் நகர்ந்தான். அங்கே அவன் பளு தாங்காமல் புதைக்கப் பட்டிருந்த அக்கல்—புதிதாகப் புதைக்கப்பட்டிருந்த அக்கல்—நகர்ந்து பெயர்த்துக்கொண்டு விட்டது!

நேற்று பெய்த மழை வேறு அல்லவா?
எல்லாம் ஒரு நொடி!

"வீல்" என்ற சப்தத்தோடு அவன் அதல பாதாளத்திற்குத் தலைகீழாய்ப் போய்க்கொண்டிருந்தான். இரு புறமும் அடிபட்டுக்கொண்டே இவன் அக்கிணற்றின் ஆழத்தைக் காணச் சென்றான்.

சகுந்தலையை அழிக்க நினைத்த அவன் அணு அணுவாய் அழிவை நோக்கிப் போய்க்கொண்டிருந்தான். "படீர்" எனச் சப்தம் தண்ணீரில் கேட்டது.

பிறகு மயான 'அமைதி!
அவள் திகைத்தாள்!

"அவனன்றி அவனியில் இருப்பதா? காதலன் கண்ணீரைக் கக்கி மடிய அவள் வெளியேறுவதா? அவனை அணைத்த மரணம் என்னையும் அணைக்கட்டும்" என்று எண்ணியவாறே அவள் கண்களை மூடிக்கொண்டு குதித்தாள்!

"நல்லோன் கணவனொடு நளியழல் புகீஇச்
சொல்லிடை யிட்ட மாலை நிலை."

அல்லவா! தயல் இல்லாததால் தண்ணீரிலே குதித்தாள்!
கிணறு எதிரொலி செய்தது!
விதி 'சதி' செய்து இருவரையும் அணைத்துக் கொண்டது.

மறுநாள் காலை.

இரண்டு மாட்டுக்காரப் பையன்கள் இரு பிணங்களையும் பார்த்தார்கள்.
காட்டுத்தீ போல விஷயம் பரவியது.
பலர் பலவாறு பேசினர். புற்றீசல் போல அபிப்பிராயங்கள் அம்பலத்துக்கு வந்தன.

"ஐயோ பாவம், அழகாய் இருக்கும் இவர்களை எப்பாவிகள் மணமுடிக்க மறுத்தனர்?"

"எல்லாம் அந்தப் பாழும் பைத்தியக்காரக் காதல்தான் ஐயா காரணம், இக் கண்றாவிக் காட்சிக்கு!"

"சே சே, ஒரு பெண் இல்லாவிட்டால், மற்றொரு பெண்; ஓர் ஆண் இல்லாவிட்டால் மற்றொரு ஆண். இதுதானே கல்யாணம்! இதற்கோ காதல்!"

"ஹூம், கிணற்றடியிலே காதல் உருமுவார்; கதையிலே காதல் என்றால் கனஜோர் என்பார்கள். காதல் புத்தகத்திற்குத்தான் உகந்தது. கவைக்குதவாத புத்தகக் காதல் ஐயா, இது!"

சூரியவெளிச்சம் பல வர்ணங்களாக முப்பட்டைக் கண்ணாடியில் பிரிகிற தல்லவா? இச் சம்பவம் மனிதக் கண்ணாடி மனத்திலே பலவண்ண எண்ணங்களை எழுப்பியது.

ஆனால் உண்மை உயருமா?
பெண் பெருமை பரவுமா?

அட்டைப் படக் கட்டுரை:

மதியொடு பேசும் மங்கை

வித்துவான் தி. மு. சங்கரலிங்கம்

★

எக்காலத்தும் கண்டு பேசியறியாத தலைவன் தலைவியை ஊழிற்பெரு வலியானது வலிந்து வந்து இருவரையும் ஒன்று கூட்டியது. கண்ட இருவர்களுடைய கண்களும் கருத்துக்களை அள்ளி வீசியது. உள்ளம் இரண்டும் ஒன்று பட்டது போலவே உடலும் ஒன்றுபட்டது. "செம்புலப் பெயல் நீர் போல" இருவருடைய உள்ளங்களும் கருத்துடன் பட்டியைந்தது. பிரிய முடியாத நிலையில் "நின்னைப் பிரியேன்; பிரியின் உயிர் தரியேன்" என்று சூளுரைத்துப் பிரிந்தனர். ஒவ்வொரு நாளிலும் குறித்த இடத்திற் கூடிப் பிரிந்து போந்தனர்.

இவர்கள் கூட்டுறவைத் தலைவியின் உயிர்த் தோழியும் அறியாமலில்லை. அறிந்தும் அவள் மகிழ்வையே குறிக்கோளாகக் கொண்டவள். ஆகையினால் தன்னாலான உதவியைக் கொண்டு அவர்களைக் கூடும்படி வைத்தாள். இவ்வாறே காலம் ஓடுகின்றது. இவர்கள் களவு ஒழுக்கம் தோழியறிந்தது போலவே ஊர் அறியும் நிலைக்கு வந்து விட்டது. தலைவியின் களவு ஒழுக்கத்தை அறத்தொடு செவிலித் தாய்க்கு அறிவுறுத்தினாள் தோழி. செவிலி நற்றாய்க்கும், நற்றாய் தந்தைக்குமாக தலைவியின் நிலை அறத்தொடு நின்று அறிவிக்கப்பட்டது.

இதனைத் தலைவன் முற்றும் உணர்ந்தும் கூடத் தலைவியை மணந்து இல்லற வாழ்க்கை நடத்தாமல் விடுகிறான். காரணம் தலைவியை மணந்து வாழ்வதற்குப் பொருள் தன்பால் இல்லை. ஆகவே காலத்தைக் கடத்தினான். பிறர் கண்டு விடுவரே என்றெண்ணி எத்தனைக் காலந்தான் மறைந்து களவு ஒழுக்கம் நடத்துவது? இவனும் பூவும் மணமும் போல ஒன்று தங்கள் வாழ்க்கையை நடத்துவது என்றெண்ணினான். ஆயினும் மணச் செலவுக்குப் பணம் இல்லையே என்று நினைத்த அவன் பொருள் தேடப் புறப்படுகிறான். திரைகடல் ஓடித் திரவியத்தைப் போதுமான அளவிற்குத் திரட்டுகிறான் அங்கிருந்தபடியே.

தலைவன் தன்னை விட்டுப் பிரிந்து நெடுநாளாயிற்றே! என்று வருவார்? என்றெண்ணி ஏங்குதலிற் றலைப்பட்டாள் மங்கை. கார்காலம். ஆகையினால் மேகங்கள் வானில் உலவுகின்றன. அடுத்தடுத்து சிறு தூறலும் போட்டது. தனிமை நோய் தலைவியை வருத்திற்று. தலைவி தன்பால் ஏற்பட்ட தனிமை நோயை எவ்விதம் ஆற்றுவதென்றே புலப்படாது கலங்கினான். இவ்வாறு வருந்துதற்குக் காரணம் தலைவனல்லவா? என்று நினைந்து வருந்துகின்றாள் மங்கை.

தன் உள்ளத்திலிருந்த துன்பத்தை யாரிடம் சொல்லி வெளிப்படுத்துவது என்று புரியாமல் திகைத்தாள். இது போன்ற காலத்து "இது தன்னொடு பேசும்; இது தன்னொடு பேசாது"

என்றும்கூடக் கருதாமல் பறவை, மேகம் போன்ற அஃறிணைப் பொருளிடம் பேசுவர். தலைமக்கள் இதனைக் 'காம மிக்க கழிபடர் கிளவி' என்பர் அகநூலார். அதுபோலவே இத் தலைவியும் (சந்திரன்) மதியிடம் பேசுகிறாள்.

வானத்தை நோக்கினாள் தலைவி—மதியானது மேகத்தினிடை மறைந்தும் வெளிப்பட்டும் செல்லுவதைக் கண்டாள்.

"கூறுங்கள் பல ஒன்று செறிந்தாற்போலப் பலவாகிய கதிகளின் இடை இடையே பாலை முகந்து வைத்தது போலும் பசுமையான வெளிய நிலவினையுடைய மேகத்தினது பிடரியிலே பிறர் அறிய முடியாத கலைகள் நிரம்பிய மதியே! (சந்திரனே) நீ நிறைவும, நேர்மையுடைமை ஆதலாலும், உன்னை மறைந்து தங்கியுள்ள உலகம் ஒன்றுமே இல்லை ஆதலாலும், என்னை மறந்து மறைந்து தங்கியுள்ள காதலரைப் பார்த்தது உண்டா? இருக்கும் இடத்தை எனக்குக் காட்டுக! என்று வேண்டினாள். மதியம் இவள் மொழிக்குரிய மாற்றத்தைத் தாமல் வானிலே சென்றது. பதில் கூறும் நினைவுபடுத்தி என எண்ணி மங்கையும் எதிர்பார்த்தாள். ஆனால் பதில்தான் வந்திலது.

திங்களே! நீ அறிந்த உண்மையைக் கூறாது பொய்மை மேற்கொண்டு ஒன்றுமே பேசாது செல்லுதலால் அழகு நிறைந்த எனது தோள்கள் இன்று அழகிழந்து வாடியுள்ளதைப் போலவே நீயும் வாடி சிறுகச் சிறுகக் குறைந்து நினது ஒளி மழுங்கி வருகின்றது. ஆகவே, நீ எனது காதலர் இருக்குமிடத்தைக் காட்டுவதும் கூறுவதும் உன்னால் எப்படி முடியும்?', என்று மங்கை மதியொடு கடிந்து பேசினாள். மதி பதில் கூறாததால் மனம் வருந்தி உறைகின்றாள் மங்கை. இவ்வியத்தகு கருத்தைத் தலைவியாம் மங்கை மதியொடு பேசுதலாக வைத்துப் புலவர் வெள்ளைக்குடி நாகனார் ஒரு பாடல் நற்றிணை என்ற நூலிற் பாடியுள்ளார். "அறத்தொடு நின்று வெளிப்பட்ட பின்னும் தலைவன் வரைந்து கொள்ளாது பொருள் வயிற்பிரிந்து நெடுந்தூரம் சென்றுறைத்தலால் வருந்திய தலைவி, திங்களை நோக்கித். தலைவன் உறையுமிடத்தைத் தனக்குக் கூறுமை குறித்துக் கடிந்து கூறியது" என்ற பகுதியில் பாடியுள்ளார் மேற்படி கருத்தை வைத்து. என் பாடலும் இதோ இருக்கிறது பாருங்கள்:—

பங்குசெறிந் தன்ன பல்கதிர் இடைஇடைப்
பான்முகந் தன்ன பசுவெண் .ணிலவின்
மால்பிடர் அறியா நிறையுறு மதியம்
சால்புஞ் செம்மையும் உடையை ஆதலின்
நிற்கரந் துறையும் உலகம் இன்மையின்
எற்கரந் துறைவோர் உள்வழி காட்டாய்!
நற்கவின் இழந்தஎன் றோள்போல் சாஅய்ச்
சிறுகுபு சிறுகுபு செரீஇ
அறிகரி பொய்த்தலின் ஆகுமோ அதுவே. (196)

[பங்கு—கூறு; மதியம்—சந்திரன்; சால்பு—நிறை: கரந்து—மறைந்து; உறைவோர்—தலைவர்; கவின்—அழகு; சிறுகுபு—குறைந்து;]

வள்ளி ★

"சுவாசு" ★

முருகன் ஒரு ஏழை. பக்கத்தில் இருந்த ஒரு நகரத்தில் கூலி வேலை செய்து வரும் ஊதியத்தைக் கொண்டு ஜீவனம் செய்து வந்தான். அவன் மனைவிதான் வள்ளி. குடும்பப் பெண்ணிற்கு வேண்டிய எல்லா நற்குணங்களும் அவளிடையே பொருந்தியிருந்தன. முருகனும் வள்ளியும் ஒரு குக்கிராமத்திலே வசித்து வந்தனர்.

இந்த ஏழைத் தம்பதிகளின் ஒற்றுமையான வாழ்க்கையைக் கண்டு அந்தக் கிராமமே அதிசயித்தது. மணமான பின் நடந்த அந்த மூன்று வருட காலத்தில் அவர்களுக்குள் சிறு சண்டை, பூசல்கூட ஏற்படவில்லை. தன் மீது உயிரையே வைத்துப் பணிவிடை செய்துவரும் அன்பு மனைவி வள்ளி மீது முருகனும் உயிராக அன்பு செலுத்தி வந்தான். இத்தகைய அருமையான புருஷன் தனக்கு வாய்த்ததை எண்ணி வள்ளி கடவுளுக்கு நன்றி செலுத்தாத நாளே கிடையாது.

இந்த அமைதியான குடும்பத்தில் புயலை உருவாக்கத்தானோ என்னமோ, அந்தக் கிராமத்திற்கு அடுத்தாற்போன்றிருந்த ஓர் அடர்ந்த தோப்பில் கள்ளச் சாராயம் காய்ச்சும் நேரம் அநேகமாக இரவிலேதான் நடைபெறும். இது "சிவப்புத் தொப்பி" களிடமிருந்து தப்புவதற்காக அவர்கள் செய்த ஏற்பாடு! அந்தக் கும்பலிலே முருகனுக்கும் சகவாசம் ஏற்பட்டு விட்டது. அந்தக் கூட்டத்திலிருந்து விடுபட முருகன் எவ்வளவோ முறை முயற்சி செய்தான். முடியவில்லை. ருசி கண்ட பூனையாகி விட்டான் அவன். தான செய்வது தகாதது என்று அவன் உள்ளம் நன்குணர்ந்தும் அவனால் திருந்த முடியாவிட்டால் அதனை அவன் 'தலைவிதி' என்பதைத் தவிர, என்ன சொல்ல?......

தினமும் குறித்த கோத்திற்கு வந்துவள்ளியுடன் தமாஷாகப் பேசி பொழுதைக் கழிக்கும் முருகன் வரவர நேரம் கழித்து வந்தான். அவன் குடிசையினுள் புகும்போதே 'சாராய நெடி' குப்பென்று அடிக்கும். அவன முன்புபோல வள்ளியுடன் சுமுகமாகப் பேசுவதில்லை. வந்தால் வீட்டில் "தொப்" என்று விழுந்து கிடப்பான். வள்ளிக்கு விஷயம் புரிய வெகுநாளாகவில்லை. தூய மனதுடைய தன் புருஷனை மோச வலை வீசி சிக்கவைத்துவிட்டார்களே என அவள் பொருமினாள். முருகன் குலப்பழக்கத்தை மறந்து என்று பழையபடி ஆவானோ என ஏங்குவாள். "மாரியாத்தாலை" தினமும் வணங்கி பிரார்த்தித்து வந்தாள்.

முருகனின் போக்கு நாளாக நாளாகக் கெட்டுக் கொண்டே வந்தது. முதன் முதலில் அளவுடன் குடித்து வந்தவன் அளவுக்கு மீறி குடிக்க ஆரம்பித்தான். வீட்டுக்கு வந்ததும் அமைதியாகப் படுக்கும் அவன் மனைவியை வீண் சண்டைக்கு இழுத்தான். அவனை வாயில் வந்தபடியெல்லாம் தாறுமாறுகப் பேசினான். வீட்டிலே ரகளையும், கலவரமும் மிகுந்தது. சில சமயங்

களில் வள்ளியின் கன்னத்தில் எக்கச்சக்கமான அடிகளும் விழுந்தன.

பெண் குலத்திற்கே எடுத்துக்காட்டான வள்ளி, எல்லாவற்றையும் பொருத்தாள். அவனை நன் மொழிகள் கூறித்திருத்திவிடலாமென்று எண்ணி புத்திமதிகள் கூற ஆரம்பித்தாள்.

“இந்தாங்க, நீங்க இப்படி நடந்து கொள்வது உங்களுக்கே நல்லாயிருக்கா......முந்தியெல்லாம் என் மேலே எவ்வளவு அன்பா...உசுரு இருந்தீங்க, இப்படி திடீர்னு ஏங்க மாறிட்டீங்க?......நீங்க இப்படியே இருந்துட்டிருந்தா நமக்குப் பிறக்கப் போகும் குழந்தையின் 'கதி' என்னாகிறது.”

வள்ளியின் குரல் கம்மியது. கண்ணிலே நீர் துளிர்த்தது. தொடர்ந்தாள்.

“நீங்க முன்ன மாதிரி சம்பாதிப்பதுமில்லை. வீட்டிலே சோறு ஆக்க ஒரு சாமான்கூட இல்லை. தயவு செய்து இந்தப் பொல்லாத பழக்கத்தை அடியோட மறந்திடுங்க” கண்ணீர் மல்கக் கூறி நிறுத்தினாள் வள்ளி.

வள்ளியின் உருக்கமான சொற்கள் முருகனின் செவிகளில் ஏறவில்லை போலும்!

“நீ, யாருடி எனக்குப் புத்தி சொல்ல...? உனக்குக் குழந்தை பிறந்தா எனக்கு என்ன? பிறக்காட்டாத்தான் எனக்கு என்ன வந்தது...சும்மா எங்கிட்டே உளறாதே......” என்று கூடி இடி இடி யென்று சிரித்தான் முருகன். அவன் பேய்த்தனமாகச் சிரித்தபோது திறந்த வாயிலிருந்து வீசிய சாராய நாற்றம் 'குப்' பென்று மூக்கிலே மோத வள்ளி திணறினாள்.

“நான் யாருன்னு கேட்குமளவுக்குக் கெட்டுட்டீங்களே...நான் தான் உங்க மனைவி வள்ளி.”

“மனைவியா...ஹ்ஹஹஹா......” அப்பே இப்படி வா” என்று அவளுடைய இடையைப் பற்றி இழுத்து இறுக அணைத்தான் முருகன. கணவனின் இன்ப அணைப்பிலே தன்னையே மறந்தாள் வள்ளி. அவன் இது வரையில் இழைத்த கொடுமைகளையெல்லாம் அந்த இன்ப போதையிலே மறந்து விட்டாள்.

எல்லாம் ஒரு நிமிஷம்தான்! முருகனின் இன்ப வெறி அடங்கியது! அடுத்து எழுந்தது கோபவெறி, அதன் பலன்?......

வள்ளியின் தளிர்க் கன்னத்திலே 'பளீர்...பளீச்” என்ற அடிகள். “ஐயோ” என அலறிச் சாய்ந்தாள் வள்ளி. முருகன் பேய்ச் சிரிப்புடன் வெளியேறினான்.

முருகன் எவ்வளவு கொடுமைப் படுத்தியும் வள்ளிக்கு அவன் மீது உள்ள அன்பு கடுகளவேனும் குறையவில்லை. முருகன் அவளிடம் காசே கொண்டு வந்து தருவதில்லை. இருப்பினும் அவள் எப்பாடு பட்டாலும் கஞ்சியோ கூழோ காய்ச்சிக் கணவனுக்குத் தயாராக எடுத்து வைப்பாள்.

நம்மைக் கொடுமைப் படுத்துவது யார்? நம் கணவன் தானே! இதே கணவன்தான் முன்பு நம்மீது அன்பு மாரி

மொழிந்தார். குடும்பம் என்றால் சண்டையும் சமரசமும் சகஜந்தான். இந்த நிலை என்றும் நீடிக்காது. மீண்டும் பழைய அன்பு திரும்பும் என்ற உயர்ந்த எண்ணத்திலும், நம்பிக்கையிலும் வள்ளி மனச் சாந்தியுடன் வாழ்ந்து வந்தாள்.

இவளுடைய மாறாத அன்பினை எண்ணி அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் மூக்கிலே விரல் வைத்தனர். கணவன் அன்புடன் இருக்கும்போதே அவன் மீது எரிந்துவிழும் மருமகளைப் பெற்ற சிலர் கொஞ்சம் பொறாமைகூடப்பட்டனர்!

பக்கத்தில் உள்ள நகர் போலீசுக்குத் தோப்பில் உள்ள 'கும்பலை'ப் பற்றிச் செய்தி எட்டியது. அவர்களைக் கைது செய்வதற்கான ஏற்பாடுகள் துரிதமாக நடைபெற்றன.

ஓர் இரவில் இரண்டு போலீஸ் ஜவான்கள் அந்தத் தோப்பில் நுழைந்தனர். இவர்கள் வருகையை எப்படியோ அறிந்த கும்பலில் உள்ள அனைவரும் ஓட்டம் பிடித்தனர் முருகனும் வீட்டுக்கு ஓடி வந்து ஒளிந்து கொண்டான். வள்ளிக்கு செய்தி புலனாயிற்று உடனே முருகனை ஓர் அறையிலே மறைத்து வைத்து வாசலில் வந்து நின்றாள். தன் புருஷன் அகப்பட்டுச் சிறை சென்று விட்டால்......என்ற கவலை பெருகியபோது வள்ளிக்கு ஒன்றும் தோன்றவில்லை. கைகூப்பி மாரியாத்தாவை வேண்டினாள்!

வந்த ஜவான்களில் ஒருவன் ஏமாற்றத்துடன் நகருக்கே சென்று விட்டான். மற்றொருவன் மட்டும் கிராமத்தில் நுழைந்து தெருவழியே நடந்து வந்தான். அங்கிருந்த ஒவ்வொருவரையும் 'தோப்புக் கும்பலில்' இருந்த நபர்களின் இருப்பிடத்தைப் பற்றி விசாரித்தான். 'தங்களுக்கு ஒன்றுமே தெரியாது' என்ற ரீதியிலே எல்லோரும் பதில் சொன்னார்கள். சிவப்புத் தொப்பியைக் கண்டதும் தொடை நடுங்கிய ஓர் கிழவி மட்டும், முருகனின் வீட்டைக் காண்பித்துக் கொடுத்து விட்டாள். கிராம மக்கள் அவளை மனமாரச் சபித்தனர்!

ஜவானைக் கண்ட வள்ளி நடுங்கினாள். அவனும் தன் வீடு நோக்கியே வருவதை அறிந்ததும் அவள் “கிலி” அதிகமாகியது.

ஜவான் வீட்டை அடைந்ததும் வள்ளியைப் பார்த்து “உள்ளே யார் இருக்காங்க......உன் புருசன் எங்கே?...என்று அதட்டிக் கேட்டான்.

மலர்போன்ற மனமுடைய வள்ளி நடுங்கி விட்டாள். சத்தியமாச் சொல்றேங்க, என் புருசன் தப்புத்தண்டா ஒண்ணுக்குமே போகமாட்டாருங்க” என்றாள் அழுதபடியே......

“ஆமாமா......உன்புருசன் கள்ளச் சாராயம் மட்டும் குடிப்பாரு...இல்லியா...அடவிடு “புள்ளே” என்று உள்ளே நுழைய முயன்றான் ஜவான்......

“அவர் வீட்டிலேயே இல்லீங்க” எனத்தடுக்கப் பார்த்தாள் வள்ளி. ஆனால் ஜவானா மசிபவன்?

"எல்லாம் தெரியும்! நான் வீட்டைச் சோதனை போடணும்" என்றபடியே உள்ளே சென்று தேடினான். அவன் கழுகுக் கண்களுக்கு முருகன் இருந்த அறை தென்படாமல் இல்லை.

வள்ளி கண்ணீர்ப் பெருக்குடன் தொடர்ந்தாள். முருகனைப் பார்த்து விட்டான் ஜவான். முருகனும் நடுங்கியபடியே முன்னே வந்தான். அவனது வாயிலிருந்து சாராய நெடி வீசியது!

"என்ன புள்ளே......ஆளை ஒரேயடியா ஏச்சுடப்பார்த்தியே ......இதோ பாரு உன் புருசன்..." என்று வெறறிக் களிப்பிலே கூறினான் ஜவான்!

வள்ளி "கோ" வென்று கதறியபடியே ஓடி வந்து ஜவானின் காலிலே விழுந்தாள். "உங்களுக்குக் கோடி புண்ணியம் உண்டுங்க. அவர் போயிட்டா எனக்கு யாருங்க துணை! இந்த முறை மட்டும் தயவு பண்ணுங்க......இனிமே அவரு அந்த வழிக்கே போகமாட்டாருங்க......கண்ணீர் விட்டுக் கெஞ்சுகிறேன்......" வள்ளி உணர்ச்சியுடன் பேச ஆரம்பித்தாள், "உங்கள் மனைவிக்கு இதே நிலை ஏற்பட்டால் உங்கள் மனம் என்ன பாடுபடும்......ஓர் பெண்ணிற்கு ஆறுதல் அளிக்கிறோம் என்ற முறையிலே இந்த தடவை மட்டும் அவரை ஒன்றும் செய்யாதிங்க" என்று கண்ணீர் விட்டாள்.

முருகன் கண்களினின்றும் நீர் 'பொல பொல' வென்று உதிர்ந்தது. தனக்காக தன் மனைவி கெஞ்சி அழுவதைக் கண்ட அவன் மனம் மிகவும் வருந்தியது. தான் செய்த தவறுதல்கள் எல்லாம் அவன் கண் முன்னே தோன்றியது. இனி நல்லவனாக நடக்கத் திட்டமிட்டான். அவனும் ஜவானிடம் வேண்டினான், "என் மனைவிக்காகவாவது என்னை விட்டுவிடுங்கள்...இனிமேல் குடிப்பழக்கமே வைத்துக் கொள்ளமாட்டேன்" என்று உறுதியாகக் கூறினான்.

கடமை உணர்ச்சி அதிகம் உள்ளவன் என்றாலும் ஜவானுக்கு அந்தச் சமயத்திலே கருணை உணர்ச்சிதான் பெருக்கெடுத்தது.

"இனிமேல் குடிப் பழக்கத்தை ஆரம்பிக்க மாட்டியே......" என்று கேட்டான் ஜவான்.

"அந்தப் பக்கமே எட்டிப்பார்க்க மாட்டேங்க" என்றான் முருகன்.

"ஆமாங்க......இது நிசங்க" என ஆமோதித்தாள் வள்ளி. ஜவான் போய் விட்டான்!

அப்போது அவன் உள்ளத்திலே ஏதோ ஓர் பெரிய 'தியாகம்' செய்த உணர்ச்சி ஓடியது.

"வள்ளி நீ தெய்வம்......உன்னை எப்படியெல்லாம் கொடுமைப் படுத்தினேன்...அதை இப்போது நினைத்தாலும் மனசு நடுங்குகிறது. இனிமே நான் பழைய முருகன் தான்" என்றுகூறி வள்ளியின் கரம் பற்றினான் முருகன்.

உள்ளம் களித்த வள்ளி, தன் பிரார்த்தனையை நிறைவேற்றிய மாரியாத்தாவை மீண்டும் ஒருமுறை வணங்கினாள்!

சிக்கனம் ☆

வ. அ. ஸ்ரீராமுலு ★

5. சிந்தனைக் குரிய சிலவிஷயங்கள்

பல சிறு சம்பவங்கள் வாழ்க்கையில் தொடர்ந்து ஏற்பட்ட வண்ணமாய் இருக்கின்றது. அதில் எவ்வாறு மக்கள் பங்கெடுத்துக் கொள்கிறார்களோ அதைப் பொறுத்துத்தான் வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் ஏற்படுகின்றது. வியாபாரத்தில் கூட சிறு விஷயங்களில் கூட கவனம் செலுத்தினால் தான் வியாபாரி முன்னேறுகிறான். ஆகவே வீட்டைப்பற்றிய எல்லா சிறு விஷயங்களில் குடும்பத் தலைவனும் தலைவியும் தக்க பங்கு எடுத்துக் கொள்ளுதல் வேண்டும். அப்போது தான் அவ்வீட்டில் இல்லறம் நல்ல முறையில் நடக்கும்.

பலசிறு அநுபவங்கள் மூலமாகத்தான் நல்ல அறிவும் ஆற்றலும் பெறுகிறோம். தோல்விகளிலிருந்து எவனொருவன் தன்னைத் திருத்திக் கொள்ளவில்லையோ அவன் அவதியுறுவது நிச்சயம். அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்து அஜாக்கிரதையாகவும் வேலை செய்யாமலும், சுறுசுறுப்பு இல்லாமல் இருப்பதும் தவறாகும்.

வீட்டுத் தலைவனும் தலைவியும் தமது வீட்டில் பண்டங்கள் பாழாகமலும், வீணாகாமலும், திருடு போகாமலும், பார்த்துக் கொள்ளுதல் அவசியமாகும். வீட்டில் உள்ள பொருள்களைச் சிக்கனமாகவும், சரியானபடியும், உபயோகப்படுத்திடல் வேண்டும். ஒவ்வொரு வஸ்துவையும் அதற் கேற்பட்டுள்ள இடத்தில் வைத்திடல் வேண்டும். அவ்வப்போது பொருள்களை துடைத்துச் சரிவர உபயோகித்து வருதலும் நல்லது.

பணக்காரர்களும், மத்தியதரக் குடும்பங்களும், ஏழைகளும் சிக்கனமாக வாழ முயலுதல் வேண்டும். சிக்கனமின்றி யாரும் தயாள குணத்தைப் பெறமுடியாது. வகையாக வாழும் மக்களால் தான் தான தருமங்கள் செய்ய இயலும். அதாவது சிக்கனத்தினால் ஏற்படும் நன்மைகளை. சிக்கனம் கடைப்பிடித்தவர்கள் மற்றும்மல்லாமல் சமூகத்திற்குக் கூட நன்மை பயக்குகிறது. நம் பாரத நாட்டில் கோவில்கள், குளங்கள், சத்திரங்கள், கல்விச் சாலைகள், இன்னும் இவை போன்ற தரும கைங்கர்யங்கள் அதிகமாக யிருப்பதைக் காணலாம். இத்தகைய தான தருமங்களைச் செய்தவரின் வாழ்க்கைச் சரிதையைப் படிப்போமானால் அவர்களின் பெரும்பாலோர் சிக்கனத்தை கடைப்பிடித்தவர்கள் என்பதைக் காணலாம். ஆக தரும சிந்தனையுள்ளவர்கள், சிக்கனத்தை முற்றிலும் விரும்புதல் வேண்டும் என்று ஐயமில்லாமல் கூறலாமல்லவா?

வள்ளுவரும் ஈதலைப்பற்றிக் கூறியுள்ளார்கள். வறியவர்க்கு ஈதல் வேண்டும். அதனால் புகழ் உண்டாகும். அப்புகழ் அல்லாமல் உயிர்க்கு ஊதியமான தொன்றுமில்லை.

"ஈதல் இசைபட வாழ்தல் அது வல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு"

பணக்காரரைப் போல் வாழவேண்டுமென்று பகட்டும் ஆடம்பரமும் கொண்ட வாழ்க்கை நடத்துவது தவறாகும். பணத்தைப் பிரதானமாக எண்ணி, லோபியாக வாழ்க்கை நடத்துவது தவறு. பணத்தைச் சரியான வழியில் செலவு செய்வதற்கு வழி காட்டியாக இருப்பதே சிக்கனம். எனவே பணத்தைப் பதுக்கிடாது, சரியான முறையில் செலவுசெய்து, வாழ்க்கை நலத்தை உயர்த்துவது நல்ல முறையாகும். ஒவ்வொருவரும் வாழ்வில் முன்னேறுதல் வேண்டுமென்றும், நல்ல அறிவு பெறுவதுடன் நன்னிலையையும் உயர்த்திக் கொள்ளுதல் வேண்டும். பல குடும்பங்கள் சேர்ந்து சமூகமும் நாடும் ஏற்படுகிறது. பல குடும்பங்கள் சிக்கனத்தை அநுஷ்டிக்க நாட்டின் செல்வம் வளரும் என்று திண்ணமாகக் கூறலாம்.

மக்களுக்குள் இருக்கும் வேறுபாட்டை அவர்களிடம் நிலவும் அறிவு, குணம், சக்தி, இம் மூன்றின் மூலமாக அறிகிறோம். நல்லொழுக்க முடையோர் மேன்மை அடைவார்கள். இங்கு வள்ளுவர் வாக்கு ஒப்பு நோக்கத்தக்கது.

"ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்
எய்துவர் எய்தாப் பழி."

நல்ல குணம் படைத்தவர்கள் நல்ல பண்பும், விவேகமும் வருங்கால நினைவும் கொண்டவர்கள், அவர்கள் தற்செயல்களால் மாறி விடுவதில்லை. ஆனால் மக்களில் சிலர் பிறர் உதவியை எதிர்பார்த்த வண்ணமாய் இருக்கிறார்கள். அத்தகையவர் வாணாட்களை வீணாக்கியவர்களாவர். பொதுவாக அவர்கள் லோபியாகவோ, குறுகிய நோக்க முடையவர்களாகவோ, ஊதாரிக் குணமுள்ளவர்களாகவோ இருப்பதைக் காண்கிறோம். அவர்கள் வாழ்க்கையில் தவறான வழியில் செல்கிறார்கள். அதிர்ஷ்டஈனர்கள் என்று தம்மைச் சொல்லிக்கொண்டு வாழ்க்கையில் பின்னேறுங்கள். அதிர்ஷ்ட வசத்தில் முன்னேறுவோம் என்றும் சொல்லுவார்கள். அவர்கள் வாழ்க்கையில் தோல்வி அடைவதின் காரணம், தோல்வியால் ஏற்பட்ட அநுபவத்தை மனதில் பதிய வைத்து வாழ்க்கையைத் திருத்திக் கொள்ளாதது தான்.

இன்னும் சிலர் கெட்டிக்காரர்களாக இருந்தும் சமயோசிதமாக வாழத் தெரியாது அவதியுறுவதும் உண்டு. சந்தர்ப்பங்களுக்கும், சூழ்நிலைக்கும் ஏற்றவாறு அநுசரித்தும், அதே சமயம் உண்மையைக் கடைபிடித்தும் வாழ்தல் வெற்றிக்கு வழியாகும்.

வாழ்க்கையில் வெற்றியும், பணம் சேமிப்பதும் நல்ல குறிக்கோள் ஆகும். மக்கள் அதனை அடைய சுறுசுறுப்புடனும், தம் முழு ஆர்வத்துடன் கடமை புரியவும், புதியனவற்றைக் கண்டு கொள்ளவும் மேம்படவும் முயலுதல் வேண்டும்.

பிரயாசையுடன் முயற்சி செய்து, பொன்னான நேரத்தை வீணாக்காது, குறித்த காலத்தில் குறித்த வேலையைச் செய்தலும்,

தமது கடமையைப் பிறர் செய்ய விடாமலும், பிறர் பொருளை விரும்பாமலும், எளியதும் உயர்ந்த நோக்கமுடைய வாழ்க்கை நடத்த வாழ்க்கையில் வெற்றி பெறலாம்.

இங்கு வாழ்க்கையில் விருப்பும், சுறுசுறுப்பும், அத்தியாவசியமானவை என்று விளக்கவும், பாடுபட்டு உழைத்திட செல்வம் சேர்ந்திடும் என்ற எண்ணத்தைக் குறிக்கும் ஒரு சிறுகதையை நினைவு கொள்ளுதலும் தக்கது.

ஒரு விவசாயி தன் மூன்று பிள்ளைகள் சோம்பேறித்தனமாகவும், ஊதாரித்தனமாகவும் வாழ்வதைக்கண்டு மனம் வெதும்பினான். இறக்கும் தருவாயில் அம்மூவரையும் தன்னிடம் அழைப்பித்து, தனது பூமியில் பெரியதொரு 'புதையல்' வைத்திருப்பதாகக் கூறினான். அந்த இடத்தைப்பற்றிக் கூறுமாறு மூன்று பிள்ளைகளும் கேட்பதற்கு முன்பே, விவசாயி உயிர் நீத்தான். அம் மூவரும் விவசாயிகள் முழு நிலத்தையும் ஆழமாகத் தோண்டிப் பார்க்க புதையல் கிடைக்கவில்லை. ஆனால் நிலத்தை செம்மைப் படுத்திய பிறகு விளைச்சல் மூலம் அதிக லாப முற்றார்கள். ஆகவே சோம்பேறித்தனம் நீங்கி செயல் புரிய விரும்பி, செல்வதின் மகிமையும் அறிந்து கொண்டார்கள்.

ஒவ்வொரு வீட்டிலும் மாணவர்கள் வயதில் இருப்போர்களுக்கும் ஒருவித பொறுப்பு இருக்கிறது. தம்மால் இயன்ற மட்டும் குடும்ப நலன்களுக்குப் பாடுபடுதல் அவசியமாகும். மாணவ மாணவிகளும் சிக்கனமாக வாழக் குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும்.

வீட்டில் குதூகலம் நிலவ, நல்ல உடல்நிலையும், தேக ஆரோக்கியமுடன் வாழவேண்டும். ஆக சிறு விஷயங்களில் கூட தக்க கவனத்தைக் குடும்பத் தலைவனும் தலைவியும் எடுத்துக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறார்கள். சில துளி பெருவெள்ளம் சிறு நாணயத்தை சரியானபடி செலவு செய்ய, பெரும் பணத்தைத் தக்கபடி செலவு செய்யும் ஆற்றல் பெறலாம்.

6. சேமிப்பு

செல்வம் வந்தபோது இதைப் பெற்றோமே என்று காத்தறிதல் அவசியம். அவ்வாறு செய்யாதார் வறுமை வந்தபோது இழந்தோமே என்று வருத்தமடைவர். இதைத் திருவள்ளுவரும்,

"அற்றேமென்று அல்லற்படுவோ பெற்றேமென்று
ஓம்புதல் தேற்றாதவர்."

இதன் மூலம் நமக்கு செல்வத்தைப் பாதுகாத்தல் அவசியம் எனப் புலப்படுகின்றது.

சேமிப்பின் மூலம் மக்கள் நிர்ப்பயமாய் வாழலாம் மக்கள் தம்மிடை தேவைக்குமேல் பணம் வைத்துக் கொள்ளுதல் நல்லதல்ல. அத்தகைய பணத்தை சேமித்திடல் வேண்டும். இல்லையென்றால் பல வீண் செலவுகள் நேரிடும்.

ஏதாவது ஒரு புது வழக்கம் ஏற்படுத்திக் கொள்வது முதலில் சற்றுக் கடினமாக இருக்கும். ஆனால் அதையே தொடர்ந்து செய்து வருவதன் மூலம் அது பழக்கமாகி விடுகிறது. அப்பழக்கத்தைத் தொடர்ந்து செய்யவும் மனப்பான்மை ஏற்படுகிறது. வருமானத்தில் ஒரு பங்கை சேமிக்கக் கற்றுக் கொள்ளுதல் வேண்டும். சிறு சேமிப்புகள் மூலம் பெரிய சாதனைகள் அடைய இயலும். முதன்முதலில் சேமிப்புத் தொகை சிறிதாகக் காணப்படினும் காலத்தின் போக்கிலே அது வளர்ந்திடும். சிக்கனத்தை கடைப்பிடித்தவர்களால் தான் பெரிய மில் தொழிற்சாலைகள், சுரங்கங்கள் முதலியவற்றை நடத்த இயலும்.

சேமிப்பு நல்ல வாழ்க்கை வாழவும், மனநிம்மதி பாதுகாப்பு முதலியவற்றை முதிய வயதில் தரும்.

பணத்தைச் சேமித்து அதனை தக்க இடங்களில் பத்திரமாக வைக்கலாம். அவற்றைப்பற்றி சிறிது தெரிந்து கொள்ளுதலும் அவசியமாகும்.

முதலில் கூட்டுறவு பண்டக சாலைகளைப்பற்றிச் சிறிது கவனிப்போம். கூடி வேலை செய்தல் மூலமாகவும், பல மக்கள் ஒத்துழைப்பினாலும், சமூகத்தில் முன்னேறுவது எளிது. இதை அநுபவத்தில் நாம் நன்கு அறிவோம். மக்கள் இணக்கத்தின் பேரில் செய்யும் காரியங்கள் சுலபமாகவும் சிக்கனமாயும் செய்ய இயலுகிறது. கூட்டுறவு சாலைகள் மூலம் பண்டங்கள், கடன் வசதி, உணவுப் பொருள்கள், உடை, வீடு, இன்னும் இதைப் போன்ற வாழ்க்கைக்கு அத்தியாவசியமானவற்றை குறைந்த செலவில் அடைய முடிகிறது. இக் கூட்டுறவ சாலைகளில் பணத்தைப் பத்திரப்படுத்தி வைக்கவும் முடிகிறது. சிக்கனத்தை அடிப்படையாகக் கொண்டு, வாழ்க்கையில் எல்லாவித சௌகரியங்கள் அடைய வழியமைத்துத் தருவது கூட்டுறவு சங்கங்கள் என தெளிவுபடக் கூறலாம்.

இன்ஷூரன்ஸ்

வாழ்க்கை நிலையில்லாதது. ஆறிலும் சாவு, நூறிலும் சாவு என்பது நம் நாட்டுப் பழமொழி. சிறுகச் சிறுகச் சேமித்திடும் பணமானது நாளடைவில் வளரும். ஆனால் திடீரென்று எதிர்பாராத விதமாக ஏதாவது அசம்பாவிதம் ஏற்பட்டால் அத்தகைய பிரச்னையைத் தீர்ப்பது இன்ஷூரன்ஸ் திட்டமாகும். குறிப்பிட்ட தொகையை குறிப்பிட்ட ஆண்டுகளுக்கு இன்ஷூரன்ஸ் கம்பெனிகளுக்குக் கட்டுவதின் மூலம் பணம் சேர்ந்து வருவதுடன், நடுவில் ஏதாவது ஏற்பட்டு 'இன்ஷூரன்ஸ்' செய்துள்ள நபருக்கு திடீரென்று மரணம் ஏற்பட்டால் இன்ஷூரன்ஸ் தொகை பெறவும் வழி செய்து தரப்பட்டிருக்கிறது. இதனை வாழ்க்கை ஒப்பந்தம் என சுருக்கமாகக் கூறலாம். ஒவ்வொருவரும் தன் மனைவி மக்களின் சுகத்தை மனதில் கொண்டு அவர்களின் பிற்கால வாழ்க்கைக்கு உதவுவதற்குப் பணம் சேர்த்துத்

தருவதற்கு இத் திட்டம் உதவுகிறது. இத் திட்டம் எளியது; பயிற்சி செய்வதற்குரியது. பகுத்தறிவுள்ளது.

பிராவிடெண்ட் பண்ட்

சர்க்கார் உத்தியோகத்தில் இருப்பவர்களில் சிலர், 'பிராவிடெண்ட் பண்ட்', என்ற நிதிக்கு மாத வாரி பணம் கட்டுகிறார்கள். இது சம்பளத்தில் பிடிக்கப்பட்டு, உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெறும்போது திருப்பித் தரப்படுகிறது. இதைப்போல சில கம்பெனிகளும் இத்தகைய சேமிப்புத் திட்டத்தை தம்மிடம் வேலைச் செய்வோருக்குச் செய்து தருகிறார்கள். இதைப் போலவே போஸ்டல் இன்ஷூரன்ஸ் திட்டமும் மக்களுக்கு சிக்கனத்தை, கடைப்பிடிக்க உதவுகிறது.

பாங்குகள்

பொதுமக்களுடன் பெரிதும் தொடர்பு கொண்டுள்ள வர்த்தக ஸ்தாபனங்களில் பாங்குகள் முதன்மையானது. பிறர் பணத்தைப்பெற்று பத்திரமாக வைத்துக் கொள்வதும், பணத்தைக் கேட்கும்போது தருவதும் பாங்கியின் முக்கிய அலுவல்களாகும். குறிப்பிட்ட வட்டி தருவதாக ஒப்புக்கொண்டு பொதுமக்களிடமிருந்து பணத்தைப்பெற்று அதனைப் பத்திரமாக வைத்திருந்து வட்டியுடன் திருப்பித் தருகிறார்கள். பாங்குகளில் பலவிதமான 'டிபாசிட்' கணக்குகள் இருக்கின்றன. இதைத் தவிர, 'சேவிங்க்ஸ்' பாங்கு 'டிபாசிட்,' கணக்குகளும் பாங்குகளில் ஏற்படுத்திக்கொள்ளலாம். இத்தகைய டிபாசிட் கணக்குகள் மூலம் பணம் சேமிக்கவும், சிக்கனத்தை மக்களிடை ஏற்படுத்த வேண்டும் என்பதே பாங்குகளின் நோக்கம். இத்தகைய கணக்குகளைப்பற்றி முழு விபரமும், பாங்குகளில் பொது மக்களுக்கு விரிவாகவும், தெளிவாகவும் கூறப்படுகிறது. சிக்கனத்தை விரும்புவோர் பாங்குகளுடன் தொடர்பு கொண்டு பணத்தைச் சேமிக்கலாம்.

போஸ்டாபீஸ் சேவிங்க்ஸ் பாங்கு

தபால் ஆபீஸ்களில் இத்தகைய சேமிப்புத் திட்டம் ஒன்று நிலவுகிறது. இதன் மூலம் மக்கள் சுலபமான முறையில் பணம் சேர்க்க வசதியளிக்கப்படுகின்றது. எளிய முறையில் சேமித்து வருங்காலத்தைப் பாதுகாத்துக்கொள்ள உதவுவது இக் கணக்கின் நோக்கம் இதைத் தவிர, பல திறப்பட்ட இந்திய அரசாங்கத்தின் சிறு சேமிப்புத் திட்டங்கள் உள்ளன. அவற்றுள் சில

1. 12 வருஷ நாஷனல் சேவிங்க்ஸ் ஸர்டிபிகேட்டுகள்.
2. 10 வருஷ டிரஷெரி டிபாஸிட் ஸர்டிபிகேட்டுகள்.
3. 10 வருஷ நாஷனல் பளான் ஸர்டிபிகேட்டுகள்.
4. 15 வருஷ அனியுட்டி ஸர்டிபிகேட்டுகள்.

மேற்கூறிய முதலீடுகளைப்பற்றி தபால் ஆபீஸில் முழு விபரமும் அறியலாம்.

சர்க்கார் கடன் பத்திரங்கள்

அவ்வப்போது நமது சர்க்கார் மக்களிட மிருந்து கடன் வசதி பெறுகிறார்கள். இத்தகைய சர்க்கார் கடன் பத்திரங்களுக்கு நல்ல வட்டி தருகிறார்கள். இந்த முதலீடுகளில் பணத்தைச் சேமித்தல் மிகவும் உபயோக முள்ளதாக யிருக்கும்.

பாரதநாடு குடியரசு நாடாகும். நம் நாட்டின் பெருமையைப் பாதுகாத்தலும், தொழிற் ஸ்தாபனங்களை அதிகரிக்கவும், நாட்டின் நலனில் பங்கெடுத்துக் கொள்வதும் ஒவ்வொரு மனிதனின் முக்கிய கடமையாகும். ஆகவே மக்கள் சிக்கனத்தின் மூலம் சர்க்கார் முதலீடுகளில் பணத்தைச் சேமிக்க தேசாபிமானத்தைக் குறிக்கும்.

சேமிப்பின் மூலம் உறுதியான வாழ்க்கை நடத்தலாம். சேமிப்பின் மூலம் நாட்டின் நலத்தை உயர்த்தவும் முடியும். சிறுகச் சேமித்துப் பெருக வாழ்வதே மக்களின் குறிக்கோளாக இருத்தல் வேண்டும்.

மக்களில் பெரும்பாலோர் தற்காலத்தைப் பற்றித்தான் எண்ணுகிறார்கள். பிற்கால வாழ்வைப்பற்றி எண்ணுவதில்லை. அறிவுடையோர் இரண்டினைப்பற்றி மனதில் நினைவு கொண்டு, பிற்காலத்திற்காக தற்காலத்தில் பாடுபடுவார்கள்.

வாழ்க்கையில் வசதியாக வாழ எல்லோராலும் இயலும். ஒருவன் தன் மனநிலையை கட்டுப்படுத்திச் சிக்கனத்தைக் கைக்கொள்ள தமது லட்சியத்தை அடைய இயலும். எத்தகைய லட்சியத்தையும் அடைய ஒரு ஆணித்தரமான விருப்பமும் இருத்தல் அவசியம். 'மனமுண்டேல் மார்க்கமுண்டு' என்ற முதுரையின்படி வாழ்க்கையில் சிக்கனம் கடைப்பிடித்து வாழ்வோர் வாழ்க்கையில் முன்னேறலாம்.

"ஆனந்த போதினி"

(மாதப் பத்திரிகை)

சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட இந்தியா, சிலோன்	ரூ. 2—0-0
வருடம் 1-க்கு வெளிநாடுகளுக்குச் சந்தா	ரூ. 3—0-0
நடந்துகொண் டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை	ரூ. 0—3-0
சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை	ரூ. 0—4-0

ஜீவிய சந்தா ரூ. 30-0-0

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

எப்பொழுது சேர்ந்தாலும் ஆடிமீ முதல் கணக்கு வைக்கப்பட்டு சஞ்சிகைகள் அனுப்பப்படும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, சென்னை.

இரவில் நகர்

கவிஞன் கோல்டுஸ்மித்

☆

கடிகாரம் இரண்டு மணி அடித்து ஓய்ந்தது. அணைகின்ற மெழுகுவர்த்தி மேலெழுந்து இறங்குகிறது. காவல் காப்போன் தூக்கத்தில் நேரத்தை மறந்து விட்டான். உழைப்பாளிகளும் உல்லாசர்களும் அமைதியில் ஆழ்ந்து விட்டனர். சிந்தனையும் குற்றமுள்ள நெஞ்சமும் கூத்தும் அதைரியமும் தவிர வேறொன்றும் விழித்திருக்கக் காணோம். குடியன் மீண்டும் ஒருமுறை அழிவுக் கோப்பையில் மதுவை நிரப்புகிறான். திருடன் நள்ளிரவில் சுற்றி வருகின்றான். தூய்மையாம் உயிரை அழித்திட ஒரு தற்கொலை உள்ளம் கை தூக்குகின்றது.

பழங்காலம், ஒரே சமயத்தில் வாழ்ந்த மேதைகளின் நகைச் சுவை நூல்கள்—பற்றிப் படிப்பதில் இனியும் இரவை வீணாக்க மாட்டேன். ஆனால் என் தனி நடையைத் தொடர்வேன். மாறுகின்ற வீண் பெருமை இருக்கின்றதே, அது அங்கேதான் பவனி சென்றிருக்கும்; சில மணி நேரத்துக்கு முன் என் முன்பு. இப்போது குறும்புத்தனம் அடங்கிய குழந்தையைப்போல, ஆட்டமும் பிடிவாதமும் மறைந்து விட்டது அந்தப் பெருமைக்கு.

சுற்றிலும் என்ன இருள்! விளக்கு மங்குகின்றது; மஞ்சள் சுடர் மெல்லப் பரவுகிறது. கடிகாரத்தின் ஓசை, காவல் நாயின் ஒலி இவற்றைத் தவிர, வேறொரு சப்தமும் இல்லை. மனிதச் செருக்கின் சலசலப்பு மறக்கப்பட்டு விட்டது. மனிதனின் வீண் பெருமை காலியானது என்பதை இதைப் போன்றதொரு மணி நேரம் நன்றாய்க் காட்டக்கூடும்.

கொஞ்ச நேரத்துக்கு நிலவியிருக்கும் இத் தனிமை நிரந்தமானதாக ஆகிவிடும் காலமும் வரும். மக்களைப் போலவே அவர்கள் வாழ்ந்த நகரும் மறைந்து படும். அங்கே பாலைவனந்தான் எஞ்சி நிற்கும்.

இதைப்போன்ற பெரிய நகரங்கள் எத்தனை வாழ்ந்திருப்பதில் மகிழ்ச்சி பூத்திருக்கும்! மகத்தான வெற்றிகளும எல்லையற்ற இந்த அளவுக்குக் களிப்பும் கண்டிருக்கும்; குறுகிய பார்வையால் தாம் அமரத்வம் உடையவை என உறுதிகள் கொண்டிருக்கும்! ஐயகோ, சிலவற்றின் நிலையை எதிர்காலச் சந்ததியினர் தேடிக் காண்பதும் அருமையாகிவிடும். வேதனையுற்ற வழிப்போக்கன் மற்ற நகரங்களின் சீர்கெட்ட சிதைவுகள் மேல் அலைந்து திரிவான். அவைகளைப் பார்க்குந்தோறும் அறிவு பெறுவான். எல்லாம் மாயம் என்பதை உணர்வான்.

"இங்கேதான் அவர்களின் கோட்டைகள் நின்றன; இப்போது பாசி படர்ந்து கிடக்கின்றன. அங்கேதான அவர்களின் ஆட்சி பீடம் இருந்தது; ஆனால் இப்போதோ தொல்லைதரும் ஊர்வன வாழுமிடம் ஆகிவிட்டது. கோவில்கள், நாடக மேடைகள் இங்குதான் இருந்தன; இப்போது உருத்தெரியாத அழிவுக் குவியல்தான் கிடக்கிறது. அவைகள் யாவும் வீழ்ந்து விட்டன. ஆடம்பரமும் பேராசையும் வீழ்ச்சிக்கு விதை யூன்றின. ஆளுவோரின் பரிசும் பாராட்டும் சமூகத்தில் தகுதி

யுடையவர்க்குக் கிடைத்ததில்லை! ஆனால் உண்டு களிப்போரே அவற்றைப் பெற்றனர். அவர்கள பொருளும் செல்வமும் கொள்ளைக்காரரை 'வா' வென்றழைத்தன. வந்தவர்கள் தோற்றார்கள் முதலில். என்றாலும் விடாமுயற்சியால் எதிர்த்தவரைத் தரைமட்டம் ஆக்கி விட்டனர். காணவும் முடியாத அழிவுக்கு இரையாக்கிச் சென்றனர்." என்று அவன் கூவுகின்றான்.

சில மணி நேரத்துக்கு முன் கூட்டம் நிறைந்த அந்தத் தெருக்களில் இப்போது எவ்வளவு கொஞ்சப்பேர் தோன்றுகின்றனர்! வழக்கம்போல அவர்கள் முகமூடி அணியக்காணோம். தங்கள் நாகரீக மற்ற நிலைமையோ அல்லது துன்பத்தையோ மறைக்கும் முயற்சியையும் காணோம்.

செல்வர் வீட்டு வாயிலில், தங்கள் தாழ் நிலையிலிருந்து சிறிது விடுதலை காணும் இவர்கள் யார்? வீதிகளை வீடுகளாக்கிக் கொண்டவர்கள் இவர்கள் யார்? அவர்கள்தான் அன்னியர்கள், அலைந்து திரிபவர்கள், அனாதைகள். அவர்கள் இழி நிலைமைத் தீர்க்க முடியாது. அவர்கள் துன்பத்துக்கு இரங்கிப் பயனில்லை. அப் பாழ் நிலை பீதியையே எழுப்புகின்றது. கந்தல் ஆடைகூட அற்றவர்கள் சிலர். நோயால் மெலிந்தவர்கள் மற்றவர்கள். உலகம் அவர்களைச் சொந்தம் பாராட்டாமல் ஒதுக்கி விட்டது; சமூகம் அவர்கள் துயரங்களைப் பார்க்கவும் இல்லை; அவர்களை நிர்வாணத்துக்கும் பசிக்கும் பலி கொடுத்து விட்டது. ஒரு போது இன்ப நாட்களைக் கண்ட இந்த ஏழைப் பெண்கள் இப்போது குளிரால் நடுங்குகிறார்கள். மாரிக் காலத்தின் கொடுமையை அனுபவிக்கப் போகின்றார்கள். தங்களைக் காட்டிக் கொடுத்துக் கை விட்டவர்களின் வாயிலில் வீழ்ந்து கிடக்கும் இவர்கள் உணர்வற்ற கயவர்களுக்கும் தங்களைச் சபிக்கும் விபசாரிகட்கும் விண்ணப்பம் அனுப்புகிறார்களோ என்னவோ. அவர்களெல்லாம் இவர்களுக்கு உதவப் போகிறார்களா என்ன?

யாருடைய துன்பங்களைப் போக்க முடியாதோ அவர்களின் துயரங்களைக் காண மனிதனாய் ஏன் பிறந்தேன்! வீடற்ற ஏழையுயிர்களே! உலகம் உங்களைத் தூற்றும்; உதவாது பெரியவர்களின் மிகச் சிறிய துரதிர்ஷ்டங்கள், பணக்காரர்களின் அற்பமான அசௌகரியங்கள்—இவையெல்லாம் பேச்சுத் திறனால் நமக்குப் பெரிதாகிக் காட்டப்படும். நம் கவனத்தையும் இரக்கம் தோய்ந்த துக்கத்தையும் அவை கவருமாறு செய்யப்படும். ஆனால் ஏழைகள் அழுவதைக் கவனிப்பார் இல்லை. எல்லாம் கொடுமையாகி அவர்களைத் துன்புறுத்தும். மற்றவர்க்குப் பாதுகாப்பளிக்கும் சட்டமும் அவர்களுக்குப் பகையாகும்.

என்னிதயம் ஏன் இவ்வளவு மென்மையாகி விட்டது? தன் துடிப்புக்கு ஏற்றவாறு என் அதிர்ஷ்டம் ஏன் இயங்க வில்லை? உதவ முடியவில்லை; எனினும் உணர்ந்து வருந்தும் மென்மை இருக்கையில் உதவி கோருவோனைவிட உணருவோனே மிக வேதனை அடைகிறான்.

கே. வெங்கட்ராமன்

பசி ☆ ☆

நிலா சாய்ந்து கொண்டிருந்தது வான வீதியிலே.

அது அவனுக்கு அனலாகச் சுட்டது!

தென்றல் மன்றலான பெண்போல் நாணத்துடன் அவன் கன்னத்தை வருடியது!

அது அவனுக்கு ஆதவனது சுடும் கிரணமாகப்பட்டது!

கானக்குயிலின் இசை காற்றிலே மிதந்து வந்து அவன் மனதிலே களிப்பூட்டியது!

அது அவனுக்கு மோகனமாக இருந்தாலும் முகாரியாகக் கேட்டது!

பசி!

பக்கத்திலிருந்த பசுவின் பால்! கற்கண்டும் கனிரசமும் சேர்க்கப்பட்டபால்! விதம் விதமான கனிகள்! விருந்து வகைகள்! அவன் ஏறெடுத்தும் பாராததால் கவனிப்பாற்றுக் கிடந்தன கணவனை யிழந்த கைம்பெண்போல!

இனிப்பான லட்டு—பாலின்சுவை—பாகின் இனிமை—தேனின் தித்திப்பு—அவ்வளவும் அவனுக்குக் அசந்தன. ஆனாலும் வயிற்றில் பசி!

பசி!

பசியா அது?

உடலைச் சுருட்டி குடலை உருட்டி உடலெங்கும் உளைத்து எடுக்கும் அதன் சப்தம்—கோடைக்காலத்து இடி—பூகம்பத்தின் காசஒலி—கொந்தளிக்கும் கடலின் ஆரவாரம்! அப்பப்பா!

சுருட்டி எறிந்தான் படுக்கையை. ஆனால் அவனால் படுக்கையைதான் சுருட்டி எறிய முடிந்தது. பசியை சுருட்டி எறிய முடியவில்லை. அது நீண்டு வளர்ந்து மலைப்பாம்புபோல் வளைந்து வளைந்து கொடுத்தது.

மப்பும் மந்தாரமும் நிறைந்த வானத்தைப் பார்த்து ஆவலோடு ஆசையோடு—ஆனந்தமாக நடனமாடும் மயிலின் மனதிலே எழும் நடனப் பசி.

மாஞ்சோலையிலே மாலை நேர மஞ்சள் நிறவெயிலிலே மந்தமாருத தென்றலிலே பழுத்துக் கிடக்கும் மாங்கனியின் அருகே அமர்ந்து அமரகீத மிசைக்கும் மாங்குயிலின் நாதப் பசி.

வேலைக்காட்டிலும் கூர்மையான விழியிலே மருட்சியோடு தன்னுயிரைக் காத்துக்கொள்ள வேடனிடமிருந்து தப்பி மறைவிடம் நோக்கி பாய்ந்தோடும் மானின் உயிர்ப் பசி.

அதைக் காட்டிலும் அதிகமாக—தொட்டால் துவளாமல்—கைபட்டால் கசங்காமல்—மீண்டும் மீண்டும் கரையில் எடுத்தெறியப்பட்ட மீன் குட்டித் துள்ளுவதுபோல் குதிக்கும் அந்த ஆற்ற முடியாத அணைக்க முடியாத பசி—முக்கனியாலும் முடிக்சுப்போட முடியாத அறுசுவை உண்டிகளாலும் ஆத்ம திருப்தி செய்ய முடியாத—அந்த அகோர—யானைப்பசி!

அவன்—ஆண்! இயற்கையின் சிந்தக்கல். இழுத்த இழுப்புக்கெல்லாம் வரும் உடும்பு அவன் இதயம். இதயத்தில் உதயமானது இன்பத்தின் ஜோதி. ஜோதி சுடர்விட்டது. சுடர் கொழுந்து விட்டது! தீ பற்றியது! உள்ளத்தை உடலை கனலாக ஆக்கியது ஜ்வாலை அவனை உலுக்கி எழுப்பி அடங்கிக் கிடந்த உணர்ச்சி பாம்பின் உடலிலே சூட்டை உண்டாக்கியது. பாம்பு எழுந்தது! சீறியது! படமெடுத்தாடியது!

அவனுக்குத்தேன் கசந்தது. ஆனால் செவி தேன்மொழியாளின் தெவிட்டாத அமுதச் சொற்கள் கேட்க ஆசைப்பட்டது!

அவனுக்குப்பால் கசந்தது. ஆனால் பாவை யொருத்தியின் பளிங்குப் பார்வையிலே பாடம் படிக்க அவன் உள்ளம் பாகாய் உருகியது! மானின் மருட்சிப் பார்வையையும், மயிலின் எழிலையும், குயிலின் குரலையும், தென்றலின் மென்மையையும், தந்தத்தின் வெண்மையையும் பூங்கொடியின் நெறியையும், மதிமுகத்தின் குளுமையையும், காந்தக்கண்களின் கவர்ச்சியையும் பவள அதரத்தின செம்மையையும் அவன் சிந்தனைக்கல்லிலே செதுக்குகிறான் சிற்பமாக. சிற்பம் சிந்தைக்கு மகிழ்ச்சியை மட்டுமல்ல சீறியெழக்கூடிய பசியையும் எழுப்பி விட்டது!

அந்த அபூர்வப்பசி......?

தெவிட்டாத தேனாலும்—தேவருகத்து அமுதாலும்—தீர்க்க முடியாத—போக்க முடியாத—கொடிய வேகத்தை—உணர்வை—ஆசையைக் கிளப்பி விட்டது!

மின்சார வேகத்தில் பரவிய அது அவனை மீண்டும் மீண்டும் அந்தப் பசியாற்றில் தள்ளியது'

அவன் எழுந்தான். அவனுடன் அண்டங்களை யெல்லால் ஆக்ரமித்து அமோகப் புகழ் கொண்ட அந்தப் பசி—கானகத்திலே கடவுளைக்கண்டு அவர் கடாட்சம் பெற்று வாழ கண் மூடித் தவம் செய்த முனிவனையும் முழுமூச்சுடன் முயற்சியுடன் அவனது முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டைப் போட்டு, முறியடித்து மோகப் புகழ்கொண்ட அந்தப் பசி—தானகத்திலே வற்றாத ஜீவநதியாக தன் வாழ்வை வறமாக ஆக்கி வாழ்ந்து கொண்டிருந்த இந்திரனையும் இழிவுப் பெயருடன் இகலோகத்தில் இன்றளவும் இயங்கச் செய்த பசி—சந்திரனையும் சகம் உள்ளளவும் சல்லாப சுந்தரன் சாபம் பெற்றான் சாசி ஒருத்தியுடன் சல்லாபம் செய்ததால் என்ற பெயருடன் உடலாவச் செய்த அந்தப் பசி—அதுவும் எழுந்தது!

அவன் வாழ விரும்பினவன் தான். இதயத்தை ஒரும் இளம் பெண்ணிடம் பறி கொடுத்தான். இன்பமான இல்லறத்தை தொடர காதல் மணம்தான் நல்லது என நம்பினான். அவனால் நிரம்பப்பட்ட உள்ளத்தை அயலான் ஒருவனுக்கு காணிக்கையாகக் கொடுத்து விட்டாள் அவன் காதலித்த கன்னி!

அவன் உள்ளம் நொடிந்தது. அவள் மனதை மாற்ற, தான் ஒரு மங்கையிடம் மனம் பறிகொடுத்து அவளுடன் புது

வாழ்வுத் தொடங்கப் போவதாக அவன் அறிவித்தான். முதலில் அந்த முல்லை நகைகளுக்கு சிறிது நேரம் மூச்சு நின்றது! பிறகு கைப்பிடித்த கணவன் தான் இனி எல்லாம் என்று அவள் அவனை அலட்சியமாக பார்த்தாள்.

தோட்டத்திலிருந்த மல்லிகைபூக்களை கை நிறைய பரித்து அவன் கசக்கினான். அவன் முகம் விகாரமானது. உடல் நடுங்கிற்று. பைத்தியம் பிடித்தவனைப்போல அவனை வெறித்து வெறித்துப் பார்த்தான். "இதயவீணையின் இன்னிசை கீதமே! காதல் காதல் என்று கூறி என்னை காட்டாற்றில் தள்ளினாயே! இதோ பார்! மல்லிகைகள்! மண்ணிலே எழிலழிந்து, மணமிழந்து இருந்த இடம் இழந்து கசங்கிப் போனதை! கன்னி ஒருவளுடன் களிப்புடன் வாழ வேண்டுமென்ற ஆசையா எனக்கு! இல்லை! ஏமாந்தேன்! இல்லை, ஏமாற்றப்பட்டேன்! சிந்தித்தாயா, சிந்தை பறி கொடுத்தவளே; உன் சீலைத் தோளிலிருந்து சரிந்து விழுகிறதே யென்று தூக்கிப் போடுகிறாயே! நான சரிந்து செத்தேனே அப்பொழுது நீ என்னை தூக்கி நிறுத்தினாயா? நீ என் எண்ணத்தை திண்ணமாக்கி யிருந்தால் காதல் என்று சொல்லி கண்ட கண்ட பெண்களின் உள்ளத்தை களவாடி இன்பக்குளத்தில் இறக்காமல், ஆசை வெள்ளத்தில் ஆழ்த்தாமல் காதல் காற்றிலே, தாபத்தீயிலே, பாசக்கடலிலே அவர்களை ஒரு காற்றாடியாக, புழுவாக, உடைந்து போன கப்பலாக செய்திருப்பேனா? செய்ய நினைத்திருப்பேனா? கிளி என்னிடம் கிள்ளை மொழி பேசும் என்று உள்ளம் கிளுகிளுத்தேன். நீ உன் பவள மூக்கால் என் உடலை குத்தி பச்சை இரத்தத்தை ஓடையாக ஓடவிட்டாய் கைப்பிடித்த கணவனுடன் காலம் தள்ளுகிறாய் நீ! கற்கண்டை விட அதிகமாக உனக்கு தித்திக்கும் அவன் கனிமொழிகள், தேனாகதித்திக்கும் அவனுடைய பாகுமொழிகள் ஆனால் அதேநேரத்திலே அன்பின் அடித்தளத்திலே உன்னால்—நீ ஏமாற்றப் பட்டவனால்—வஞ்சனையறியாத கனிதைகள்—அல்லல் தெரியாத அம்புவிழி அழகிகள்—இன்பம் தேடும் எழிலரசிகள்—வாழ விரும்பும் வனிதாமணிகள் — பாசத்தை என்னிடமிருந்து பாம்பாக அணிகின்றனர். அவர்களது அஸ்தமனத்துக்கு, அல்லலுக்கு, அழிவுக்குக் காரணம் நீ! நீ! நீ!"

இரண்டு கைகளையும் தட்டிப் பிரசங்கம் பகுஜோர் என்று கூறிவிட்டு பின்னால் அவன் முகத்திலடிக்கப் போய்விட்டாள் அவன் மாஜிக் காதலி! அவனுக்கு உலகமே சூனியமாகி விட்டது போலிருந்தது. தெய்வீகக் காதலைத்தேடி யலைந்தவன் தேய்பிறையைத்தான் கண்டான். காதலைக் கதைகளிலும் சினிமாக்களிலும் தான் காண முடியும் என அவன் எண்ணினான். மனம் கசந்தது.

உடலைப்பற்றி எண்ணாதவன்—அவனுடைய உணர்ச்சிகளைப் பற்றி நினையாதவன் இப்பொழுது உடலைத்தான் பெரிதாக நினைத்தான். உள்ளத்தை மறந்தான். கொன்றான்!

புத்தரைப்போல் ஆசைகளை அவன் ஒழிக்கவில்லை. அழிக்கவில்லை.

'மண் தின்பதை மனிதன் தின்கிறான்' என்று எந்த மங்கையைப் பார்த்தாலும் அவன் நினைத்தான்.

நினைவு நீளமாகவே இதயப்பசி—உடல் பசியாக மாறி உடலெங்கும் பரவி பாய்ந்தது பாம்பாக!

அவன் புறப்பட்டான்! பசி அடங்கினாலொழிய நிசியில் உறக்கம் வராதென அவன் கருதினான்! கடைசியில் அவன் எதிர்பார்த்தபடியே அவனெதிரே ஒரு பெண் வந்து கொண்டிருந்தாள்!

'அழகு மாளிகை! ஆஹா! இன்பத்தின் இருப்பிடம்! இதயத்தின் வாழ்விடம்! அழகுத் தெய்வம்! அழியாத ஓவியம்! முல்லை இதழழகி! மோகனப் புன்னகைக்காரி! தேன் நிலவு! தெவிட்டாத தேன்மொழி! ஆஹா......ஆஹா......"—அவன் அவளிடம் நெருங்கினான்!

சிலை சிறியதை அவன் கண்டதில்லை. அவள் சீறினாள்.

"விளையாட்டுப் பொம்மையல்ல பெண்கள்!"

"அழகான பேச்சு உன் முகத்தைப்போல!"

"ஒதுங்கிப் போ!"

"உன் இதயத்தை விட்டா?"

"ஆசையில் அழிந்து போவாய்!"

"ஆசை நிறைவேறிய பிறகுதானே அழிவு!"

"மடையன்!"

"ஆம்! வெண்ணை யிருக்கும் பொழுது நெய்க்கு அலைகிறேன்!"

"சீ!"

"அடப்பாவி! உன் சகோதரியை இப்படி ஒருவன் இழுத்தால்........?"

அவன் சிலையாக நின்று விட்டான். அவன் கண்ணெதிரே அழகு நாவுடன் அவன் தங்கைதான் தெரிந்தாள்! அவளை ஒருவன் பலாத்காரம் செய்தான் என்பதைக் கேட்டவுடன் அவன் உள்ளம் கொதித்தது. காற்றைவிட வேகமாகத்தான் அவன் தப்பினான். ஆனால் சகோதரி தப்பவில்லை, சமூகத்தின் கண்களிலிருந்து. அவமானச் சின்னம் வளரத் தொடங்கவே அவள் தூர்ந்த கிணறு ஒன்றில் அடைக்கலம் புகுந்தாள்.

அதுபோல் இவளும் இழிவு காரணமாக இதயம் நொந்து விட்டால்?

அவள் காலில் அவன் விழுந்தான். கால்களைப் பிடித்துக் கொண்டு கதறினான், புலம்பினான். கண்ணீர் விட்டான். மன்னிப்புக் கேட்டு மன்றாடினான். அவள் சென்று விட்டாள்.

அவன் பசி புசிக்காமலே அடங்கி விட்டது. கோடை இடியாக முழங்கிய அது மழையைப் பொழியாமலே போய்விட்டது.

பட்டணத்தில் ஓரிரவு

அறவிழி

☆

மணி இப்போதுதான் இரண்டடித்தது. வர்த்தி மங்கி மங்கி எறிந்து கொண்டிருக்கிறது. காவற்காரன் காலம் அறியாது தூங்குகின்றான். உழைப்பாளிகளும் மனமகிழ்ச்சியுடையோரும் ஓய்வெடுக்கின்றனர். சதி, கேளிக்கை, கள்ளவுள்ளம், கசந்த வாழ்வு இவைகளைத் தவிர, வேறொன்றும் விழித்திருக்கவில்லை.

குடிகாரன் ரசபாத்திரத்தை மறுமுறையும் நிரப்புகிறான். கொள்ளைக்காரன் தன் நள்ளிரவுச் சுற்றை ஆரம்பிக்கிறான். தற்கொலைகாரன் தன்னுடைய உடலுக்குத் தீங்காகத் தன் கையை உயர்த்துகிறான்.

வேண்டாம். இனி இந்த இரவைப் பழமையைப் பற்றிச் சிந்திப்பதிலோ, அல்லது இன்றைய பெருமைகளைப் பற்றி எண்ணுவதிலோ வீணாக்காமல் என்னுடைய தனியுலாவை நான் ஆரம்பிக்கட்டும் எனக்குச் சற்று முன்புதான் இப்பாதையில் மாறிக்கொண்டே யிருக்கின்ற ஒன்றுமின்மை நடந்து சென்றாள். அந்தோ அவளுடைய அலங்காரக் கேளிக்கைகளெல்லாம் நீர்ப்படியாப் பிள்ளைபோல் மறைந்து ஒரே வெறுமைதான் இப்போதிருக்கின்றது.

என்ன பூரண அமைதி எங்கும் நிலவி யிருக்கின்றது! அவிந்து போகிற விளக்கு மங்கி ஒளி வீசுகின்றது. தொலைவிலுள்ள காவல் நாயின் குலைப்பு அல்லது கடிகாரத்தின் துடிப்பைத் தவிர, வேறு ஒரு சப்தமுமில்லை. மனித இனத்தின் பெருமைத் துடிதுடிப்பெல்லாம் மறைந்து விட்டது. இத்தகைய ஓர் நேரம் மனித இனத்தின் வீண் பெருமையின் வெறுமையை எவ்வளவாய் எடுத்துக் காட்டுகின்றது!

இந்தத் தனிமை, இந்த அமைதி, நீங்கும் அமைதியாயிராமல் நீங்கா அமைதியாகும் ஓர் காலம் வரும். அப்போது இப்பட்டணமும் இதிலுள்ள மக்களும் மறைந்து போவார்கள். ஒருவேளை இப்பட்டணம் நிற்குமிடத்தில் ஒரு பாலைவனம் அக்காலத்திலிருக்கலாம்.

இப்பட்டணத்தைப் போன்ற எத்தனை பெரிய நகரங்கள் வாழ்ந்து வென்று, இப்பட்டணத்தைப்போல மிக மகிழ்ந்து அம்மகிழ்ச்சியின் குறுகிய பார்வையிலே தாங்கள் என்றுமே நிலைத்திருக்கப் போவதாக எண்ணிக் கொண்டன. ஆனால் அவைகள் இருந்த இடங்கூடத் தெரியாது அழிந்து போயின. அவைகள் நின்ற இடங்களிலே நடந்து செல்லும் வழிப்போக்கன் அழிவுத் துணுக்குகள் மேலே மிதிக்கிறான். அவன் அந்த அழிவுச்

சின்னங்களை நோக்கும்போது பூமிக்கடுத்த உடைமைகளின் நிலையாமையை உணர்ந்து அறிவை அடைகிறான்

"காட்டுச் செடிகள் வளர்ந்துள்ள இடத்திற்றான் அவர்களின் தலைநகர் இருந்தது. கொடும்பாம்புகள் நிறைந்த அந்த இடத்திற்றான் அவர்களின் மக்கட்சபை இருந்தது. இப்போது அடையாளமின்றிச் சிதறிக் கிடக்கும் அழிவுச் சின்னக் குவியல்கள் கிடக்கும் இடந்தான் அவர்களின் கொட்டகைகளும் கோயில்களுமிருந்தன. எல்லாம் விழுந்துபோயின. பேரார்வமும் பெருஞ் செல்வமும்தான் அவர்களை முதலில் வலி குன்றச் செய்தன. அரசியல் விருதுகள் பரிசுகள் எல்லாம் பயனுள்ள மக்களுக்கு அளிக்கப் படாமல் வேடிக்கை காட்டும் மக்களுக்குக் கொடுக்கப்பட்டன. அவர்களின் செல்வம் வெளி நாட்டாரை வரவேற்றது. முதலில் தோற்ற வெளிநாட்டார், மேலும் மேலும் படையெடுத்து இறுதியில் வெற்றியடைந்தபோது, இந்நகரிலுள்ளோரை அடையாளந் தெரியாவண்ணம் அழித்துப் போட்டார்கள்" என்று அந்த வழிப் போக்கன் கூறிக் கொள்வான்.

சில மணி நேரங்களுக்கு முன் ஒரே கூட்டமாயிருந்த தெருக்களில் எத்தனை கொஞ்சமான ஆட்கள் நடமாடுகின்றனர்! அப்படியே தெருக்களிற் செல்லும் ஒரு சிலரும் தங்களுடைய விபசாரத் தனத்தையும் துன்பத்தையும் மறைத்துக் கொள்ளப் பகலில் அணியும் முகமூடியை யணிந்து கொளளவில்லை.

ஆனால் நிர்ப்பந்தத்திலிருந்து சிறிதளவே விடுபட்டுத் தெருக்களைத் தங்கள் படுக்கையாகக்கொண்டு செல்வந்தர்களின் வாயில்களிலே படுத்திருக்கும் அவர்கள் யார்? அவர்கள் எல்லாம் பரிவு காட்டும் அளவைவிடப் பெரிய இடுக்கண் உடைய, நீதி வேண்டக்கூடிய நிலைக்கும் கீழான, தாழ்ந்த, வழிப்போக்கர்களும் அந்நியர்களும் தாய் தந்தையற்றவர்களுமே. அவர்களின் கீழ் நிலை அருவருப்பான பீதியை யுண்டாக்குகிறது. சிலர் மூடுவதற்குக் கந்தல்கள் கூட இல்லாதிருக்கின்றனர். வேறு சிலர் பிணிகளால் உடல் நலிந்து மெலிந்திருக்கின்றனர். உலகமோ அவர்களைப் புறக்கணித்து விட்டது. சமூகம் அவர்களோடு தனக் கொன்றுமில்லை என்று கையை விரித்துவிட்டது. அவர்களுக்கு வரவேற்பளித்தவை நிர்வாணமும் பசியும்தான். இதோ குளிரில் ஆடிக்கொண்டிருக்கும் இந்த ஏழைப் பெண்கள் ஒரு காலத்தில் நல்ல மகிழ்ச்சியான தினங்களைக் கண்டிருக்கின்றனர். அழகிகள் என்றும் புகழப்பட்டிருக்கின்றனர். ஆனால் கட்டுப்பாடற்ற செல்வக் கயவர்களின் கைபட்ட அவர்கள் இப்போது மாரி காலத்தின் கொடுமையை அனுபவிக்கின்றனர். ஒருவேளை இவர்கள் தங்களைக் கெடுத்த அதே கீழ்மக்களின் வாயல்களிலே படுத்து வேண்டிக் கொண்டிருக்கலாம். ஆனால் அந்தச் சிறார்களின் உள்ளங்களோ உணர்வற்றவைகள் சபிப்பதைத் தவிர துன்பப்படுவோரை ஆதரிப்பதை அறியாத காமுகர்கள்.

ஆ, ஏன்? நான் மனிதனாகப் பிறந்தேன்? என்றால் ஆதரிக்க இயலாத அனாதைகளின் அல்லல்களை ஏன் நான் பார்ககவேண்டும்! அந்தோ, தங்கக் குடிலில்லா மக்களே, உலகம் உங்களுக்கு வசை பொழியும். ஆனால் உதவி செய்யாது. பெரிய மனிதர்களின் துரும்பனைய துன்பமும் அவர்களின கற்பனை யல்லல்களும மிகவும் பெரிதாகப்பட்டு நம்முடைய எண்ணத்தையும் பரிவுணர்ச்சியையும் கொள்ளை கொள்ளும்படி எடுத்துச் சொல்லப் படுகின்றன. ஏழை மக்களோ அறிவாறின்றி அழுகிறார்கள். ஒவ்வொரு சிறிய அதிகாரியும் அவர்களைத் துன்புறுத்துகிறான். மற்றவர்களுக்கு ஆதரவு செய்யும் ஒவ்வொரு சட்டமும் இவர்களுக்குப் பகைஞனாகின்றது.

ஏன் என்னுடைய இதயம் இவ்வளவு மென்மையுடையதாம் யுள்ளது? அல்லது ஏன் என்றுடைய நல்லெண்ணங்கள் நிறைவேறும் வண்ணம் என்னுடைய உடைமைகளில்லை? ஆதாரம் கொடுக்கக்கூடாத பரிவு மென்மை யிதயமுள்ள ஒரு மனிதனை ஆதரிக்க வேண்டிய மனிதனின் துன்பத்தைவிட அதிகத் துன்பம அடையச் செய்கின்றது.

போதும்! இத்தகைய இன்னல் நிறைந்த இடத்திலிருந்து திரும்புகிறேன். என்மனம் மாய்மாலத் தூயவனைத் தொடர்கிறது. இவன் படுக்கை நேரம் நெருங்கு மட்டும மேன்மைச் செயல்களைப பற்றிப் பேசிக் கொண்டிருந்துவிட்டு, நடு இரவிலே தன்னுடைய கீழ்ச் செயல்களைச் செய்யப் புறப்படுகிறான் அதோ, எந்த முகத்தைக் கண்டாலும் ஒருவேளை தனக்குத் தெரிந்தவர்களோ என்று கலங்கி அந்த இருட்டுச் சற்று வழியாக விரைவாகப் போகிறதைப் பார்! அவன்தான் வெறுக்கிற ஒரு பெண்ணிடம் பகல் நேரத்தைக் கழித்துவிட்டு, இப்போது மீந்திருக்கிற இரவு நேரத்தைக் கழிப்பதற்காகத் தன்னை வெறுக்கிற ஒரு பெண்ணிடம் செல்கிறான். அவனுடைய கயமை கண்டு பிடிக்கப் படுவதாக! காலையிலே அவனுடைய காமம் அவனை எதிர் கொள்ளட்டும்!

ஆனால் எனது விருப்பம் நிறைவேறக் கூடியதல்ல. கயவன் கண்டு பிடிக்கப்பட்டபோது கயமைத் தனத்தை விடுவதில்லை. மிகவும் துணிவாக ஏமாற்றோடு புத்தியீனத்தையும் கூட்டிக் கொள்கிறான்.

[ஆலிவர் கோல்டுசிமித்தின் புகழ்பெற்ற A city Night Piece" என்ற கட்டுரையிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டது.]

தொடர் கதை

வாழ்க்கைப் புயல்

எஸ்.என்.கோ.ராஜன்

நாதியற்ற ஓர் ஏழைச் சிறுவனுக்குச் சித்திரவதையையும், வேதனையையும் கொடுத்த இரவு மறைந்து, கதிரவன் கிழக்கில் உதயமானான். அதே சமயம் தென் திசையிலிருந்து வேகமாக வந்த ரயில்வண்டி, சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனை அடைந்து ஒரு பெருமூச்சுடன் நின்றது!

அந்த ரயிலில் பிரயாணம் செய்த நூற்றுக் கணக்கானவர்களில் நமது கதைக்குச் சம்பந்தப்பட்டவர்கள் நால்வர். அவர்கள் வாத்தியார் வேலாயுதத்தின் மனைவி தாயாரம்மாள், அவர் மகள் கண்ணம்மாள், கண்ணம்மாவின் அடுத்த வீட்டு சிநேகிதி கமலா, கமலாவின் கணவன் ராமசாமி ஆகியோரே.

ரயில் ஸ்டேஷனில் நின்றதும் அந்த நால்வரும் ஒரு பெட்டியும் பையும் சகிதமாக இறங்கி, கலகலப்பும் சந்தடியும் நிறைந்த ஸ்டேஷனைச் சுற்றிலும் தங்களது பார்வையும், பேச்சும் பார்ப்பதற்கு அவர்கள் இதற்கு முன் சென்னை நகரைப் பார்த்தறியாத கிராம வாசிகளே என்று எளிதில் தீர்மானித்து விடலாம்.

அவர்கள் ஸ்டேஷனை விட்டு வெளியேறி, டிராமின் அலறலும், பஸ்ஸின் ஓசையும், பாதசாரிகளின் பரபரப்பும், மற்ற வாகனங்களின் சந்தடியும் நிறைந்த தெருவை அடைந்தனர்.

"அங்கே பார், அம்மா!" என்று கூறிக்கொண்டே, தென் பிராந்திய ரயில்வே அலுவலகக் கட்டிடத்தைச் சுட்டிக்காட்டி, "அதுதான் 'ஹைக்கோர்ட்டு' போலிருக்கிறது!...அதோ அதுதான் 'லைட்டவுஸ்'! அடே யப்பா! எவ்வளவு உயரம்?" என்றாள் கண்ணம்மாள் வியப்புக் குரலில், அக் கட்டிடத்தின் உயரமான கோபுரத்தைச் சுட்டிக்காட்டி.

"இவ்வளவு உயரமா? இதில் பாதி யவ்வளவு இருக்குமென்று கூட நான் நினைக்கவில்லையே!...என்ன கோபுரம்! என்ன கோபுரம்!" என்றாள் தாயாரம்மாள், ஆச்சரியத்தால் அகல விரிந்த கண்களால் கண்ணம்மாள் சுட்டிக்காட்டிய இடத்தைப் பார்த்துக்கொண்டே.

"கோபுரம்! ஆ! கொஞ்சம் சரியாகச் சொன்னீர்கள். "அம்மா!"! என்றான் ராமசாமி, தாயாரம்மாளைப் பார்த்து.

"அதோ! எதிரிலிருக்கும் பிரம்மாண்டமான கட்டிடம்தான் 'கறுப்பு ரேஷன்' கட்டிடம் போலிருக்கிறது!" என்றாள் கமலா அரசாங்க ஆஸ்பத்திரியைச் சுட்டிக்காட்டி, கார்ப்பொரேஷன் கட்டிடம் எது என்று தீர்மானிக்க முடியாதவளாய்.

தாயாரம்மாளுக்கும், கற்றவர்களுக்கும் சென்னையைப் பார்க்க வேண்டுமென்று நெடுநாட்களாக ஆவல். தன் கணவர் சென்னைக்குச் செல்லும் பொழுதெல்லாம் தொந்தரவு செய்து, கடைசி தடவையாக அவர் சென்னைக்கு வந்தபொழுது விடாப்பிடியாக வற்புறுத்தினாள். அதற்கு வேலாயுதம், தான் அவசரமாகப் புறப்பட வேண்டியிருப்பதாகவும், இரண்டு நாட்கள் பொறுத்து கமலா, ராமசாமி

ஆகியோருடன் சென்னைக்கு வரும்படி சொல்லிவிட்டுப் புறப்பட்டு விட்டார். அதேபோலத்தான் அவர்கள் வந்தனர்.

பிரம்மாண்டமான கட்டிடங்களைக்கண்டு மலைத்து நின்றுவிட்ட அவர்களை வேலாயுதத்தால் அனுப்பப்பட்ட சட்டாம்பிள்ளை சந்தித்து வீட்டிற்கு அழைத்துச் சென்றான்.

* * *

காலையில் ஜீவரத்தினத்தின் வீட்டிற்குச் சென்ற கண்ணன் இரவு வெகு நேரமாகியும் திரும்பி வராததைக் கண்டு சரவணன் முதலியோர் என்னவோ ஏதோ என்று பயந்து போனார்கள். ஒருவேளை கண்ணனை ஜீவரத்தினம் அன்றிரவும் தன் வீட்டிலேயே தங்க வைத்துக் கொண்டிருப்பாளோ என்று எண்ணிச் சற்று ஆறுதலடைந்தனர். ஆனால் மறுநாள் காலை வெகு நேரமாகியும் கண்ணன் வராததால் அவர்கள் அடைந்த பயம் பன்மடங்கு பெருகியது. உடனே சரவணன் ஜீவரத்தினத்தின் வீட்டிற்குச் சென்று கண்ணனைப்பற்றி விசாரித்தான்.

"கண்ணன் நேற்று சாயந்திரமே இங்கிருந்து போய் விட்டானே! அங்கு வரவே இல்லையா?" என்று வியப்பும் திகிலும் கொண்டு கேட்டாள் ஜீவரத்தினம்.

"வரவில்லையே! இங்கே தான் இரவு தங்கி யிருப்பான் என்று நினைத்திருந்தோம். இங்கும் இல்லை; என் வீட்டிற்கும் வரவில்லை! அப்படியானால் அங்கே போயிருப்பான்?" என்றான் சரவணன் ஒன்றையும் புரிந்துகொள்ள முடியாதவனாய்"

'ஒருவேளை கந்தசாமியிடம் போயிருப்பானோ?" என்றாள் ஜீவரத்தினம்.

"இருந்தாலும் இருக்கலாம்! எதற்கும் நான் போய்ப் பார்த்து விட்டு வருகிறேன், அக்கா!'

"அங்கேதான் போயிருப்பான்! வேறெங்கே போகப் போகிறான்? எதற்கும் அங்கே போய்ப் பார்த்துவிட்டு, எனக்குத் தகவல் சொல்லி யனுப்பு சரவணா!"

"ஆகட்டும், அக்கா!" என்று கூறிவிட்டு, கந்தசாமியின் வீட்டுக்குப் போனான் சரவணன் கவலை தோய்ந்த மனதுடன்.

அங்கேயும் அ'த ஏமாற்றம் அவனை எதிர்கொண் டழைத்தது. கண்ணன் காணவில்லை என்ற சங்கதியைக் கேட்டு கந்தசாமி கதிகலங்கிப் போனான்! இரண்டிடங்களிலும் கண்ணனைக் காணாது ஏமாற்றமும், ஏக்கமும், திகிலும் அடைந்த சரவணன் கவலை தோய்ந்த உள்ளத்துடன் வீடு திரும்பினான்.

சரவணனும், அவனது தாய், தங்கை ஆகியோரும் கண்ணனை எங்கே தேடுவது, எப்படித் தேடுவது என்ற பெருத்த யோசனையுடன் ஒன்றுமே தோன்றாமல் அன்றிரவெல்லாம் தூக்க மின்றிக் கழித்தனர்.

எல்லோருக்கும் அந்த ஓர் இரவு நரகத்தில் கழித்த இரவாக மாறிற்று!

* * * *

தனது மனைவி தாயரம்மாளையும், அவளுடன் வந்த மற்றவர்களையும் கண்ட வேலாயுதம் அவர்களை வரவேற்கக் கூட மறந்தவராய், முதலில் கண்ணனைக்கண்டு பிடித்த வரலாற்றைக் கூறினார்.

"என்ன? அந்தப் பயல் அகப்பட்டு விட்டானா? எங்கே?" என்று வியப்புடன் கத்திக் கேட்டாள் தாயாரம்மாள்.

"தெருவில் அனாதையாக நின்று கொண்டிருந்தான். அதுவும் எங்கே என்று நினைக்கிறாய்? பஸ் நிற்கு மிடத்தில்! போகும் வரும் பஸ்களில் பிச்சை எடுத்துப் பிழைக்கிறான்போ லிருக்கிறது! வேண்டும் அவனுக்கு! நம்மிடம் சுகமாக மகாராஜாவின் மாப்பிள்ளைபோ லிருப்பது பிடிக்கவில்லை யென்று ஓடிப் போனானல்லவா அந்தத் திருட்டுச் சரவணனுடன் சேர்ந்து! இப்பொழுது மண்குதிரையை நம்பி ஆற்றில் இறங்கி விட்ட கதையாகி விட்டதோ என்னமோ?" என்றார் பெருமையுடன்.

"ஹாம்! மகாராஜாவின் மாப்பிள்ளை போலவா இருந்தான் உங்க விட்டில்? மகாராஜாவைப் போலவே அல்லவா இருந்தான் அவன்!" என்றான் ராமசாமி சிரித்துக்கொண்டே ஏளனக்குரலில். ஆனால் அந்த ஏளனம் வேலாயுதத்திற்கோ, அவர் மனைவிக்கோ எங்கே அர்த்தமாகப் போகிறது.

இருவரும், "பின்னே இல்லையா?" என்றனர் உரக்க.

"சரி, இப்பொழுது கண்ணன் எங்கே?" என்று சுற்றிலும் பார்த்துக்கொண்டே கேட்டான்.

"பின் கட்டில் ஒரு அறையில் போட்டுப் பூட்டி வைத்திருக்கிறேன். இனிமேல் இந்தச் சிங்கக் கூண்டிலிருந்து தப்ப முடியுமா, அவனால்!" என்றார் வேலாயுதம், தலையையும் கையையும் ஆட்டிக்கொண்டே பிறகு, "இன்றைக்கு நீ வந்தது ரொம்பவும் நல்லதாகப் போய்விட்டது! அவனை நீயும் கவனித்துக் கொள். முன்போலவே அவன் கம்பி நீட்டி விட்டானால் என்ன செய்வது?" என்றார்.

"சிங்கக் கூண்டிலிருந்து அவன் தப்ப முடியாது என்கிறீர்களே, சார்!" என்றான் ராமசாமி சிரித்துக்கொண்டே.

"ஆமாம்...இருந்தாலும் நாம் ஜாக்கிரதையாகத் தான் இருக்க வேண்டும். ருசி கண்ட பூனை அல்லவா?...இருந்தாலும் நீங்கள் ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம், சார்! என் பொறுப்பில் இந்த விஷயத்தை விட்டுவிடுங்கள். நீங்கள் கவலையற்று இருங்கள்!"

"சரி, நீயே அவனைப் பார்த்துக்கொள்!"

அன்றெல்லாம் ராமசாமிக்கு ஓய்வு ஒழிச்சலே இல்லை! அவன் மனக்கரையில் என்னென்ன எண்ண அலைகளோ மோதுண்டு சிதறின, அடிக்கடி சிந்தனையில் மூழ்கினான். தனக்குள்ளேயே ஏதேதோ முணுமுணுத்துக் கொண்டான். யாருடனும்—ஏன்? தன் மனைவி கமலாவுடனும் கூடச் சரியாகப் பேசவில்லை. அடிக்கடி கண்ணனைப் பூட்டி வைத்திருந்த அறைக்குச் சென்று பார்ப்பதும், பிறகு திரும்பி வருவதுமாக அங்கு மிங்கும் அலைந்தவா றிருந்தான்.

அதைக் கண்ட வேலாயுதம் ராமசாமி கண்ணனுக்குச் சரியான காவலாக இருக்கிறான் என்று எண்ணித் திருப்தி யடைந்தார்! ஆனால் கண்ணம்மாள் அவனது நடத்தையைக் கண்டு, அவனுக்குப் பைத்தியம் தான் பிடிக்கப் போகிறதென்று உறுதியாகக் கூறினாள். கமலாவுக்கோ தனது கணவனின் நடத்தையில் சந்தேகமும், விளங்கிக்கொள்ள முடியாத புதிரும் உதித்தன அவன் உடம்பிற்கு ஏதாவது வந்துவிடப் போகிறதே என்று பயந்தாள் அவனிடம் விநயமாகப் பேசி விஷயத்தை அறியத் துடித்தாள். ராமசாமியைத் தனியே சந்தித்துப் பேசியபோது அவன் கமலாவின் காதுகளில் ஏதோ இரகசியமாகச் சொல்லி அனுப்பி விட்டான்.

சாப்பாட்டு வேளையில் மட்டும் கொஞ்சம் கருணைகாட்டிக் கண்ணனுக்குச் சிறிது ஆகாரம் கொடுத்தார்.

தான் பட்ட கஷ்டங்கள் ஆதவனின் உதயத்திற்கப்புறம் படிப்படியாக மறையும் பனிப்படலம்போல் மறைந்து, இன்ப வாழ்க்கையில் ஈடுபட முதற்படியில் கால் வைத்த தனக்குத் திடீரென்று இத்தகைய இன்னல் வந்து சேரும் என்று கற்பனை கூடச் செய்து பார்த்தறியாத பேதைக் கண்ணன் மனங்குன்றி செய்வதொன்றுமறியாமல், கற்சிலைபோல் காரிருள் சூழ்ந்த அறையில் கிடந்தான்!

பகல் பொழுது பறந்தோடி, மாலை நேரம் வந்து சேர்ந்தது! கமலாவின் தூண்டுதலின் பேரில் முதல் காட்சி சினிமாவுக்குப் போக வேண்டும் என்று தாயாரம்மாளும், வேலாயுதத்தினிடம் கேட்டுக் கொள்ளவே அவர் எல்லோருடனும் புறப்பட ஆயத்தமானார்.

அப்பொழுது ராமசாமி, "எனக்குத் தலைவலி அதிகமாக இருக்கிறது, சார்! சினிமாவுக்கு வர முடியாது! மேலும் நானும் சினிமாவுக்கு வந்துவிட்டால் கண்ணனுக்குக் காவல் யார்? நீங்கள் மட்டும் போய் வாருங்கள்!" என்றான்.

அதைக் கேட்ட கமலா, "என்ன? நீங்கள் வரவில்லையா? அப்படியானால் நான் கூடப் போகவில்லை! உங்களுக்குத் தலைவலிக்கும் போது நான் எப்படிப் போவது?" என்றாள் ராமசாமியைப் பார்த்து.

உடனே ராமசாமி கமலாவுக்கு ஜாடை காட்டி, "நான் வராவிட்டால் என்னவாம்? துணைக்குத்தான் கண்ணம்மாள் இருக்கிறாளே!... அத்துடன் கண்ணனைக் கண்காணிக்க நான் இங்கேயே தான் இருக்கவேண்டும்! இல்லாவிட்டால் அந்தத் திருட்டுப்பயல் கம்பி நீட்டி விடுவானாக்கும்!...உம்...புறப்படுங்கள் சீக்கிரம்! நேரமாயிற்று" என்று கூறி, துரிதப்படுத்தினான்.

வேலாயுதம் பரமதிருப்தி யடைத்தவராய், ராமசாமியின் மேல் அசைக்க முடியாத நம்பிக்கை வைத்து அவனைத் தனியே விட்டுவிட்டு, மற்றவர்களுடன் சினிமாவுக்குச் சென்றார்.

சற்று நேரம் கழிந்தது. ராமசாமி கண்ணனை அடைத்து வைத்திருந்த அறையை அணுகி, தான் வைத்திருந்த கள்ளச் சாவியால் பூட்டைத் திறந்து, அறைக்குள் நுழைந்தான்! அச்சத்துடன் அவதிப்பட்டுத் தனக்கு உதவி செய்ய யாரும் வரமாட்டார்களா என்று ஏக்கம் கண்ணன், அறைக்குள் ராமசாமி நுழைந்ததைக் கண்டதும் விரிஞ்சிபுரத்தி லிருந்த அவன் திடீரென்று அங்கே எப்படி முளைத்தான் என்று முதலில் திகைப்படைந்தான்! பிறகு ஆச்சரியத்தின் ஆதிக்கத்திற் குட்பட்ட அவன், கஜேந்திரனைக் காக்கக் கடவுள் தோன்றியது. போலத்[தன்னை நரகவேதனையிலிருந்து காப்பாற்றக் கடவுள் தான் உங்களை இங்கு அனுப்பினார் போலும்!" என்று கூறி, ராமசாமியைப் பிடித்துக்கொண்டு கோவெனக் கதறி யழுதான் கண்ணன்.

அவனைத் தேற்றுவதற்குள் ராமசாமிக்குப் பெரும் பாடாகப் போயிற்று. கடைசியாக அவன் அழுகையை ஒருவாறு நிறுத்தி, அவனைப்பற்றி எல்லா விவரத்தையும் கேட்டான். கண்ணன் எல்லாவற்றையும் சொன்னான்.

பிறகு ராமசாமி வீட்டைப் பூட்டிவிட்டு, கண்ணனை அழைத்துக்கொண்டு சரவணன் வீட்டிற்குச் சென்றான்.

*   *   *

அன்றெல்லாம் சரவணன் கண்ணனை எங்கெங்கோ தேடி யலைந்து விட்டு, கண்ணன் காணாமற்போன செய்தியை ராம் சகோதரர்களுக்குத் தெரிவிக்கலாம் என்று ஸ்டுடியோவிற்குச் சென்றான் கண்ணன்.

ஸ்டுடியோவை அடைந்து பரபரப்புடன் பலராமின் அறைக்குள் நுழைந்தான். ஆனால் அங்கிருந்த காட்சி மலைக்க வைத்தது! அங்கே ஒரு எழில் வாய்ந்த யுவதி பலராமுக் கருகில் சோபாவில் அமர்ந்து விம்மி விம்மி அழுதுகொண்டிருந்தாள். பலராம் அப் பெண்ணிடம் அன்பாகப் பேசித் தேற்றிக் கொண்டிருந்தார்.

அதைக்கண்டு ஒரு விநாடி ஸ்தம்பித்த சரவணன் வந்த சுவடு தெரியாமல் பின்னால் நகர்ந்து வாசற்படியை அணுகி மறைந்து நின்றான். அந்த யுவதியை ஒருநாள் ஷூட்டிங்கில் பார்த்ததாக அவனுக்கு நினைவு வந்தது.

"பத்மா!...அழாதே! அழுது அழுது உன் மனதை மாய்த்துக் கொள்ள வேண்டாம்! உனக்கு ஒரு துன்பமும் வராமல் பார்த்துக் கொள்கிறேன். நான் இருக்கும் போது உனக்கேன் பயம்! உன்னைக் காப்பாற்றுவது என் பொறுப்பு! என்றார் பலராம் அப் பெண்ணின் தோளைப்பற்றி.

ஆனால் பத்மாவின் அழுகை நின்றபாடில்லை. அழுகை அதிகமாயிற்று. அப்படியே மூர்ச்சித்து பலராமின் மடியின்மேல் சாய்ந்து விட்டாள்.

அதைக்கண்டு திடுக்கிட்ட சரவணன், முன்னால் ஓடிவந்து, பலராமையும் பத்மாவையும் மாறிமாறிப் பார்த்தவாறு ஒன்றும் தோன்றாமல் நின்றான்.

அவனைக் கண்ட பலராம், "ஓ! சரவணா! நல்ல சமயத்தில் வந்தாய்! ஓடிப்போய்க் கொஞ்சம் தண்ணீர் கொண்டுவா... இவள் மூர்ச்சையுற் றிருக்கிறாள்! ஓடு'...சீக்கிரம் தண்ணீர் கொண்டுவா!" என்றார் பதட்டத்துடன்.

சரவணன் ஓடிப்போய் தண்ணீர் கொண்டு வந்தான். பிறகு பத்மாவின் முகத்தில் தண்ணீரைத் தெளித்து மூர்ச்சை தெளிவித்தனர் இருவரும்.

பிறகு பலராம் பத்மாவைப் பார்த்து, "பத்மா! உனக்கு உடல் நலம் சரியில்லை! அதிகக் கவலையால் உடம்பை அலட்டிக் கொள்ளாதே! நிர்மதியாக விட்டுக்குப் போ!" என்று சொல்லிவிட்டு, சரவணனைப் பார்த்து, "சரவணா! பத்மாவைக் கொண்டுபோய் அவள் விட்டில் விட்டுவா. என் காரிலேயே இருவரும் போங்கள்! என்றார்.

பத்மாவின் அழுகை, பலராமின் ஆறுதல் மொழிகள், அவள் மூர்ச்சையுற்றது ஆகியவற்றை ஒன்றையுமே புரிந்துகொள்ள முடியாமல், புதிர்ப்புதரில் சிக்கிய சரவணன், தான் கண்ணனைப்பற்றி விசாரிக்க வந்ததையும் மறந்தவனாய், பத்மாவுடன் காரில் ஏறி அவள் விட்டிற்குச் சென்றான்.

அவளை அவள் விட்டில் விட்டுவிட்டு மீண்டும் ஸ்டுடியோவிற்கு வந்து பலராமிடம் கண்ணனைப்பற்றி விசாரித்தான். கண்ணன் காணாமற்போன செய்தி பலராமைத் திடுக்கிட வைத்தது, அவனைக் கண்டுபிடிக்க உடனே தான் முயற்சிப்பதாக ஆறுதல் சொல்லி சரவணனை அனுப்பி வைத்தார்.

கண்ணன் காணமற் போனதால் ஏற்பட்ட ஏக்கம், ஸ்டுடியோவில் தான் கண்ட சம்பவத்தால் திகைப்பு, அன்றெல்லாம் அலைந்ததால் ஏற்பட்ட சோர்வு ஆகிய உணர்ச்சிகளுடன் தன் விட்டை யடைந்தான் சரவணன்.

விட்டிற்குள் நுழையும்போது கண்ணனின் குரலும், தனக்கு எப்பொழுதோ அறிமுகமான மற்றொரு குரலும் கேட்டுப் பரபரப்படைந்தவனாய் உள்ளே ஓடினான். அங்கே கண்ணனும் ராமசாமியும் இருந்ததைக் கண்டு களிப்படைந்து, பாய்ந்து சென்று கண்ணனைக் கட்டி யணைத்துக்கொண்டான்!

ராமசாமி நடந்ததை ஒன்று விடாமல் சொன்னான், நெடுநாட்களுக்கப்புறம் ராமசாமியைச் சந்தித்த சரவணன் கண்ணனைக் கண்டதைவிட அதிகம் களிப்படைந்தான். தனது தாய்க்கும், தங்கைக்கும் ராமசாமியை அறிமுகப்படுத்தினான்.

ராமசாமி அன்றிரவு சரவணன் விட்டிலேயே சாப்பிட்டு வேலாயுதத்தின் விட்டிற்கு வர வெகு நேரமாகி விட்டது. அவன் விட்டை யடைந்தபோது சினிமாவிற்குச் சென்றிருந்தவர்கள் திரும்பி வந்து அவனுக்காக காத்துக் கொண்டிருந்ததைக் கண்டு திடுக்கிட்டான்.

இருந்தாலும், தன்னைச் சமாளித்துக்கொண்டு, "அடடா! நீங்கள் வந்து ரொம்ப நேரமாகி விட்டதா? மன்னிக்க வேண்டும்! தலைவலி அதிகமாக இருந்ததால் காற்றாட உலாவிவிட்டு வரலாமென்று வெளியே போனேன். நேரமாகி விட்டது!" என்றான் அசட்டுச் சிரிப்புடன்.

பிறகு எல்லோரும் விட்டைத் திறந்து உள்ளே போனார்கள். முதல் வேலையாக வேலாயுதம் கண்ணனை அடைத்து வைத்திருந்த அறையை அணுகினார். அவ்வறை திறந்து கிடந்ததைக் கண்டு திடுக்கிட்டார்! கோபத்தால் குதித்தார்! ராமசாமியின் மேல் வசை மாரி பொழிந்தார்!

"உன்னை நம்பி விட்டுவிட்டுப் போனது என் முட்டாள்தனம்!... கண்ணன் எங்கே?...அவனை என்ன செய்தாய்?...எங்கே அனுப்பினாய்?...நடந்ததைச் சொல்! இல்லாவிட்டால் உன் உயிரை வாங்கி விடுவேன்!" என்று கத்தினார்,

அதைக் கேட்டு ராமசாமி திடுக்கிட்டவன் போல் நடித்து, "ஐயையோ! கண்ணனைக் காணவில்லையா?...எனக்கு ஒன்றுமே தெரியாதே, சார்! பூட்டைத்திறக்க என்னிடம் சாவி ஏது? இந்த அறையின் சாவியைத்தான் நீங்கள் எடுத்துக்கொண்டு போய் விட்டீர்களே?...உம்...ஆனால் ஒன்று மட்டும் எனக்கு நன்றாகத் தெரிந்து விட்டது!' என்றான்.

"என்ன?...என்ன தெரிந்துவிட்டது உனக்கு? கண்ணன் போன இடமா?" என்று கேட்டார் வேலாயுதம் ஆத்திரத்துடன்.

"அது இல்லை, சார்!..."

"பின்னே என்ன? சீக்கிரம் சொல்லித் தொலையேன்."

"கண்ணன்மேல் யாருக்கோ ரொம்பவும் அக்கரை இருக்கிறது! அவர்கள் தான் முன்பு விரிஞ்சிபுரத்திலும், இப்பொழுது இங்கேயும் கண்ணனைக் காப்பாற்றி யிருக்கவேண்டும்!"

"உம்...அப்படி அக்கரை கொண்டவன் அந்த தடியன் சரவணனைத் தவிர, வேறு யாராக இருக்க முடியும்? அவனையும் ஒரு கைபார்த்து விடுகிறேன்! எங்கே போய்விடப் போகிறான் அவன்?" என்று கையை ஆட்டிக் கர்ஜித்தார்.

ராமசாமியும் கமலாவும் ஜாடையாகப் பார்த்துப் புன்னகை புரிந்து கொண்டனர்.

* * *

கண்ணன் திரும்பி வந்த மறுநாள் ராமசாமி கமலாவை அழைத்துக்கொண்டு சரவணனின் பங்களாவுக்கு வந்தான். சரவணனும் கண்ணனும் அப்பொழுது ஸ்டுடியோவிற்குப் போகப் புறப்பட்டுக் கொண்டிருந்தனர்.

ராமசாமியையும் கமலாவையும் சரவணனும், அவன் தாய், தங்கை ஆகியோரும் இன்முகத்துடன் வரவேற்று உபசரித்தனர். முதல் சந்திப்பிலேயே சீதாவும் கமலாவும் ஆப்த சிநேகிதிகள் ஆகி விட்டனர். சிறிதுநேரம் எல்லோரும் ஆனந்தமாகப் பேசிக்கொண்டிருந்தனர்

பிறகு சரவணன், ராமசாமியும் கமலாவையும் ஸ்டுடியோவைச் சுற்றிக் காட்டுவதற்காக அழைத்துக்கொண்டு சென்றான்.

ஸ்டுடியோவைச் சுற்றிக்காட்டி, ஒவ்வொரு இலாகாவையும் விளக்கிக் கூறினான் சரவணன். கடைசியில் ஒலிப்பதிவு இலாகாவுக்கு வந்தபொழுது, அங்கே பலராம் ஒரு வாலிபனுடன் உரையாடிக் கொண்டிருந்ததைக் கண்டான் சரவணன்.

சரவணனைக் கண்ட பலராம், "என்ன சரவணா? உன் நண்பர்களுக்கு எல்லாவற்றையும் சுற்றிக் காண்பித்தாய் விட்டதா?...ஓ! மறந்து விட்டேன்! இவன்தான் சுந்தரேசன் என்மகன் ஹாலிவுட்டிற்குச் சென்று சினிமாக்கலை நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்து நேற்றுதான் நம் நாடு திரும்பினான்!" என்று கூறி சுந்தரேசன் என்ற அந்த வாலிபனை சரவணனுக்கு அறிமுகம் செய்து வைத்து, சரவணனைப்பற்றி சுந்தரேசனுக்கும் எடுத்துச் சொன்னார்.

"அது சரி, சுந்தரேசனைப்பற்றி என்னிடம் ஒரு வார்த்தை கூட இது வரையில் சொல்லவில்லையே? உண்மையைச் சொன்னால் உங்களுக்கு ஒரு மகன் இருப்பதாக எனக்கு இதுவரை தெரியாது!" என்றான் சரவணன் வியப்புடன்.

அதற்குப் பலராம் கலகலவென்று சிரித்தாரே தவிர பதிலொன்றும் சொல்லவில்லை.

அந்தக்கணம் முதல் சரவணனும் சுந்தரேசனும் உயிருக்குயிரான நண்பர்கள் ஆகி விட்டனர்! அதைக் கண்டு பலராமும் ஜெயராமும் குதூகலமடைந்தனர்.

மறுநாள் சுந்தரேசன் ஹாலிவுட்டுக்குச் சென்று, சினிமாக்கலை நுணுக்கங்களைக் கற்றுத் தேர்ந்து திரும்பியதை முன்னிட்டு தங்கள் நண்பர்களுக்கும், ஸ்டுடியோ சிப்பந்திகளுக்கும் பெரியதொரு விருந்து வைத்தார்கள் பலராமும், ஜெயராமும். அந்த விருந்தில் சரவணன் கண்ணன், சரவணனின் தாய், தங்கை, மற்றும் ஜீவரத்தினம், கந்தசாமி, ராமசாமி, கமலா ஆகியோர் கலந்து கொண்டனர் என்று சொல்லத் தேவை இல்லை. தேவலிங்கத்திற்கும் அழைப்பு அனுப்பியிருந்தனர் ராம் சகோதரர்கள். ஆனால் நல்லெண்ணம் மனதிலில்லாத அவர் விருந்திற்கு வரவில்லை.

விருந்தில் கேளிக்கைகளும், இன்னிசைக் கச்சேரியும், நடனங்களும் நிகழ்ந்து ஐம்புலனுக்கும் அளவிலா விருந்தளிக்கப்பட்டது!

விருந்து நடந்த அன்று மாலை பலராம் சரவணனை அழைத்து, "உன்னை ஒரு காரியத்தின் பொருட்டு விசேஷ தூதனாக நியமிக்க உத்தேசித் திருக்கிறேன், சரவணா!" என்றார் புன்னகையுடன்.

அதற்குச் சரவணன் "மகிழ்ச்சியுடன் உங்கள் கட்டளையை ஏற்றுக் கொள்ளுகிறேன். அத்துடன் என் முழுத்திறமையுடன் எனக்கிடும் கட்டளையை நிறைவேற்றக் காத்திருக்கிறேன், சார்?" என்றான்.

"சில நாட்களுக்கு முன் என் அறையில் சோகக் கலவரத்துடன் இருந்த ஒரு பெண்ணை அவள் வீட்டிற்குக் கொண்டுபோய் விட்டு விட்டு வந்தாயல்லவா?"

"ஆமாம்!"

"அவளை நீ அடிக்கடி சென்று கவனித்துக் கொள்ளவேண்டும். அவளது எதிர்காலம் ஆபத்தில் சிக்குண்டு கிடக்கிறதாம்! அவள் வரவிருக்கும் ஆபத்திலிருந்து தன்னைக் காத்துக்கொள்ள முடியாத நிலைமையில் அல்லல்பட்டு, அனாதரவாக அவஸ்தைப் படுகிறாளாம்! அவள் நமது ஸ்டுடியோவில் நடிகையாக இருந்து நமது பாதுகாப்பில் ஆறுதல் கண்டாலும், தனது தந்தையின் கொடுமைகளுக்கு இலக்காகி, அவனது தீச் செயலுக்குட்பட்டு தீராத ஏக்கத்தால் மனமொடிந்து கிடக்கிறாள். அதனால் அவளை நீ அடிக்கடி கவனித்து, அவளுக்கு வரவிருக்கும் ஆபத்தை வர வொட்டாமல் தடுப்பதை உன் பொறுப்பில் விடுகிறேன். அதற்காக என்ன உதவி வேண்டுமானாலும், தயங்காமல் என்னிடம் வந்து கேள்!"

"ஆகட்டும், சார்! என் உயிரைக் கொடுத்தாலும் அவளை ஆபத்திலிருந்து காப்பாற்றுகிறேன்... அவள்..."

"யாரென்று தானே கேட்கிறாய்?...நான் என் வாலிபத்தில் ஒரு அழகியை அளவுக்கு மீறிக் காதலித்தேன். அளவுக்கு மீறிக் காதலித்ததாலோ என்னமோ என் காதல் நிறைவேறாமல் போய்விட்டது. நான் காதலித்த பெண் வேறொருவனை மணந்து கொள்ளும் நிர்ப்பந்தத்திற்குள்ளாகி, அதேபோல் மணமும் செய்து கொண்டாள். அவளுக்குப் பிறந்தது தான் அந்தப்பெண்—பத்மா! அவள் பிறந்ததும் வாழ்க்கை அவதிக்குள்ளானது பத்மாவின் தந்தை எவ்வளவோ கஷ்டப்பட்டு அவளை வளர்த்தார். கஷ்டப்பட்டு வளர்த்தாலும் கனிந்த அன்பைக் காட்டத் தவறி விட்டார். அப்படி அன்பு காட்டத் தவறியதற்குக் காரணம் அவர் கடனாளியானதே! கடன் தொல்லை அவர் மென்னியை இறுக்க மனமுடைந்து அதே ஏக்கத்தில் நோயாளியாகவும் ஆகி விட்டார். பத்மாவை நடிகையாக ஸ்டுடியோவில் சேர்த்து வாழ வழி செய்தேன். நீ கண்ட சம்பவம் நடந்த அன்று பத்மா என்னிடம் வந்து, கடன் தொல்லையினின்று தன்னை விடுவித்துக்கொள்ள அவளுடைய தந்தை கடன் கொடுத்த கிழவனுக்கு அவளை மணம் செய்விக்க உத்தேசித் திருப்பதாகவும், அந்தக் கொடுமையிலிருந்து காப்பாற்றும்படியும் என்னிடம் அழுது புலம்பி ஆதரவும், ஆறுதல் மொழியும் வேண்டினாள். அதனால் அவளை ஆபத்திலிருந்து காப்பாற்றும் கடினமான பொறுப்பை உன் கையில் விடுகிறேன், என்ன சொல்லுகிறாய்?"

"ஆகட்டும் சார்!" என்றான் சரவணன் சுருக்கமாக,

பிறகு விருந்தை முடித்துக்கொண்டு எல்லோரும் வீடு வந்து சேர்ந்தார்கள்.

* * *

(தொடரும்.)

"ஆனந்தபோதினி" பஞ்சாங்கம

மன்மதவருஷ ஆடிமீ கலியுகாதி 5057, சாலிவாகனம் 1878,

பசலி 1365, ஹிஜிரா 1374, கொல்லமாண்டு 1130,

இங்கிலீஷ் 1955 ஜூலைமீ—1955 ஆகஸ்டுமீ

ஆடி	ஜூலை	வாரம்.	திதி.	நட்சத்ரம்.	அமிர்தாதி யோகம்.	விசேஷங்கள்
1	17	ஞா	திர44-15	மிரு41-47	சி60	பிரதோஷ, மாத சிவராத்தி
2	18	திங்	சசி35-55	திரு35-32	சி35-32அ	போதாயன அமா, கரிநாள்
3	19	செவ்	● 27-52	புன29-35	சி60	அமாவாசை
4	20	புத	பிர2()-28	பூச24-13	சி60	சிராவண சுத்தம், சங்-தரி
5	21	வியா	துதி14-00	ஆயி19-52	சி19-52அ	வ்யா-ச்ரா, விதைக்க
6	22	வெ	திரு8-58	மக16-58	ம16-58சி	மாத சதுர்த்தி விரதம்
7	23	சனி	சது5-30	பூர15-43	சி15-43ம	நாக பஞ்சமி, ஆடிப்பூரம், தலியனுள்
8	24	ஞா	பஞ்4-00	உத்16-22	அ60	சஷ்டி உபவாசம்
9	25	திங்	சஷ்4-32	அஸ்19-02	சி19-02ம	சத்யவர தீர்த்தம்
10	26	செவ்	சப்7-00	சித்23-35	சி60	மங்கள கௌரீ விரதம்
11	27	புத	அஷ்11-08	சு29-30	சி60	ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகள் திருநக்ஷத்திரம்
12	28	வியா	நவ16-35	வி36-47	சி60	... ...
13	29	வெ	தச22-50	அ44-32	சி44-32ம	வரலக்ஷி விரதம்
14	30	சனி	ஏ29-02	கே52-17	சி60	சர்வ-மத்வ-ஏகாதசி
15	31	ஞா	து35-13	மூ59-30	அ59-30சி	வை-ச்ரா, மாடு வாங்க
16	1	திங்	திர40-28	பூ60-00	ம60	
17	2	செ	சசி44-37	„ 5-47	சி5-47ம	
18	3	புத	○ப47-35	உத்11-05	அ11-05சி	
19	4	வியா	பிர49-17	தி15-05	சி60	
20	5	வெ	துதி49-47	அ17-55	சி60	
21	6	சனி	திரு49-07	சத19-35	அ19-35ம	
22	7	ஞா	சது47-30	பூர20-13	சி20-13அ	
23	8	திங்	பஞ்44-55	உட்19-58	சி60	
24	9	செ	சஷ்41-38	ரே18-47	சி60	
25	10	புத	சப்37-30	அசு16-50	ம16-50சி	
26	11	வியா	அ32-38	❊ப14-10	சி14-10ம	கிருத்திகை விரதம்
27	12	வெ	நவ27-08	திரு10-47	சி10-47ம	... ...
28	13	சனி	தச20-55	ரோ6-47	சி60	... ...
29	14	ஞா	ஏ14-32	மிரு2-25 திரு57-43	சி60	சர்வ-மத்வ-ஏகாதசி, அஜ-ஏகாதசி
30	15	திங்	து7-47	புன52-55	அ52-55சி	பிரதோஷம்
31	16	செவ்	திர1-02 சசி54-32	பூச48-20	சி60	சிம்மரவி நா-44-55

1955 ஆகஸ்டுமீ

			கே புத சுக்
	2-சனி-வ-நி 10-கட-சுக் 11-கட-புத 25-சிம்-புத 31-சிம்-அங் 31-சிம்-சூரி		சூரி யுரே அங் குரு
ரா		நெப் சனி(வ)	

தங்க மாத்திரை

இம்மருந்து தாதுபுஷ்டியைத் தருவதில் நிகரற்றது. இதில் கஞ்சா அபின் முதலிய லாகிரி வஸ்துக்கள் சிறிதும் சேர்க்கப்படவில்லை. வயது முதிர்ந்த காரணத்தால், உலக இச்சை இல்லாதவர்களுக்கும் இழந்த பலத்தையும் ஆச்சரியப்படத்தக்க விதமாய் ஒரு விதமான சுறுசுறுப்பையும் கொடுக்கும். இதுவன்றி வேறு எந்த நோயினாலுண்டான பலவீனமும் இம் மருந்தினால் நீங்கும். இரத்த விருத்தியை யுண்டாக்கி நரம்புகளுக்கு உறுதியைக் கொடுக்கும் தன்மையில் இது கைகண்ட மருந்து. வயோதிகமே தெரியாது. களைப்பும் தோன்றாது. சோர்வையும் சோம்பலையும் நீக்கித் தேக பலத்தைக் கொடுக்கும்.

இது, தங்கம், வெள்ளி, முத்து அயம், காந்தம் முதலிய உயர்ந்த உலோகச் சரக்குகளும், சஞ்சீவிக்கு நிகரான பல மூலிகைகளும் சேர்க்கப்பட்டு சிறந்த கைபாக செய்பாகங்களாய் தயாரிக்கப்பட்டது. இதனை ஒரு முறை வாங்கி உபயோகித்தால் இதன் மேலான குணம் தானே தெரியும். 20-மாத்திரை கொண்ட சீசா 1-க்கு விலை ரூபா 2.

தபாற் கூலி 1—0—0

ருதக நிவாரணி மாத்திரை

ஸ்திரீகளுக்கு மாதாந்திர பஹிஷ்டை (ருது) கிரமமாக வெளிப்படாமல் காலந் தவறி வெளிப்படுதல், சில காலம் வெளிப்படாமலே யிருத்தல், வயிற்று வலி, ஜுரம், மார்பு நோய், மயக்கம், கழுத்திசிவு, ஜன்னி தோஷங்கள், மஞ்ச காமாலை, உணர்ச்சியின்றி சிறுநீர் பெருக்கெடுத்தல், மூர்ச்சையாகுதல், மார்பு படபடவென்று அடித்துக்கொள்ளுதல், மேல் மூச்சு வாங்குதல், மர்ம ஸ்தானத்தில் பொறுக்க முடியாத வேதனை உண்டாகுதல் இன்னும் மாதர்களுக்குக் காணும் ருது சம்பந்தமான எல்லா வியாதிகளையும் கண்டித்து கருப்பகோசத்தைச் சரிப்படுத்திச் சந்தான விருத்தியை உண்டாக்கும்.

ஒரு டப்பி மாத்திரை விலை ரூபா 1. தபாற் கூலி 1-0-0

சர்வபடை சம்மாரன்

சரீரத்தின் இடுக்கான இடங்களாகிய தொடையின் இடுக்கு, அக்குள், இடுப்பு முதலிய இடங்களில் சிறிது சிறிதாகப் படர்ந்து இரவில் ஓயாத நமைச்சலைத் தந்து நித்திரையைப் பங்கப்படுத்திச் சரீரத்துக்கு அதிக கஷ்டத்தை உண்டுபண்ணும் படைகள் ஒரே தடவையில் இந்தச் சர்வபடை சம்மாரன் என்னும் தைலத்தை உபயோகித்த மாத்திரத்தில் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும், புட்டி 1-க்கு விலை அணு 4. தபாற் கூலி 1-0-0.

6-புட்டிகள் தருவித்தாலும் தபால் சார்ஜ் 1—0—0 தான்.

தனலட்சுமி கம்பெனி,

நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

புத்திர சந்தான எண்ணெய்

இந்த எண்ணெயைக் காலை மாலை இரு வேளையும் 1 அல்லது 2 காசு அளவு உள்ளங் கையில் விட்டுச் சாப்பிடவேண்டியது. இப்படி 15-நாள் சாப்பிட்டால் இது கருக்குழியிலிருக் கும் ஷை குற்றங்களை நீக்கி, கருக்குழியைச் சுத்தப்படுத்தி, மறு மாதத்திலேயே கருத் தரிக் கும்படிச் செய்யும். இது அனுபவமான எண் ணெய். இதற்குக் கடுமையான பத்தியம் கிடையாது.

சிலருக்கு கருத்தரித்து 2, 3, 4-மாதங்கள் வரையில் தங்கியிருந்து திடீரென்று உடைந்து போவதுண்டு. இவ்வகைத் தோஷமும் இந்த எண்ணெயில் நிவர்த்தியாகித் தீர்க்காயுளான கருத்தரிக்கும். இதன் விலை ரூபா 2.

தபாற்கூலி 1–0–0.

கர்ணபிந்து

காதில் சீழ் வடிதல், காது குத்தல், காது கோளா றிருத்தல், காதில் நமைச்சல் முதலிய வியாதிகளுக்கு இந்த மருந்தில் 2-துளி காலை மாலைகளில் காதில் விட்டு வர, காதிலுள்ள நோய்களெல்லாம் நீங்கிவிடும்.

புட்டி 1-க்கு விலை அணா 8.
தபாற் கூலி 1–0–0. மூன்று புட்டிகள் தருவித்தாலும் தபால் செலவு ரூ. 1–0–0 தான்.

கஸ்தூரி மாத்திரை

குழந்தைகள் முதல் கிழவர்கள் வரையில் எப்பருவத்தோர்க்கும் உண்டா கும் ஈளை, இருமல், சுரம், தலைப்பாரம், நெஞ்சில் கொருகொருப்பு, ஜல தோஷம் முதலியவைகள் தீரும். 25 மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு விலை ரூ. 1. தபாற் கூலி 1–0–0.

நரை மயிர் கருக்குந் தைலம்

தற்காலத்தில் பலவிதமாகச் செய்து விற்கப்பட்டு வருகிற கப்புகள் மயிரைச் செம்பட்டையாகவும், பசுமை நிறமாகவும், சாம்பல் வர்ணமாகவும் ஆக்கி விகாரப்படுத்தி விடுகின் றன. நமது தைலமோ நரைத்த மயிருக்குப் பூசிய 3 நிமி ஷத்திற்குள்ளாக நரைப்பதற்கு முன்பிருந்த கருமை நிறத்தையும் பளபளப்பையும் உண்டுபண்ணும், மேலே கூறியுள்ள விகார குணங்கள் இதில் உண்டாகமாட்டா. இதைப் பூசிய பிறகு முகலட்சணமும் வசீகரமு முண் டாகிறபடியால் வயோதிகரும் வாலிபரைப்போல் தோற் றப்படுவார்கள். இதை உபயோகிக்கும் விதம் பார்ச லோடு தெரிவிக்கப்படும். இதன் விலை ரூ. 1. தபாற் கூலி 1—0—0.

தனலட்சுமி கம்பெனி,
நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

சர்வமேக நிவாரணத் தைலம்

இந்தப் பிரசித்திபெற்ற இராஜ சஞ்சீவி திராவகத்தை, காலை மாலை இரண்டு வேளை களிலும் 10-நாட்கள் வரை உட்கொண்டால் வெகு நாட்களாகத் தேகத்தில் ஊறிய மேக ரோகங்கள், மேக வாயு, தனுர்வாதம், முழங் கால் வாதம், குதிக்கரல் வாதம், சகலமான தடிப்புகள், மேகரோகத்தால் உண்டான வெடிப்பு இரணங்கள், குழிப் புண்கள், புரை யோடுகிற புண்கள், திமிர் வாய்வு, கைகல் விரல்களில் மேகநீர் தங்கிய நோய்கள், கிரந்தி முதலிய கிரந்திப் புண்கள், தொடைவாழை படைகள், நகக்கணுநோய், சகல மூலங்கள் முதலிய ரோகங்கள், நெருப்பிலிட்ட பஞ்சு போல் போகும். இது அநேக ஜனங்களின் துன்பத்தை நீக்கிச் சௌக்கியத்தை உண்டு பண்ணி அதிக அனுபவத்திற்கு வந்தது. கடின பத்தியமின்றி, பால், நெய், கறி முதலியவைக ளுடன் சாப்பிடக்கூடியதும், தேக இளைப்பு, ஆயாசம் முதலியவைகளை உண்டாக்காமல் சுக மாக்கி வியாதிகளைக் கண்டித்துச் சுகப்படுத்தக் கூடியதுமாகிய உண்மையான மருந்து

இதன் விலை ரூபா 1—8—0 தபாற் கூலி 1—0—0

சீதபேதி (டிசென்டரி) பவுடர்

இரத்தபேதி, சீதபேதி, சீதமும் இரத்தமும் கலந்த பேதி, ...த்துடன் இரத்தம் வருதல், மூலக் கடுப்பு அடி வயிற்று ...ாய் முதலான வியாதிகள் குழந்தைகள் முதல் பெரியோர் வரையில் யாருக்கிருந்தாலும் 4-வேளையில் இம் மருந்து அவற்றைத் தப்பாமல் தடுக்கும்.

ஒரு புட்டியின் விலை அணா 8. தபாற் கூலி 1–0–0
6-புட்டி வரை தபால் செலவு 1—0—0 தான்.

கூந்தல் வளரும் துளி

இதை நல்லெண்ணெய் அல்லது தேங்காய் எண்ணெயில் கலந்து பிரதி தினம் மயிருக்குப் பூசி வந்தால் கூந்தலானது ஆலம் விழுதுபோல் உண்மையாய் வளரும். அதில் பேன் சேராது; சுண்டு உண்டாகாது; மயிர் உதிராது. வழுக்கை விழுந்த இடத்தி லும் மயிர் முளைக்கும். புட்டி 1-க்கு விலை அணா 12.
தபாற் கூலி ரூ. 1 2-புட்டிகளுக்கும் தபால் செலவு 1—0—0 தான்.

கார்டோலின் ஆஸ்தமா நிவாரணி

ஈளை இருமல், சுவாச கா...ம் முதலிய பிரான்கியல் ஆஸ்தமா நோய்கள் நாளில் தீரும். ஆஸ்மா இருமல் எந்த நிலையில் இருந்தாலும் குணத்திற்கு ...்திரவாதம். குணமில்லை என்று நிரூபித்தால் பணம் திருப்பித் தரப்படும் ...்தியம் இல்லை. 50 மாத்திரைகள் கொண்ட புட்டி 1-க்கு ரூ. 12. தபாற் கூலி ரூ. 1. இம்மருந்துக்கு எப்போதும் ரூ. 5/-அட்வான்ஸ் அனுப்பி விடவேண்டும்.

தனலட்சுமி கம்பெனி,
நெ. 6, லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்

ஆரணி-குப்புசாமி முதலியார் இயற்றியவை

	ரூ.	அ.
ரத்தினபுரி ரகசியம் 9-பாகமும்	18	14
ஞானசெல்வாம்பாள் 5-பாகம்	9	10
கற்பகச் சோலையின் அற்புதக் கொலை ...	2	0
கடற்கொள்ளைக்காரர் 2-பாகம்	4	0
மதனும்பாள் 2-பாகம் ...	4	0
லோகநாயகி ...	1	0
விளையாட்டுச் சாமான் ...	1	6
பவளத்தீவு 2-பாகங்கள் ...	3	12
தபால்கொள்ளைக்காரர்கள் ...	1	0
அமராவதி 2-பாகங்கள் ...	5	0
மஞ்சள் அறையின் மர்மம் ...	2	0
கற்கோட்டை ...	2	8
பூங்கோதை ...	0	12
வீரநா[illegible] ...	0	12
க[illegible]ம் 2-பாகமும் ...	[illegible]	[illegible]
[illegible]தரன் ...	2	8
[illegible]கரசுந்தரி ...	1	8
சந்திராபாய் ...	2	8
இராஜாமணி ...	2	8
[illegible]ரத்தினபாய் ...	2	8
ம[illegible]பூஷணம் ...	2	[illegible]
சுவா[illegible] ...	0	12
தேவசுந்தரி ...	2	0
குணசுந்தரன் ...	1	0
பத்மாஸனி ...	1	0
ஆனந்தஸிங் ...	2	0
மின்சார மாயவன் ...	2	0
ஆனந்தசிங்கின் அஷ்டஜயங்கள்	2	0
அரசூர் இலக்ஷ்மணன் ...	3	0
கைவல்லிய நவநீத வசனம் ...	2	4
சகோதரவாஞ்சை ...	0	5

	ரூ.	அ.
கம்பராமாயண வசனம் ...	4	0
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும்	3	8
விவேகானந்தர் சரித்திரம் ...	5	0
தமிழ் மெடீரியா.மெடிகா ...	3	8
மாதவி மாதவன் 2-பாகம் ...	2	4
மலையாள பகவதி ...	1	4
அற்புத நவநீத ரம்மை ...	1	8
அகட விகட விலாச விநோதம்	0	10
சிமாட்டி கார்த்தியாயினி ...	0	14

	ரூ.	அ.
தாசி ரமணி ...	1	8
உயிரோவியம் ...	1	8
யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன் ...	2	0
இவ்வுலகை திரும்பிப்பாரேன்	1	12
சிலப்பதிகார ஆராய்ச்சி ...	2	0
ஆர்ய மத சித்தாந்தம் ...	3	0
பூலோக லக்ஷ்மி கதை ...	0	14
கனகரத்தினம் ...	0	12
கண்டிராஜா நாடகம் ...	0	1[illegible]
குசேலோபாக்கியான வசனம்	1	[illegible]
உதயணன் ...	0	[illegible]
தசக்கிரீவன் ...	0	[illegible]
போஜ சரித்திரம் ...	0	[illegible]
சதானந்தர் ...	1	[illegible]
கர்ணன் சரிதை ...	0	[illegible]
[illegible]ஷ்ம விஜயம் ...	0	[illegible]
[illegible]த்திசிங்கன் ...	0	[illegible]
[illegible]பெருந்தாசர் ...	0	[illegible]
[illegible]ச்சந்திரன் சரிதை ...	0	8
[illegible]வாளன் ...	0	3
[illegible]ரசுராமன் ...	0	3
சிசுபாலன் ...	0	8
அங்கதன் ...	0	[illegible]
தசாவதார மகிமை ...	0	[illegible]
கிருஷ்ணன் தூது வசனம் ...	0	[illegible]
சண்டோபாக்யானம் ...	0	6
கருணாகரரும் சத்தியசீலரும் ...	0	[illegible]
சத்தியவசனம் ...	0	[illegible]
விமலன் ...	0	[illegible]
கண்ணபிரான் ...	0	[illegible]
செய்யுட்பாடத்திரட்டு ...	0	[illegible]
நாலு மந்திரி கதை ...	0	4
மங்களேசுவரன் ...	0	6
தக்கன் ...	0	6
சீமந்தனி ...	0	8
நான்குகோடி ...	0	4
மதிமோசவிளக்கம் ...	1	0
மெய்க்காதலி ...	0	1[illegible]
மேனுமினுக்கி கதை ...	0	[illegible]
வீணுகானன் ஞானேந்திரி ...	0	[illegible]
கோமளவல்லி கதை ...	0	[illegible]
விகடவல்லி கதை ...	0	[illegible]
தாலிகட்ட மறந்த கதை ...	0	[illegible]

இந்திர கவசமென்றும் சர்வ தேவதா வசியம் விலை ரூபா 1—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, மதராஸ்.

தேவகேரள ஜோதிஷம் O. P. லக்ஷ்மீநரஸிம்மாச்சாரியர் எழுதியது

ஜாதிஷ பாவத்திரய நிர்ணயம் ரூ. 1-12-0.

ஆரூட பாவம்

(பிரச்ன நாரதீயத்தின் மொழி பெயர்ப்பு.)

உலகில் ஜோதிஷ சாஸ்திரத்தில் எத்தனையோ பேதங்கள் இருக்கின்றன. அதில் இந்த பிரச்ன சாஸ்திரமும் ஒன்றாகும். பிரச்னைகள் பலதிறப்பட்டிருப் பினும் அவற்றிற்கெல்லாம் பலனும் கூறப்பட்டிருக்கிறது. இது நஷ்ட ...ரச்னை என்பதைக்கொண்டே சகலத்தையும் கண்டறிந்து கொள்ளக்கூடும். ...ந ஆரூட சாஸ்திரமானது உடனேயே சீக்கிரமாகப் பலனைத் தெரிந்து ...ள்வதற்கெனவே சொல்லப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 4.

விவாஹம்

...விவாஹம் என்னும் இந்த ஜோதிஷ புத்தகத்தில் தாரா பலன் என்பதும் ...ானு ஜன்ம திரிஜன்மங்களும், ராசிப் பொருத்தம், கணப் பொருத்தம், ..., மஹேந்திர வர்க்கம், ஸ்திரீ தீர்க்கம், கிரக மைந்திரம், வேதைப் ...ருத்தம், விவாஹத்தில் மாங்கலிய தாரணஞ் செய்கிற முகூர்த்த கால நவக்கிரக பலன்கள், இன்னும் அநேக பொருத்தங்களையும் விளக்கமாகவும் எளிதாகவும் தெரிந்துகொள்ளும்படி எழுதப்பட்டிருக்கிறது.

இதன் விலை அணா 8.

யோக மஞ்சரி

"கோசார பல நிர்ணயம்," நூலுக்கு ஆசிரியரான

N. R. திருவேங்கடாசாரியர் B.A., அவர்கள் இயற்றியது.

...வினைப்பயனை அறியவும், அறிந்ததன் பின் அவைகளால் ஏற்படும் ...கத்தை நீக்குவதற்கோ குறைத்துக் கொள்ளுவதற்கோ சாஸ்திரங்களில் உபதேசித்துள்ள சாந்தி மார்க்கங்களைத் தெரிந்துகொள்வதற்கும் ஜோதிஷ சாஸ்திர ஞானம் அவசியமெனப் பராசரர், கௌதமர், பிருகுநாரதர், ...ாசியபர், கர்க்கர், அத்திரி முதலான மஹரிஷிகள் பல நூல்களைச் செய் திருக்கிறார்கள். இதிலும் 1. யோகாத்தியாயம், 2. பாவாத்தியாயம், 3. தசாத்தியாயம், 4. கோசாரத்தியாயம், 5. அஷ்டவர்க்கத்தியாயம், ஆகிய இவ்வைந்து பிரிவுகளையும் செவ்வையாய் படித்து அவைகளில் உப ...சித்துள்ள ரகசியங்களை அறிந்துகொண்டு இஷ்ட தேவதாத் தியானத் ...ர் தனக்கோ மற்றவர்களுக்கோ ஒரு குறிப்பிட்ட பாவத்தினுடைய சுபா ...தன்மையை அறிந்துகொண்டு சுகத்தைப் பெருக்கிக் கொள்ளவோ ...த்தை ஜெபஹோம தானத்தினால் நீக்கவோ அல்லது குறைத்துக் ...ள்ளவோ முயலவேண்டும்.

இதன் விலை அணா 12.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால்பெட்டி நெ. 167, மதராஸ்-1.

Registored as a News Paper i



இந்த அபூர்வ மருந்தானது அநேக கொடிய வியாதிகளை ஆச்சரியமாக கண்டிக்கக் கூடியது. வியாதியிலாவது வேறு எந்தக் காரணத்தினாலாவது இளைத்துப் போயிருக்கும் தேகத்தைப் புஷ்டியாக்கி பல விருத்தி தருவதில் இது நிகரற்ற மருந்தாகும். சாப்பிடுவதற்கு மிக இன்பமாயிருக்கும். இருமல் நோய் கண்டு அவஸ்தைப் படுபவர்கள் இதை உட்கொண்டால் இரண்டே வேளையில் ஆச்சரியமான சுகத்தை யடைவார்கள்.

இந்தச் சஞ்சீவியை நல்ல போஜனத்துடன் 15 நாள் சாப்பிட்டால் இது இணையில்லாத ஆனந்தத்தைத் தரும். மனிதர் தாம் இழந்துபோன தேக திடத்தைப் பழையபடி யடைதற்கு இதைவிட வேறு மருந்தே கிடையாது. ஒருவன் 40 நாள் மருந்தை உட்கொள்ளும் பக்ஷத்தில் அவனுடைய தேகம் வஜ்ஜிரமே யாம். இதற்கு யாதொரு பத்தியமும் கிடையாது.

20-நாள் மருந்து விலை ரூ. 1. 40-நாள் மருந்து விலை ரூ. 1-12-0.
போஸ்டேஜ் 20-நாள் மருந்துக்கு வேறு, 40-நாள மருந்துக்கு வேறு.

அயத்தங்கத்திராவகம்

தனலட்சுமி கம்பெனி, 6. லாயர் சின்னதம்பி முதல் தெரு, சென்

Edited, Printed and Published by N. Muniswami Mudaliar, at "Ananda Bodhini Press", No. 6. Lawyer Chinnathambi Mudali Street, Sowcarpet, Madras.

னந்தபோதி

ன்மத ௵ ஆவணி ௴

89

3

வெளி வந்துவிட்டது!

ஸ்ரீமத் கம்ப இராமாயண வசன சங்கிரகம்

(சப்த காண்டங்கள் அடங்கியது)

(நான்காம் பதிப்பு)

"நாடிய பொருள்கை கூடும் ஞானமும் புகழு முண்டாம்
வீடியல் வழிய தாக்கும் வேரியங் கமலை நோக்கும்
நீடிய அரக்கர் சேனை நீறுபட் டழிய வாகை
சூடிய சிலையி ராமன் தோள்வலி கூறு வோர்க்கே."

ஸ்ரீ இராமபிரான் சரிதையை விவரித்துக் கூறும் இந்த இராமாயணம் புண்ணிய மிக்க கதை யென்பது உலகறிந்த விஷயம். இதனைப் பாராயணஞ் செய்வதா லுண்டாகும் பயன்கள் அளவிடுதற்கு அரியனவாகும். இதனை பக்தி சிரத்தையுடன் படிப்பவர்க்கு உயர்ந்த அறிவுண்டாகும்; கீர்த்தி அதிகரிக்கும்; மோக்ஷத்தை அடையும் மார்க்கம் ஏற்படும்; இலட்சுமி கடாக்ஷமுண்டாகும்.

மிக்க திருத்தங்களோடு கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டுள்ளது.
புல் காலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.
ஸ்ரீ ராமர் பட்டாபிஷேகம் அழகான படம் சேர்க்கப்பட்டது.

விலை ரூபா 4 தபாற் செலவு வேறு

மதனாம்பாள்

இதில், காளிங்கனுகிய லோகநாதன் என்னும் ஓர் கயவஞ்சகன், சகோதரத் துரோகியாய் அவனை அடித்துக் கொடுத்ததும், பட்டாபிராமன் என்னும் ஓர் உத்தமனைக் காதலித்திருந்த மதனாம்பாள் என்னும் உத்தமியைத் தான் மணஞ்செய்துகொள்ள விரும்பி, வேலாயுதன் என்பவனைத் தன் மோசச் செய்கைகளுக்குத் துணைக்கருவியாகக் கொண்டு பல வஞ்சனைகளைச் செய்து, மதனாம்பாளை ஆதரித்து வந்த பாங்கிக்காரர் மனைவியாகிய விமலாபாயைப் பயமுறுத்தி, மதனாம்பாளைத் தன் விருப்பத்திற் கிணங்கச் செய்வதும், பாங்கியில் மகாமாயக் களவு நடத்தி அக்குற்றத்தை நிரபராதியாகிய பட்டாபிராமன் மேல் சுமத்துவதும் படிப்போர்க்கு ஆச்சரியத்தை விளைவிக்கும்.

2-பாகங்கள் விலை ரூபா 4 தபாற் செலவு வேறு

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, சென்னை-1.

ஆனந்தபோதினி

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்பது அறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி 41 | மன்மதஹு ஆவணிமீ கஉ | 1955ஹு ஆகஸ்ட்மீ 17உ | பகுதி 2

உள்ளுறை.

எண்.		பக்கம்.
1.	கடவுள் வணக்கம்	62
2.	பெண்களுக்கு பட்டப் படிப்பு அவசியமா? (தலையங்கம்)	63
3.	ஜோதி	66
4.	போர்வீரன் காதல் (கவிதை)	73
5.	தேய்புரிப் பழங் கயிறு	77
6.	'முகமதிய மங்கை'	80
7.	அன்பிலாளன் அறிவு	89
8.	அவள் அளித்த அன்பு மணி	92
9.	புலவர் நான்மணி மாலை	95
10.	ஆதாரக் கல்வித் திட்டம்	100
11.	கானமும் கடக்குமோ? (கவிதை)	106
12.	கம்பன் கவிநயம்	107
13.	"அமைதியே நண்பா!"	111
12.	வாழ்க்கைப் புயல் (தொடர் கதை)	114
13.	பஞ்சாங்கம்	120

ஆனந்த போதினி

சென்னை-600 003

கடவுள் வணக்கம்

திருவெலாம் தரும்ஓர் தெய்வமாம் ஒருவன்
    திருச்சிற்றம் பலம் திகழ்கின்றான்
உருவெலாம் உணர்ச்சி உடல்பொருள் ஆவி
    உளவெலாம் ஆங்குஅவன் தனக்கே
தெருவெலாம் அறியக் கொடுத்தனன் வேறு
    செயலிலேன் எனநினைத் திருந்தேன்
அருவெலாம் உடையாய் நீஅறிந் ததுவே
    அடிக்கடி உரைப்பதுஎன் நினக்கே. (1)

நினைத்தபோ தெல்லா(ம்) நின்னையே நினைத்தேன்
    நினைப்பற நின்றபோ தெல்லாம்
எனைத்தனி யாக்கி நின்கணே நின்றேன்
    என்செயல் என்னஓர் செயலும்
தினைத்தனை எனினும் புரிந்திலேன் எல்லாம்
    சிவன் செயலாமெனப் புரிந்தேன்
அனைத்தும்என் அரசே நீ அறிந்ததுவே
    அடிக்கடி உரைப்பதுஎன் நினக்கே. (2)

களித்தபோ தெல்லா(ம்) நின்னியல் உணர்ந்தே
    களித்தனன் கண்கணீர் ததும்பித்
துளித்தபோ தெல்லா(ம்) நின்னருள் நினைத்தே
    துளித்தனன் சூழ்ந்தவர் உளத்தைத்
தெளித்தபோ தெல்லா(ம்) நின்திறம் புகன்றே
    தெளித்தனன் செய்கைவேறு அறியேன்
ஒளித்திரு வுளமே அறிந்ததுஇவ் வனைத்தும்
    உரைப்பதென் அடிக்கடி உனக்கே. (3)

உண்டதும் பொருந்தி உவந்ததும் உறங்கி
    உணர்ந்ததும் உலகியல் உணர்வால்
கண்டதும் கருதிக் களித்ததும் கலைகள்
    கற்றதும் கரைந்ததும் காதல்
கொண்டது நின்னோடு அன்றிநான் தனித்தென்
    குறிப்பினில் குறித்தது ஒன்றிலையே
உண்டதும் உனது திருவுளம் அறிந்தது
    உரைப்பதென் அடிக்கடி உனக்கே. (4)

பெண்களுக்குப் பட்டப் படிப்பு அவசியமா?

பெண்களுக்குக் கல்வி போதிப்பது குறித்து நம் நாட்டில் பலவிதமான அபிப்பிராயங்கள் நிலவி வருகின்றன. பெண்களுக்குக் கல்வி யறிவே கூடாது என்ற ஒரு கருத்து முன்னொரு காலத்தில் இருந்தது. அந்தப் பத்தாம்பசலிக் கொள்கை மறைந்து பலகாலமாயிற்று. ஆனால், தற்போது, பெண்களுக்கு எந்த அளவுக்குக் கல்வி போதிக்கலாம்; எந்த விதமான கல்வி போதிக்க வேண்டும் என்பதுதான் பிரச்னையாக இருக்கிறது. 'ஆண்களைப் போலவே, பெண்களும் உயர்தரக்கல்வி கற்கலாம்; எல்லா வகையான கல்வி போதனைகளையும் பெறலாம்; இவ்வளவுதான் படிக்கவேண்டும்; இன்ன விஷயத்தைத்தான் படிக்க வேண்டும் என்ற வரையறை கூடாது' என்று ஒரு சாரார் கருத்து வெளியிட்டு வருகின்றனர். மற்றொரு சாரார், 'பெண்களுக்கு ஓரளவு எழுதப் படிக்கத் தெரிந்தால் போதும்' குடும்பச் செலவு முதலியவைகளை நிர்வகிக்கக் கூடிய அளவுக்குப் பொது அறிவு ஓரளவு இருந்தால் போதும்? என்று வற்புறுத்திக் கூறி வருகின்றனர். அதாவது, 'மகளிர் பொதுவாக எவ் விஷயத்தையும் படித்து அறிந்து கொள்ளக்கூடிய கல்வி யறிவு பெற்றாலே போதும்; மூன்று நான்கு பாரங்கள்; மிஞ்சினால் எஸ். எஸ். எல். ஸி. வரை படித்தால் போதும்; உயர்தரக் கல்வி அதாவது பட்டப் படிப்பு அவர்களுக்கு அவசியமில்லை; குடும்ப வேலைகளைக் கவனிக்கவேண்டிய நிலையிலுள்ள அவர்களுக்குப் பி.ஏ., எம்.ஏ., படிப்பு எதற்கு?' என்பது ஒரு சிலர் வாதம்.

இவ்விதமான இரு திறப்பட்ட அபிப்பிராயங்கள் பொதுவாக நிலவி வருவதோடு, சிற்சில சமயங்களில் பெரிய பிரச்னையாகவும் எடுத்து விவாதிக்கப்பட்டு வருகின்றன. சமீபத்தில் சென்னைமா நகரில் நடந்த புதிய பெண்கள் கல்லூரித் திறப்பு விழாவிலும் இவ்விரு திறப்பட்ட கருத்துக்கள் கவர்னர், கல்வி மந்திரி, பல்கலைக் கழகத் துணைவேந்தர் முதலியவர்களால் வெளியிடப் பட்டன. நீதிபதி பஷீர் அஹமத் சையத் அவர்களால், தென்னிந்திய கல்வி டிரஸ்ட் சார்பில் நிறுவப்பட்டிருக்கும் தேனாம்பேட்டை புதிய பெண்கள் கல்லூரியைத் தொடங்கி வைத்த கவர்னர் ஸ்ரீ பிர

காசா அவர்கள் பெண்கல்வி சம்பந்தமாகச் சில கருத்துக்களை வெளிப்படுத்தினார். அதாவது, "பெண்களுக்குக் கல்வி அவசியந்தான். அவர்கள் நல்லமுறையில் வீடுகளை அமைத்து உபயோகமான தொழில்களில் ஈடுபட வேண்டும்; ஆண்களுக்கு அளிக்கும் கல்வியைப் பெண்களுக்கு அளிக்கக்கூடாது; அப்படி அளித்தால் பெண்கள் ஆண்களைப்போல உத்தியோகத்தைத் தான் நாடிச் செல்லுவார்கள். இது போன்று பெண்கல்வி நிலையங்களை நடத்துபவர்கள் இப் பிரச்னை குறித்துச் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பெண்களுக்குக் குடும்ப வாழ்க்கையே ஏற்றது என்பதுதான் என் நம்பிக்கை. வெகுகாலமாக, சமூக வாழ்க்கையின் இருப்பிடமாக இது இருந்து வந்திருக்கிறது; வருங்காலத்திலும் அப்படி இருக்கும் என்று நான் நம்புகிறேன்" என்று கூறிப் பெண்கல்வி சம்பந்தமாகப் பெரும்பாலோரிடையே இருந்து வரும் கருத்தைத் தெளிவுபடுத்தி யிருக்கிறார். மேலும் அவர் பேசுகையில், "இந்திய அரசியல் சட்டத்தில் ஆடவர்க்கும் மகளிர்க்கும் சம உரிமை வழங்கப்பட்டிருக்கிறது; ஆனாலும் இச் சமத்துவம், கஷ்டம் அனுபவிப்பதில் இருக்க வேண்டாம்; ஆண்களைப் போலப் பெண்களும் கல்விகற்ற பின் வேலை தேடித் தரும் ஸ்தாபனங்களில் வேலைக்காக மனுப் போடவேண்டாம்" என்று கேட்டுக்கொண்டார். ஆண்களோடு போட்டி போட்டுக்கொண்டு பெண்கள் உத்தியோகத்துக்காகப் படிப்பது சரியல்ல என்பது பெரும்பாலோர் — பெண்களில் கூடப் பெரும்பாலோருடைய அபிப்பிராயம். குடும்ப நிர்வாகத்தைக் கவனித்து நடத்துவதுதான் பெண்களின் கடமை என்பதை யாரும் மறுக்க முடியாது. அவர்களுடைய உடல் இயற்கையும் அதாவது உடம்பின் மென்மைத் தன்மையும் அதற்குத்தான் பொருந்தியதாக இருக்கிறது. காலமாறுபாட்டுக்கு ஏற்றபடி வேண்டுமானால், சமுதாய சேவையை முன்னிட்டுச் சில பெண்கள் பள்ளி, கல்லூரி ஆசிரியைகளாகவும், டாக்டர்களாகவும், நர்ஸ்களாகவும், மற்றும் மகளிரைப் பராமரிக்கும் ஸ்தாபனங்களில் வேலை செய்வதற்கான சிப்பந்திகளாகவும் இருப்பதற்குரிய தகுதிகளை ஏற்படுத்தும் பட்டப் படிப்புகளைப் பெறலாம். இந்த விதிவிலக்கு ஒரு சில மகளிர்க்கே பொருந்துமே யொழிய, எல்லோருக்கும் பொருந்தாது. சென்னை கவர்னர் சுட்டிக் காட்டிக் கூறியிருக்கிறபடி கல்வியின் நோக்கத்தை முதலில் நிச்சயித்துக் கொள்ள வேண்டியது அவசியம். ஆண்களும், பெண்களும் தாங்கள்

எதற்காகக் கல்வி கற்கப் போகிறோம் என்பதை முதலில் நிச்சயித்துக் கொள்ள வேண்டும். தாங்கள் படிப்பதன் நோக்கத்தை முதலில் தெளிவுபடுத்திக் கொண்டால்தான், அதற்குத் தகுந்தபடியான கல்வி போதனைகளைப் பெற்றுப் பயன் அடையலாம். கல்வித் துறைத் தலைவர்களும் ஆண் பெண்களுக்குக் கல்வி புகட்ட வேண்டிய இலட்சியத்தைத் தெளிவுபடுத்த வேண்டும்; அவ்விதம் பொது மக்களுக்குத் தெளிவு படுத்துவதற்குமுன் தாங்களும் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும்; கல்வி போதிப்பது எதற்காக; கேவலம் குமாஸ்தாக்களைப் பெருவாரியாக உற்பத்தி செய்வதற்காகவா அல்லது அறிவு வளர்ச்சிக்காகவா என்பதை ஆராய்ந்து நிர்ணயிக்க வேண்டும். கல்வி கற்பது குமாஸ்தா முதலிய வேலைகளைச் செய்வதற்காக மட்டுமல்ல; மக்கள் அறிவு வளர்ச்சி பெறுவதற்கே; விஷய ஞானம் அடைவதற்கே; உலக அறிவை வளர்ப்பதற்கே என்பதை ஐயந்திரிபுக்கு இடமின்றித் தெளிவுபடுத்திவிட வேண்டும். இன்றைய கல்வி முறையில் உள்ள அடிப்படைக் கோளாறே கல்வியின் நோக்கத்தில் போதிய தெளிவு இல்லாமைதான். அரசாங்கத்துக்கு வேண்டிய குமாஸ்தாக்களை உற்பத்தி செய்வதற்கு ஏதுவான மெக்காலே கல்வித்திட்டம்தான் நம்முடைய சுயாட்சியிலும் அமல் செய்யப்பட்டு வருகிறது. இந்த அவல நிலை உடனடியாக அடியோடு மாறவேண்டும். சிறு சிறு திருத்தங்கள் செய்துவிடுவது மட்டும் போதாது. அப்போதுதான், பொதுவாகக் கல்வி முறை நல்ல விதமாக அமைவதோடு நம் நாட்டு இயலுக்கேற்ற பெண் கல்வியும் நன்கு அமையும். சமுதாயத்தில் பெண்கள் வகித்து வரும் ஸ்தானமும், பங்கும் மிக முக்கியம்; ஆதலால், சமுதாய மேன்மைக்கு உதவும் பெண்களுக்குத் தக்க கல்வியைப் புகட்ட ஏற்பாடு செய்வதுதான் கல்வித் துறையில் ஈடுபட்டுள்ளோருடைய முக்கிய கடமையாகும். அதற்குப் பின்னர் எத்தனை பெண்கள் பள்ளி, கல்லூரிகள் வேண்டுமானாலும் நம் நாட்டில் ஏற்படலாம் என்பது நம்முடைய கருத்து.



ஜோதி

எம். ஆர். இளங்கோவன்

ஆசிரியர் அழகு வேலருடன் பழகும் வாய்ப்பு எனக்கில்லாதிருந்தால் நான் பல நாட்களுக்கு முன்னரே இவ்வுலக வாழ்வினின்று விடுபட்டிருப்பேன். இளமையிலே தீய சூழலின் விளைவால் நிலையாய் அமைந்த உடல் நலிவால் தனிமையையே பெரிதும் விரும்பிய ஆசிரியர்க்கு உறுதுணையாய் நானிருந்தேன்.

துயரப் பாதையில் நெடுந்தொலைவு கடந்த என் வாழ்க்கைக் குறிப்புகளை அவ்வப்போது கேட்டு, என் துயர் போக்கும் முறையில் ஆசிரியர் கூறிய அறிவுரைகள் மிகப் பல. அவற்றையெல்லாம் குறித்து வைத்திருந்தால் 'அறிவுரைக் கொத்து' என்ற நூலாக்கியிருக்கலாம். நான் நல்லவனாகவும் வல்லவனாகவும் நடித்து வாழ விரும்பினாலும் ஆசிரியருடன் பேசும் போதும் பழகும் போதும் முதல் வகுப்பு மாணவனாவேன்.

* * *

ஜோதி என் அத்தை மகள். இளமை முதலே எங்கள் இருவர்க்கும் மண முடித்து வைக்கவேண்டும் எனபது சிலர் எண்ணம். எண்ணம் தானே உலக வளர்ச்சிக்கும் அழிவுக்கும் காரணமாயமைகின்றது. இளமையில் என் உள்ளத்தில் ஆழப் படிந்த அந்த எண்ணம் படிப்படியாய் வளர்ந்தது. அவளில்லாமல் வாழ முடியாது. அவளிடத்தை வேறு யாராலும் நிரப்ப முடியாது என்ற அளவில் எண்ணம் உறுதி பெற்றது.

ஜோதியைக் கண்டு சில மாதங்களாயின. மதுரையிலிருந்த அவர்கள் வேலை மாற்றத்தினால் சென்னை வந்து சில நாட்களே ஆகின்றன என்பதை அறிந்த பின், அவளைப் பார்க்க விரும்பி அவள் இல்லம் சென்றேன்.

ஜோதியைச் சில மாதங்களாகக் காணாது போனமையால், அவளிடம் நெடுநேரம் பேசி மகிழவேண்டும் என்று எண்ணினேன். அவளைத் தவிர, அன்று வீட்டில் யாருமேயில்லை. என்னிடம் ஜோதி சரிவரப் பேசவேயில்லை. அவளைக் காண வேண்டும் என்ற வேட்கையோடு சென்ற நான் 'ஏன் வந்து போகிறோம்?' என்ற எண்ணத்தோடு மீண்டேன். நெஞ்சை அடைத்தது துயர்.

கல்லூரி விடுதியின் வெளியில் நாற்காலியில் அமர்ந்தவாறு நாவரசரின் 'நாமார்க்கும் குடியல்லோம்' என்ற பாடலை பாடிக்கொண்டிருந்த அழகு வேலரிடம் என் மனச்சுமையைக் கூறி ஆறுதல் பெற விழைந்தேன். அவரிடம் சொல்லாது என் மனத்திலேயே வைத்து எண்ணி எண்ணி வருந்தியிருந்தால் நிச்சயமாக நான் பித்தனாகியிருப்பேன்.

என்னைக் கண்டதும் ஆசிரியர் அரசர் பாமாலையை மூடிவிட்டு ஏதும் பேசாமல் என்னையே பார்த்தார்.

'ஏன் தம்பி, வாடியிருக்கிறாய்? எதனையோ எண்ணிக் குழம்புவதுபோல் தெரிகிறதே' என்றார். "ஆமாம் ஐயா, பெருஞ்சுமை, நீக்க முடியாத சுமைதான்" என்றதும், "அப்படியா, சொல் தம்பி வா. அங்கே போகலாம்" என்று கூறி எதிரேயிருந்த கடற்கரைக்குச் சென்றோம்.

தண்ணீரில் சிறிது தொலைவில் அகன்ற பாறை இருந்தது. தண்ணீர் ஓயாது மோதலால் சுற்றிலும் பாசி படர்ந்திருந்தது. நாற்புறமும் பாசி அழகு செய்ய சுற்றிலும் நீர் தங்க இடைப்பட்ட பாறை பார்ப்பதற்கு அழகாக இருந்தது. நாங்கள் இருவரும் அதன் மீது அமர்ந்தோம்.

"சொல் தம்பி உன் வருத்தத்தை. இன்று முழுதும் உன்னைக் காணாமல் நான் பெரிதும் வருந்தினேன். உண்ட உணவும் ருசி தரவில்லையப்பா நீ இல்லாததால்" என்று கூறிச் சிரித்தார். "ம்...சொல்" என்று என்னைத் தட்டிக் கொடுத்தார். வேறு வழியில்லை.

ஆசிரியரின் வேண்டுகோளுக்காக மட்டுமல்ல; எனக்கு அமைதி உண்டாவதற்கேனும் நானும் என் மனக்கருத்துக்களை கூற வேண்டியதாயிற்று.

"ஐயா, உங்கள் அறிவுரைகளும் ஆறுதலுரைகளுந் தான் இதுவரை எனக்கு உயிரளித்தன. இனி, அவையால் என் உயிர் வளர முடியாது. நம்பிக்கை என்றேனும் ஒருநாள் வாழ்வு வளம் பெற்றே தீரும் என்ற நம்பிக்கையால் இதுவரை வாழ்ந்தேன். இன்று அந்த நம்பிக்கை முறிந்து விட்டது.

"பெற்ற தாயைவிடப் பெரிய துணையில்லையென்கிறார்கள். பள்ளி வாழ்வின் ஆரம்ப நிலையில் ஆசிரியர் பலமுறை கிளிப்பிள்ளைமாதிரி, 'அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்' என்று கூறி அதனை நன்கு மனத்தே நிறுவச் செய்கின்றார். ஆனால் இன்று என் வாழ்க்கைக்கு நஞ்சாய் அமைந்து என்னை அழிப்பவளும் பெற்ற தாய்தான் ஐயா.

"நான் உங்களிடம் சொல்லி வந்தேனே என் அத்தை மகள் ஒருத்தி புதூரில் இருப்பதாக! அவளைப் பார்த்து வர இன்று போனேன். என்னை வரவேற்றாள். ஆனால் அந்த வரவேற்பில் பழைய அன்பை என்னால் பார்க்க முடியவில்லை. 'வீட்டிற்கு வந்தவனை உபசரிக்க வேண்டுமென்ற எண்ணத்தால் வரவேற்ற நிலையில் தான் அவளின் அழைப்பு இருந்தது.

"அவளிடம் அமைந்த இந்த மாற்றத்தின் காரணத்தை என்னால் சரிவரப் புரிந்துகொள்ள முடியவில்லை. ஓய்வாகப் "பெண்ணின் பெருமை" என்ற நூலைக் கையிலேந்திப் படிக்க அமர்ந்தாள். அவளோடு பேசி அவளிதயத்தை அறிய இதுதான் சரியான சமயம் என எண்ணி மெதுவாகப் பேசத் தொடங்கினேன்."

"ஜோதி, நன்றாகப் படிக்கின்றாயா?"

"படிக்கின்றேன்."

"அம்மா எல்லாம் எங்கே?"

"வெளியில் போயிருக்கிறார்கள்."

"வந்து விடுவார்களில்லையா?"

"தெரியாது. சொல்லிச் செல்லவில்லை."

"போகட்டும். நீ ஏன் இப்படி வார்த்தைகளைச் சுருக்கி விட்டாய். உணவுப் பற்றாக்குறையோ உன் வீட்டில்."

"போதும் உங்கள் கேலி."

"ஜோதி ஏன் இப்படி வெறுப்போடு பேசுகிறாய். அன்பு பெருகப் பேசிய நீயா இப்படிப் பேசுவது அம்மா ஏதாவது..."

"அதெல்லாம் ஒன்றுமில்லை."

என்று நான் கேட்ட கேள்விகளுக்கெல்லாம் ஓரிரு சொற்களிலேயே பதில் சொல்லிக் கொண்டிருந்தாள் ஜோதி. எனக்கொன்றும் விளங்கவில்லை.

"ஏதேனும் காரண மில்லாமல் ஜோதியிடம் இந்த மாற்றம் இருக்க முடியாது என்பதை மட்டும் நான் உணர்ந்தேன். தீயில்லாமல் புகை கிளம்பாது என்றும், புகை கிளம்பியது என்றால் தீயே" அதற்கு மூலகாரணமாய் உள்ளது என்பதும் நாமறிந்ததே. அது போலத்தான் ஜோதியின் போக்கிற்கும் காரணங்கள் இருந்தாக வேண்டும்.

'ஜோதி, என்மேல் ஏதாவது கோபமா? நீ அப்படிப் பேசுவது எனக்கு வருத்தமாக உள்ளது. நீ என்னிடம் காணும் குறைகளிருந்தால் சொல். நான் திருந்த விரும்புகிறேன்?'

" 'உங்கள்மேல் எனக்குக் கோபமில்லை அத்தான். எனக்கு நீங்கள் ஒரு உதவி செய்வீர்களா? நிச்சயமாக நீங்கள் அந்த உதவியைச் செய்யத்தான் வேண்டும் என்று எண்ணினேன்."

' "ஜோதி, நீ கேட்டு நான் செய்ய மறுக்கும் உதவியும் உண்டா? கேள். என்னால் முடிவதானால் முதலில் செய்து முடிப்பேன்."

"உங்களால் முடியக் கூடியதுதான்."

"அப்படியானால் சொல்."

என்று கூறி, அவளின் முகத்தைப் பார்த்தேன். அது வரைப் புன்னகையோடு பேசி வந்த அவள் முகம் சிவந்தது. கண்களில் நீர் நிரம்பி இருந்தது. என்னை ஒருமுறை நிமிர்ந்து பார்த்தாள். கண்களில் நிரம்பிய நீர் இரு சொட்டாய்க் கன்னங்களில் தவழ்ந்தன. இந்த நிலையிலும் அவள் அழகாகவே காணப்பட்டாள். என்ன சொல்வாளோ என எதிர்பார்த்திருந்தேன். நீதிபதியின் தீர்ப்பைக் கேட்டுத் தன் வாழ்க்கையை நினைத்துப் பார்க்க நிற்கும் குற்றவாளியைப் போல!

"ஒரு கையில் சேலையின் முந்தானையைப் பிடித்தவாறு, கையில் திரு. வி. க.வின் நூலையேந்திய நிலையில் நின்ற தடுமாற்றம் நிறைந்த குரலில், "என்னை மறந்து விடுங் என்றாள்.

"கருத்துத் திரண்ட மேகங்கள் வானத்தில் பேரொளி தன. புற்றிலிருந்து வெளிவந்து உலவியிருந்த பாம்புகள் இடியோசை கேட்டுப் புற்றினை நோக்கி விரைந்து சென்று உயிர் தப்ப எண்ணும் காட்சி என் நினைவுக்கு வந்தது. நான் நினைப்பினும் அறியாத ஒன்றைத்தான் அன்பு வேண்டுகோள் என்ற பெயரால் என் முன் வைக்கின்றாள் ஜோதி, நான் ஏற்க வேண்டும் என்ற நிபந்தனையுடன்!

"நான் ஜோதியை மறப்பதா? முடியாது, ஐந்தாண்டுகளாக அன்னை சொல் நீராக, ஊரவர் சொல் எருவாக வளர்த்த பயிரல்

லவா எங்களுக்கிடைப்பட்ட நட்பு. இதனை எளிதில் அழிப்பது முடியும் செயலா?

"ஜோதியை நான் மறக்க வேண்டுமா? ஏன் மறக்க வேண் டும்? ஐயா, காரணம் அறியத் துடித்தேன். 'ஜோதி' என்றேன். ஏன் என்று கேட்க அவள் அங்கில்லை. உள்ளே போனேன். ஊஞ்சலில் அமர்ந்த நிலையில் எதையோ எண்ணிக் கொண் டிருந்தாள்.

"ஜோதி, உன்னை நான் ஏன் மறக்க வேண்டும். நம் அன்பு வாழ்வுக்கு யார் ஜோதி தடை விதிப்பது?"

'விவரங்கள் கேட்காதீர்கள். புண்பட்ட உங்கள் உள்ளம் மேலும் வேதனையடையும், வேண்டாம். என்னை மறந்து விடுங் கள். உங்கள் வாழ்க்கை வளம் பெறும்' என்றாள்.

"என் வாழ்க்கை வளம் பெறுவதாவது! என் வாழ்க்கையின் வளத்திற்குரியவள் என்னை மறக்குமாறு சொல்லும் நிலையில் வளம் எப்படி என் வாழ்வில் இடம் பெறும். முன்னுக்குப் பின் முரணாக அல்லவா அவள் பேசுகின்றாள் என்று எண்ணி,

"ஜோதி, விளக்கமாய்ச் சொல். நான் வருந்துவேன் என் றெண்ணாதே, நினைப்பதைச் சொல்லேன். உன் உள்ளச் சுமை யாவது குறையட்டுமே." என்றேன்.

"உள்ளச் சுமை குறையாது. குறையும்—சுமையில்லாமல் வாழலாம் என்றுதான் நானும் எண்ணினேன். ஆனால் அந்த எண்ணம் பழுதுபட்டது. கேளுங்கள், விவரமாய்க் கூறுகின் றேன். ஆனால், நீங்கள் வருந்தக் கூடாது" என்ற பலத்த பீடிகையோடு தொடங்கினாள்.

"பதினைந்து நாட்களுக்கு முன் அவள் தன் தாயுடன் திருச்சிக் குச் சென்றிருந்தாளாம். திருச்சியில்தான் என் பெற்றோர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னேனல்லவா! என் இல்லத்தி லேயே நான்கு நாட்களும் தங்கியிருந்தார்களாம். அந்த நான்கு நாட்களும் என் அன்னை அவளிடம் ஒரு சொல்லும் பேசாது இருந்தார்களாம். பாலையில் துணையில்லா திருப்பது போலெண்ணி வருந்தினாளாம் ஐயா, அவள். இறுதியாக, புறப் ...டும் நாளன்று என் அன்னையின் இரு கரங்களையும் பிடித்துக் ...ண்டு, "போய் வருகிறேன், மாமி" என்று கூறியபோதும் ...மொழி சொல்லாது, என் அன்னை அவளின் கரங்களை விடு ...த்துக் கொண்டாராம். இவ்வளவும் தழுதழுத்த குரலில் ...றினாள்.

"எந்தக் கரங்கள் என்னை உளமுவந்து வரவேற்று உயர் நிலைக்கு என்னை நிறுத்த வல்லன என்று எதிர்நோக்கினேனோ அதே கரங்கள் என்னை விலக்குவதிலீடுபடுவது கண்டு தயங் கினேன். அத்தான் நான்" என்று என் ஜோதி கூறியபோது நான் மிகவும் வருந்தினேன்.

"ஜோதி, தாயார் செயலைக் கொண்டுதான் நீ இவ்வள பேசுகிறாயா? பைத்தியமே. இதெல்லாம் சிறு நிகழ்ச்சிகள், நிகழ்ச்சிகளை அடிப்படையாகக் கொண்டு நாம் விலகி வாழ்வ...

அல்லது ஒருவரை ஒருவர் விலக்கி ஒதுங்கி வாழ்வதோ நல்லதா? அம்மாவின் உள்ளம் காலப் போக்கில் மாறலாமல்லவா?

"நான் பைத்தியமில்லை. எல்லாம் காரியப் பைத்தியம் தான். உங்கள் தாயார் என்னை எதிரியாகவே எண்ணுகிறார்கள். ஒரு சிறு நிகழ்ச்சி போதுமே நான் சொன்னது உண்மை என்பதை நீங்கள் அறிய," என்று கூறி என்னைப் பார்த்தாள். என்னால் அமைதியோடிருக்க முடியவில்லை 'சொல் ஜோதி' என்றேன்.

"ஒரு நாள் நான் படுத்துக் கொண்டு, ஏன் திருச்சிக்கு வந்தோம்? திருச்சிக்கு வந்தாலும் பிற இடங்களில் தங்காது இங்கு ஏன் வந்தோம் என்றெல்லாம் கண்ணைமூடிக் கொண்டு எண்ணிப் பார்த்தேன். நான் உறங்கி விட்டேன் என்றெண்ணிய உங்கள் தாயார், தன் தாயாரிடம்,

"பாடுகிறாளாம் பாட்டுகள். பாடிவிட்டால் போதுமா? கருவேப்பிலைக்காரியைப் போல் இருக்குமிவளை இவன் எப்படி மணக்க விரும்பினானென்பதே தெரியவில்லையே, இவளுக்கிருக்கிற செருக்கைப் பார்த்தால் அவனை அழித்துவிடுவாள் போலிருக்கிறதே........." என்று தொடர்ந்து சொல்லிக் கொண்டே போனார்கள். என்னால் பொறுக்க முடியவில்லை, பார்த்தீர்களா அத்தான், உங்கள் தாயார் என்பால் கொண்டுள்ள அன்பின் பெருக்கை. இதனால்தான் மறந்து விடுங்கள் என்று சொன்னேன். உங்கள் அன்னை முடிக்காமல் விட்ட அந்த வாக்கியத்தை முற்றுப் பெறச் செய்து, தகுந்த பின்னணி அமைத்துக் கொண்டுதான் என்னை மறந்துவிடுங்கள் என்று சொன்னேன். என்னால், என் நுழைவால் உங்கள் வாழ்க்கை வளம் பெறாது என்று உங்கள் அன்னை எண்ணுவதை, நன்குணர்ந்த ஒரே காரணத்தால்தான் என்னை மறந்துவிடுங்கள். உங்கள் வாழ்க்கை வளம்பெறும், என்றேன், போதுமா?"

"இவ்வளவும் அவள் ஆத்திரத்தோடுதான் பேசினாள். பேச்சு முடிந்ததும் என்னைப் பார்த்தாள். அந்தப் பார்வையில் அந்தப் பழைய அன்பும் தெளிவும் கனிவும் இருக்கத்தான் செய்தன.

"பாருங்களய்யா, இளம் உள்ளம்......அந்த உள்ளத்துக்கு எவ்வளவு வேலை தந்து விட்டார்கள் என் தாயார்.

"நான் புறப்படும்போதும் அன்பாக, 'அத்தான் என்னை மறந்து விடுங்கள்' என்றாள். ஐயா, நேராக இங்குத்தான் வந்தேன். நீங்கள் ஒருவர் என் துயர் கேட்டு, துயர் நீங்குமளவில் ஆறுதலுரை சொல்லுவதற்கு இல்லாமற் போனால், எனக்கு நீண்ட ஆறுதலைத் தர மரக்கிளையையோ, முழுக் கயிற்றையோ, துளி விஷத்தையோதான் நாடியிருப்பேன்.

"'பிள்ளை மனம் கல்லு, பெத்த மனம் பித்து' என்று என் பாட்டியார் அடிக்கடி கூறக் கேட்டிருக்கிறேன். ஆனால் இன்றைய நிலையில், 'பெத்த மனம் கல்லு, பிள்ளை மனம் பித்து' என்று தான் மாற்றிக்கூற வேண்டும். என் வாழ்வில் தன் மகன் வாழ்வில் என் தாய்க்கு நல்லெண்ணம் இருந்திருந்தால் நான்

விரும்பும் ஒருத்தியை எதிரேயே வைத்துக் கொண்டு அவள் வெறுக்குமளவில் பேச உள்ளம் எழுமா? சார், ஜோதிதான் எனக்கு வேண்டும், என்ன சார் செய்யலாம்?" என்று கூறிய பிறகுதான் இவ்வளவு நேரமாக ஆசிரியர் பேசுவதற்கே வாய்ப்புத்தராமல் என் குறைகளையே கூறினேன் என்பதை உணர்ந்தேன். ஆசிரியர்—நான் கூறியன யாவும் நன்கு கேட்ட அவர்,

"தம்பி, ஜோதியிடம் அறிவை வளர்த்துக் கொள்வதைவிட இதயத்தை வளர்த்துக் கொள். இதயம் வளராத குறையால் தான் அமைதி இருப்பதில்லை யென்று கூறியிருக்கிறாயில்லையா? ஜோதிக்குக் கூறிய அதே அறிவுரையை ஏன் நீ ஏற்கக்கூடாது? ஜோதியை நன்கு புரிந்து கொண்டதாக இதுவரை நீ பேசியதெல்லாம் தவறு. உன்னைவிட அவள் சிறந்த அறிவாளி.

"ஜோதி அமைதியாய்ப் பேசியதால் உனக்கு என்ன தெரிகிறது? அவள் உள்ளத்தில் பெரும் பகுதி உன் கருத்துக்கு ஒத்திருக்கிறது என்பதும் சூழலால் தாக்குண்ட உள்ளம் கொண்ட அவள், எதிர்பாராமல் ஏற்படக்கூடிய அதிர்ச்சிகளை ஆபத்தில்லா முறையில் ஏற்பதற்குரியவளாய்த் தன்னை அமைத்துக்கொள்ள எண்ணித்தான் தன்னை மறந்து விடுமாறு கூறியிருக்கிறாள். கூறியிருக்கிறாளே தவிர, வற்புறுத்தவில்லை இல்லையா? அவள் உன்னைப் பெரிதும் விரும்புகிறாள். ஆனால் நீயும் அஞ்சுதலுக்குரிய இடம் தன்னை எதிர்க்கின்றது என்பதை எண்ணும் போதுதான் தயங்குகின்றாள். அந்தத் தயக்கத்தால் தான் அவள் அவ்வாறெல்லாம் பேசியிருக்கிறாள்.

"ஜோதி பேசினாள்—பேச்சுக்குரிய அடிப்படைக் காரணம் உன் தாய். இதனை நன்கு எண்ணிப் பார். உன் தாய் என்னைப் போலவே பல பெண்களிடைப் பழகும் வாய்ப்பினைப் பெற்றவர்; பெண்கள் உள்ளம் பலவற்றையும் அறிந்தவர்; காதல் மணங்களைப் பற்றியும் கலப்பு மணங்களைப் பற்றியும் பல மேடைகளில் பேசியவர்; தான் பிறர்க்குக் கூறிய அறிவுரைகளையும் நல்லுரைகளையும் துணையாகக் கொண்டு வாழ மட்டும் அவர்கள் தயங்குவது ஏன் என்பதுதான் எனக்கு விளங்கவில்லை. எங்குப் பார்த்தாலும் காதல் களஞ்சியமாகவே தோன்றும் தமிழ் இலக்கியப் ங்காவின் நறுமணத்தை நுகர்ந்த உன் தாயார் உன் அன்புள் துக்குத் தடை செய்வது ஏன் என்பதை எப்போதாவது நீ ண்ணியதுண்டா?"

"நீ எண்ணியிருக்க மாட்டாய். நீ ஜோதியிடம் காணாத றையைக் கொண்டுதான் உன் தாயார் அவளைப் பகைக்கின்றார். இருபதாம் நூற்றாண்டில் நிறவேறுபாடு கருதுகிறார்கள் அந்த அம்மையார் என்றால் அது வியப்பாகத்தானிருக்கிறது. அவர்கள் சொல்லியதைப் பற்றியெல்லாம் எண்ணி யெண்ணி, நீ அவர்களைப் பற்றிய வெறுப்புணர்ச்சியை வளர்த்துக் கொள்ளாதே."

"துணிந்து அவளை மணந்து கொள். பிறகு எல்லாம் தானாக சரியாகிவிடும். முதலில் ஒரு மாதத்திற்கு உன்னை

வெறுப்பார்கள்—பழி பேசுவார்கள். ஆனால் அவையும் நடிப்பாகத்தான் இருக்கும். நடிப்பு என்பதைவிட உன் உள்ளத்தின் ஆழத்தைக் காணுகின்றார்கள் என்று கூறுவதே பொருந்தும். நாளடைவில் மகன் என்றும், மருமகள் என்றும், பேரன் என்றும் பேத்தி என்றும் உரிமை பாராட்டிக்கொண்டு நீ வாழுமிடம் நோக்கி வருவார்கள்."

"எல்லா நல்ல செயல்களும் துணிவை அடிப்படையாகக் கொண்டுதான், தம்பி நடக்கின்றது. அது உணர்ந்து கொள்வதானாலும் சரி, உணராமல் குருடன் மைல் கல்லை ஆண்டவன் சின்னம் என்றெண்ணி வழிபடுவது போல எண்ணினாலும் சரி. பயன் நல்லதாகத்தானிருக்கும்."

"உன் துணிவிற்குத் துணையாய் நிற்பாளா அவள் என்று நீ நினைக்கலாம். அவளைப் பற்றி நீ வருந்தாதே. அவள் ஆழமான உள்ள முடையவள். 'கந்துக மதக்கிரியை வசமாய் நடத்தலாம்' என்ற தாயுமானவர் பாடல்தான் நீ அறிந்ததாயிற்றே. நீ கேட்ட கேள்விகளுக்கெல்லாம் சுருங்கிய விடைகள் கிடைத்தமையைக் கொண்டு, அவள் உன்னை வெறுக்கின்றாள் என்றோ, உன்பால் கொண்ட அன்பில் குறைவு பட்டாள் என்றெண்ணுவதோ தவறு. உன் கேள்விகளுக்கு அவள் தந்த பதிலைக் கொண்டு அவள் உன்னைப் பெரிதும் விரும்புகிறாள் என்றும், ஆயின், சொல்ல வெட்கப் படுகின்றாள் என்றுமதான் கூறவேண்டும். நீ எதிர்பார்ப்பதுபோல அவள் நீண்ட விடைகளைக் கூறமாட்டாள். கூறுமளவில் அவள் உள்ளம் இடம் தராது."

"காதல் என்பது பெண் உள்ளத்தின் ஆழமே தவிர, அது நீரிலே மிதக்கும் சக்கை போன்றதல்ல. உண்மையான காதலின் தன்மை இதுதான். 'நான் உன்னை விரும்புகிறேன்' என்று எழுதுவதும் பேசுவதும் ஆரம்ப நிலையில் உண்மைக் காதலைப் போல இருந்து, இறுதியில் ஊர் சிரிக்குமளவில் வந்துவிடும். ஆரம்ப நிலையில் இடர்ப்பாடுகள் மிகுந்து அறிவுக்கும் இதயத்துக்கும் மாறி மாறி வேலை தந்து துணிந்து எண்ணும் முடிபு என்றும் நிலையாக நிற்கும்."

"ஆகையால், என்று நீ ஜோதியை மணந்து வாழ எண்ணுகிறாயோ அன்றே, நான் கூறியபடியே ஜோதியும் நீயுமாக நீங்கள் விரும்பினால் நானும் துணைவர பதிவு மணம் செய்து கொள்ளுங்கள். இதைவிடச் சிறந்த வழி எதுவுமே இல்லை." என்று கூறி என்னைத் தட்டிக் கொடுத்தவாறே ஆசிரியர் எழுந்தார். அவர் ஏதேதோ பேசியவாறே நடந்தார். ஆனால் என் செவியில் எதுவும் விழவில்லை.

என் சிந்தனையெல்லாம் ஆசிரியர் கூறிய பதிவுத் திருமணத்திலும், என்னை இந்த அளவில் பல செய்திகளை அறிந்து கொள்ளச் செய்தவளான ஜோதியைப் பற்றியுமே இருந்தது. ஜோதி என் வாழ்க்கையை ஒளிவிடச் செய்வாள் என்ற பெரு நம்பிக்கை மட்டும் என்னை விட்டகலவில்லை.

போர்வீரன் காதல்

"சக்திக்கனல்"

✩

வாள்சுழலும் மின்னலென அன்னோன் கையில்
    வைத்திருக்கும் ஈட்டிபகை தாவிப் பாயும்
வேலுயரும் வில்வளையும் பகைவர் சேனை
    விலாவெலும்பு தானுடையும் வீர சிம்மன்
தாளடியில் வந்துவிழும் வெற்றி! அந்தத்
    தமிழ்மகனைப் பெருநாட்டான் தலைவ னாக்கி
நீள்படையைத் தந்திருந்தான் அன்னோன் கையில்
    நிலைகுலையா அரண்காத்து நின்றான் சிம்மன்! 1

கட்டழகன் எழில்மேனி கட்டித் தங்கம்
    கலைசிகையோ கார்மேகம் அரும்பு மீசை
வெட்டிவிடும் பெண்ணுளத்தை வீரத் தோள்கள்
    விண்ணுயரும் மலையெனவே நிமிர்ந்த தோற்றம்
முட்டவரும் காளையைப்போல் உடற்கட் டோடு
    மோதிவரும் பகைவர்களை "அடடே தூர
எட்டியிரும் மாண்டிடுவீர்!"—என்னும் கண்கள்
    இமயம்வரை அவன்புகழே!—வாழ்ந்து வந்தான்! 2

வேட்டையிலே தேர்ந்திருந்தான்! வேங்கை யோடு
    வெகுண்டெதிர்த்துத் தன்வலிமை வெற்றிப் போரைக்
காட்டுவதில் அஞ்சகிலான் பகைவர் சேனை
    கருவறுக்க அவன்கவலைப் பட்ட தில்லை!
நாட்டினிலே மெலிந்தவருக் கவனே அன்பன்!
    நடுநீதி தவறாத நேர்மை யாளன்!
பாட்டினிலே கூத்தினிலே இயலில் காணும்
    பழந்தமிழன் அவனறியா மாந்த ரில்லை! 3

பூங்கொடியாள் பெருநாட்டான் பெற்ற பெண்ணாள்
    புகழ்ச்செல்வி அவள்பெயராம் கண்டோர் நெஞ்சை
வாங்கிடுவாள்! கருமேகக் கூட்டம் கற்றை
    வரிகுழலாள் செவ்விதழாள்! முத்துப் பல்லாள்!
தேன்குழைத்துக் கல்லினிலே மதுரைச் சிற்பி
    செதுக்கிவைத்த எழிலரசி! பெருநாட் டாட்சி
நானாள்வேன் எனுமிடுக்குக் கண்ணிற் கொண்ட
    நடையரசி! இசையரசி! கலையின் செல்வி! 4

கொத்தான பழக்குலையின் சுவையைக் காணக்
கோகிலங்கள் கூடுவதைப் போல எங்கும்
எத்திசையும் இளவரசர் இவள்தோற் றத்தில்
எண்ணத்தை வைத்திருந்தார்! ஆனால் அந்தத்
தித்திப்புத் தேன்மொழியாள் நெஞ்சில் வீரன்
தீந்தமிழன் குன்றனைய வீர சிம்மன்
தொத்திக்கொண் டானவன்ற னெழிற் படத்தைச்
சுவைத்துக்கொண் டேயிருந்தாள் புகழின் செல்வி! 5

அன்றொருநாள் முழுநிலவில் இனிய சோலை
அமர்ந்திருந்தாள் புகழ்ச்செல்வி வீர சிம்மன்
தென்றலென மெதுவாக வந்தான் செவ்வாய்ச்
சிரிப்பிதழைக் கிழித்துவெளிப் பட்டுப் பொங்க
நின்றிருந்த அரசனிளங் குமரி சொல்வாள்;
நிறையமுதே! என்கண்ணிற் கெழில் விருந்தே!
மன்றல்முடித் திடும்காலம் எப்போ தென்றாள்.
மலையொத்த திண்புயத்தான் சொல்வான்! "கண்ணே! 7

படைவீரன் நான்நீயோ அரச கன்னி
பலர்வருவார் இளவரசர் நானோ ஏழை!
நடையன்னப் புகழ்ச்செல்வி! நமது காதல்
நஞ்சாகப் போய்விடுமே! உலகம் ஏதும்
விடைகொடுநான் போகின்றேன் மறந்தி டென்னை
வெட்டாதே வேல்விழியால்" என்று சொன்னான்
"தடையில்லை உனைமணக்கத் தந்தை சொல்லைத்
தட்டியுனை நான்மணப்பேன் உறுதி" என்றாள்! 7

"குளிர்நிலவு பூங்குருத்தை முத்த மிட்டுக்
கொள்ளைவனப் பள்ளியெறி நிலவில் கண்ணே!
தளிருடலால் எனைத்தழுவி "அத்தான்" என்றே
தமிழ்மொழியில் எனையழைக்கும் இன்பப் பேற்றை
எளிதாக நினைக்கவில்லை! ஆழ் கடற்குள்
இருக்கின்ற பூண்டடிநான்! நீயோ விண்ணில்
ஒளிவீசும் தாரகைகாண்" என்றான் நெஞ்சில்
உறைந்திட்ட காதலினைக் கண்ணீ ராக்கி. 8

வட்டமிடும் பெருங்கழுகின் கண்க ளோடு
வஞ்சகமே ஒருருவாய் முத லமைச்சன்
எட்டியொளிந் திருந்தானோர் புதரில்! நெஞ்சில்
எரிகொள்ளி கொண்டிருந்த தீயோன்! காதல்
பட்டழிய மனதார எண்ணி னான்தன்
பாலனுக்குச் செல்வியினை மண முடிக்கத்
திட்டமிட்டான் இக்காட்சி காணப் பெற்றுத்
தீயாக வெந்திருந்தான் ஓடிச் சென்றான்! 9

மன்னவனை நெருங்கிவந்து பதை பதைத்து
மண்டியிட்ட முதலமைச்சன் றன்னை நோக்கி
என்னஇது? என்றிட்டான் வேந்தன் அன்னோன்
எழுந்திட்டான் கண்ணீரை இறைத்துச் சொல்வான்;
"கண்படைத்த தீங்கன்றோ! மன்னா உன்றன்
கனிபழுத்த பொழிலின்மிசை நிலவு வீச்சில்
பெண்ணவளும் வீரசிம்ம னோடு காதல்
பேசுகின்றாள் மனமெலாம் போயிற்" றென்றான்! 10

கொக்கரித்தான் பெருநாட்டான் வாளைத் தொட்டான்!
'குபீ'ரென்று பற்றியது கோபம்! "வா! வா!!
இக்கணமே போய்ப்பார்ப்போம் என்றான். சென்றார்
இருகாத லோவியங்கள் நின்றா ரங்கே!
சிக்கிவிட்டார் திருடரெனக் கூச்ச லிட்டான்!
திடுக்கிட்டார் செல்வியோடு வீர சிம்மன்.
தக்கதொரு தண்டனைக்காய் அமைச்ச! இப்போ
தளையிட்டு இழுத்துவா இவரை என்றான்! 11

நாற்புறமும் சுவர்வைத்த படுபா தாளம்
நடுவிலொரு கூண்டிருக்கும் அந்தக் கூண்டில்
தீப்பொறிக்கண் சிங்கமது பசியால் வாடித்
தேடித்தன் இரையதனைக் காத்திருக்கும்
கூப்பிடுக வீரசிம்மன் தன்னை என்றார்.
கொலைமறவர் சங்கிலியாற் பூட்டி வந்தார்
காப்பிட்ட விலங்ககற்றி விடுக சிம்மன்
கதறிமடி யட்டுமென்றான் கொதித்த வேந்தன். 12

பந்தமது செந்தீயாய் எரிந் திருக்கப்
பலதிசையும் பரிதாபக் குரல்கள் கேட்க
வெந்திருந்த உள்ளத்தான் வீர சிம்மன்
மீதேவி விட்டார்க ளோர்சிங் கத்தை
வந்ததுபார் பனையுயரம் தாவி வாலை
வடக்கயிறு போல்சுழற்றி வீசி யேதன்
செந்தீக்கண் மின்னலென மின்ன வாயைத்
திறந்தங்கே உறுமியது செல்வி சார்ந்தாள்! 13

"அத்தானைக் கொல்லாதீர் அந்தோ என்றன்
அரும்பொருளைக் காத்திடுக!" அழுது சொன்னாள்!
முத்தாகக் கண்ணீரைப் பொழிந்த செல்வி
முகம்பார்க்க இயலாதே பெருநாட் டான்தான்
"கத்தாதே! சீபேயே!" என்றான்! அப்போ
கடகடென இடறியது வானம்! சிங்கம்
கத்திடவீ ரன்பாய்ந்தான் சிங்கத் தின்மேல்
கழுத்ததனை இருகரத்தாற் கட்டித் தாவி 14

வீசிவிட்டான் விண்ணினிலே பந்தைப் போல
விழியதிர விழுந்தெழுந்த அரிமா மேலும்
கூசாமல் தாவியது! மற்போர் அங்கே!
கொலைக்காட்சி! அவன்தோளில் குருதிக் காட்சி!!
பேசாது பார்த்திருந்தார் ஊமை மக்கள்
பிழையறியா இளவரசி உயிரா டிற்று
வேசமொடு சிங்கத்தின் பிடரி பற்றி
விழிபிதுங்கக் கழுத்தொடித்து நின்றான் சிம்மன்.

ஆடியதங் கரசனுடல் அமைச்சன் அங்கே
அரையுயிராய் வீற்றிருந்தான்! மக்க ளெல்லாம்
ஓடினார் "வீரசிம்மன் வாழ்க!" வென்றே
உயிர்பெற்றாள் இளவரசி துள்ளி யோடித்
தேடினாள் காதலனைக் கண்டாள் விம்மித்
தேம்பினாள்! பெருநாட்டான் தேம்பக் கண்டார்!
பாடினார் காதலர்க்கு வாழ்த்துப் பாஅப்
படபடப்பில் முதலமைச்சன் உயிர் பிரிந்தான்!

சந்தா நேயர்களுக்கு

ஆனந்த போதினிக்கு ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது. சந்தாத்தொகை எப்பொழுது செலுத்தப் பட்டாலும், நடைமுறை ஆண்டின் ஆடி முதற்கொண்டே கணக்கு வைக்கப் பட்டு இதழ்கள் அனுப்பப்படும். மாத நடுவே அனுப்பப்படும் சந்தாத் தொகைகளுக்கு அடுத்து வரும் தமிழ் மாதத்தின் முதல் தேதி அன்றுதான் பத்திரிகைகள் அனுப்பப்படும்; தபால் கட்டணச் சலுகை சம்பந்தமான புது விதிகள் காரணமாக பத்திரிகை வெளிவரும் தேதியைத் தவிர, இதர நாட்களில் இதழ்களை அனுப்ப இயலாதவர்களாய் இருக்கிறோம் என்பதை நம் பத்திரிகை அன்பர்களுக்கு தெரிவிக்க விரும்புகிறோம்.

சந்தா நேயர்கள் நமது காரியாலயத்திற்கு எழுதும் கடிதங்களில் அவரவர் சந்தா இலக்கத்தைத் தவறாது குறிப்பிட்டு எழுத வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கின்றோம்.

மானேஜர்.

தேய்புரிப் பழங் கயிறு

கல்லாடன்

★

இடம்: பாசறை.

காலம்: மாலைவேளை.

இருப்போர்: ஆணழகன் தனியே எண்ணமிட்டுக் கொண்டிருக்கிறான். எதிரே இரண்டு யானைகள் விளையாடிக்கொண்டிருக்கின்றன. எங்கோ தொலைவில் இரண்டொரு போர்வீரர்கள் உலவிக்கொண்டு இருக்கின்றனர்.

[தனியே இருக்கும் அந்த ஆணழகனை நெஞ்சமும் அறிவும் கேள்வி கேட்டுக் குழப்புகின்றன.]

"நெஞ்சே! எப்படியெல்லாமோ என் சிந்தனையைச் சிதறடிக்க நினைக்கின்றாயே."

"அது என் குற்றமல்லவே!"

"என்ன!"

"ஆம்; அது என் குற்றமல்ல என்கிறேன்...பதிலாக அப்படிச் செய்யவேண்டியது என் கடமை என்றுதான் கூறுவேன்."

"நெஞ்சே! நீ மிகவும் பொல்லாத தன்மை உடையை. என் எண்ணத்தைக் கண்டபடிச் சிதறடிப்பது உன் கடமை என்றல்லவா சாதிக்கின்றாய்!"

"பின் என்னவாம்?"

"தயவுசெய்து நீ வெறுமனே இரேன்."

"அப்படி இருந்து எனக்குப் பழக்கம் கிடையாது. ஏதாவது வேலை செய்ய நினைப்பது என் பொறுப்பு. அதைப் பயன்படுத்துவது மனிதனாக உள்ள உன்னைப் போன்றவர் கடமை. சிலர் நெஞ்சம் நினைப்பதைக் கண்டபடி அடக்கப் பார்க்கின்றார்கள்."

"நீ வேலை செய்தால்......"

"நெஞ்சிற்கு மனிதன் செயலில் உரிமை வேண்டாமா? மனிதன் செய்யும் தவறான செயல்களுக்காக நெஞ்சம் போராடும்..."

"உன்னுடன் என்றால் பேசவே முடியவில்லை."

"தவறு உன்னிடத்தில் இருக்கும்போது நேர்மையிடம் பேச முடியுமா?"

"தவறு என் மீதா?......நெஞ்சே! எவ்வளவோ நியாயம் பேசுகின்றாயே; நீயே சொல் கடமை பெரிதா, காதல் பெரிதா?"

"இரண்டும் சம்மதிப்பிற் குரியவையே!"

"அப்படியென்றால்......"

"நான் இப்பொழுது என்ன கூறினாலும் உனக்கு விளங்காது......ஐயா! இதோ பார்; இரண்டு யானைகள்."

"பாவம்! அவைகள் இன்று போரில் என்னைப் போலப் பகைவர்களிடம் போரிட்டு......"

"...உன்னைப்போல் மலைந்திருக்கவில்லை; மாறாக விளையாடிக் கொண்டிருக்கின்றன."

"ஆச்சரியத்திற் குரியதே...களைப்பிலும் அவைகளுக்கு விளையாட்டே...விந்தையே!"

"அத்துடன் அவைகள் விளையாட எடுத்துக் கொண்ட பொருளைப் பார்த்தாயா?"

"அடடே! ஒரு தேய்ந்துபோன புரிகள் உள்ள பழைய கயிறு. இரண்டு யானைகளும் அந்தக் கயிற்றின் இரண்டு முனைகளைப் பிடித்துக்கொண்டு எவ்வளவு அழகாக விளையாடுகின்றன!"

"உன்னைப் போலச் செய்யும் வேலைகளில் அசதிப்பட்டு உளம் விட்டுவிட்டால் இனி உலகில் நடைபெறவேண்டிய காரியங்கள்...!"

"நல்ல யானைகள்! துன்பத்திலும் இன்பம் காண ஆவல் கொள்கின்றன."

"அப்படித்தான் உன்னைப் போன்றவர்கள் இருக்க வேண்டுமென்று இந்த யானைகள் தமது செயல்களின் மூலம் தெரிவிக்கின்றன."

"இருக்கலாம்...எவ்வளவு பேர் என்னைப்போல்......"

"மிகவும் குறைவுதான்...அப்படிப்பட்டவர்கள் அவ்வளவு பேரும் காதலை மறந்தவர்களாகவே இருப்பார்கள்."

"நெஞ்சே! என்னை வாட்டாதே!"

"நானா வாட்டுகின்றேன்? அந்த அழகி அங்கே என்ன நிலையில் இருப்பாள்?"

"ஆமாம்; நெஞ்சே! ஒருவேளை நான் தவறு செய்து விட்டேனா?"

"...ஆ! என்ன அழகு! பின்னல் கரிய கூந்தல்."

"உண்மைதான். அவளைப்போல அழகு யார் இருப்பார்கள்?"

"அவளது கண்களைப்பற்றி என்ன சொல்ல! மலர்வதற்குத் தயாராக உள்ள மலர்களின் நிறத்தைப்பெற்ற ஈரமான இதழ்களைப் பொருந்திய மை பூசிய கண்களை......"

"ஆ ஆ! நெஞ்சே, உள்ளதை உள்ளபடியே சித்தரிக்கின்றாயே. அவள் என் உள்ளத்தைப் பிணித்துவிட்டவ ளல்லவா?"

"நிறுத்தய்யா! இப்படிப் பேச உனக்கு என்ன தகுதி இருக்கின்றது? பிணித்தவள் அங்கே...! பெருமை பேசும் நீ இங்கே!"

"தவறு என் மீதுதான்...இனி ஏதாவது சொல். அதன்படி நடக்கிறேன்."

"சரி; எழுந்திரு! அங்கே போகலாம்."

"ஆம்! வரவேண்டியது தான். நான் காதலை மறந்தவன். இதோ புறப்பட்டேன்."

"ஆ ஆ அ அ அ ஆ!" (வேறொரு குரல் சிரிக்கிறது.)

"யார் அங்கே சிரிப்பது?"

'யார் என்று கேட்கிறாய்?"

"......ஆ!"

"இங்கு யாரும் சிரிக்கவில்லை. கடமையின் பிரதிநிதி அறிவு கேட்கிறது!"

"நீயா? அறிவே நீ ஏன் வந்தாய்?"

"கடமை தவறும் உன்னைத் திருத்த ஓடி வந்தேன்."

"ஐயோ! நெஞ்சமும் நீயும் சேர்ந்து என்னைக் குழப்புகின்றீர்களே!"

"குழப்பம் ஒன்றுமில்லை. முதலில் உட்கார். நியாயம் பேசலாம்."

"பெரிய வம்பாக அல்லவா இருக்கிறது!"

"நீ ஏன் கடமையை மறந்தாய்?"

"காதலும் பெரியதல்லவா? அங்கே அந்த அழகு...!"

"உனக்குப் பொறுப்புணர்ச்சியே கிடையாதா?"

"யார் இல்லை என்றது!"

"ஐயோ! அந்த அழகைப் பாரேன்! வந்த இடத்தில் பொறுப்பை உணராது பாதியில் வேலையை விட்டுப் போகும் உனக்கா பொறுப்புணர்ச்சி இருக்கின்றது?"

"அங்கே காதலி...காதல் பெரிது!"

"நான் இல்லையென்று சொல்வேனா? இவ்வளவுநாள் இங்கு பொறுத்திருந்த நீ இன்னும் சில நாட்களில் போரை முடித்துப் போகக் கூடாதா? படை உன் தலைமையில் அல்லவா இருக்கின்றது? தற்பொழுது கடமை தானய்யா பெரிது! பொறுப்பை மறக்காதே!"

"அறிவே! உன் கட்டளைப்படியே நின்றுவிட்டேன். நின்று பகைவரை வென்றே அந்த அழகியிடம் செல்கின்றேன். ஆனாலும் நீயும் அந்த நெஞ்சமும் என்னைப் பிய்த்து விட்டீர்கள். இதோ இந்த யானைகள் இழுத்து விளையாடும் இந்தப் பழைய கயிற்றைப் போலல்லவா உங்களால் அலக்கழிந்தேன்!"

"புறந்தாழ் பிருண்ட கூந்தற் போதின்
நிறம்பெறும் ஈரிதழ் பொலிந்த உண்கண்
உள்ளம் பிணிக்கொண் டோள்வயின் நெஞ்சம்
செல்லல் தீர்கம் செல்வாம் என்னும்
செய்வினை முடியா தெவ்வம் செய்தல்
எய்யா மையோ டிளிவுதலைத் தருமென
உறுதி தூக்கத் தூங்கி அறிவே
சிறிதுநனி விரையல் என்னும் ஆயிடை
ஒளிறேந்து மருப்பிற் களிறுமாறு பற்றிய
தேய்புரிப் பழங்கயிறு போல
வீவது கொல்லென் வருந்திய வுடம்பே."

—(நற்றிணை 219.)

'முகமதிய மங்கை'

அறிவு ஒளி

"வெண்ணிலா!"...

"என்ன அத்தான்?"

"என் கவிதை நூல் எங்கே?"

"நான் பார்க்கவில்லையே?..."

"கட்டில் மீது வைத்துவிட்டுப் போனேனே? காணவில்லை."

"எங்கே போயிருந்தீர்கள்?"

"குளக்கரைக்குப் போனேன். திடீரெனக் கற்பனை தடைப்பட்டு விடவே அமைதியாகக் கற்பனை செய்ய அங்கே சென்றேன்..."

"இந்தப் பனிரெண்டு மணி வெயிலிலா?..."

"வெண்ணிலா; உண்மையில் நீ அதை எடுக்கவில்லையா?..."

"இல்லை அத்தான். காற்றில் அடித்துக்கொண்டு போயிருக்குமோ?...அறை முழுதும் பார்த்தீர்களா?"

"இல்லை. பார்க்கிறேன்..."

"அத்தான், உணவு உண்ண நேரமாகிறதே!"

"இதோ ஓடிவந்து விடுகிறேன்."

கவிஞன் நிலவொளி மேன்மாடிக்கு ஓடினான். கட்டிலின் கீழே கவிதை நூல் விழுந்து கிடந்தது. குழந்தையை மெல்லென எடுப்பதுபோல, மென்மையாக எடுத்தான். அந்நூலை ஒரு முறை பெருமையாக நோக்கி விட்டு, உணவு உண்ணக் கீழே சென்றான்.

உணவு உண்ட பின் நிலவொளியும், அவன் ஆருயிர் காதல் மனைவி வெண்ணிலாவும் மாடிக்கு வந்தனர். தன் சாய்வு நாற்காலியில் அமர்ந்து கவிதைகளில் கருத்து செலுத்தலானான் நிலவு. வெண்ணிலா, நூலக அறையை திறந்து ஓர் இலக்கிய நூலைத் தேடி எடுத்துக்கொண்டு பஞ்சணையில் படுத்த வண்ணம் காப்பிய உலகில் வாழப் புகுந்தாள்.

நிலவொளியும் வெண்ணிலாவும் புதுக்குடி துவங்கி ஓராண்டேதான் ஆயிற்று. 'இனிமை' என்ற கிழமை இதழின் ஆசிரியக் குழுவில் விளங்கி வந்தான் நிலவு. தமிழ்நாட்டின் வளரும் கவிஞர் குழுவுள் ஒப்பற்ற முதல்வனாகத் தன் கவியாற்றலால் நிலைத்த ஓரிடத்தை உரிமை யாக்கிக் கொண்டான். நிலவொளியின் காப்பியங்கள் இலக்கிய வட்டத்தில் எடுத்துக்காட்டு கூறுமளவு சீரிய மதிப்புடையதாக விளங்கியதோடு, பல பதிப்புகள் வெளிவந்து செல்வ வளனும் நல்கியது. வேண்டிய பொருள் வருவாயும், காதல் கலந்த கவின் வாழ்க்கைத் துணையும், உள்ளம் விரும்பும் உயரிய கலைத்தொழிலும் அமைய மிக உயர்ந்த வாழ்வு வாழ்ந்து வந்தான் நிலவொளி.

வெண்ணிலா, அழகு வானத்தின் அணிவிளக்கு. அறிவுக் கோயிலின் எழிற்சிலை. இளமைச் சோலையின் தேனிலா. கற்பனை ஊர்தியின் மின்னாற்றல் பெட்டகம்! கவிஞன் நிலவொளியின் கற்பனை உலைக்கூடம் அவள்! அழகி வெண்ணிலா காதற் பேரரசன் நிலவு! காதல் வாழ்க்கைக்கு அவர்கள் ஓர் எடுத்துக்காட்டு. காவியமும் ஓவியமும் கலந்ததுபோல; அழகியும் அறிஞனும் கலந்திருந்தனர். பொருமை படத்தக்க வாழ்க்கை வாழ்ந்தார்கள்!!

* * *

கல்லூரி என்ற தனிக் கற்பனை உலகத்திலே காலை வைக்கும் கட்டிளங் காளைகள்; தங்களுக்கென்று தனிக் கொள்கைகள், எண்ணங்கள், ஏக்கங்கள் கொண்டு செருக்கித் திரிகின்ற பொற்காலத்திலே தான் நக்கீரன் நிலவொளியை நண்பனாக அடைந்தான்.

சீர்திருத்தம், புதுமை, அறிவியல் என்ற சொற்களை நம்பிக்கைக்குரியவைகளாகக் கண்டு, வழிபடும் நக்கீரன் புதுமைப் பொற்கோயிலின் பகுத்தறிவு ஆண்டவனான நிலவொளியை நண்பனாக அடைந்தபோது; அவனை நண்பனாக மட்டுமின்றி, தலைவனாகவே ஏற்று வழிபாடு செலுத்தினான்.

கவிஞன் நிலவொளியின் திருவடிகள் நக்கீரனின் வீட்டை அடிக்கடி மிதித்ததற்குக் காரணம் நக்கீரனின் நட்பு மட்டுமல்ல; அவ் வீட்டிலே நடமாடும் அழகை—கலையின் கருவூலத்தை—பெண்மைக்கோயிலை—வெண்ணிலாவை — நக்கீரனின் தங்கையைக் கண்டு; அவ்வழகியினிடம் கவிஞனின் உள்ளம் அடிமையாகிச் சிறைப்பட்டதும் ஒரு சிறப்பான காரணமாகும்.

கடலின் நீரில் உப்பு ஒன்றி இருப்பதுபோல; மக்கட் பிறவியின் உணர்வில் காதல் கரந்து ஒன்றிக் கிடக்கிறது.

நிலவொளியைக் காணும் முன்பே நக்கீரன் வாயிலாகவும்; நிலவொளியின் கவிதைப் படைப்புகளின் வழியாகவும் வெண்ணிலா அவனைப்பற்றி அறிந்து மதி மயங்கி இருந்தாள். நிலவொளியைப்பற்றி அளவற்ற கற்பனைகள் செய்து இன்பக் கனவுகள் கண்டு கொண்டிருந்தாள்.

முல்லையை முத்தமிட்டு, மல்லிகையின் கன்னத்தைத் தட்டி, அந்தியின் மையற் பொழுதிலே அழகாகக் குதித்து விளையாடிக் கொண்டிருந்தது தன் தமிழ் ஈன்ற இளந்தென்றல்.

அரும்பு நெஞ்சினளான வெண்ணிலா! நிலா முற்றத்தில் சாய்வு நாற்காலியில் சாய்ந்தவாறு நிலவொளி புதுக்கவிதை நூலில் ஆழ்ந்திருந்தாள். நக்கீரன், கவிஞன் நிலவொளியோடு வீட்டினுள் நுழைந்தான்.

"வாருங்கள் நிலவொளி!" என்ற அண்ணனின் குரல் கேட்டு வியப்போடு தலைநிமிர்ந்த வெண்ணிலா; எழில் திரண்ட இன்னுருவ இளங்காளை ஒருவனைக் கண்டு ஒரு மணித்துளி தன்னையும் மறந்து அவனையே பார்த்திருந்தவள்; உணர்வடைந்து இருக்கையினின்றும் எழுந்து நின்றாள். அவளின் இளம் பெண்ணுள்

ளத்தில் நிலவொளியைப்பற்றி வரையப்பட்டிருந்த கற்பனை ஓவியங்கள் அத்தனையும் நூற்றுக்கு நூறும் உண்மையாக அமைந்ததை எண்ணிப் பொங்கினாள்.

"அமருங்கள்" எனக் கவிஞனை நோக்கிக் கூறிய நக்கீரன், "வெண்ணிலா, இவர் யார் தெரிகிறதா?...கவிஞர் நிலவொளி!" என அறிமுகம் செய்து வைத்தான். அவளுக்கோ சொல்ல முடியாத நாணம். கூர்மையான 'காமத்துப்பால் பார்வை'யைக் கவிஞன்மேல் ஏவிவிட்டு நாணப் புன்னகையோடு தலைகவிழ்ந்தாள். ஆ! அந்த இமைப்பொழுதிலே கவிஞனின் உள்ளத்திலே கற்பனைத் தீயைக் கனன்று எரியச் செய்துவிட்டாள் அக்காமர் செல்வி!

"நிலவு, இவள் என் தங்கை. கல்லூரியில் இடைநிலை வகுப்பில் படிக்கிறாள். உங்கள் கவிதைகள் என்றால் பசியையும் மறந்து விடுவாள்!"

இளமைச் சிரிப்புகள் மூன்று தனி உணர்ச்சிகளோடு அங்கே நாட்டியமாடின!

சிற்றுண்டி அருந்திய பின் மூவரும் உரையாடலானார்கள். 'கவிஞன்' என்ற செருக்கோ, தனித்தன்மையோ அற்று இயல்பாகக் கலந்து பழகிய நிலவொளியின் நற்பண்பு வெண்ணிலாவின் உள்ளத்தைக் கவர்ந்தது. அன்றைக்கென்று ஏனோ வெண்ணிலாவுக்கு மொழியே மறந்துவிட்டது!

என்றுமில்லாத இன்ப நாணம் அன்று அவளை முற்றுகை இட்டு விட்டது. அவளின் மனம் என்ற ஒலிப்பதிவுக்கருவி அக்கவிஞனின் ஒவ்வொரு சொற்களையும் அப்படியே பதிவு செய்து கொண்டு எண்ணி எண்ணி மகிழ்ந்தது. நிலவொளி பேசும் போது அவன் உதடுகள் விரிவதையும்; இணைந்து பிரிவதையும்; குவிந்து மலர்வதையும்; புன்னகை பூப்பதையும் வியப்பான கண்காட்சியைப் பார்ப்பது போலப் பார்த்தாள் அப்பருவ மங்கை. அவன் கண்கள் பிறழ்வதையும், கண்ணிமைகள் மிக மிக மென்மையாக இமைக்கின்ற அழகையும் அணு அணுவாகச் சுவைத்து நோக்கினாள். எப்பொழுதாவது திடீரென பெண்மை உணர்ச்சி எழும். உடனே பரபரப்பாக 'ஒன்றும் அறியாதவள் போலத் தலைகுனிந்து கொண்டு புத்தகத்தில் ஆழ்வாள் — இந்த நடிப்பெல்லாம் சில நொடிகள் தான். உடனே அவள் கழுத்து அவளையறியாமல் மெல்ல நிமிரும். கண்ணிமைகள் மேல் நோக்கும். அவன் முகத்தில் குமரிப்பெண் வெண்ணிலாவின் அழகுப் பார்வை மொய்க்கும்! திடுமெனக் கவிஞனின் கண்கள் அவள் கண்களை மெல்ல மோதி விடும். உடனே அவளுக்கு விழ்ச்சி! மார்புக்கூட்டுகள் உரலில் உலக்கையால் இடிப்பது போன்ற அதிர்ச்சி கேட்கும்!

"ஏன் அவ்ன் கண்களிலே அத்தனை குளிர்ச்சி? ஒருவேளை அவன் கண்கள் பனித் தொழிற்சாலையோ?" என அவள் எண்ணுவாள்.

"ஏன் இவள் கண்களில் இத்தனை வெம்மை? ஒருவேளை அவள் கண்கள் தீயின் கருவோ?' என அவன் எண்ணுவான்.

இரு வேறு ஆற்றல்கள் மோதப் போகின்றன; இல்லை, மோதவில்லை! ஒன்றோடு ஒன்று ஆரத் தழுவி அணைத்துக் கொண்டன!

பகல்கள் மாய்ந்தன; இரவுகள் இறந்தன.

பார்வைகளின் பேச்சிலிருந்து, வாயின் பேச்சு வரை வளர்ந்திருந்தது. வெண்ணிலா அண்ணன் நக்கீரனின் உதவி இல்லாமலேயே நிலவொளியோடு உறவாடுகின்ற அளவிற்கு அவனோடு பழகி விட்டாள்.

"யாயும் ஞாயும் யாராகியரோ?
எந்தையும் நுந்தையும் எம்முறை கேளிர்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
யானும் நீயும் எவ்வழி அறிதும்?
செம்புலப் பெயல்நீர் போல...ஆ...ஆ...
செம்புலப் பெயல்நீர் போல...ஆ...ஆ...
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே...
அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனவே..."

வெண்ணிலா தன் இனிய யாழ்க்குரலால் பாடி முடித்தாள்.

"ஆ! அருமை; அருமை. வெண்ணிலா, எவ்வளவு இனிமையாகப் பாடுகின்றீர்கள்?"

கைகளை மார்பில் சேர்த்துக் கட்டியபடி தூணில் சாய்ந்தபடி நின்று கொண்டிருந்த நிலவொளி, தன் ஆற்றல் வாய்ந்த நோக்கோடு அவளை நோக்கினான். எழுது பலகை மீது அமர்ந்தவாறு, தையல் வேலையில் கருத்து செலுத்திப் பாடிக்கொண்டிருந்த வெண்ணிலா வெருவி எழுந்து நின்றாள். "வாருங்கள், அமருங்கள். வந்து நேரமாயிற்றா?..." நாணம், நல்லின்பச் சிலிர்ப்பு மிக அவனை வரவேற்றாள்.

"இப்பொழுது தான் வந்தேன். பாட்டை முழுதும் கேட்டு சுவைக்கும் பேறு இல்லை..."

"................"

"வெண்ணிலா, மிக அரிய உணர்வு செறிந்த இன்பப் பாட்டல்லவா நீ......"

"என்ன?..."

"உம்...குறுந்தொகைப் பாட்டு! அதன் அழகுக் கீடு வேறு உண்டோ?......"

"பாட்டில் அழகு இருக்கிறதா?"

"அழகாக இருப்பவர்களுக்கு, மற்றப் பொருள்களிலுள்ள அழகு தெரியாது."

அவன் அமர்ந்தான். அவள் நின்று கொண்டிருந்தாள். வானத்தை நோக்கிக் கொண்டிருந்த நிலவொளியின் கண்களிலே காரணமற்ற ஏக்கம்......

அவனழகைக் காணக் காண வெண்ணிலாவின் பெண்மை சிதைந்து கொண்டிருந்தது. "அப்படியே அவனைக் கட்டி யணைத்து......!?..."

அந்தக் குரங்கு மனத்தை அடக்கினாள்; 'என்னவோ' அடக்கம், நாணம், நாகரிக , பெண்மை என்றெல்லாம் சொல்கிறார்களே...அதற்காக!

"நான் உங்கள் உள்ளம் புண்படப் பேசி விட்டேனா?..."—நிலவொளி படபடப்போடு வினவினான்.

"இல்லையே. தாங்கள் எது பேசினாலும் என் உள்ளம் புண்படாது."

"ஏன்?"

"என்னுள்ளம் என்னிடத்தில் இல்லை."

நிலவொளியின் மண்டையில் உலகம் அறுந்து விழுந்தது போன்ற உணர்வு—...

"அப்படியானால்?..."

"மின்வெட்டின் வேகத்தில் விரைந்து நோக்கிய அவன் பார்வையை; மனைவியின் கன்னத்தில் உருண்டு மார்பில் சொட்டும் கண்ணீரின் மென்மையான—அமைதியான வேகத்தோடு அவள் பார்வை முத்தமிட்டது. அங்கே!

பிறந்தது கவிதை!!

* * *

காதலர்களாகி விட்ட நிலவொளியும் வெண்ணிலாவும் நெருங்கிப் பழகுவது வெண்ணிலாவின் உரிமை அத்தான் பூங்குன்றனுக்கு வெறுப்பை அளித்தது. பூங்குன்றனின் உள்ளமெல்லாம் வெண்ணிலா நிறைந்திருந்தாள். அவளையே தன் வாழ்க்கையின் நோக்கமாகக் கொண்டிருந்த பூங்குன்றன்; நிலைமை வேறு வழியில் திரும்புவது கண்டு புழுங்கலானான். நிலவொளியைத் தன் வாழ்வுப் பகையாக எண்ணி, வெறுத்தான். அவனை ஒழித்தால்தான் தன் காதலுக்குரிய வெண்ணிலா தன் மனைவியாவாள் எனக் கருதினான். பூங்குன்றனின் அறிவு மூளை நிலவொளியையும், வெண்ணிலாவையும் பிரித்து; அவர்கள் காதலை அழிக்கச் சூழ்ச்சி செய்வதிலேயே செலவழிந்தது.

வெண்ணிலாவின் குடும்பமும், நண்பர் குழுவும் செஞ்சி மலை காண உவகைச் செலவு சென்றனர். பூங்குன்றனும் நிலவொளியும் அவர்களோடு சென்றனர்.

வெண்ணிலாவும் நிலவொளியும் களவற்ற உவகையோடு சிரித்துப் பேசிப் பழகினார்கள். வரலாற்றுக் குறிப்புகளையும், கோட்டை, அரண், மதில் ஆகியவைகளின் அமைப்பு, தன்மைகளையும், அகழிகளின் பயனும், பண்பும்; பழந்தமிழகக் கட்டடக் கலை மேதையையும், கொல்லரினத்தின் அரும்பெரு அறிவாற்றல், கணக்கறிவு, கலை மாண்பு ஆகியவைகளையும், சுவை செழிக்க இனிய மொழிகளால் விளக்கி வந்தான் கவிஞன் நிலவு. நிலவொளியும் வெண்ணிலாவும் பழகுவதும், குறும்பாக நோக்குவதும், ஒருவர் பால் ஒருவர் பரிந்து பழகுவதும், விளையாடுவதும்

பூங்குன்றனுக்குப் பொறுத்துக் கொள்ள முடியாத பொறுமை மையும்; வெளியிட்டு உரைக்க முடியாத வெறுப்பையும், அள விட்டு உரைக்க முடியாத எரிச்சலையும் அளித்தது.

'நிலவொளியைப் பழி வாங்க வேண்டும். அவனுக்கு ஏதே னும் ஊறு செய்ய வேண்டும்', எனப் பூங்குன்றனின் உள்ளம் பரபரத்தது; துடி துடித்தது. நிலவொளி ஒரு செங்குத்தான பாறை மீது ஏறி நின்று மலையின் அடிவாரத்தைக் கண்டு ச வைத்தான். அவனருகில் ஏறி நின்ற வெண்ணிலா கீழே தெரியும் அழகிய இயற்கைக் காட்சியைப் புகைப் படம் எடுத் தாள். பூங்குன்றன் விளையாட்டுக்காக நிலவொளியைக் கீழே தள்ளிவிடுவதாகக் கூறி, நடித்து, உண்மையிலேயே தள்ளி விட்டான்! ஆ!......இனமறியாத ஆறுதலுணர்வு பூங்குன்றன் உள்ளத்தில் சுரந்தது. வெண்ணிலா 'வீல்' என்று கதறினாள். நண்பர்கள் பதறினர். நல்லகாலமாக நிலவு மலை மீதிருந்து கீழே உருளாமல், புதர்களில் விழுந்து சிக்கிக் கொண்டான். நக்கீரன் உயிரையும் உடலையும் பொருட்படுத்தாமல் பாறை— புதர்களின் இடுக்கான, கடினமான வழிகளில் இறங்கி, ஆருயிர் நண்பன் நிலவொளியைத் தூக்கி வந்தான். முகம், உடல் எங்கும் ஒரே செங்குருதி வெள்ளம்; பச்சைப் புண்கள்! கணக் கற்ற முட்கள் அவன் பொன்னுடலை முத்தமிட்டுக் கொண்டி ருந்தன. தன் நினைவிழந்து கிடந்தான். நிலவைத் தூக்கிக் கொண்டு பரபரப்போடு கீழிறங்கினர். பூங்குன்றனோ குற்றவாளி போல அமைதியாக வந்தான். அவன் உள்ளப் புயல் ஓயாமல் உறுமிக் கதறிக் கொண்டிருந்தது.

பூங்குன்றனின் மனச்சான்று அவனைக் கொல்லாமல் கொன்றது. வீட்டிலுள்ளவர்கள் யாவரும் அவனை வெறுப் போடு நோக்கியதை அவனால் பொறுக்க முடியவில்லை. அமை தியை நாடி வெளியூர் சுற்றக் கிளம்பி விட்டான்.

நிலவொளி பட்ட துன்பம் சொல்லி முடியாது. அக்குடும் பமே உயிரற்று விளங்கியது. நிலவொளியின் துயரத்துக்குத் தானே காரணம் என வருந்தினாள் வெண்ணிலா. அவள் தன் அண்ணனிடம் நிலவைக் காதலித்ததைக் கூறினாள். நக்கீரனோ அடைய முடியாத பேரின்பத்தை அடைந்தது போல மகிழ்ந்தான். அவர்களை மணம் என்ற சிறையிலிட்டு மகிழப்போவதாகப் பெருமிதத்தோடு கூறினான்.

* * * *

தனி மருத்துவ மனையில் கை, கால், உடல், முகம் எல்லா இடமும் கட்டு கட்டப்பட்டு, படுக்கவும் இயலாதவாறு துன்புற்ற வண்ணம் படுத்திருந்த நிலவொளியின் அருகில், ஏக்கம் செறி யும் முகத்தோடு வெண்ணிலா அமர்ந்திருந்தாள். வெண்ணிலா வின் கண்களில் பனி முத்துகள் போலக் கண்ணீர் சுரந்து சொட்டிக் கொண்டிருந்தது. நிலவொளியின் இதழ்களில் மென்னகை மலர்ந்தது. தாவணியின் முனையால் பொங்கிவரும் அழுகையை அடக்கிக் கொண்டாள்.

"வெண்ணிலா!"

"........."

அவளால் பேச முடியவில்லை. பலபலவெனக் கண்ணீர் அவள் பொற் கன்னங்களில் உருண்டு சொட்டியது. அக்கனிக் கன்னங்கள் உணர்வின் கொழுமையால் மேலும் மேலும் சிவந்தது.

"வெண்ணிலா, குழந்தையா நீ?......ஐயோ, கண்ணீரைத் துடைத்துக் கொள். நான் அவ்வளவு எளிதில் சாகமாட்டேன், வெண்ணிலா. நான் அளவுக்கு மீறிய நல்லவனாயிற்றே! தமிழ் இலக்கியத்தை இன்னும் எவ்வளவோ கெடுக்க வேண்டுமே!! அதற்காக நான் உயிரோடிருக்க வேண்டாமா; என்ன?......"

அவன் சிரித்தான்; அவள் அழுதாள்.

அவர்கள் இருவரும் ஒருபொழுது, இலக்கியத்தைப் பற்றி உரையாடினார்கள். அப்பொழுது அவள், "உங்களைப் போன்ற இளங்கவிஞர்கள் தமிழிலக்கியத்தைக் கொலை செய்கிறார்கள்!" என நகைச் சுவையாக எள்ளி நகையாடினாள். அதை அகத்துட் கொண்டே நிலவொளி நகைச் சுவையாகப் பேசினான்.

"நிலவு!......" உணர்வின் அழைப்பு அவள் 'உள்ளத்தை' அவனிடம் கொண்டு சென்று விட்டது. உருகினான் இளங் கவிஞன்.

"வெண்ணிலா, நீ மட்டும் ஏன் என்னிடம் இவ்வளவு பாசம்? ......வெண்ணிலா!......"

"நிலவு, இன்னும் நீங்கள் உணரவில்லையா?......ஐயோ! என் பரிவும் பாசமும்தான் உங்களுக்கு இந்நிலையை உண்டாக்கி விட்டது......"

"என்ன சொல்கிறாய், வெண்ணிலா?......"

"அத்தான்......"

"ஆ........."

நிலவொளியின் கைகளை அன்போடு பற்றி எடுத்துத் தன் கன்னங்களில் பதித்துக் கொண்டு விம்மினாள். கவிஞனின் நெஞ்சம் பொங்கியது. பேரின்பத்தில் தன்னை மறந்தான், துடிதுடித்தான். உடல் முழுதும் விடுதலை பெற்றது போன்ற உணர்வு, இனமறியாத இன்பம்; இன்பத்தாடே இன்னதென்றறிய முடியாத துன்பம்......

"உங்களை, என்......எனக்கு......உம்...அன்புக்குரியவராக ஆக்கிக் கொண்டதால்......என்...மாமா......பூங்குன்றனுக்குப் ...பொ...ரு...மை...நிலவு!...அவர் என்னைக் காதலிக்கிறாராம்! முறைப் பெண் என்ற உரிமையால், நான் அவர் உடைமையாக வேண்டுமாம்......உங்களால்தான் நான் அவரை மணக்க மறுக்கிறேன் என்றெண்ணி இவ்வாறு கொடிய கயமைச் செயலில் இறங்கி விட்டார். எவ்வளவு அறியாமை, பார்த்தீர்களா?"

நிலவொளி நெட்டுயிர்த்தான். அவன் கண்கள் அவள் முகத்தை அமைதியாக நோக்கின.

"வெண்ணிலா."

"என்ன'ங்க?"

"நீ பூங்குன்றனையே மணந்து கொள்வது நலம்."

"என் காதலுரிமையைத் தவிர வேறு எதைக் கேட்டாலும் உங்களுக்கு முழுவிருப்பத்தோடும் அளித்துவிடுவேன். உயிரே கூட எனக்கு ஒரு பொருட்டல்ல, காதல் உரிமையில் உங்களுக்கும் நான் பணியமாட்டேன் அத்தான்."

அவள் குரலின் உறுதி நிலை பேறுடைய காலத்தைக் காட்டிலும் வன்மையுடையதாக இருந்தது கண்டு வியந்தது கவிஞன் உள்ளம். அவள் அவனை 'அத்தான்' என்று முறை கொண்டாடி அழைத்தது வியப்பாக இருந்தது. "அத்தான்" என வியப்போடு அவனே ஒருமுறை சொல்லிக் கொண்டான்.

"ஏன்? நான் அப்படி அழைக்க உரிமை யில்லையா?"

"இல்லை வெண்ணிலா. என் நிலையைத்—தகுதியை எண்ணினாயா? உனக்கும் எனக்கும் வாழ்க்கை பொருந்தாது வெண்ணிலா."

"அத்தான், என் இள நெஞ்சின் ஆவலை-கனவைக் கொன்று விடாதீர்கள். அன்பின் இன்பத்தில் திளைத்துப் பொங்கும் என்னை வெறுப்புத் துன்பத்தில் தள்ளாதீர்கள். கெஞ்சிக் கேட்டுக் கொள்கிறேன், அத்தான்."

"வெண்ணிலா, இன்றைக்கில்லை யென்றாலும் என்றைக்கேனும் நீயே என்னை வெறுத்துவிடுவாய்."

"ஏனத்தான் அப்படிச் சொல்கிறீர்கள்? அவ்வளவு கயமையானவளா நான்? அவ்வளவு இழிந்தவளா? பண்பு கெட்டவளா? அத்தான், பிணமானாலும் என்னுள்ளம் உங்களைக் காதலிக்கும், உங்களையே நம்பும்; உங்களிடமே அடிமையாகும்."

"வெண்ணிலா, உன்னழகு வானம் போன்ற வியப்பும் பெருமையும் உடையது. செல்வமும் சீரும் நிறைந்த உயர்குடி மகள் நீ. நான், இன்றைய நிலையில்—என்ன நிலையிலிருக்கிறேன்? ......உடலெல்லாம் புண்......"

"உடலெல்லாம் புண்!...இன்றைய நிலையை எண்ணுதீர்கள் நாளை......"

"வெண்ணிலா, ஒருக்கால் என் கால்கள் நொண்டியாகி விட்டால்......"

"அத்தான், ஐயோ! அப்படியாகாது, ஆகக்கூடாது."—கதறிவிட்டாள் வெண்ணிலா. அந்த நினைவே அவளைக் கொல்லலாயிற்று

"அத்தான், அப்பொழுதும்கூட நீங்களே என் வாழ்க்கைத் துணைவர், நீங்களே தான்!"

"வெண்ணிலா, உண்மையில் உன் சொற்களைக் கேட்டு, யாரும் சுவைக்காத பேரின்பம் சுவைக்கிறேன். என் வாழ்க்கையில் எதை இழந்தாலும்; இழக்க முடியாத காதலைப் பெற்ற என்னைவிடத் தவம் செய்தவன் யார் இருக்க முடியும்? ஆனால், உன் நல்ல உள்ளத்தை, நல்ல அழகை, நல்ல இளமையை நான் பழி வாங்குவது மன்னிக்க முடியாத குற்றம். இன்று உணர்ச்சி வெறியில் நீ செய்யும் திடீர் முடிவு பிறகு இருவருக்கும் துன்பம் விளைக்கும். ஆகவே, இன்னும் சில காலம் பொறுத்து ஏதேனும் முடிவுக்கு வருவோம்......"

"அத்தான், என் சொற்களிலே அவ்வளவு நம்பிக்கை இல்லையா? நல்லது. நான் அப்பொழுதும் மாறமாட்டேன் என்று இப்பொழுதே உறுதி கூறுகிறேன்!"

அவள் குரலில் உறுதி ஒலித்தது.

இருவர் கண்களும் மோதித் தழுவின.

(அடுத்த இதழில் முடிவுறும்.)

ஸ்ரீமத்

விவேகானந்த சுவாமிகள்

விரிவான திவ்ய சரித்திரம்

(3-ம் பதிப்பு)

சுவாமிகளின் அதியற்புதமான சரித்திரமும் அரிய உபதேசங்களுடன் அநுபவசாரமான கடிதங்களும், மேலான பிரசங்கங்களும் இடையிடையே விளங்குகின்றன. சுவாமிகள் அமெரிக்கா, இங்கிலாந்து முதலிய பிரதேசங்களில் பிரசங்காரம் செய்து வேதாந்த விஷயங்களை விரிவாக உபன்யசித்து ஹிந்து மதத்தை நிலைநாட்டியது இதில் விரிவாக எழுதப்பட்டிருக்கிறது. இவ்வளவு விரிவான சரித்திரம் இதுவரை எவராலும் வெளியிடப்படவில்லை.

கிளேஸ் காகிதத்தில் அச்சிட்டு முழு காலிகோ பைண்டு செய்யப்பட்டது.

இதன் விலை ரூபா 5. தபாற் செலவு வேறு.

ஆனந்தபோதினி ஆபீஸ்,

தபால் பெட்டி நெ. 167, சென்னை-1

அன்பிலாளன் அறிவு

போ. நரசிம்மன்

★

தமிழ் இலக்கியங்களில் பொன்னும் மணியும் வைத்து இழைத்து அழகு செய்வதைப்போல, அழகிய காட்சிகளும், விழுமிய கருத்துக்களும் பெருகி இருக்கிறது என்பது வெளிப்படை.

பொங்கித் தவழும் தன்மையான நயமும், சுவைக்கத் தெவிட்டாத தேஞ்சுவையைப் போலவும், மனத்தே அழியாது நிற்கும் ஓவியமாகவும் ஒருங்கே அமைத்து பாடும் ஆற்றல் பெற்றிருந்தனர், பண்பும் பெருமையும் பெற்ற பண்டைபபுலவர்.

நயமும், சுவையும், காட்சியும் புலவர் பாடிய பாடலில் காண்பதால்தான் அப் பாடல்கள் என்றும் அழியாது நிலைப்பெற்று உலகில் உலவும் சிரஞ்சீவிகளாக விளங்குகின்றன.

இவ்வாறு அமைந்துள்ள பாடல்கள் பல உள.

'மலரில் புகுந்த தென்றல் மணங்கொண்டு வருத்த இருள் சூழ்ந்தும், மதியெழுந்தும், வரவில்லை என்றே ஏங்கினேன்.'

'மலரைத் தேடி வண்டு வந்ததைப்போல நான் உன்னைத் தேடி வந்தேன்.'

'மலரில் தவழ்ந்து மணம் வீசும் தென்றலின் தன்மை எவ்வளவு இன்பம் விளைவிக்கிறது?'

'இதனால் தான் மலரை மாதர் விரும்பி அணிந்து கொள்கிறார்கள்.'

'தென்றலின் தன்மையும், மலரின் 'கம்' என்ற இனிமையும், காதலருக்குத்தான் தெரியும்!

'நிலவின் ஒளியால் ஆனந்தம் அடையும் அந்த ஆழியைப் பார், அமுதமொழியாளே அதன் வருணனையை அள்ளி வீச புலவனால்தான் முடியும்.'

'இல்லை. வருணனையைக் கவிதையாக்கக் கவிஞனால்தான் முடியும்.'

'கடல் எவ்வளவு உயரம் பொங்குகிறது.'

'மதியைக் கண்டு மகிழ்ச்சியடைகிறது கடல் மங்கை.'

'நிலவை அடையப் பொங்குகிறது கடல். ஆனால் அடைய முடியாது தாங்கொணாத் துயரத்தால் ஓ என்று அழுது கரையில் மோதி மோதி மாய்கிறது!

'காதலில் வெற்றி காணா காதலரின் முடிவும் இவ்...வள...வு தானா......?'

'ஏன் கண்ணீர் வடிக்கிறாய். கண்ணீர் எனக்கு வேல் கொண்டு தாக்குவதைப்போல இருக்கிறதே, உள்ளத்திலிருப்பதை உரைப்பாய், வேல்விழியாளே.'

'வேலையின் வழிதானே...உனக்கும் கடலுக்கும் என்ன சம்பந்தம்?—சந்திரனைக் கண்டு கடல் பொங்குகிறது. காற்றால் அலை கரையில் மோதுகிறது அதைக் கண்டு நீ ஏன் நீர் வடிக்கிறாய்?'

'கடல் நிலவை அடையாது அழுது கரையில் மோதி வாழ்வை...இழப்பதுபோல...எனக்கும்...அத்...தகைய பிரிவு நிகழுமோ...என்று...தான்.'

'பிரிவதா! உன்னை விட்டா? முடியவே முடியாது? உன்னை விட்டு ஒருநாளும் தனித்திருக்க முடியாது.'

'நெஞ்சு இளகப் பேசி ஏமாற்ற நினைக்கிறீரா?'

'பாகு மொழியாளை விட்டுப் பிரிந்தால் உன் வேல்விழி என்னைத் தாக்குமல்லவா என் கோமளமே! அதோ பார் அந்த மலரை.'

'அந்த மலரைச் சுற்றி இசை பாடுகிறது வண்டு.'

'அதற்கும் நமக்கும் என்ன வேறுபாடு?'

(மண்ணை காலால் கீய்த்து, தலையைக் கவிந்து.)

'போங்கள்; இந்தப் பேச்சில் படுலே சமர்த்தர்.'

'பொன் தகடு பரப்பிய மணல் பரப்பில் அமருவோம் வா.'

'நிலவின் ஒளியால் மனதை எவ்வளவு மலர வைக்கிறது?'

'ஆண்கள் எல்லாம் இவ்வாறு பேசி பெண்களை ஏமாற்றுவர். உங்களைப் போன்ற ஆண்கள் அநேகர்.'

'பிரிந்து வாழ இசையேனடி கோவை இதழாளே.'

'உண்மை யாகவா?......'

'ஆனால் என் சொல்லில் நம்பிக்கை இல்லையா? பெண்கள் எல்லோரும் சந்தேகப் பேர்வழிகள் தான்! அவர்களைப் போலத் தானே நீயும்......

'இல்லை...இல்லை......பிரியேன் என்பார்கள். பொன்னே மணியே இன்பமே என்பார்கள்...பின் வேறு பாவையைப் பார்ப்பார்கள். இதுவும் ஆடவரின் இயல்புதானே......ஏதேதோ சொல்லி என்னை இசைய வைத்தீர். பின்...'

'வண்டு மலரை விரும்பாதிருந்தாலும், கொடி கொம்பை பற்றாதிருந்தாலும், உன்னைவிட்டுப் பிரியேன்.'

நீண்டநேரம் ஆய்விட்டதே! பனைமரத்துள்ள கழுகும் கூவுகிறதே.

'இன்பக்கடலில் ஆழ்ந்தவரைக் கண்டால் காலம் வெகு வேக மடையும் என்பதும் உண்மைதான்!'

* * *

பெற்ற தாயைவிட தலைவியை வளர்த்த செவிலியைவிட தலைவியின் நல்வாழ்வில் கருத்துடையவள் தோழியே ஆவாள்.

அந்தி நேரத்தில் உலகமே பொன்னிறம் பெற்றது. தலைவியின் மேல்பட்ட பொன்னிறம் அவளை தங்கச்சிலையென திகழச் செய்தது. அந்தத் தங்கச்சிலை ஆங்குள்ள மரத்திலே சாய்ந்த வண்ணம், தலைவனை வழிமேல் விழிவைத்து பார்த்து நின்றாள்.

கூந்தல் சில காற்றால் அசைந்து பறந்து அழைத்தது கார் மேகம் காற்றை எதிர்பார்ப்பதைப்போல.

கடற்கரையில் ஓடி விளையாடியும், விளையாட வருவோருக்கு உடன் விளையாடி வளையில் புகும் நண்டும் பொழிலிடத்தே உள்ள புன்னைமலரில் புகுந்த தென்றல், தலைவியின் மீது பட்டால் தனிமையில் யாதாவாளோ! படகில் சென்று மீன் வேட்டையாடுவோர் திரும்பி தம் தாம் அகம் செல்வதையும் இவ்வாறு பகற்பொழுது மெல்ல மெல்ல நகர்ந்து சூரியன் தன் சுடர் குறைய இருள் சூழவும் இதைப் போல பல நாட்கள் கழித்த தலைவி யாதாகுவளோ.'

பனைமரத்தைப் பார்க்க அங்கு அதன் துணையைப் பிரியாதிருக்கும் அன்றில் பறவையைக் கண்ட தலைவி யாதாய் நினைந்துருகி மெலிந்து யாதாவாளோ எனத் தோழி தலைவியின் நிலையைக் கண்டு வருந்தினாள்.

பெரிய மரத்தில் எப்போதும் உள்ள ஆந்தையானது கூவும் பாதி இரவு வரை என் மனம் உருகும் அன்பு உரைகள் உரைத்து என்னை ஏமாற்றி வருத்தம் செய்து, தென்றல் வருத்தவும், இருள் என்னை ஆழ்த்தவும், மலர் வீழ்த்தவும், பூக்காடு துன்பக்கடலில் சேர்கவும் ஆன இவ்வளவு இன்னலுக்கும் யானேயன்றி நீ (தோழி) 'என்ன செய்வாய்? நான் அந்த அன்பு இல்லாதவனுடைய அன்பை உண்மை என்றும் அறிவுடையவன் என்றும் நம்பி அறிவு இழந்தேன்! என்று (வருந்தி வருத்த மிகுதியால் நலமற்று மெல்ல மெல்ல உடல் நலங் குன்றுமோ என்று எண்ணி) வருந்திய தோழிக்கு, தலைவி ஆறுதல் கூறினாள்.

இதைப் போன்று பிரியேன் என்றுரைத்துப் பிரியும் காதலருக்கும் ஒப்ப என்றோ பாடிய பாடலுக்கும் இன்று நிகழும் நிகழ்சிக்கும் ஒப்ப அப்பாடல்கள் இருப்பதால் தான், அழியாது இருப்பதற்குக் காரணம் அன்றோ?

மேற்கண்டவாறு இயற்கைக் காட்சிகளைக் கண்டு வருந்துவாள் தலைவி என்று வருந்துகின்ற தோழிக்கு தன் தவறுதலையும், அன்பு இல்லாதவனுடைய காதலையும், அதனால் வரும் முடிவும் பொருந்த பாடிய மோசிக்கரையனார் பாடலைக் காண்போம்.

"முதுமரத் துறையும் முரவுவாய் முதுபுள்
கதுமெனக் குழறுங் கழுது வழங்கரை நாள்
நெஞ்சு நெகிழ் பருவரல் செய்த
அன்பிலாளன் அறிவு நயந்தேனே."

—(அகம் 260.)

அவள் அளித்த அன்பு மணி

சுப்பு ஆறுமுகம்

☆

அந்தத் தோட்டத்திலே அன்று மாலை அதிக நேரம் காத்திருந்தேன். ஆயினும் என் அகத்துள் வாழும் ஆரணங்கு கண்ணம்மாவைக் காணாமல் கவலை மலை ஏற்றப்பட்டேன். உலவினேன், புற்றரையில் புனிதமான, மென்மையான அந்தப் புற்றரையின் பொற்பு அற்புதமாக இருந்தது. அதுவும் என்னுடன் ஏங்கி நின்றது. காரணமென்னவென வினவினேன். "இதுவரைக்கும் கதிரோன் தனது கடும் வெயிலை வீசி, என்னை, என் எழிலை அழித்து வந்தான். இந்த ஏக்கமதை நீக்கி இன்பமதை எய்த எப்போது வருவாள் எந்திழை என்று ஏங்குகிறேன் என்றது புற்கூட்டம். விரைவில் வருவாள், வேட்கை தீர்ப்பாள் என்று சமாதானம் செய்தேன். கொஞ்ச நேரம் கழித்ததும் கொஞ்சி விளையாடின, புற்கள். இந்த இன்பம் ஏது என்றேன். அதோ வந்து விட்டாள் என்றது. திரும்பிப் பார்த்தேன். ஆமாம், புற்கூட்டம் புகன்றது, உண்மைதான். அவள் பாதத்தின பாங்கினைக் காண பழங்கள் மரத்திலிருந்து 'பொத்'தென கீழே விழுகின்றன. குனிந்து ஒன்றை எடுத்து, கொடுத்தாள் என்னிடம், குயில் மொழி.

"அன்பே" என்றேன்.

'மன்னிக்கவும். தாமதம் ஆகிவிட்டது—சூழ்ந்த உலகம் கட்டியிருக்கும் சூழ்ச்சி வேலியைக் கடக்கத்தான் இவ்வளவு தாமதம்-எப்படியோ செப்படி வித்தை செய்து ஓடி வந்து விட்டேன்.

'கண்ணே! இந்தச் சந்திப்பு ஒரு வேளை நமக்குக் கடைசியாக இருக்கலாம்.'

'ஆ......என்ன?'

'அதிர்ச்சியடையாதே! அறுநூறு மைல்களுக்கு அப்பால் சென்று, என் வாழ்க்கையை நான் கழிக்க வேண்டியவனாகி விட்டேன்—உற்றார் என்னை உதவாக்கட்டை என்று திட்டிடுகிறார்.—பெற்றோரோ, பிரியம் காட்டுகிறார்கள்.—பிரியமும், பிரிவும் தேடுக்கப்படுகிறது, உலகினால்.'

'இதோ பார், 50 ரூபாய—இதைக் கொண்டு நான் நாளைக் காலை இவ்விடம் விட்டு புறப்படுகிறேன். பாங்கரசியே! ஏங்காதே!'

'அப்படியே புற்றரையில் அமர்ந்து விட்டாள். நானும் அருகில் அமர்ந்தேன்.'

'ஏன் கவலை? கண்ணே. உடல்களுக்கிடையே அறுநூறு மைல் தூரம் இருக்கலாம்.—ஆனால், உள்ளங்களுக்கிடையே அணு தூரம்கூட இல்லையல்லவா? வருந்தாதே! என்னை வாழ்த்தி அனுப்பு. வருவேன், சில நாட்களில் சிறப்போடு. இங்கு நான் இருந்தாலும், சுயநலப் பாம்புகளால் என் உயிருக்கு ஆபத்துதான்.'

எனது உரைகளைக் கேட்ட அவள் கண்களைத் திறந்தடை என் மனப் புண் ஆறியது. வனப்புவதனச் சோலையில் புன்க

மலர் பூத்தது—பூரித்தது, என் மனம். எழுந்தாள்,—இன்ப முன்றேன். 'அன்பே' என்றாள்—'என்ன' என்றேன். 'சென்று வாருங்கள்' என்றாள்—சிரித்தேன். முடங்கல் அனுப்புங்கள் தடங்கலின்றி என்றாள்.

"கோடிப் பொன் கொடுத்தாலும், குயில் இசையை மறந்து கொஞ்ச நேரம்கூட இருக்காது" என்றேன்.

* * *

'என்னப்பா! ஆனந்தா, ஏது வாய்ப் புலம்புதல் அதிகமாக இருக்கிறது.—மணியைப் பார்—ஏழரை;—சரி, சரி. எழுந்திரு' என்று என்னைத் தட்டி யெழுப்பினான், என் நண்பன் சுந்தரம்.

எதையோ பறி கொடுத்தவன் போல், இருந்தேன் பேசாமல்.

'ஆனந்தா! ஆதவனோடு போட்டி போட்டு எழுந்திருக்க வேண்டும்! தெரிகிறதா' என்றான்.

'ஓகோ! அப்படியா...என்றால் அப்படி முடியாதப்பா...... உன்னால் முடியும்...தூங்கப் போகும்போதும் ஆதவனை முந்தி விடுவாய்—எனக்கு வேண்டாமப்பா, சூரியனிடம் வீரியம்.'

'சரி. அது இருக்கட்டும் 'குயில் இசையை மறக்காது' என்றெல்லாம் புலம்பினாயே! என்ன அது?'

'அதுவா? நான் எழுதிய நாடகம் ஒன்றில் நானே கதாநாயகனாக நடிக்க வேண்டும் என்பது நண்பர்களின் வேண்டுகோள் அந்த வேண்டுகோள் பூர்த்தியாகிறது, விபரீதமான வழியில்.'

'அப்படியா? நான் வருகிறேன்...மாலையில் மறந்து விடாதே—கூட்டத்துக்குத் தலைமை தாங்க வேண்டியதிருக்கிறது.'

'நீ பேச்சாளனாக இருக்கும்போது நான் கூட்டத்துக்குத் தலைமை தாங்கிட மறக்கவே மாட்டேன்.'

'அப்போ! வரட்டுமா?'

'சரி! போயிட்டு வா!' என்று அனுப்பினேன். நண்பன் சென்றதும் பழையபடி சஞ்சலப் பேய் சதிர் ஆடியது. படுக்கையை விட்டு எழுந்தேன். ஒரு மணி நேரம் கழித்து ஹோட்டலுக்குச் சென்று சாப்பிட்டுவிட்டு, அப்படியே வெளியே போய் விட்டேன்.

மாலை மணி, நான்கு இருக்கும். என் வீடு நோக்கி நான் வந்தேன். வாசற்படியேறினேன்—நடையிலே, நடையிலே...... என்ன? அது!

ஒரு குழந்தை...அழுது புரண்டு கொண்டிருக்கிறது. வயது ஆறு மாதம் இருக்கும். ஆனந்தமும் அமைதியும் கலந்து வந்தது. கையில் எடுத்தேன்—கதவைத் திறந்தேன்.

குழந்தை யாருக்கும் சொந்த மற்றது என்று உணர்ந்தேன்—பழரசம் கொடுத்தேன்—அழுகை நின்றது—உறங்கச் செய்தேன—உறங்கியது.

இதற்கு யார் சொந்தக்காரராக இருக்கலாம் என்ற சிந்தனையில் செலவிட்டேன், நேரத்தை. வாசற்படியிலே வந்து நின்றேன். என் வீட்டின் முன்புறம் போக்குவரத்து அதிகம். இரைச்சல், செவியில்; குழப்பம் உள்ளத்தில் ஏதோ ஒரு மாதிரி

யாகக் காணப்பட்டேன். சுருக்கமாகச் சொல்ல வேண்டுமானால் நான் அப்போது ஒரு சூதாடித் தோற்றவன்.

"ஆ......அம்மா"...என்ற ஒரு கோரக் குரல்.

சிந்தை சிதறியது—உடல் பதறியது. வீதியில் செல்லும் ஒருவரிடம் 'என்னய்யா, அது' என்றேன்.

'ஒரு பிச்சைக்காரி, காரில் அகப்பட்டு இறந்து போனாள்' என்று அவர் போய் விட்டார்.

போய்பார்க்கலாம் என்று படிகளில் இறங்கினேன்-குழந்தை, 'அம்ம, அம்ம' என்று அழும் குரல் செவியைத்துளைக்கிறது.

எங்கும் குழவியைப் பார்ப்பதா? இறந்த சவத்தைப் பார்ப்பதா என்ற ஒரு கேள்வி உதித்தது.

வீட்டுக்குள் செல்ல முதற்படியில் காலை வைத்தேன்.

கார் ஒன்று வந்து வாசலில் நின்றது.

'வணக்கம்' என்று சொல்லி நண்பன் சுந்தரம் காரைவிட்டு இறங்கினான். வீட்டினுள் கூட்டிச் சென்றேன். ஒருவித அமைதி நிலவியது.

'என்னப்பா? இன்று முழுவதும் கவலையுடனேயே இருக்கிறாயே, ஏன்' என்றான்.

'ஒன்றுமில்லை' என்றேன்.

'ஆனந்தா! வரும் வழியில் ஒரு பெரிய விபத்து!' என்றான்.

'என்னப்பா?'

'இதோ பார்! தாயும் சேயும் தவழ்ந்து விளையாடும் போட்டோ' என்று என்னிடம் காட்டினான்.

பார்த்தேன் — ஆச்சரியமுற்றேன். 'இந்தக் குழவிதான் சுந்தரம், ஏதப்பா இந்த போட்டோ?'

'வரும் வழியில் காரில் ஒரு பிச்சைக்காரி அடிபட்டாள்— அவளிடமிருந்து ஒரு போட்டோ தவறி விழுந்தது—அதை நம்ப கார் கிளீனர் எடுத்தான்—என்னிடம் கொடுத்தான்—அந்த போட்டோதான் இது' என்றான் சுந்தரம்.

எனக்குப் பயமும் சந்தேகமும் உண்டாயிற்று. 'சுந்தரம், வரப்பா; வா, போய் அந்தச் சவத்தைப் பார்க்கலாம்' என்று புறப் பட்டேன். குழந்தை அழுதது—அதை சுந்தரம் தூக்கிக் கொண்டான். இருவரும் புறப்பட்டோம்.

கூட்டமோ, அதிகம். இடித்துக்கொண்டே உள்ளேசென்றோம்.

அங்கே கிடக்கிறாள்.

யார் அவள்?

இந்த வினாவுக்கு எவருக்கும் விடை தெரியாது—எனக்கு மட்டும்தான் தெரிந்தது.

கண்ணம்மா......கண்ணம்மா என்று கதறினேன். துண்டு போன தலையை கையால் எடுத்தேன்—கண்களில் வைத்தேன்— என் உயிரே! நான் ஏன் இன்னும் இருக்கிறேன் என்று அருகி லிருந்தவரின் கத்தியைப் பிடுங்கி குத்திக் கொள்ள முற்பட்டேன். —குழந்தையின் அழுகுரல் செவியைத் தொட்டது—கத்தி நழுவி விழுந்தது.

புலவர் நான்மணி மாலை

கே. ஆர். வைத்தியலிங்கம்

★

(சென்ற இதழின் தொடர்ச்சி.)

நேரிசை வெண்பா

வீழ்ச்சித் துயர்போக்க வென்றிக் கவிமுரசால்
பாழ்ங்குடியைக் காத்திட்ட பாரதியே!—தாழ்ச்சியிலா
நின்கவியைக் கண்டு நெடுமூச் செறிந்தாண்ட
அன்னியர் போர்ந்திட்டார் அறி. 21

கட்டளைக் கலித்துறை

திட்டும் வசவும் கவிதையில் யாண்டும் நுழைதலின்றிக்
கொட்டும் மலரெனப் பாப்பல கொட்டுமெந் தூயமணி
கொட்டும் முரசினைத் திக்கெட்டுங் கேட்டு அறிஞருள
மட்டுமே யன்றி யனைவருங் கேட்டு மகிழ்ந்தனரே. 22

அறுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

கேட்டுள மகிழ்ந்தார் தரணிமிசைக்
கீத மன்ன கவிதைதனில்
நாட்டில் பாரதி தனக்குப்பின்
நலமார் தேசியப் பண்ணெல்லாம்
தேட்ட மிக்க கவிதையினால்
செந்தமிழ் மாந்தர்க் களித்திட்டாய்
வேட்கை கொண்டார் சுதந்திரத்தில்
வியன்மா ஞாலம் வியப்புறவே! 23

நேரிசை யாசிரியப்பா

வியந்தனர் சஞ்சீவி மலையின் சாரல்
மயக்கம் போக்கும் மருந்தெனக் கண்டு
தமிழகம் போற்றும் தக்கோர் நூலெலாம்
அமிழ்தெனச் சாற்றும் அருந்தமிழ்க் கவியெலாம்
புகழ்ச்சியு மிகழ்ச்சியு மின்றி
மகிழ்வுடன் ஆய்கிறார் மாத்தமி ழோரே! 24

நேரிசை வெண்பா

மாத்தமிழ் தன்னால் வருங்கால பாரதத்தை
பூத்தகவி மூலம் புகன்றிட்டான்—ஏத்தும்
சுதந்திரத்தின் பெற்றியெலாம் செப்பிநின்றான் பாரில்
புதுமைக் கவிகள் புனைந்து. 25

கட்டளைக் கலித்துறை

கவிமலர்க் காவில் நுழைந்தன்பர்க் கள்ளைப் பருகியதால்
புவிமலர் நாட்டம் மறந்திட்டார் போனக மும்மறந்தார்
செவிமலர் இன்பம் தருகின்ற ஈர்தமிழ் நேசிகனின்
கவிமலர் நாற்றம் கடல்கடல் தாண்டியும் வீசுதம்மே! 26

எழுசீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

வீசு கின்ற புகழ்பெ ருக்கும் வெற்றி மிக்க பாரதம்
பேசு கின்ற காந்தி யாரின் பெருமை மிக்க சரிதம்
நேசி யக்கவி ராம லிங்கம் தனக்கு மாண்பு தந்தது
தேசக் கவியோ காந்திக் கவியோ செப்ப வேண்டு(ம்) மாந்தரே? 27

நேரிசை யாசிரியப்பா

மாந்த ரியல்பை மாக்கவி மூலம்
தே(ர்)ந்த கவியால் செப்பிடும் புலவ!
கள்ளென வினிக்கும் கனித்தமிழ் எழுத்தினைத்
தள்ளனத் தள்ளிக் கொள்வனக் கொண்டு
கலக்கமில் இலக்கணக் கன்னல் சாற்றினால்
துலக்க முடனே சீரசை யடிதொடை
என்னும் வகையால் கூட்டியும் பிரித்தும்
மன்னிய யாப்பெனும் மாத்தமிழ்க் கயிற்றால்
எளிதில் கட்டிடும் இனிய உருவகத்(து)
எளிதில் இயற்கை யெனுமுயிர் அளித்து
பலர்புகழ் அணிகளைப் பண்புடன் பூட்டிடும்
நலங்கிளர் ஓவியம் தன்னை நோக்கிடில்
மையல் யாழினை வரிவண் டிசைப்ப!
குயிலது பாட மயில்வந் தாடிடும்,
அயில்வேல் வேலவர் அம்பது மானின்
உயிர்தனைப் போக்கி ஓடுதல் போல
கயல்விழி மாதரின் கண்ணம்பு பாய்தலால்
உயிரினைக் கோடா தானினை யெரித்திடும்
சில்லெனப் பூத்தக் கள்மலர்த் தொடையல்
கல்லென நிமிர்ந்த மார்பிடைத் துலங்க
வல்லிடை நுடங்க பெரும்பரம் தாங்கி
மெல்லிதழ் விரிய வெண்முத் திலங்கக்
கொள்ளை மாதர் வனப்பிடை வீழ்ந்து
தெள்ளு தமிழின் தேறலில் திளைத்து
கிடக்கும் வீரத் தோளுடை மாந்தரும்;
விடங்கொள்,
காதல் வளர்ந்தும் காசு பணத்தால்
மோதல் இன்றியும் பெற்றவர் பகைமையால்
நீது வளா செம்மைக் காதலர்
சாதல் முத்தம் தந்திடும் காட்சிகள்

பலவுண் டின்னுமெத் தனையோ?
இலகும் புரட்சி செந்தமிழ்க் கவியிலே! 28

நேரிசை வெண்பா

செந்தமிழ் நாடென்னும் தீஞ்சுவைப் பாடலினால்
அந்தமில் இன்பத்தே யாழ்த்தினான்—மந்திரமோ
வென்ன மயங்கிநின்றார் வண்டமிழர் பாரதியின்
இன்னமுதம் உண்டு இனிது. 29

கட்டளைக் கலித்துறை

உண்ணத் தெவிட்டா துளமும் உயிரும் இனிக்குநல்ல
பண்ணில் இசையும் பொருளும் செறிந்திட வைத்தியற்கை
மண்ணும் மரமுடன் வானின் நிலவுமீ னின்பமெல்லாம்
விண்ணும் வியக்க இயற்றும் கவிமணிக் கார்நிகரே! 30

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

நிகரில்லா தேசியத்தில் பற்று கொண்டு
நீணிலத்தில் வாழ்நாளெல் லாங்க ழித்தே
மகவில்லா மாதேர்ராண் மகவு பெற்ற
மகிழ்ச்சியின்பம் தந்திட்டான் கவிதை மூலம்
செகமெல்லாம் புகழ்பெற்ற தமிழ்நாட் டார்கள்
திறமற்று செயலற்று தியங்கும் போழ்தில்
இகல்வெல்லும் கவிபலவும் யாத்துத் தந்தான்
இசைபெற்ற நாமக்கல் கவிஞ னம்மா! 31

நேரிசை யாசிரியப்பா

கவிதை வனம்பு குந்தால் வீரம்
புவிமிசைக் காதல் இயற்கை யழகுடன்
செப்பும் சிறுசொடு செவ்வாய்க் கிளியும்
ஒப்பில் புறவும் உயர்ந்த மலைகளும்
இளவே னிலின்ப முதுவே னிலோடு
இளங்கா தலர்தம் களவிய லின்பமும்
இவையெலாம் புதுவைப் புலவன்
கொவ்வைக் கவிதையில் குதித்து வருமே! 32

நேரிசை வெண்பா

குதித்துவரும் பள்ளுதனில் கொட்டிவிட்டான் இன்பம்
சுதந்திரத்தின் பெறறிதனைச் சேர்த்து—மதித்திடவே
'ஆடுவோமே பள்ளு'என்று ஆனந்த மேலீட்டால்
பாடுவோம் எனறூர்த்துவன பார்.

கட்டளைக் கலித்துறை

பார்தரும் இன்பம் பருகிட வைத்துக் கவிதைதனில்
கார்தரும் இன்பங் கலந்திட் டுலகினை யாட்டுகின்றப்

பேர்தரும் இன்பங் கவிமணி வள்ளலாந் தேசிகந்நாய்
மார்தரும் இன்பச் சுவைக்கெலாந் தீஞ்சுவை யின்னமுதே! 33

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

இன்னமுதம் உண்டவரார்? உலக மீதில்
இவ்வுலகில் உண்டென்னில் இறவா தார்யார்?
என்னபல சொற்ருடால் வாய டைக்கும்
இடக்கருக்கும் மடையருக்கும் பொருள்வி ளங்கா
மன்னுகின்ற புகழ்பெற்ருர் இறவா தோரே
மாநிலத்தில் நாமக்கல் புலவ னின்று
கன்னல்மொழி செந்தமிழால் பாச மைத்து
காசினியில் இறவாத புகழும் பெற்ருன். 35

நேரிசை யாசிரியப்பா

புகழும் விரும்பான் பொன்னும் விரும்பான்
மகிழ்வும் கொள்ளான் வாட்டமுங் கொள்ளான்
வெட்டிப் பேச்சினை விரும்பா தவன்காண்!
வெட்டிப் பேசும் வித்தகன் கண்டீர்!
'எடடா கொலைவா ளினை!'யெனில் புல்லர்
அடடா என்றே யஞ்சி மாய்குவர்
வீரப் பார்வையில் வேற்றவர் அஞ்சுவர்
வீரப் பேச்சிடை வெற்றிமார் தட்டும்
சமுதா யக்கொள் கையின் பெற்றியோ(டு)
அமுதெனும் கற்பொது உடைமை மிளிரும்
கொலையுங் கோறலும் குவலய மிசையே
நிலையைக் கலக்கும் நிலைமை மாறி
பாரினில் சமத்துவங் காண்டலே
பாரதி தாசன் பண்களின் பண்பே! 36

நேரிசை வெண்பா

பண்ணின்பந் துய்த்திடப் பாரில் பழக்குவித்துப்
பெண்ணின் விடுதலையைப் போற்றினன்—மண்ணின்மேல்
அச்சமில்லை என்ற அரும்புலவன் பாரதிக்கு
இச்சகத்தில் நேரில்லை யேற்று. 37

கட்டளைக் கலித்துறை

ஏற்றுங் கிழவியாம் ஔவைப் பிராட்டி யமுதுடன்
போற்றுந் திருவள் ளுவனொடு கம்பன் பொருளினிமை
போற்றும் சிலம்புடன பாட்டுக் கொருவநம் பாரதியென்(று)
ஏற்றிப் புகழ்ந்தக் கவிமணிக் கீடார் உலகினிடையே! 38

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

உலகதனில் எத்தனையோ கவிஞ ருண்டு
உவகைதருங் கவிபலவும் புனைவோ ருண்டு

இலகமன்ன நாட்டினிலே பற்று இன்றி
செஞ்சோற்றுக் கேயுழல்வா ருண்டு கேளீர்!
அலகிடையே சென்னைநகர் தமிழ்நி லத்து
ஆஸ்தானக் கவிஞனெனப் பெயரார் பெற்ருர்?
இலகுகின்ற செந்தமிழில் பயிற்சி யுள்ள
எவருமேயிக் கவியின்பம் நுகர லாமே! 39

நேரிசை யாசிரியப்பா

நுகரவும் சுவைக்கவும் நின்கவி யன்றி
பகரப் படுங்கவி பாரிடை யுளதோ?
மகர யாழும் செவ்வழிப் பண்ணும்
அகர முதலாம் அருங்கவி யினபத்
துடனிசை யமுது பாண்டியன் பரிசு
நடக்கும் குடும்ப விளக்குடன் நண்ணிய
கவியுடன் காவியம் காசினி மீது
செவியொடு புலனும் தெள்ளமு துண்ட
பைந்தமிழ் இன்பம் பாரதி தாசன்
செந்தமிழ்க் கவியில் சிந்திடும்
புரட்சி செம்மலர் பூத்துச் சொரியுமே! 40

முற்றிற்று.

ஆரணி-குப்புசாமி முதலியார் எழுதிய

கற்பக சுந்தரி

அல்லது

மூன்று கறைகளின் மர்மம்

இதில் பொதுவாய் ஆண்பாலார் பெண்பாலார் யாவர்க்கும் பல நற்புத்திகளைப் புகட்டத்தக்க விஷயங்களே அடங்கியிருக்கின்றன. நம் சகோதர சகோதரிகள் அவசியம் படிக்கத்தக்க கதை.

இரண்டு பாகங்கள் அடங்கியது

இதன் விலை ரூபா 3. (தபாற் செலவு வேறு.)

ஆனந்தபோதினி ஆபீஸ்,
தபால் பெட்டி நெ. 167, சென்னை-1.

ஆதாரக் கல்வித் திட்டம்

எஸ். எம். நாதன்

☆

மக்கள் அரசாட்சியில் நன்னம்பிக்கை யுள்ள எந்த அர சாங்கத்தினுடைய வளர்ச்சியும், வெற்றியும், கல்வி அறிவை சம்பாதித்துள்ள மக்களைப் பொறுத் திருக்கின்றன. ஆகையால் தான் அரசியல் புனர் நிர்மாணத் திட்டத்தில் கல்வி முக்கிய இடம் பெற்று இருக்கிறது. கல்வி மனித வாழ்க்கை முழுவதும் நடை பெறுவதாயினும் இளமைக் கல்வியே நாட்டின் அடித்தளமாகும். இதனாலன்றோ ''இளமையிற் கல்'' என்று நம் மூதாட்டி பாடி அருளினார். எனவே அதில் தானே நாட்டு மக்களில் பெரும் பகுதியைப் பாதிக்கிற ஆரம்பக் கல்விக்கே முதலிடம் அளிக்கப்படல் வேண்டும். தற்போது நிலவிவருகிற கல்வி முறையைத் தானே இலவசமும் கட்டாயமும் ஆக்கினால் போதாதோ என்றதோர் வினா இதுபோது எழலாம். அது நிச் சயமாகவும் போதாதென்றே பதிலளிக்க வேண்டியதாக இருக் கிறது. தற்போதைய கல்வி முறையை முற்றிலும் மாற்றி அமைக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. உள நூல்படிப் பார்த்தாலும் கூட உண்மையிலேயே நாம் நமது சின்னஞ் சிறார் களுக்கு நேரடியாகச் செய்கிற ஒரு பெரிய குற்றமும் துரோகமும் என்றே இக் கல்வி முறையை கருத வேண்டிய திருக்கிறது. எந்தமுறையில் பார்த்தாலும் சுதந்திர இந்தியாவுக்குப் பொருத்த மான ஒரு கல்வி முறையில்லை இது. பாரதப் பண்பாட்டிற்குப் பொருத்தமானதும், நாம் விரும்புகிற பிற்காலச் சமுதாயத்துக்கு உதவக் கூடியதும், இந்தியாவின் பொருளாதார நிலைமைக்குட் பட்டதுமான ஓர் கல்வி முறைதான் நமக்குத் தேவையானது. அக்கல்வி எது? அது தான் அண்ணல் காந்தியடிகள்—நமது தேச பிதா அவரது மக்களாகிய நமக்கு அளித்த ஆதாரக் கல்வி.

''கல்வி என்ற சொல் மூலம் நான் புரிந்து கொள்ளுவது என்ன வெனில், ஒரு பிரஜையின் உடலும், உள்ளமும் ஆன்மா வும் ஒருங்கே பண்படுத்தச் செய்வது என்பதே. வெறும் எழுத் துக்களை மட்டும் கற்பது கல்வியாகாது. ஆகையினால் நான் ஒரு குழந்தையின் கல்வியை ஆரம்பிக்கும் போது அவனை உபயோக கரமான ஏதாவது ஒரு கைத்தொழிலில் பழகச் செய்வதின் மூல மாகவே, பயிற்சிக் காலத்தில் அவன் உற்பத்தி செய்யக் கூடியவ னாக இருந்து கல்வியைக் கற்க வேண்டும். இம்முறையில் கல்விக் கூடங்களில் உற்பத்தி செய்யப் படுகின்ற பொருளை அரசாங்கம் எடுத்துக் கொண்டால், ஒவ்வொரு கல்விக் கூடமும் தன்செல வைக் கட்டிக் கொள்ளக் கூடியதாக இருக்கும்.''

1937-ஆம் ஆண்டு ஜுலைமாதம் அண்ணல் காந்தி அடிகள் மேலே கண்டவாறு ''ஹரிஜன்'' பத்திரிகையில் எழுதினார். சிந்

தனைக்குரிய இவ்வாக்கியங்கள் கல்வி நிபுணர்களிடையில் பெரும் பரபரப்பை உண்டுபண்ணியது. காரசாரமான விவாதங்கள் நடைபெற்றன, இதை நடைமுறையில் கொண்டுவர முடியாது என்று அனேகர் ஐயுற்றனர். அனேகர் எள்ளி நகையாடினர். என்றாலும் குன்றாத மன வலிமையுடைய காந்தியடிகள் முன் சென்றார். 1937 ஆம் வருடம் அக்டோபர் மாதம் அவருடைய தலைமையில் வார்தாவில் வைத்து இந்தப் புதுக் கல்வி முறை யைக் குறித்த யோசனைகளை ஆராய்வதற்கு கல்வி அதிகாரி களின் மாநாடு ஒன்று நடத்தப்பட்டது. பலவிதச் சர்ச்சைகளுக் குப்பின் பின்வரும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவையாவன:—

(1) அகில தேசிய அடிப்படையில் ஏழு வருட கால வரம்புள்ள இலவசக் கட்டாய ஆரம்பக் கல்வியை அமல் நடத்த வேண்டும்.

(2) அக்கல்வியை அவ்வவ் வட்டார தாய் மொழி யில் கற்பிக்க வேண்டும்.

(3) அத்தகைய கல்வி முறையில் குறிப்பிட்ட காலம் முழுவதிலும் கல்வி, பலனளிக்கக் கூடிய ஏதா வது கைத்தொழிலை நடு நாயகமாகக் கொண்டிருக்க வேண்டும். மற்றெல்லா பயிற்சிகளும் மாணவ மாணவி களின் சூழ்நிலைகளுக் கேற்ப தேர்ந்தெடுக்கப் படுவதும் நடு நாயகமாக இருப்பது மான கைத் தொழிலுடன் கூடுமானவரை சம்பந்தப் பட்டதாக இருக்க வேண்டும் என்றும் காந்தியடிகள் கூறிய யோசனையை மகாநாடு ஒப்புக் கொள்ளுகிறது.

(4) இந்தக் கல்வி முறையின் மூலம் காலக்கிரமத் தில் ஆசிரியர்களின் ஊதியத்தை வகிப்பது சாத்திய மாகு மென்று மகாநாடு எதிர்பார்க்கிறது.

ஒரு பாடத் திட்டத்தை தயாரிக்கக் கல்வி நிபுணர்களை அங் கத்தினர்களாகக் கொண்ட ஒரு கமிற்றி டாக்டர் ஸாகிர் உசேன் என்பவரின் தலைமையில் நியமிக்கப் பட்டது. 1938 ஆம் வருடம் மார்ச் மாதம் வெளியான இக்கமிற்றின் அறிக்கையி லிருந்து வார்தா கல்விமுறையைப் பற்றிய (வார்தாவில் வைத்து தோற்று வித்தமையால் இக் கல்விக்கு வார்தா கல்வி என்ற பெயருமுண்டு) அறிவு நமக்கு கிடைத் திருக்கிறது. மகாத்மா காந்தியடிகள் இந்த அறிக்கையை ஏற்றுக் கொண்டார். ஹரிபுர காங்கிரஸ் கமிட்டி இந்த நவீன தேசீய கல்வி முறையின் தத்து வங்களை அங்கீகரித்து இதை அமல் நடத்த ஒரு அகில இந்திய கழகத்தை நியமிக்கத் தீர்மானித்தது. 1958 ஆம் வருடம் ஏப்பிரல் மாதம் அகில இந்திய ஆதாரக் கல்விக் கழகம் (ஹிந் துஸ்தானி தலிமிசங்) என்ற பெயரில் ஒரு கழகம் சேவா கிராமத் தில் ஏற்படுத்தப்பட்டது. அன்று முதல் இந்தச் சங்கத்தின் வெற்றிகரமான நடவடிக்கைகள் ஆதாரக் கல்வி முறையின்

பிரயோஜனத்தைப் பற்றி சந்தேகத்துக் கிடமின்றி தெளிவுறுத்துகின்றன. எந்த விதமான சந்தேகங்களுக்கும் இன்றும் அங்கு எழுதி கேட்டால் தகுதியான பதில் கிடைக்கும்.

அக்காலத்திலேயே மத்திய பிரதேசம், உத்தரப் பிரதேசம், பீகார், ஒரிஸ்ஸா, அஸ்ஸாம், பம்பாய், மதராஸ் ஆகிய பிரதேசங்கள் இந்தக் கல்வி முறையை சோதனை செய்து பார்க்க ஆரம்பித்தன. ஆனால் 1939 ஆம் வருடம் அக்டோபம் மாதம் காங்கிரஸ் மந்திரிசபைகள் ராஜினாமா செய்ததுடன் பீகாரும், பம்பாயும் தவிர, மற்றெல்லா இராஜ்ஜியங்களும் இத்திட்டத்தை கை விட்டன.

ஆரம்ப காலத்திலிருந்தே மத்திய சர்க்காரும் இந்தத் திட்டத்தில் கவனம் செலுத்தி வந்தது. 1938 ஆம் வருடம் ஜனவரி மாதத்தில் கூடின மத்திய கல்வி ஆலோசனைக் கழகம், ஸ்ரீ பி. ஜி. கெரின் தலைமையில் இத்திட்டத்தைப் பற்றி ஆலோசிக்க ஒரு கமிற்றியை நியமித்தது. டாக்டர் ஸாக்கிர் உசேனும் இக் கமிற்றியில் அங்கத்தினரா யிருந்தார். கைத் தொழில் மூலம் கல்வி என்ற தத்துவததை இக் கமிற்றி அங்கீகரித்து பின்வரும் தீர்மானங்களை நிறைவேற்றியது.

(1) ஆதாரக் கல்வித் திட்டத்தை முதன் முதல் கிராமங்களிலே புகுத்த வேண்டும்.

(2) கட்டாயக் கல்வி முறைக்குள்ள வயது வரம்பு 6 முதல் 14 வரையாயிருக்க வேண்டும். ஆனால் ஆதாரக் கல்வி பள்ளிக் கூடங்களில் ஐந்து வயது குழந்தைகளையும் அனுமதிக்கலாம்.

(3) ஐந்தாவது வகுப்புக்குப் பின், அல்லது 11 வயது பூர்த்தியாகும் போது! மாணவ, மாணவிகளை ஆதாரக் கல்வி ஸ்தாபனங்களி லிருந்து மற்ற பள்ளிக் கூடங்களுக்கு மாற்றுவதை அனுமதிக்க வேண்டும்.

(4) குழந்தைகளின் தாய் மொழியில் கல்வி கற்பிக்க வேண்டும்.

(5) இந்தியாவிற்கு ஒரு பொது மொழி விரும்பத் தக்கதே. இது ஹிந்துஸ்தானியா யிருக்க வேண்டும்.

(6) வெளியே யிருந்து பரீட்சை நடத்த வேண்டிய தில்லை. ஆதாரக் கல்வி காலம் முடிவடையும் போது பள்ளிக் கூடத்தில் தானே பரீட்சை நடத்தி ஒரு நற் சாட்சிப் பத்திரம் அளிக்க வேண்டும்.

அகில இந்திய கல்விக் கழகம் இந்த அறிக்கையை அங்கீகரித்ததுடன், ஆதாரக் கல்வியையும் உயர்தரக் கல்வியையும் எவ்விதம் இணைக்கலாம் என்றும், அதனால் ஏற்படுகிற செலவுகள் முதலிய பிரச்னைகளைப் பற்றியும் தீர்மானிக்க மேற்கூறியவரின் தலைமையில் வேறொரு கமிற்றியைக் கூட நியமித்து 6 முதல் 14 வயது வரையுமுள்ள எட்டு வருடகால படிப்பில் முதல்

ஐந்து வருடங்களும் ஆரம்ப கட்டம் என்றும், பின்னுள்ள மூன்று வருடங்களும் உயர்தரக் கட்ட மென்றும் இரண்டு பிரிவுகளாகப் புதிய கமிற்றி வகுத்தது. ஆரம்பக்கட்டம் கழிந்தால், ஆரம்பப் பாடசாலைக்கு மேலுள்ள மற்ற பள்ளிக்கூடங்களில் விருப்பப் பட்டால் சேரலாமென்றும் கமிற்றி அபிப்பிராயப் பட்டது. 1940 மே மாதம் கூடின கூட்டம் இந்த அபிப்பிராயங்களை அங்கீகரித்தது. இந்த விதத்தில் வார்தா கல்வி முறையிலுள்ள தன்னைக் கட்டிக் கொள்ளும் தத்துவம் தவிர மற்றெல்லாவற்றையும் மத்திய அரசாங்கமும் மற்ற சமஸ்தான அரசாங்கங்ளும் அங்கீகரித்தன. ஐந்துவருட கல்வித் திட்டத்தில் ஆதாரக் கல்வியும் உட்படுத்தப் பட்டது. 1946—47 இல் அதை அமல் நடத்துவது ஆரம்பிக்கப் பட்டது. பீகார், பம்பாய், சென்னை முதலான பிராந்தியங்களில் இந்தக் கல்வி முறை இப்போது அதிக முன்னேற்றம் அடைந்திருக்கிறது. திரு—கொச்சி அரசாங்கம் தற்போது 12 ஆதார ஆசிரியப் பயிற்சிப் பள்ளிகளையும் 64 ஆதார ஆரம்பப் பள்ளிகளையும் திறந்திருக்கிறது. ஆரம்ப கட்டமாதலின் திட்டம் வெற்றியாக நடக்கிறது என்று சொல்ல முடியாது.

வார்தாவில் வைத்து நடை பெற்ற கல்வி கமிற்றிக் கூட்டத்தில் நிறைவேறின நான்கு தீர்மானங்களும் இந்த நவீன கல்வி முறையின் தத்துவங்களை எடுத்துக் காட்டுகின்றன. இலவசக் கட்டாயக் கல்வியை விஸ்தரிக்க வேண்டும், தாய் மொழியில் கல்வியைக் கற்பிக்க வேண்டும் என்ற முதல் இரு திட்டங்களும் எல்லோராலும் சம்மதிக்கப் படுகின்றன. ஒரு வேளை கட்டாயக் கல்வி வயது வரம்பைப்பற்றி அபிப்பிராய பேதம் உண்டாகலாம். 6 முதல் 14 வயது வரையுள்ள எட்டு வருடங்களையும் தேர்ந்தெடுக்கத் தகுந்த காரணங்கள் உண்டு. உத்தம பிரஜைகளாக வளர்ந்து வரத்தக்கதாக குழந்தைகளுக்கு சமுதாயத்துடன் சம்பந்தப்பட்ட விஷயங்களில் பயிற்சி கிடைப்பதற்கும், மீண்டும் எழுத்தறியாத நிலைமைக்குப் போவதைத் தடுக்கக் கூடியவிதத்தில் அவர்களின் இலக்கியம் சம்பந்தமான பயிற்சி தேவையான அளவு பரிபூரண மாவதற்கும், வாழ்க்கைத் தொழிலாக எடுத்துக் கொள்ளுவதாயிருந்தால் பிற்காலத்தில் வெற்றிகரமாக நடவடிக்கைக்குக் கொண்டு வரத் தக்க வண்ணம் ஆதாரத் தொழிலில் அவர்களுக்குப் போதுமான பயிற்சி கிடைப்பதற்கும் இது அவசியமா யிருக்கிறது. இந்தப் பயிற்சி மனோதத்தவ காரணங்களால் மேற் கூறப்பட்ட கட்டத்துக்கு முன் மிகக் கடினமாகும்.

ஆதாரக் கல்வி முறையில் ஏதாவது பொருள் உற்பத்தி செய்யக்கூடிய தொழில் மூலம் கல்வி கற்றுக் கொடுக்கப்படுகிறது இந்தத் தொழில் ஏதாவது கைத்தொழிலாகவும், குழந்தைகளின் சமுதாய, சொந்த சூழ்நிலைகளுக்கு ஏற்றதாகவுமிருக்கும். இன்றைய கல்வி வெறும் புத்தகக் கல்வியாயிருக்கும்

போது, நவீன கல்விமுறை கைத் தொழிலை ஆதாரமாகக் கொண்டு நடத்தப்படும்.

இன்று நாம் அறிவைக் கோரி ஊட்டுகிறோம். பிரயோஜனகரமான விஷயங்களுக்கும் புத்திக்கும் எவ்விதத் தொடர்புமில்லை. ஆகையினால் குழந்தைகளை பிறர் உதவியை நாடாமல் இருக்கும் பழக்கத்தில் வளரச் செய்வதோ, அவர்களில் மனவலிமையும், திட நம்பிக்கையும், ஏற்படுத்துவதோ தற்கால கல்விமுறையில் சாத்தியமாகாது. ஆனால் ஆதாரக் கல்வி முறைப்படிப்போவெனில், சிறுவர் சிறுமியர்களை கைத்தொழில் மூலம் கல்வி கற்கச் செய்கின்றது. அது வாழ்க்கைக்கு வேண்டியதும் வாழ்க்கை மூலமாகக் கற்றக் கொள்கிறதுமான கல்வி.

உதாரணமாக, பள்ளிக் கூடங்களில் கிருஷித் தோட்டங்களில் வேலை செய்வதுடன், காய்கறி சாஸ்திரம், மண்ணின் இயற்கைத் தன்மை, உரவகைகள் முதலான விஷயங்களைப் பிறர் உதவியின்றி தாமாகவே படிக்கின்றனர். தக்ளியில் நூற்கும் நூலின் நீளம், நிறை நம்பர் முதலியவைகளைப் பற்றிய கணக்கெழுதுவதிலிருந்து கணக்கெழுதும் சக்தியும் கிடைக்கிறது. அந்த கணக்குப் பாடங்கள் ஏ-யும், பீ-யும், ஸி-யும், சேர்ந்து நடத்துகிற கூட்டு வியாபாரக் கணக்குப்போல் அர்த்தமற்றவைகளாகச் சிறுவர்களுக்குத் தோன்றாது. அவைகள் வாழ்க்கையுடன் தொடர்புள்ளவை.

இவ்விதக் கல்வி மக்கள் பிரயோஜனமானவர்களாக வளர்ந்து வர உதவி புரிகிறது.

பாட விஷயங்களைத் தொழிலுடன் சேர்த்துக் கற்பது என்பது தான் இந்தத் திட்டத்தின்படி கல்வி கற்கும் முறை. இவ்விதம் இரண்டையும் இணைத்துப் படிப்பதில், திறமையுடன் உழைத்தால்தான் இதன் வெற்றி நிலையானதாயிருக்கும். இவ்வித இணைப்பு கல்விச் சரித்திரத்தில் புதியதல்ல. ஹெர்பர்ட் முதலான மகான்கள் இம்முறையால் ஏற்படும் நன்மைகளை எடுத்துக் காட்டியிருக்கின்றனர். சரித்திரம், பூமிநூல், விஞ்ஞானம், மொழி ஆகிய விஷயங்களெல்லாவற்றையுமே தொழிலுடன் சேர்த்துக் கற்பிக்க முடியும். ஆசிரியரின் திறமைக்குத் தக்கதாக அதன் வெற்றியுமிருக்கும். எந்தெந்த சந்தர்ப்பங்களில் எந்தெந்த விஷயங்களை இணைத்துக் கற்பிக்க முடியுமென்று தீர்மானிக்க வேண்டியது ஆசிரியர்களாகும். இப்போதுள்ள கல்வி முறையில் கிடைப்பதைவிட அதிகச் சுதந்திரம் இந்தப் புதிய கல்வி முறையில் ஆசிரியர்களுக்குக் கிடைக்கிறது; சுதந்திரத்துடன் ஆசிரியர்களின் பொறுப்பும் அதிகரிக்கிறது. இன்று நிலவியிருக்கும் முறைப்படி ஆசிரியர்கள் வரையறுக்கப்பட்ட ஓர் பாடத்திட்டத்தை ஓர் குறிப்பிட்ட சமயத்தில் முடிக்க வேண்டும். வருடக்கடைசி பரீட்சைதான் அதன் லட்சியம். ஆனால் நவீன திட்டத்தில், ஓர் பாட விஷயத்திட்டம் இருந்தாலும், அது ஓர் வழிகாட்டியாக மட்டுமே இருக்கும். ஒவ்வொரு குழந்தையின் திறமை, குணம், சூழ்நிலைகள் முதலானவைகளை அறிந்து

கொள்ளவும், அதற்கு ஏற்ற முறையில் பாடம் கற்பிக்கவும் ஆசிரியர்களுக்குச் சுதந்திரமும், வசதியும் கிடைக்கிறது. பாடங்களைக் கற்பிக்கும் முறையில் ஆசிரியரின் நிலை நிச்சயமாக உயருகிறது.

மிக அதிகம் விவாதங்களும், எதிர்ப்பும் உண்டாகக் காரணமாயிருந்தது தன்னைக் கட்டிக் கொள்ளும் தத்துவம். படிக்கிறதோடு கூடவே மாணவ மாணவிகள் ஏதாவது பொருள் உற்பத்தி செய்ய வேண்டும் என்பதல்லவா இதன் பிரத்தியேகத் தன்மை. ஆனால் மாணாக்கர்களின் இந்த நடவடிக்கைகளிலிருந்து கிடைக்கிற லாபத்தைக் கொண்டு ஒரு பாடசாலையை நடத்துவது சாத்தியமாகுமா என்பதுதான் பிரச்னை. ஆரம்ப வகுப்புக்களில் மிக அதிகம் நஷ்டம் ஏற்படுமென்றுதான் காணப்படுகிறது. அதே சமயத்தில் மேல் வகுப்புக்களில் வருமானமும் உண்டாகும். ஒரு பூரண ஆதாரக் கல்விப் பள்ளிக்கூடத்திலிருந்து கிடைக்கிற மொத்த வருமானத்தைக் கொண்டு அந்தப் பள்ளிக்கூடத்தை நடத்தலாமென்று காந்தியடிகள் கூறுகிறார். என்றாலும், இந்த தத்துவம் முற்றிலும் அங்கீகரிக்கப்படவில்லை. கல்விச் செலவில் ஒரு பகுதியாவது பாடசாலைகளிலிருந்து தானே கிடைக்க வேண்டுமென்பது தற்கால பொருளாதார நெருக்கடியில் வரவேற்கத் தகுந்ததாயிருக்கும். ஆதாரக் கல்வி முறையில் தொழில் மூலமாகத்தான் ஆசிரியரும் பாடம் சொல்லிக் கொடுக்கிறார். மாணவ மாணவிகளுக்குத் தங்களுடைய வேலைகளில் உற்சாகமும், கவனமும் உண்டானால் மட்டுந்தான் போதனை வெற்றிகரமாகும் ஆகையினால் மாணவ, மாணவிகளை சம்பந்தப்பட்ட வரையில் தொழில் ஓர் உத்தேசத்தோடு கூட கற்பிக்கப்பட வேண்டும். உத்தேசத்துடனுள்ள எந்த தொழிலும், உற்பத்தி செய்யக் கூடிய தொழிலாயிருக்குமல்லவா? இதில் ஓர் விஷயம் என்னவெனில் பாடசாலைகளில் உற்பத்தி செய்யப்படுகிற பொருட்களை சர்க்கார்தானே வாங்கிக் கொள்ள வேண்டும்.

ஆதாரக் கைத்தொழிலைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தில் சிலகாரியங்களை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். முதலாவது கைத்தொழில் கல்விக்கு பிரயோஜனகரமான ஒன்றாக இருக்க வேண்டும். குழந்தைகளின் சூழ்நிலைகளுடன் அதிக சம்பந்தமுள்ள தொழிலாயிருத்தல் நன்று. குழந்தைகளின் சுபாவத்தையும் உருவாக்குவது கூட உத்தேசிக்கப் படுமானால் ஆதர்ச சுத்தியுள்ள தொழிலைத் தேர்ந்தெடுக்க வேண்டும். நாம் பயிற்சி பெறுகிற தொழில் மனிதனுடைய முக்கியமான தேவைகளை நிறைவேற்றக் கூடியதாயிருக்க வேண்டும். தற்போதைய பொருளாதார நிலையில் நூல் நூற்பதையும், கிருஷியையும் ஆதாரத் தொழில்களாக ஏற்றுக் கொள்ளுவதில் ஒரு தடையுமிருக்காது என்று தோன்றுகிறது. சில வேளைகளில் பணம், இடம் முதலானவைகள் பற்றிய கஷ்டங்களை எடுத்துக் காட்டலாம். மற்றெல்லா திட்டங்களையும் நிறுத்திவைத்துக் கல்விச் செல்வத்

கானமும் கடக்குமோ.

அருளரசன்

★

(அறுசீர்)

அரும்பிற்றுக் கொங்கை தானும்! அவிரொளி பூத்த பற்கள்!
சுரும்பிமிர் கூந்தல் கொண்டாய்! சரிசடை புனையப் பெற்றாய்!
திரும்பிய திசையெங் கெங்கும் தேன்முகங் காட்டு கின்றாய்!
கரும்பே! என் செல்வமே! நீ கண்ணிடை மறைந்த தென்னே! 1

பேதையும் இல்லை! மேதை பிரிந்தனை எம்மை விட்டே!
தாதையும் நீ நடப்பின் தணிப்பெருந் துயரங் கொள்ளும்!
ஆதொழு கவர்ந்த கள்வர் அத்தத்திற் போற டுங்கால்
தீதுறு நிகழ்ச்சி நின்னைத் திடுக்குறச் செய்யு மன்றோ? 2

இன்னிழ லின்றி யாங்கும் எரிதழற் கொடுமை யாட்சி
துன்னிட மரங்கள் வாடித் துயருள மாழ்கச், சற்றும்
இன்னலைத் தாங்கா தோர்பால் இளம்பிடி பயந்தொதுங்க
அன்னது களிறு கண்டே அருங்கணீ ருகுக்கும் கானம்! 3

கடந்து போய்க் கால்கடுக்கக் கன்னிநீ யாங்ஙன் சென்றாய்!
படர்தரும் துன்ப வெள்ளம் பக்கலிற் காளையோடு
நடக்கையிற் றோன்றா தோதான்! நற்காதல் நயமுணர்ந்தேன்!
அடக்கிட அரிதே துன்பம் ஆயிழை வருவை கொல்லோ? 4

கானமும் கடக்கும் காதல்! கடல்மலை கடக்கு மேனும்
வானமும் அதன்மாட் சிக்கு வரையறை யாவதில்லை!
ஊனலிந் துளம் நலிந்தே உருகிய பெற்றோர் வாடக்
கானமும் செல்லா நிற்கும் காதலின் வலிமை யாதோ? 5

குறிப்பு :—அகநானூறு, கலித்தொகை ஆகியவற்றின் பாடல்களை அடியொற்றியது. மகளைப் போக்கிய செவிலி சொல்லுவது.

தைப் பெருக்க வேண்டிய நடவடிக்கைகளை எடுத்துக் கொள்வதை எந்த சர்க்காரும் தங்கள் கடமையாகக் கருத வேண்டும். இதைத்தான் நமது இந்திய ஆட்சித்தலைவர் ஜவஹர்லால் நேரு அவர்களும் ஆவடி காங்கிரஸ் மாநாட்டின் போது வற்புறுத்தினார்.

எனவே, வாழ்க்கையை வளம் படுத்தும் கல்வியை நம் இந்திய குழந்தைகளுக்கு நாம் விரைந்து அளிப்போமாக.

கம்பன் கவி நயம்

பே. கு. ஊரப்பன்

★

கம்பன் கவி இயற்றுவதில் மிகவும் திறமை பெற்றவன். இதைத் தமிழறிந்த தக்கோரனைவருமறிவர். தமிழுலகமும் நன்கு அறியும். ஆனால் இக்கருத்தைச் சிலர் மறுக்க முயற்சிக்கலாம். கம்பனைப் பற்றிச் சரியாகப் புரிந்து கொண்டிருந்தால் அவர்கள் மறுக்கமாட்டார்கள். கவி என்றால் என்ன என்று தெரிந்து கொண்டிருக்கின்றனர். ஆனால் கவி எப்படி இருக்கிறது என்பதை அறிவதில்லை. அதை அறியாமையின் விளைவே கம்பராமாயணம் இலக்கியமல்ல என்று சிலர் கூறுவது. ஒருவர் கார்லைப் பார்த்து பிரிட்டிஷ் சாம்ராஜ்யம் வேண்டுமா ஷேக்ஸ்பியர் வேண்டுமா என்று கேட்டதற்கு எனக்கு ஷேக்ஸ்பியர்தான் வேண்டுமென்று கூறினாராம் அவர். ஆம் இன்று தமிழனை நோக்கித் தமிழகம் வேண்டுமா கம்பன் வேண்டுமா என்று கேட்டால் கம்பன் வேண்டும் என்ற பதிலே வருமென்பதில் சந்தேகமில்லை.

கம்பனொரு கவியா? அவன் கவியில் நயம்வேறா? இது என்ன பைத்தியமெனச் சொல்லலாம் சிலர். ஷேக்ஸ்பியர் ஒரு கவியா? அவர் நாடகமுமொரு நாடகமா? என்றால் அது எவ்வளவு அறிவீனமோ அவ்வளவு அறிவீன மெனலாம் இதையும். ஷேக்ஸ்பியர் ஒரு கவியல்ல என்றொருவன் சொன்னால் அவனைப்பற்றி நாம் என்ன எண்ணுவோமோ அதே எண்ணந்தான் எண்ணுவோம் கம்பன் கவியல்ல என்று கூறுகிறவர்களைப் பற்றியும்.

ஆங்கிலத்தில் கவி இயற்றுவதில் ஷேக்ஸ்பியர் என்றால் தமிழில் அவருக்குப் பதில் கம்பனைக் கூறலாம். ஷேக்ஸ்பியருக்கு எந்த விதத்திலும் கம்பன் குறைந்தவனல்ல.

கம்பன் காவியத்தில் நாம் கவிநயத்தை உணர வேண்டுமானால் காவியத்தில் வருகின்ற பாத்திரங்களைப்பற்றி நாம் ஆராய்ச்சி செய்யக்கூடாது. பாத்திரங்களினுள்ளம்—அவர்களின் எண்ண அலைகள்—அவர்களின் பண்பு முதலியவற்றையே நோக்கவேண்டும். இராமன் ஆரியனா தமிழனா என்ற கேள்விக்கோ இராவணன் தமிழனா ஆரியனா என்ற கேள்விக்கோ அங்கு இடமிருக்கக்கூடாது. அந்த ஆராய்ச்சியில் நாமிறங்கினோமானால் நாம் காவியத்தின் பெருமையையோ கம்பன் கவிநயத்தையோ உணர முடியாது.

இலக்கியப் பூங்காவில் பல வண்ண மலர்கள் பூத்துக் குலுங்குகின்றன. அம்மலர்களின் அழகை நாம் நுகர வேண்டுமானால் நாம் என்ன செய்யவேண்டும்? மலர்களைச் செடியிலிருந்த வண்ணமே அதன் அழகைக் காணலாம். நம் கையில் பறித்தும் அதன் கண் கவர் வனப்பை முகரலாம். ஆனால் மலரைக் கசக்கி

ழகா முயற்சி செய்யக் கூடாது. கசக்கினால் அங்கே மணமிருக்காது. அழகுந் தோன்றாது. கசக்குவது அறிவுடைமையுமல்ல. அம்முயற்சியினால் வேண்டா நாற்றமே வீசும். அம்முயற்சியி லீடுபடுகின்றவர்கள் இலக்கியப் பூங்காவில் நுழையவே தகுதியற்றவர்களாவார்கள்.

ஹோமருடைய காவியங்களைப்பற்றி ஒருவர் கூறினார். "ஒரு முறை நீ ஹோமரைப் படி. அதற்குமேல் நீ வேறு நூல்களைப் படிக்கவே தேவை இல்லை. ஏனெனில், அதன்பின் எல்லா நூல்களும் சாதாரணமானதாக ஆகிவிடும். பிறரின் கவிகளானது வசனங்கள் போன்று ஆகிவிடும். அதைத் தொடர்ந்து படி. ஹோமரே உனக்குத் தேவைப்படும் எல்லா நூல்களுமாக ஆகிவிடும்" என்று கம்பன் காவியத்தில் நுழைந்து கற்பனையைச் சுவைத்த ஒருவனுக்கு வேறு காவியத்தில் இருக்கும் கற்பனை சுவை தராது. அத்தகைய முறையில் கம்பன் தன் காவியத்தை இயற்றியுள்ளார்.

கம்பனிடம் கவி ஊற்றெடுத்தோடுகிறது. அவனிடம் கற்பனை ஊற்றுப் பொருந்தியிருக்கிறது. கம்பன் கவிகளைக் கற்பனையோடு சிறந்த நயங்களையும் வைத்து இயற்றுவதில் தனக்கு நிகரற்றுக் காணப்படுகிறான். அவன் காவியத்தில் பாத்திரங்களின் உள்ள நிலைகளை விளக்கும்போது அவன் கம்பனாக இல்லாமல்—காவியத்தை இயற்றும் கருத்துவாக இல்லாமல் பாத்திரங்களாகவே ஆகிவிடுகிறான். பாத்திரங்களாகவே அவன் நடிக்கிறான். அத்தன்மையை நாமிரண்டொரு உதாரணங்களில் காணலாம்.

சீதை அசோக வனத்திலிருக்கிறாள். அவள் காட்டில் இராமனுடனிருந்த காட்சி—நடந்த செயல் நினைவிற்கு வருகிறது. அவள் இராமனுடனிருந்தபோது அவளே சோறு சமைத்து உணவூட்டினாள். வந்த விருந்தினர்களை அன்புடன் வரவேற்று அவர்களுக்கு விருந்தளித்தாள். அனிச்ச மலரினும் மென்மைத் தன்மையுடைய விருந்தினர்களுக்கு மகிழ்ச்சி அளித்தாள். விருந்தினர்களின் அகம் மகிழ்வதைக் கண்டு நம்பியும் நங்கையும் தங்களுக்குள் களிப்பெய்தினர். அப்போதெல்லாம் செல்விருந்தோம்பி வருவிருந்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள். இவ்வெண்ணங்களெல்லாம் அவள் அசோக வனத்திலெண்ணுகிறாள். எண்ண எண்ண அவள் மனம் வருந்துகின்றது. அவள் தனக்குள் சொல்லுகிறாள் நாமிருக்கும்போது அவருக்கு நாம் உணவிட்டோம். இப்போது அவருக்கு யார் உணவிடுவது? அவர் எவ்வாறு உணவு உண்பது? திடீரென விருந்தினர்கள் வந்தால் அவரென் செய்வார்? நினைக்க நினைக்க அவள் நெஞ்சம் வருத்தமுறுகிறது. வேதனையடைகிறது. அவள் உடல்தான் அசோகவனத்திலிருந்தது. ஆனால் அவள் உயிர்—எண்ணம்—நினைப்பு முழுதும் இராமனிடமே இருந்தது. சங்க இலக்கியங்களிலே நாம் காணலாம். தலைவன் பொருள் வயிற் பிரிந்திருப்

பான் அப்போது தலைவி வீட்டில்தானிருப்பாள். என்றாலும் அவள் எண்ணமெல்லாம் தலைவன் மீதே இருக்கும். அதுபோல் சீதையின் உள்ளமும் இராமன் மீதே இருந்தது. இராவணனால் அவள் உடலைத்தான் கட்டுப்படுத்த முடிந்தது. அவள் உடலைத்தான் கொண்டு செல்ல முடிந்தது. அவளின் உயிரை—எண்ணத்தை—கற்பைக் கொள்ளவோ அடிப்படுத்தவோ முடிந்ததா? எண்ணிப் பாருங்கள். இங்குதான் சீதையின் மனநிலை நமக்கு விளங்குகிறது. விருந்தினரைப் பேணுவதில் எத்துணையளவு விருப்பம் கொண்டிருந்தா ளென்பதும் கணவனைப் போற்றிக் காப்பதில் எத்துணையளவு கவனம் செலுத்தினாளென்பதும் நமக்குத் தெரிகின்றது. சீதை உள்ளம் இராமனுக்காக எத்துணையளவு வருந்துகிறது? என்பதைப் பாருங்கள். இதைத்தான் கம்பர் கவியாகச் சித்தரிக்கிறார். படித்துப் பாருங்கள் அந்தக் கவியை.

"அருந்து மெல்லடக வாரிடு மென வருந்தும்
விருந்து கண்டபோ தொன்னுறுமோ என்று விம்மும்
மருந்து முண்டுகொல் யான் கொண்டநோய்க் கென்று மயங்கும்
இருந்த இடம் செல்லரித்திடவு மாண் டெழாஅ தான்."

இக் கவிதையைப் படிக்கும்போது படிக்கின்றவருள்ளமும் சீதை உள்ளமாக மாறி விடுகிறது. படிக்கின்றவர்களின் உள்ளம் தன்னை மறந்து காவியத்தில் கலந்து விடுகிறது. தங்களை மறந்து உணர்ச்சி வயப்படுகிறார்கள். அவ்வாறு உணர்ச்சி வயப்படுத்துவதுதான் சிறந்த கவி என்பதற்கறிகுறி. அதுதான் உயிருள்ள கவியாகும்.

அனுமான் சீதையைக் கண்டு வந்து இராமனிடன் சொல்கிறான். நான் இலங்கையில் சீதையைக் காணவில்லை. மூன்று குணங்கள் அசோக வனத்தில் களிநடம் புரிவதைக் கண்டேன் என்று கூறினான். இற்பிறப்பு, இரும்பொறை, கற்பு என்ற மூன்று குணங்களும் அங்கே களிநடம் புரிந்தன.

"ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம்மூன்றும்
இழுக்கார் குடிப் பிறந்தார்."
"இற்பிறந்தார் கண்ணல்ல தில்லை இயல்பாகச்
செப்பமும் நாணு மொருங்கு."

என்று வள்ளுவர் போற்றிப் புகழ்கின்ற இற்பிறப்பு அவளிடம் பொருந்தி யிருந்தது. நற்குடிப் பிறந்தாரின நண்புகளாக மேற்கூறிய ஒழுக்கம் வாய்மை, நாணம், செப்பம் குணங்களைக் கூறுகிறார். அந்த நற் பண்புகளனைத்தும் அவளிடம் காணப்பட்டன. இரண்டாவதாக அவளிடம் பொறுமைக் குணமும் பொருந்தியிருந்தது. தனக்கேற்பட்ட துன்பத்தைப் பொறுத்துக் கொண்டாள். மூன்றாவதாக கற்பு என்ற திண்மையான குணமிருந்தது அவளிடம். "பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்

திண்மை உண்டாகப் பெறின்" என வள்ளுவர் கூறும் உறுதியான உள்ளம் அவளிடம் அமைந்திருந்தது. இந்த மூன்று குணங்களும் சீதையாகக் காட்சியளித்தது என்று கூறுகிறான் அனுமன். சீதை ஒழுக்கத்திலிருந்து தவறவில்லை என்பதைக் கம்பர் சிறந்த முறையில் சித்தரித்துக் காட்டுகிறார். சோகமே உருவான அவளிடம் மூன்று குணங்கள் மட்டும் மகிழ்ச்சியுடன் நடனமாடுகின்றன என்று கூறுகிறார் கம்பர். இங்கும் நாம் கம்பனின் கவிதைத் திறமையை கவி நயத்தை உணர்கிறோம்.

> "விற்பெருந் தடந்தோள் வீரவீங்கு நீரிலங்கை வெற்பில்
> நற்பெருந் தவத்தளாய நங்கையைக் கண்டேனல்லேன்
> இற்பிறப் பென்பதொன்றும் இரும் பொறை யொன்றும்
> கற்பெறும் பெயரதொன்றும் களிநடம் புரியக்கண்டேன்."

இக்கவியில் அசோக வனத்தில் சீதை எவ்வாறு இருக்கிறாள் என்பதைக் கவிஞர் விளக்கி யிருக்கிறார். நாம் இப்போது பார்த்த இரண்டு கவிகளிலிருந்து கம்பனின் காவியப் புலமை நமக்கு நன்கு விளங்குகிறது. பாத்திரங்களின் உள்ளத்தை அவன் கற்பனை செய்யும் திறன் நமக்குப் புலப்படுகின்றது. அகவேதான் அவன் கவிதைத் தமிழுலகம் மட்டுமல்லாது ஏனைய உலகமும் போற்றிப் புகழ்கின்றது. அவனுடைய ஒவ்வொரு பாட்டிலும் கற்பனைத் திறனமைந்துள்ளது. இந்த முறையில் கவி இயற்றியதால்தான் அவன் கவிச் சக்கரவர்த்தி எனப் பட்டான். கவி இயற்றுவதில் அவனுக்கிணை அவனைத் தவிர, வேறு யாரையும் சுட்டிக்காட்ட முடியாது. வாழ்க அவன் கற்பனை. வளர்க அவன் கவிநயம்.

"ஆனந்த போதினி"

(மாதப் பத்திரிகை)

சந்தா விவரம்

வருடம் 1-க்கு தபாற்கூலி யுள்பட இந்தியா, சிலோன்	ரூ. 2—0-0
வருடம் 1-க்கு வெளிநாடுகளுக்குச் சந்தா	ரூ. 3—0-0
நடந்துகொண் டிருக்கிற வருடத்திய தனிச் சஞ்சிகை	ரூ. 0—3-0
சென்ற வருடங்களின் தனிச் சஞ்சிகை	ரூ. 0—4—0
ஜீவிய சந்தா	ரூ. 30-0-0

ஒரு வருடத்திற்குக் குறைந்த சந்தா கிடையாது.

எப்பொழுது சேர்ந்தாலும் ஆடிமீ முதல் கணக்கு வைக்கப்பட்டு சஞ்சிகைகள் அனுப்பப்படும்.

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 167, சென்னை.

"அமைதியே நண்பா!"

தேவராசன்

அமைதியே, நண்பா......

நீ எங்கே இருக்கிறாய்? எனக்கு எட்டாத உயரத்தில் கண் இமைத்துக் கொண்டிருப்பது யார்? நீயா? என் செல்வமே! வானத்துத் தாரகையாய் நீ உருத் தாங்கியது எப்பொழுது?

பரந்த வெளியின் மத்தியில் நான் மிகுந்த வாட்டத்தோடு நிற்கிறேன். கிழக்குக் கோடியிலும் மேற்குக் கோடியிலும் நிலத்தோடு ஒட்டிக் கொண்டிருப்பது யார்? நீயா? அதை அடிவானம் என்று எல்லோரும் அழைக்கக் கேட்டிருக்கிறேன். ஆனால் அது உனது புனைபெயர் தான் என்று நான் அறியேன்!

நண்பா, உன்னை நோக்கி இறைக்க இறைக்க ஓடி வருகிறேன். காற்றும் தோற்றுப் போகும்படியாகவே ஓடி வருகிறேன். ஆனால் ஒரு நொடியில் நீ என்னை ஏமாற்றி விட்டு ஓடி விடுகிறாய்? ஐயோ, என் கால்களும் விழுந்து விட்டனவே, நான் என்ன செய்வேன்.

கண்ணுக்கெட்டிய தூரம் வரை ஒரே பாலைவனம். மத்தியில் நான் நின்று கொண்டிருக்கிறேன். என் உடைமைகள் அனைத்தும் இழந்துவிட்டு நிற்கிறேன். எல்லையற்ற சோகத்தின் மடியிலே தலை சாய்த்துக்கொண்டு தேம்பி யழுகிறேன். என் அமைதியே! நீ எங்கே மறைந்துக் கொண்டிருக்கிறாய்? என் இருண்ட கண்களுக்கு உன் உருவம் புலனாகவில்லை. நான் என்ன செய்வேன்?

ஆ.....அதோ உன் சாயல்!

நண்பா, உன் வெண்மையான புன்முறுவல் எனக்கு எவ்வளவு ஆனந்தத்தை அளிக்கிறது! நீ அங்கேயே இரு. ஒரு நொடியில் உன்னைத் தழுவிக் கொள்ளுகிறேன்.

என் தோழா, நீதான் எவ்வளவு பெரிய வித்தைக்காரன் எந்தெந்த விதமான உருவங்களையும் உன்னால் தாங்க முடியும். இங்கே—அங்கே—எங்கும் இருப்பதாகக் காட்டி என் உணர்வையெல்லாம் உன்பால் இழுக்கிறாய்? இவ்வளவு விரைவில் அழகியதோர் நீரூற்றாய் மாறும் அற்புதக் கலையை நீ எங்குதான் கற்றாயோ? இதோ, உன்னை நோக்கி வரப் போகிறேன். வந்து உன மடியில் விழப் போகிறேன். என்னை ஏந்திக்கொள். உன் மார்பிலே சார்த்திக்கொள். உனது குளிர்ச்சியையெல்லாம் எனக்கு அளி.

இதோ புறப்பட்டு விட்டேன். உலகமே நடுங்கக்கூடிய மிகப் பெரிய பேய்க்காற்று என்னைப் பூமியிலிருந்து பெயர்த்தெடுத்துத் தூக்கிச் செல்லுகிறது. உலகத்தின் சகல உயிர்களையும் அழித்துப் போடும் மிகக் கொடிய பயங்கர மின்னல் என்

கண்களை பிடுங்க இமைப்பதற்குள் உன் புனிதக் கரங்களைத் தீண்டி விடுவேன். நீ மட்டும் அங்கேயே இரு.

ஆருயிர் நண்பா, என் வாழ்க்கையில் உன் சிறு நிழலும் படிந்ததில்லை. உன் தூய திருஉருவைக் காண 'எங்கெங்கு அலைந்தேன் தெரியுமா? பொறு சொல்கிறேன். உன்னை இழந்த என் வாழ்க்கையின் பயங்கரத்தைக் கொடூரத்தைச் சொல்கிறேன்.'

இந்தப் பாலைவனத்தின் ஒவ்வொரு சிறுமணலும் ஒவ்வொரு பேய்களாக மாறி விடுகின்றன. அவைகள் தரையிலிருந்து வானம் வரை ஒரே பயங்கரமாகத் தோன்றுகின்றன. நான் அவைகளுக்கு மத்தியில் ஒரு சிறு மணலாகக் காட்சி யளிக்கிறேன். எவ்வளவு அற்பம். என் சதைகளைப் பெய்துத் தின்ன என் ரத்தத்தைக் குடிக்க அவைகள் எவ்வளவு ஆங்காரமாகக் கூச்ச லிட்டுக்கொண்டு வருகின்றன. நூற்றாண்டு நூற்றாண்டு காலமாக அடக்கி வைத்திருக்கும் பசியை ஒரே விநாடியில் போக்கிவிட வருகின்றன. ஐயோ, அவைகளின் கூரிய நகங்களால் என் கன்னங்களைப் பிளக்கின்றன. நண்பா, என் வாழ்க்கையின் ஒவ்வொரு விநாடியும் எவ்வாறு கழிகின்றன என்பதை நீ புரிந்துக் கொள்ளுகிறாயா? அற்பமான ஒரு விநாடி ஐயோ அதில் தான் எத்தனை யுகங்கள் அடங்கி யிருக்கின்றன.

என் அமைதியே, உனது துணை மட்டும் எனக்கு இருக்குமானால் இந்தப் பரந்த உலகத்திற்கு நானே அரசன். உலகத்தில் மிக மேலான பொருள்களுக்கெல்லாம் நானே மேலானவன். ஆனால் நான் உன்னைக் காண்பது எப்பொழுதோ?

நண்பா, உன்னிடத்திலேயே இரு. சற்றும் அசையாமல் இரு. கண்ணிமைக்கு முன் உன் காலடியிலேயே வந்து விழுந்து விடுகிறேன்.

உலகம் என்னை பாவி என்கிறது. எனது பாவக்கறைப் பட்டால் அறத்தின் நீதிச் சுவர்கள் கூட அவிந்து விடுமாம். நான் அவ்வளவு கொடிய பாவியாம். ஆனால் எனது பாவமாகிய கற்கள் மலைபோல் குவிந்து கிடக்கும் கற்கள் எத்தனை பேர்களால் நிரப்பப்பட்டன என்பது யாருக்குத் தெரியும். இந்தப் பாவியின் வாழ்க்கையை உருவாக்கிய அத்தனை பாவிகளும் என்னைப் பார்த்துக் கைகொட்டி நகைக்கிறார்களே. உன் துணையின்றி நான் அவர்களிடம் எப்படி விடுபடப் போகிறேன்.

நண்பா, வருகிறேன், வருகிறேன். உன் புனித ஆத்மாவுடன் ஐக்கியமாகிவிட வருகிறேன். நீ அங்கேயே இரு.

வாழ்க்கை என்பது ஒரு பெருங்கடல். அந்த நீலக்கடலின் வெண்கரையையும் குளிர்க்காற்றையும் மணற்பரப்பையும் தூர நின்றபடிப் பார்த்து ஒய்யாரமாகப் புனையும் காவியம் யாருக்குப் பயன்படும். சொல் நண்பா, சொல்.

கடலுக்குள்ளே சுறாக்களும், திமிங்கலங்களும் வாயைப் பிளந்தபடி இருக்கின்றன. எண்ணிக்கையற்ற உயிர்கள் துடிக்

கத் துடிக்க அவைகள் விழுங்கிக்கொண்டே யிருக்கின்றன என்
பது எனக்குத்தானே தெரியும்?
நீந்த முடியாதபடி கால்கள் வெட்டப்பட்டு, முகத்திலே
வந்து மோதும் அலைகளை ஒதுக்க முடியாதபடி கரங்கள் துண்
டிக்கப்பட்டு—பிறகுதானே இந்தப் பாழுங்கடலில் நான் தூக்கி
எறியப்பட்டேன்.
இதை யெல்லாம் ஏன் சொல்லுகிறேன் தெரியுமா? என்மீது
உன் அனுதாபத்தைத் திருப்ப இதோ பார். என் இதயக்
கதவுகள் உனக்காகத் திறந்தே இருக்கின்றன. நீ என்றாவது
ஒருநாள் வருவாய். வந்து என்னுள் பரிபூரணமாய் நிரமபுவாய்
என்று வப்பொழுதும் கனவு கண்டுகொண்டே இருக்கிறேன்.
என் அரசே, நீ மட்டும் எனக்குத் துணையாக இருந்தால்
போதும். நான் வல்லமை பெற்று விடுவேன். உலகத்தையே
என் வாள் முனையில் சுழற்றுவேன்.
என் அமைதியே! கொடிய அகன்ற பாலையில் அரிதாய்
விளைந்துத் தாங்கும் நீரூற்றே. நீ அங்கேயே இரு. இதோ வரு
கிறேன். காற்றினூடே நுழைந்து வருகிறேன். உன்னுடன்
ஒன்றிக் கலந்து நீயாகவே ஆகிவிட வருகிறேன். என்னையே
உனக்கு அர்ப்பணித்துவிட வருகிறேன்.
ஐயோ, இவ்வளவு நேரமாக நான் கொண்டிருந்த நம்பிக்கை
கள் பயனற்று விடுமோ? எல்லாம் வெறும் மயக்கந்தானா?
என் ஆருயிர் நண்பா, நீ ஏன் உன்னிடத்தை விட்டு விலகிக்
கொண்டே யிருக்கிறாய்! என்னால் நீ பெறக்கூடியது ஒன்றும்
இல்லாமல் இருக்கலாம். ஆனால் நீ இல்லாமல் நான் ஒரு கண
மும் உயிர் வாழ முடியாது.
ஐயோ, என் கால்கள் சோர்ந்து விட்டன. கண்கள் இருண்டு
விட்டன. நான் என்ன செய்யப் போகிறேன். என்னால் இனி
ஒரு அடியும் எடுத்து வைக்க முடியாது?
ஐயோ! உன்னை இழப்பதா? இழந்து உயிர் வாழ்வது
இயல்வதா?
என்ன ஏமாற்றம்! என் கைகளுக்குப் பிடிபடாமலே நீ தப்
பித்து விட்டாய்?
ஓ, என் கற்பனைகளே! கண்ணுக் கெட்டாத தூரத்திலே
யால் தனதுடலை மறைத்துக் கொள்ளும் அவனை இழுத்து
வாருங்கள்.
நான் விரும்பினால் இந்த அற்புதமான உலகத்தின் எந்தப்
பாகத்தையும் கணத்தில் என் முன் நிறுத்தும் கற்பனைகளே!
நீங்களுமா தோற்றீர்கள்?
ஏ! அமைதியே, இரக்கமற்றவனே! என் நிழல் பட்டால் உன்
எழில் கருகி விடுமோ? ஏன் அஞ்சி ஓடுகிறாய்?

தொடர் கதை

வாழ்க்கைப் புயல்

எஸ்·என்·கே·ராஜன்

பத்மாவின் எதிர்கால நலத்தைத் தன் கையில் ஒப்படைத்த
தைப்பற்றி சரவணன் மட்டிலா மகிழ்ச்சி யடைந்தான்.
மறுநாள் காலை முதல் வேலையாக பத்மாவின் வீட்டிற்குச்
சென்றான்.

பத்மா தன் தகப்பனுடன் கோடம்பாக்கத்தில், குறுகிய சந்
தொன்றில், ஒரு வீட்டின் மாடியில் வசித்து வந்தாள். அந்தச் சந்தி
லேயே பழமையாகக் காணப்பட்ட வீடு அது ஒன்றுதான்.
ஆனால் பத்மா வசித்து வந்த மாடி அறைகள் மிகவும் சுத்தமாக
வைக்கப்பட்டிருந்தன.

பத்மாவின் தந்தை பத்மநாபன் ஒரு நோயாளி. வயது ஐம்
பது இருக்கும். எப்பொழுதும் சாய்வு நாற்காலிதான் அவருடைய
இருக்கை. அவர் உடம்பில் எலும்பும் தோலும் தவிர, சதைப்பற்றே
சிறிதும் கிடையாது! அவர் ஒரு முன் கோபி. யாரிடமும் சிடுசிடு
வென்று பேசும் சுபாவத்தை யுடையவர்.

சரவணன் பத்மாவின் வீட்டை அடைந்து தான் வந்த கார
ணத்தை பத்மாவிடம் தெரிவித்தான். தனது சுகத்தில் கருத்தைச்
செலுத்தி, வேண்டிய உதவிகள் செய்ய பலராம் சரவணனை அனுப்
பியதில் பத்மாவின் மகிழ்ச்சி எல்லையை மீறிவிட்டது!

அடுத்த அறையில் அமர்ந்து கொண்டிருந்த பத்மநாபனின்
கூக்குரல் பத்மா, சரவணன் ஆகியோரின் கவனத்தைக் கவர்ந்தது.

"ஏய், பத்மா! யாரடி அங்கே? யாருடன் பேசிக்கொண்டிருக்
கிறாய்?" என்று உரக்கப் பேச முடியாத நிலைமையிலும் கத்தினார்
பத்மநாபன்.

சட்டென்று பத்மா எழுந்து தனது தந்தையிடம் ஓடி ஏதோ
சமாதானம் கூறிவிட்டு, மீண்டும் சரவணனிடம் வந்தாள்.

வந்தவளைத் தொடர்ந்தது பத்மநாபனின் கடுமையான குரல்.

"பத்மா! இன்றைக்கு வந்த பத்திரிகையையும், கொஞ்சம் காபி
யையும் எடுத்துக் கொண்டுவா சீக்கிரம்!...காபி ஆறிக் கிடக்கப்
போகிறது! சூடாகக்கொண்டு வா!"

"பத்மாவின் நலத்தில் இக் கிழவனுக்குக் கருத்தே இல்லையோ?"
என்று எண்ணி வருத்தப்பட்டான் சரவணன்.

மீண்டும் பத்மநாபனின் பேச்சு "வந்தவன் இன்னும் போக
வில்லையா?"

இனியும் தான் அங்கு தங்குவது சரியல்ல என்று எண்ணிய
சரவணன் பத்மாவிடம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டான்.

மாடிப்படியின் வழியாக இறங்கி வரும்போது தனக்குப் பின்
னல் மெல்லிய காலடி யோசை கேட்டுத் திரும்பிப் பார்த்தான் சர
வணன். அங்கே பத்மா நின்று கொண்டிருந்தாள். அவளை அனு
தாபத்தோடு பார்த்தான் சரவணன்.

"என் அப்பாவின் குணம் ஒரு மாதிரியானது. அவர் பேசி
யதை மனதில் வைத்துக் கொள்ளாதீர்கள்! மறந்து மன்னித்து
விடுங்கள்!" என்றாள் பத்மா.

"அதைக் குறித்துக் கவலைப்படாதே, பத்மா! நான் இங்கு வந்த
தைக் குறித்து அவர் உன்னைத் துன்புறுத்தா திருந்தால் சந்
தோஷம் தான்! அப்படி ஏதாகிலும் துன்பம் நேர்ந்தால் தவறாமல்
என்னிடம் சொல். தயங்காதே!" என்றான் சரவணன் பச்சாதாபக்
குரலில்.

"உங்கள் உதவிக்கு எனது மனமார்ந்த நன்றி! அதற்குக்
கைம்மாறாக நான் என்ன செய்யப் போகிறேனோ, எனக்கே தெரிய
வில்லை!" என்றாள் பத்மா தழுதழுத்த குரலில். அவள் கண்ணிமை
விளிம்புகளில் கண்ணீர்த்திவலை தேங்கி நின்றது.

"நன்றியைப் பற்றியோ, கைம்மாறைப் பற்றியோ ஒரு
வார்த்தை கூட வேண்டாம்!" என்றான் சரவணன்.

பத்மாவின் கண்களில் தேங்கிய கண்ணீர் பொங்கி வழிந்தது.
திடீரென்று விம்மி விம்மி அழலானாள்.

அதைக்கண்ட சரவணன் திடுக்கிட்டான்.

"பத்மா! ஏன் அழுகிறாய்? உன் பரிதாபகரமான வாழ்க்கை
பூராவும் நான் அறிவேன். உனக்கு வரவிருக்கும் துன்பங்களைத்
துடைத்தெறிய நான் கங்கணம் கட்டிக்கொண்டு விட்டேன். நீ
கொஞ்சமும் கவலைப்பட வேண்டாம். உன்னை என் உயிருக்கு மேலாக
பாவிக்கிறேன். இதைப் பகிரங்கமாகச் சொல்வதற்கு என்னை மன்
னித்து விடு...சரி, நீ போ! இனியும் தாமதமானால் உன் அப்பா சீறி
விழுவார்!" என்றான்.

பத்மா ஆறுதலடைந்தவளாய், சரவணனைத் திரும்பித் திரும்
பிப் பார்த்தவாறு கண்களைத் துடைத்துக்கொண்டே தன்
அறையை நோக்கிச் சென்றாள்.

பத்மாவின் எதிர்கால வாழ்க்கையில் எண்ணத்தைச் செலுத்தி,
சிந்தனுலோகத்தில் சஞ்சரித்தவனாய் சரவணன் பலராமிடம் சென்று,
தான் பத்மாவின் வீட்டிற்குப்போய், அவளுக்கு ஆறுதல் சொல்லி
விட்டு வந்த செய்தியைக் கூறினான்.

* * * *

கடும் வட்டி வாங்கும் தேவலிங்கமும், மற்றொரு லேவாதேவிக்
காரனான சச்சிதானந்தமும் ஒருநாள் பத்மநாபன் அவர்களுக்குக்
கொடுக்கவேண்டிய கடனைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தனர்.
சச்சிதானந்தத்திற்கு, வயது அறுபது, ரொம்பவும் பணக்காரன்.
காசு படைத்த அவனுக்குக் கருணையுள்ள நெஞ்சம் தான் இல்லை.
மிகவும் தந்திரசாலி. சாமர்த்தியக்காரன். பணத்தின் பொருட்டு
எந்தவிதமான இழிவான காரியத்தையும் துணிந்து செய்வான்.
அவனை எல்லோரும் 'ஷைலக்' என்று அழைப்பார்கள்.

அத்தகைய சச்சிதானந்தம் பத்மாவை மணக்க ஆசை கொண்
டான். பத்மநாபனால் தனது கடனைத் தீர்க்க முடியாதென்று நிச்
சயமாகத் தெரியும் அவனுக்கு. அதைக் காரணமாக வைத்துத்
தனது கலியாணத்தை பத்மாவுடன் முடித்துக்கொள்ள மனப்பால்
குடித்தான்! தனக்கு பத்மாவைக் கலியாணம் செய்து கொடுத்தால்
பத்மநாபனின் கடன் மூவாயிரத்தையும் சரி செய்து விடுவதோடு,
பைபையாகப் பணத்தைக் கொடுப்பதாகவும் பத்மநாபனிடம் கூறி
னான். கடனைத் தீர்க்க கொஞ்சமும் வழி காணாத பத்மநாபன் சச்சி
தானந்தத்தின் வற்புறுத்தலுக்கு இணங்கச் சம்மதித்தான். அத்
துடன் பணக்காரனான சச்சிதானந்தத்தை மருமகனாக ஏற்றுக்
கொண்டால் எல்லா வசதிகளுடனும் வாழலாம் என்று கனவு கண்

டான். அக்கனவே பேதை பத்மாவைப் படுகிழவனுக்கு மணம் முடிக்கத் தூண்டியது!

ஆனால் தேவலிங்கம் இருவரது எண்ணத்திற்கும் எதிரியாக இருந்தார். அவருக்குப் பத்மநாபன் இரண்டாயிரம் ரூபாய் கடன் கொடுக்க வேண்டும். சுயநலம் கொண்ட சச்சிதானந்தம் பத்மாவை மணந்தால் தனது கடன் தீர வழி ஏற்படாது என்று எண்ணினான். எண்ணியபடி நடந்துவிட்டால், பத்மநாபனின்மேல் கேஸ் போட்டு சிறை செய்து விடுவதாகவும் திட்டமாகக் கூறினார் தேவலிங்கம் அப்படிச் செய்தால் தனது காரியம் தடைப்பட்டுப் போகுமே என்று பயந்த சச்சிதானந்தம் தேவலிங்கத்துடன் கலந்து பேசினான். தேவலிங்கம் பத்மாவை மணப்பதில் தனக்கு உதவி செய்தால் பத்மநாபன் அவருக்குத் தரவேண்டிய கடன் முழுவதையும் தானே தீர்த்து விடுவதாக உறுதி கூறினான். தேவலிங்கமும் அதற்குச் சம்மதித்தார்.

இருவர் மனமும் திருப்தி யடைந்தது. சச்சிதானந்தம் தனக்கு எழில் மிக்க இளம் மனைவி கிடைக்கப் போவதைக் குறித்து மகிழ்ச்சிக் கடலில் மூழ்கினான். தேவலிங்கம் தனக்கு வரவேண்டிய இரண்டாயிரம் ரூபாய் நிச்சயம் கிடைத்து விடும் என்று எண்ணிப் பூரிப் படைந்தார்.

இவ்விருவருடைய சதி நாடகம் நல்ல விதத்தில் நடந்து கொண்டிருக்கையில், பத்மா அந்த நாடகத்தையும், தனது தந்தை அவர்களுடைய சூழ்ச்சியில் சிக்கி, சுயஅறிவைப் பறி கொடுத்துத் தன்னைக் கிழவனுக்கு மணம் செய்து கொடுக்கத் தீர்மானித் திருப்பதையும் அறிந்து நீரிலிருந்து நீக்கிக் கரையின்மேல் போட்ட மீனைப் போல் துடித்தாள். அந்தக் கொடுஞ் செயலுக்கு இணங்க வேண்டாமென்று தன் தந்தையிடம் கண்ணீர் விட்டுக் கெஞ்சி மன்றாடினாள். ஆனால் பத்மநாபன் தன் மகளின் பேச்சைக் காதிலே போட்டுக் கொள்ளவே இல்லை. உடனே அவள் தன்னை யாராலும் அக் கலியாணத்திற்கு இணங்க வைக்க முடியாதென்றும், அப்படி பலவந்தப் படுத்தினால் தனது பிரேதத்தைத்தான் அக் கிழவன் மணக்க நேரிடும் என்றும் அச்சுறுத்தினாள். அதை அறிந்த தேவலிங்கம் அவளிடம், அவள் கலியாணத்திற்குச் சம்மதித்தால் எல்லோருக்கும் நன்மை உண்டாகுமென்றும், அவளது தந்தை கடன் தொல்லைகளினின்று நிரந்தரமாக நீங்கலாமென்றும் வினயமாகச் சொன்னார். அத்துடன் அவர்கள் இஷ்டத்திற்கு உடன்படாவிட்டால் அவள் தகப்பனைச் சிறையில் அடைத்து அவளையும் அனாதையாக அலைய விடப் போவதாகவும் பயமுறுத்தினார்.

அவர்கள் பயமுறுத்தல்களையும், சதித் திட்டத்தையும் சரவணனிடம் கூறினாள் பத்மா. அத்துடன் தேவலிங்கத்தின் போக்குகளைக் கண்ணும் கருத்துமாகக் கவனித்து வந்த கந்தசாமி, அவர் சச்சிதானந்தத்துடன் செய்து கொண்ட சதியாலோசனையை உடனுக்குடன் தெரிவித்து வந்தான். அதனால் பத்மா மீள முடியாத மாளாத் துயரத்தால் மனங்குன்றி, கஷ்ட நிலைமையில் சிக்கிக் கொண்டிருப்பதை அறிந்து சரவணன் உடனே பலராமைக் கலந்தாலோசிக்க அவரிடம் சென்றான்.

ஆனால் துரதிர்ஷ்ட வசமாகப் பலராம் அங்கில்லை. விசாரித்ததில் அவசர காரியமாக, ராம் சகோதரர்கள் இருவரும் பம்பாய்க்குப் போயிருப்பதாகவும், திரும்பி வர மூன்று நாட்களாகு மென்றும்

அறிந்தான். அந்த மூன்று நாட்களில் காரியம் விபரீதத்தில் முடிந்தால் என்ன செய்வது என்று அஞ்சினான்.

சரவணன் அஞ்சியது போலவே காரியம் நடக்க இருந்தது. மறுநாளே மணத்தை முடித்துவிட மூன்று கிழவர்களும் திட்டம் போட்டு, ஏற்பாடுகளும் செய்து விட்டனர் என்பதை பத்மாவின் மூலம் அறிந்தான் சரவணன். என்ன செய்வதென்றே அவனுக்குத் தோன்றவில்லை. நிலை கொள்ளாமல் தத்தளித்தான். துடி துடித்தான்! உடனே பம்பாய்க்குப் பலராமிற்கு ஒரு தந்தி அடித்து விட்டு, பத்மநாபனின் வீட்டிற்குச் சென்றான். அவரிடம் பத்மாவை ஒரு தொண்டுகிழவனுக்குப் பணத்தின் பொருட்டுத் தியாகம் செய்யவேண்டாம் என்று தாழ்மையுடன் மன்றாடிக் கேட்டுக் கொண்டான். ஆனால் அக் கிழவன் அவன் வேலையைப் பார்த்துக் கொண்டு போகும்படி கூறி விட்டான்.

சரவணன் சஞ்சலத்திற் குள்ளானவனாய் மாடிப்படி இறங்கி வரும்போது பத்மாவைச் சந்தித்தான். பத்மா அழகில் முற்றும் மாறுதலடைந்ததைக் கண்டு மின்சாரம் பாய்ந்ததைப்போல திடுக்கிட்டான். சென்ற சில தினங்களாக தீராக்கவலையால் வாடி வதங்கிப் போயிருந்த அவள் சோபை இழந்து காணப்பட்டாள். முன்பு எழில் மிக்க தந்தப் பதுமைபோலக் காணப்பட்ட அவள் ஆறாத் துயரத்தால் மெலிந்திருந்தாள் அவளைக் கண்டு திடுக்கிட்டு, சிலை போல் நின்றுவிட்ட சரவணனால் ஒன்றும் பேச முடியவில்லை. பின்னர் தன் நிலைமையைச் சமாளித்துக்கொண்டு, அவளிடம் வைராக்கியத்தைக் கடைப்பிடிக்கும்படி கூறினான். ஆனால் பத்மா புலம்பி அழுதாள். தான் அக் கிழவனை மணப்பது தன் தகப்பனுக்குச் செய்யவேண்டிய கடமை என்றும், வேறு விதமாக அக் கடனைத் தீர்க்க வழி இல்லை என்றும் கூறினாள். சரவணன் அவளுக்கு ஆறுதல் கூறி, அக் கிழவனை அவள் மணப்பதிலிருந்து அவளை மீட்பது தனது கடமை என்றும், அதற்காக எந்தக் கஷ்டம் வந்தாலும் அதைச் சகித்துக் கொள்ளத் துணிவு கொண்டு விட்டதாகவும், அவளை மாறாத மனோதிடத்துடன் இருக்கும்படி கூறிவிட்டு அவ்விடம் விட்டகன்றான். பிறகு தன் வீட்டை நோக்கி எண்ணக்கடலில் மூழ்கினவனாய் நடந்தான்.

சரவணன் பலராம் வந்ததும் பத்மநாபனின் கடன் முழுவதையும் தீர்த்து விடும்படி கேட்க நிச்சயித்தான். பத்மாவின் நலத்திற்காக அவர் அதைச் செய்வார் என்றும் எண்ணினான்.

அந்த எண்ணத்தை சச்சிதானந்தத்தினிடம் சொல்லி விடவும் தீர்மானித்தான். அதனால் தன் வீட்டிற்குப் போவதைவிட்டு, கிழவன் வீட்டிற்குச் சென்றான். தனது எண்ணத்தையும் எடுத்துச் சொன்னான். ஆனால் அக் கொடும் கிழவன் அவனை ஒரு நிமிஷம் உற்றுப் பார்த்துவிட்டு, பிறகு சிரித்தவாறு மௌனம் சாதித்தான். இந்த அற்பப் பயலால் அவ்வளவு பெரிய கடனை எப்படித் தீர்க்க முடியும் என்று நினைத்ததால் விளைந்த ஏளனச் சிரிப்புப் போலும் அது!

அதை உணர்ந்த சரவணன் சச்சிதானந்தத்தைப் பார்த்து, "உங்களுக்குச் சேரவேண்டிய தொகை பூராவும் வந்து சேராது என்று நினைக்கிறீர்களா? ஆனால் பத்மா அநேக பணக்காரர்களை நண்பர்களாக அடைந்திருக்கிறாள் என்பதைத் தெரிந்து கொள்ளுங்கள். அவர்கள் தங்கள் சொத்துப் பூராவையும் செலவழித்து

அவளைக் காப்பாற்றுவார்கள் என்பது திண்ணம். முடியுமானால் சிலர் உயிரைக் கூடக் கொடுப்பார்கள்! இதில் சந்தேகத்திற்கு இடமே இல்லை. உங்களுக்குச் சேரவேண்டிய பணம் எவ்வளவு என்று சொல்லுங்கள். உங்கள் கலியாணப் பேச்சை விடுங்கள். உங்கள் பணம் ஒரு தம்பிடிகூட பாக்கி யில்லாமல் தரப்படும்! என்றான்.

ஆனால் சரவணனின் பேச்சு செவிடன் காதில் ஊதிய சங்காக மாறிவிட்டது! சச்சிதானந்தம் மணத்தைத் தவிர, பணத்தைப் பற்றிக் கவலை கொள்வதாகக் காட்டிக் கொள்ளவில்லை. தனக்கு அடுத்த நாள் கலியாணம் என்றும், இனிமேல் என்ன பேசியும் பயனில்லை என்றும் கூறி, சரவணனை வெளியே அனுப்பிக் கதவையும் தாளிட்டுக் கொண்டான்.

சரவணனுக்கு அன்றிரவு முழுதும் உறக்கமே இல்லை. புரண்டு புரண்டு படுத்துப் பற்பலவிதமான சிந்தனைகளில் சிக்குண்டு கிடந்தான். சட்டென்று அவனுக்கு ஒரு யோசனை தோன்றிற்று. அதை நிறைவேற்றும் வழியைக் கலந்தாலோசிக்க, நள்ளிரவென்றும் பாராமல் தன் தாயையும் தங்கையையும் எழுப்பி ஆலோசனையில் இறங்கினான்!

* * * *

சரவணனுக்குத் தூக்கம் தராது துன்பம் விளைவித்த அதே இரவு கிழவன் சச்சிதானந்தத்திற்கு இன்ப இரவாக இருந்தது. மறு நாள் நடக்கப் போகும் மணத்தின் நினைவில் இன்பக் கனவுகள் கண்டான். மறுநாள் அதிகாலையிலேயே எழுந்து மாப்பிள்ளையாக மாறவேண்டிய ஆயத்தங்களைச் செய்துகொண்டு தேவலிங்கத்திற்காகக் காத்துக் கொண்டிருந்தான். ஒரு கணம் கழிவது ஒரு யுகமாக இருந்தது அவனுக்கு. கடைசியாக தேவலிங்கம் வந்து சேர்ந்தார். சச்சிதானந்தத்தின் அலங்காரம் அவரை பிரமிக்க வைத்தது.

தேவலிங்கத்தைக் கண்ட சச்சிதானந்தம் முன் நாள் சரவணன் வந்து விட்டுப்போன விஷயத்தைச் சொன்னான்.

“அவன் கிடக்கிறான் கழுதை! அவனால் என்ன செய்துவிட முடியும்? பிச்சைக்கார நாய்! பஞ்சைப்பயல்! அவனைப்பற்றி இப்பொழுது என்ன பேச்சு? நேரமாக வில்லையா?...இன்னும் சிறிது நேரத்தில் மாப்பிள்ளையாகப் போகிறீர்! இனி உங்களுக்கென்ன கவலை? இன்றைக்கே புதுமணத் தம்பதிகள் வாழ்க்கையை ஆனந்தமாக ஆரம்பித்து விடுவீர்! ஆதலால் இப்பொழுதே நீங்கள் சொன்ன பிரகாரம் பத்மநாபன் எனக்குக் கொடுக்கவேண்டிய கடனைத் தாங்கள் தீர்க்கப் பத்திரம் எழுதி விடலாமே? ஏனென்றால், கடைசியில் யாதொரு தொந்தரவும் இல்லாமல் போய்விடு மல்லவா?” என்றார் தேவலிங்கம்.

ஆனால் சற்று நேரத்தில் நடக்கப்போகும் மணத்தைக் குறித்த மகிழ்ச்சியில் மனதைப் பறி கொடுத்திருந்த சச்சிதானந்தத்தால் அப்பொழுது பத்திரம் எழுதிக் கையெழுத்திட்டுக் கொடுக்க முடியுமா என்ன? மணம் முடிவடைந்ததும் பத்திரம் எழுதிக் கொடுப்பதோ, முடிந்தால் கடனையே தீர்த்து விடுவதோ—இவ்விரண்டிம் ஒன்றை நிச்சயம் செய்வதாகச் சத்தியம் செய்தான் சச்சிதானந்தம். அதனால் தேவலிங்கம் கிழவன் செய்த சத்தியத்துடன் திருப்தியடைய வேண்டியதாயிற்று!

பிறகு இருவரும் பத்மநாபன் வீட்டை அடைந்தனர். கலியாணத்தை முன்னிட்டு கலகலப்பாக இருக்கவேண்டிய அவ்வீடு நிசப்தமாக இருப்பதைக்கண்டு திடுக்கிட்டனர். கிழட்டு மாப்பிள்ளை சச்சிதானந்தத்தையும், மாப்பிள்ளைத் தோழன் தேவலிங்கத்தையும் மணக்கோலத்தில் வரவேற்க யாருமே முன் வராதது அவர்களுக்குக் கோபத்தையும் எரிச்சலையும் உண்டாக்கியது! இருவரும் மௌனமாக மேல்மாடிக்குச் சென்று, மாப்பிள்ளை, மாப்பிள்ளைத்தோழன் என்பதையும் மறந்து இரண்டு பகிரங்கப் பகற்கொள்ளைக்காரர்களைப் போல அறைக்குள் நுழைந்தனர். அங்கும் அமைதி ஆதிக்கம் கொண்டிருந்தது.

“கலியாணம் நடப்பதற்குப் பதில் கருமாந்திரம் ஏதாவது நடக்கிறதோ என்று பார்ப்பவர்கள் நினைத்துக் கொள்வார்கள், இல்லையா?” என்றான் சச்சிதானந்தம் தேவலிங்கத்தைப் பார்த்து முகத்தைச் சுளித்தவாறு.

அப்பொழுது பத்மநாபன் அவர்களுக்கெதிரே தடியை ஊன்றிக்கொண்டு தள்ளாடியவாறு நடந்து வந்தார். அவர் உடம்பு முன்னைவிட பலவீனமுற்றிருந்ததைக் கண்டனர் இருவரும். பத்மநாபன் ரொம்பவும் கம்மிய குரலில் அவர்களைப் பார்த்து, “நேற்று நான் எமன் வாயிலிருந்து எப்படியோ தப்பிவிட்டேன். ஆனால் இன்றைக்கும் தப்பி விடுவேன் என்று நிச்சயமாகச் சொல்ல முடியாது! அதோடு, பத்மாவும் உடல் நலமிழந்து படுக்கையாகக் கிடக்கிறாள்!’ என்றார்.

அதைக் கேட்டு சச்சிதானந்தத்திற்குப் பாதி உயிர் போய் விட்டது! தேவலிங்கம் திடுக்கிட்டார்! திருமணத்தன்று மங்கலச் சொல் ஒலிக்கவேண்டிய வீட்டில் கருமாந்திரம், எமன் ஆகிய அமங்கலச் சொற்கள் பரிமாறப் படுவதைக் கேட்டு தேவலிங்கம் திகைத்தார்!

“அது சரி. பத்மா தயாராக இருக்கிறாளா?’ என்றான் ஆவலுடன் சச்சிதானந்தம்.

“தயார் படுத்தி விட்டேன்! கட்டாயம் கலியாணம் நடந்தே தீரும். ஆனால்!...” என்று பேச்சை முடிக்கமாட்டாமல் தயங்கினார் பத்மநாபன்.

“ஆனால்... என்ன?” என்றான் சச்சிதானந்தம்.

“அவளுக்குக் காய்ச்சல்! இப்பொழுது கலியாணத்தை எப்படி நடத்துவது?”

“கலியாணமாகி விட்டால் காய்ச்சல் எல்லாம் பறந்துவிடும்! பேசிக்கொண்டே இருந்தால் நேரம் தவறிவிடும்! ரிஜிஸ்ட்ரார் ஆபிஸுக்குப் போகவேண்டுமே?”

உடனே தன் அறைக்குச் சென்றார் பத்மநாபன். மற்ற இருவரும் அது வரை அடக்கி வைத்திருந்த மூச்சை தாராளமாக விட்டுக்கொண்டே அருகிலிருந்த பெஞ்சியில் அமர்ந்து ஆவலுடன் எதிர்பார்த்திருந்தனர்.

அப்பொழுது அவர்களுக்குப் பின்னாலிருந்த மாடிப்படி வாயிலருகில் காலடி யோசை கேட்டுத் திரும்பிப் பார்த்தனர். அப்பொழுது சரவணனும், சீதாவும் வாசற்படியைத் தாண்டி உள்ளே வந்தனர்.

(அடுத்த இதழில் முடிவுறும்.)

" ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்

மன்மதவருஷ ஆவணிமீ கலியுகாதி 5057, சாலிவாகனம் 1878,

பசலி 1365, ஹிஜிரா 1374, கொல்லமாண்டு 1131,

இங்கிலீஷ் 1955 ஆகஸ்டு—1955 செப்டம்பர்மீ

ஆவணிமீ	ஆகஸ்டு ௴	வாரம்.	திதி.	நட்சத்ரம்.	அமிர்தாதி யோகம்.	விசேஷங்கள்
1	17	புத	●48-40	ஆயி44-20	சி60	ஸர்வத்ர-அமாவாசை
2	18	வியா	பிர43-43	மக41-13	அ41-13சி	அதிகபாத்ரபத சுத்தம்
3	19	வெ	துதி40-03	பூர39-22	சி60	சந்திர தரிசனம்
4	20	சனி	திரு38-00	உத்39-12	ம60	தாமச மன்வாதி
5	21	ஞா	சது37-45	அஸ்41-10	சி60	மாத சதுர்த்தி விரதம்
6	22	திங்	பஞ்39-25	சித்44-10	ம44-10அ	தேதி மழை
7	23	செவ்	சஷ்42-55	சு49-20	சி49-20ம	சஷ்டி உபவாசம், கன்னி யாயனம் நா-51-27
8	24	புத	சப்47-58	வி55-52	சி60	சூரியஸாவர்ணி மன்வாதி
9	25	வியா	அஷ்53-58	அ60-00	சி60	திரிதினஸ் ப்ருக், கரிநாள்
10	26	வெ	நவ60-00	,, 3-22	சி3-22ம	திரிதினஸ் ப்ருக்
11	27	சனி	,, 0-22	கே11-08	சி60	
12	28	ஞா	தச6-30	மூ18-32	அ18-32சி	
13	29	திங்	ஏ11-47	பூ25-00	ம60	
14	30	செ	து15-50	உத்30-15	ம30-15சி	
15	31	புத	திர18-17	தி33-55	சி33-55ம	
16	1955 செப்டம்பர் 1	வியா	சதி19-13	அ36-05	சி36-05ம	
17	2	வெ	○ப18-40	சத36-52	சி60	
18	3	சனி	பிர16-50	பூர36-38	ம36-38சி	
19	4	ஞா	துதி13-55	உட்35-05	அ60	
20	5	திங்	திரு10-15	ரே33-00	சி60	
21	6	செ	சது5-58	அசு30-22	சி60	
22	7	புத	பஞ்1-17 சஷ்56-20	❊ப27-28	சி27-28அ	மிருத்திகை விரதம், அவ மாகம்
23	8	வியா	சப்51-15	கிரு24-20	ம60	... ...
24	9	வெ	அ16-05	ரோ21-05	ம21-05சி	ஸ்ரீ ஜயந்தி, காலாஷ்டமி
25	10	சனி	நவ10-50	மிரு17-45	சி60	... ...
26	11	ஞா	தச35-35	திரு14-25	சி60	வ்ய-பிரா, எருவிட
27	12	திங்	ஏ30-28	புன11-08	அ11-08சி	சர்வ-மத்வ-ஏகாதசி
28	13	செவ்	து25-32	பூச8-00	சி60	பிரதோஷம்
29	14	புத	திர21-05	ஆயி5-15	சி60	மாத சிவராத்திரி, மாடு வாங்க
30	15	வியா	●ச17-20	மக3-07	அ3-07சி	ஸர்வத்ர-அமாவாசை
31	16	வெ	அம14-30	பூர1-50	சி60	கன்யாரவி நா-44-47, ஷட சீதி புண்யகாலம்

			கே
	4-ஸிம்-சுக் 5-விரு-ராகு 5-ரிஷ-கே 11-கன்-புத 28-கன்-சுக் 31-கன்-சூரி		புரே குரு சுக்
			சூரி அங் புத
ரா		செப் சனி(வ)	

சர்வ தேள் விஷ சஞ்சீவினி

(ரிஜிஸ்டர்ட் டிரேட் மார்க்)

நமது நாட்டிற்கு இது அவசியமாய் ஒவ்வொரு குடும்பத்திலும் சதா கையிருப்பில் இருக்கவேண்டிய ஓர் ஔஷதமாகும். இது ஆங்கில யூனானி தமிழ் வைத்திய நிபுணர்களால் நன்கு மதிக்கப்பட்டுள்ளது. இதை நாள்பட வைத்திருப்பதால் இதன் குணம் சற்றும் குறையாது. தேள், நட்டுவாய்க்காலி, செய்யான், பாம்பு, எலி முதலியவற்றின் விஷங்களை இரண்டொரு நிமிஷங்களில் இது அடியோடு நீக்கக்கூடியது. இது இரண்டுவித மருந்துகள் அடங்கியது. அதை உபயோகிக்கும் முறை மருந்தோடு அனுப்பப்படும்.

விலை:—இரண்டுவித மருந்தும் அடங்கிய பாக்கெட் 1-க்கு அணா 8. தபாற் கூலி 1—0—0 மூன்று பாக்கெட்டுகள் தருவித்தாலும் தபால் செலவு 1–0–0 தான். டஜன் 1-க்கு விலை ரூபா 5; தபாற் கூலி 1—8—0.

சுகபோதி மாத்திரை

இந்த மாத்திரையில் 2-முதல் 5-வரை தேக திடமறிந்து மாத்திரையைச் சாப்பிட்டு கொஞ்சம் ஜலம் சாப்பிடவும். இவ்விதம் சாப்பிட்டால் சுகமாய் பேதியாகிவிடும். மாத்திரையை அனுப்பும்பொழுது உபயோகிக்கும் முறையை தெரிவிக்கிறோம்.

25-மாத்திரை அடங்கிய புட்டி 1-க்கு விலை அணா 6. தபாற் கூலி 1—0—0
மூன்று புட்டிகள் தருவித்தாலும் தபாற் கூலி 1—0—0 தான்.

கண்நோய் மருந்து

இது கண்நோய், கண்குத்தல், கூசல், நீர் வடிதல் மங்கல், அந்திமாலை, பீளை கட்டல், சதை வளர்ந்திருத்தல், கண் சிவப்பு, எரிச்சல், கண் இமை புருவம் இவைகளில் வலி, கண் புகைச்சல் இவைகளைக் குணப்படுத்தும். மாணுக்கர்களுக்கும் ஆழ்ந்த பார்வையோடு வேலை செய்பவர்களுக்கும் இது மிகச் சிறந்த ஔஷதம். இதை உபயோகிப்பவர் கண்ணாடி போடவேண்டியதில்லை.

புட்டி 1க்கு அணா 10. தபாற் கூலி 1—0—0.

இரண்டு புட்டிகள் தருவித்தாலும் தபாற் கூலி 1—0—0 தான்.

தனலட்சுமி கம்பெனி,

நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை 1.

குன்மக் குடாரி

ஸ்டமக் பவுடர் :
ஆபரேஷன் தேவையில்லை.

சகலவித வயிற்றுவலியையும் Appendicitis என்னும் வயிற்றிலுண்டாகும் வியாதியையும், புண்களையும், வயிற்றை ஆபரேஷன் செய்யாமல் இம்மருந்து உட்தரவாதத்துடன் குணப்படுத்தும். இம்மருந்து மலையாள அஷ்டாங்க முறைப்படி தயார் செய்தது. (அல்சர்), அஜீரணம் மலபந்தம், குடலிரைச்சல், புளியேப்பம், வயிற்றுக் குத்தல், குடல் புண், ரணம், சதை வளர்தல், குலைக்கட்டி, ஈரலில் சதை வளருதல், குன்மம், சாப்பிடும் முன்னும் வயிற்றில் உண்டாகும் வலி இன்னும் பலவிதமான வியாதிகளையும் குணப்படுத்தும்.

30-நாள் 60-வேளை மருந்து விலை ரூபா 2-8-0
தபாற் கூலி 1—0—0.

ஸ்டீல் டிராப்ஸ் (STEEL DROPS)

பித்தரோகம் 40-க்கும் பாண்டு ரோகத்திற்கும் முதன்மை பெற்றது

இம் மருந்து உடலுக்கு வேண்டிய கொழுப்புச்சத்தும் உலோகச்சத்தும் சேர்த்து செய்யப்பட்டது, குணத்தில் சிறந்தது. முற்றிலும் உண்மையானது—தீரும் வியாதிகள் ரத்தக்ஷீண ரோகம், அல்லது பாண்டு ரோகம், மறதி, ஜீரணசக்திக்குறைவு, கைகால் எரிச்சல், தலை சுற்றல், உடம்பு சுடுதல், மயக்கம், பசியெடுக்காமல் பசிநிறுத்தல், புளியேப்பம், புளித்த தண்ணீர் வாயாலெடுத்தல், உடல் பெருத்தல் வயிறு உப்பிசம், பெருமல், வாயில் நீர் சுரத்தல், வாய் கசப்பு, மூத்திர நீர் மஞ்சளாக இருத்தல், கண் மஞ்சளாகுதல், நகம் மஞ்சளாகுதல், மஞ்சட் காமாலை. அன்னத்துவேஷம், தேகம் வெளுத்து இளைத்துப் போகுதல், உதடு-நாக்கு-ஈறு முதலியவைகள் வெளுத்திருத்தல், மார் துடிப்பு, நரம்புத் தளர்ச்சி, தேகத் தளர்ச்சி, பெருமூச்சுவிடுதல், ரத்தவிருத்தி, தேகத்தில் ரத்தமின்றி குன்றியிருத்தல், வயிற்றுக் குத்தல், வீக்கம், விக்கல், எப்போதும் சாப்பிட்ட மாதிரி இருத்தல், ஆயாசம், உடல் நடுக்கம், சோர்வு, விரக்தி காணுதல், நித்திராபங்கம், பெண்களுக்குக் காணும் சூதகப்பாண்டு, கண் மங்கல், பித்தவெடிப்பு, பித்த ஜுரம், மலச்சிக்கல், உஷ்ணம், வாய் புண், நெஞ்சுப்புண், பாண்டு எனப்படும் 40 வித பித்த, ரோகங்களையும் போக்கும். ரத்த சுத்தி, தேகபலம், ஹ்ருதய பலம், யௌவனம் முதலியவைகளைக் கொடுக்கும் சக்தி வாய்ந்தது.

20 நாள் 40 வேளை மருந்து விலை 2—8—0. தபால் கூலி 1—0—0

சிவப்பிரகாச காது நோய் மருந்து

சிவப்பிரகாச காது நோய் மருந்து, காது குத்தல், நீர்வடிதல் சீழ் வடிதல், இரத்தம் வடிதல் முதலான உபாதைகளுக்கு மிகச் சிறந்த மருந்து, நோயை கொடியிற் போக்கி, சீழ் வடிதலை உடனே நிறுத்துவதில் நிகரற்ற மருந்து. காது சம்பந்தமான எந்த நோயையும் போக்குவதில் இணையற்ற சஞ்சீவி. இதன் விலை அணா 12. தபாற் கூலி 1—0—0.

3-புட்டிகளுக்கும் தபாற் செலவு 1—0—0 தான்.

தனலட்சுமி கம்பெனி,

நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு சென்னை-1.

மலையாள அஷ்டாங்க ஆயுர்வேத முறைப்படி தயார் செய்தது.

மேகரோக நிவாரணி !

“ஏலிக்ஸ்சரன்”

(பத்தியம் கிடையாது; ருசிகரமானது)

இரத்த சுத்திக்கும் இரத்த விருத்திக்கும், தசை விருத்திக்கும், தாது பலத்துக்கும் இது ஒரு அமிர்த சஞ்சீவியாகும். நாள்பட்ட வெள்ளை, வெட்டை, மேகவியாதி, துர்நீர், மூலச்சூடு, நரம்புத் தளர்ச்சி, வீரியக் குறைவு, லிங்கப் புண், லிங்கப் புற்று, மேகப்படைகள், உடம்பு ஊரல், அஜீரணம், மலச்சிக்கல், கைகால் நோவு, மயக்கம், இடுப்பு வலி, மூத்திரநோய், மூத்திரத்துடன் இந்திரியம் நீர்த்துப் போகுதல் முதலிய எல்லாவிதமான மேக வியாதிகளைப் போக்கி, இந்திரியத்தை இறுகச் செய்து மனோ உற்சாகம் மேனிப் பிரகாசம், குழிவிழுந்த கண்களையும் ஒட்டி உலர்ந்துபோன கன்னங்களையும் வசீகரமாக்கி புத்துயிர் அளித்து, யௌவனத்தை தரும். ஆண் பெண் யாவரும் சாப்பிடலாம்.

20-நாள் மருந்து 40-வேளைக்கு ரூபா 2—4—0.
தபாற் கூலி 1—0—0.

காசா

'காசம், இருமல்,' க்ஷயம் முதலிய வியாதிகளுக்கு தலை சிறந்த ஔடதமாகும். (இம் மருந்து மலையாள அஷ்டாங்க முறைப்படி தயார் செய்தது.) இருமல், காசம், இளைப்பு, ஈளை, கபம் குரலடைப்பு, தொண்டைக் கம்மல், தொண்டை வலி, மார் தடிப்பு மார்பிலும், தொண்டையிலும், சுவாச நாடிகளிலும், குழாய்களிலும் ஏற்படும் ரணங்களை ஆற்றி, இருமலைத் தனியச் செய்து மபத்தை அறவே ஒழித்து, குணப்படுத்தும்.

30-நாள் 60-வேளை மருந்து
விலை ரூபா 2—8—0. தபாற் கூசு 1-0-0.

(காட்லிவர் ஆயில்) மீன் எண்ணெய்

இது பலத்தை உண்டாக்குகிறது. தவிர இருமலினால் உண்டாகும் இளைப்பையும் அடக்கும். இளைத்தவர்கள் உபயோகித்தால் தேகம் புஷ்டியாகும். இரத்தத்தைச் சுத்தி செய்யும்; சுவாசங்களின் ரோகத்தை குணப்படுத்தும், சரீரத்தினுடைய ஒவ்வொரு பாகத்துக்கும் பலத்தைக் கொடுக்கும். இதைக் குழந்தைகளுக்கும் கொடுக்கலாம். புட்டி 1-க்கு 1-4-0. அஸ்போ பாஸ்பெட் சேர்ந்தது. 1—8—0. தபாற் கூலி 1—0—0.

தனலட்சுமி கம்பெனி,

நெ. 6. லாயர் சின்னதம்பி முதலி தெரு, சென்னை-1.

தமிழ் நாவல்களும் கதைப் புத்தகங்களும்

ஆரணி-குப்புசாமி முதலியார் இயற்றியவை

	ரூ.	அ.
ரத்தினபுரி ரகசியம் 9-பாகமும்	18	14
ஞானசெல்வாம்பாள் 5-பாகம்	9	10
கற்பகச் சோலையின் அற்புதக் கொலை ...	2	0
கடற்கொள்ளைக்காரர் 2-பாகம்	4	0
மதனம்பாள் 2-பாகம் ...	4	0
லோகநாயகி ...	1	0
விளையாட்டுச் சாமான் ...	1	6
பவளத்தீவு 2-பாகங்கள் ...	3	12
தபால்கொள்ளைக்காரர்கள் ...	1	0
அமராவதி 2-பாகங்கள் ...	5	0
மஞ்சள் அறையின் மர்மம் ...	2	0
கற்கோட்டை ...	2	8
பூங்கோதை ...	0	12
வீரநாதன் ...	0	12
கனகபூஷணம் 2-பாகமும் ...	4	0
கமலசேகரன் ...	2	8
தினகரசுந்தரி ...	1	8
சந்திரபுரி ...	2	8
இராஜாமணி ...	2	8
இராஜிபாய் ...	2	8
மதனபூஷணம் ...	2	0
சுவா[illegible]ம்பாள் ...	0	12
தேவசுந்தரி ...	2	0
குணசுந்தரம் ...	1	0
பத்மாஸனி ...	1	0
ஆனந்தஸிங் ...	2	0
மின்சார மாயவன் ...	2	0
ஆனந்தசிங்கின் அஷ்டஜயங்கள்	2	0
அரசூர் இலக்ஷ்மணன் ...	3	0
கைவல்லிய நவநீத வசனம் ...	2	4
சகோதரவாஞ்சை ...	0	5
கம்பராமாயண வசனம் ...	4	0
ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சருடைய சரித்திரமும் உபதேசங்களும்	3	8
விவேகானந்தர் சரித்திரம் ...	5	0
தமிழ் மெடீரியா மெடிகா ...	3	8
மாதவி மாதவன் 2-பாகம் ...	2	4
மலையாள பகவதி ...	1	4
அற்புத நவநீத ரம்மை ...	1	8
அகட விகட விலாச விநோதம்	0	10
சிமாட்டி கார்த்தியாயினி ...	0	14

	ரூ.	அ.
தாசி ரமணி ...	1	8
உயிரோவியம் ...	1	8
யான் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன் ...	2	0
இவ்வுலகை திரும்பிப்பாரேன்	1	12
சிலப்பதிகார ஆராய்ச்சி ...	2	0
ஆர்ய மத சித்தாந்தம் ...	3	0
பூலோக லக்ஷ்மி கதை ...	0	14
கனகரத்தினம் ...	0	12
கண்டிராஜா நாடகம் ...	0	12
குசேலோபாக்கியான வசனம்	1	0
உதயணன் ...	0	6
தசக்ரீவன் ...	0	14
போஜ சரித்திரம் ...	0	5
சதானந்தர் ...	1	4
கர்ணன் சரிதை ...	0	12
பீஷ்ம விஜயம் ...	0	10
கீர்த்திசிங்கன் ...	0	7
[illegible]பெருந்தாசர் ...	0	10
அ[illegible]ந்திரன் சரிதை ...	0	8
[illegible]ளன் ...	0	3
பரசுரா[illegible]ன் ...	0	3
சிசுபா[illegible]ன் ...	0	8
அம்[illegible]ன் ...	0	4
த[illegible]வதார மகிமை ...	0	8
கிருஷ்ணன் தூது வசனம் ...	0	6
சண்டோபாக்யானம் ...	0	6
கருணாகரரும் சத்தியசீலரும் ...	0	8
சத்தியவசனம் ...	0	4
விமலன் ...	0	4
கண்ணபிரான் ...	0	4
செய்யுட்பாடத்திரட்டு ...	0	4
நாலு மாதிரி கதை ...	0	4
மங்களேசுவரன் ...	0	6
தக்கன் ...	0	6
சிமந்தனி ...	0	8
நான்குகோடி ...	0	4
மதிமோசவிளக்கம் ...	1	0
மெய்க்காதலி ...	0	12
மேனாமினுக்கி கதை ...	0	12
வீணாகானன் ஞானேந்திரி ...	0	8
கோமளவல்லி கதை ...	0	12
விகடவல்லி கதை ...	0	6
தாலிகட்ட மறந்த கதை ...	0	7

இந்திர கவசமென்னும் சர்வ தேவதா வசியம் விலை ரூபா 1—4—0

ஆனந்தபோதினி ஆபீஸ், தபால் பெட்டி நெ. 107, மதராஸ்.

சென்னை-600 073
NSS-4/1 1-2

"ஜீவா" இட்டிய

எழுத்து ஓவியங்கள்

[யா]ன் ஏன் பெண்ணாய்ப் பிறந்தேன்?

விலை ரூ. 2 0 0.

இவ்வுலகைத் திரும்பிப் பாரேன்?

விலை ரூ. 1-12-0.

தாசி ரமணி

விலை ரூ. 1-8-0.

உயிரோவியம்

விலை ரூ. 1-8-0

காதலா? காதகனா?

விலை ரூ. 1-4 0.

சிமாட்டி கார்த்தியாயினி

விலை அணா 14.

[ஒவ்]வொரு புத்தகத்துக்கும் தபால் சார்ஜ் ரூ. 0-11 0.

6-புத்தகங்களுக்கும் தபால் சார்ஜ் ரூ. 2-0-0

ஆனந்தபோதினி ஆபீஸ்,

தபால்பெட்டி நெ. 167, மதராஸ்.

Regd. No. M 1190.
Registered as a News Paper in C

இந்தி
கார்கள
நாள்
கூடிய
ம் ெ
விலை
போ
13.43
ரூ. 4
ஜ ர்

தற்காலத்தில் மனிதர்க
பால்ய சேஷ்டையாலும், இ
த்தப் போக்காலும் அவர்க
படுகின்ற 20-வகை ரோக
கள், சூலைரோகம், குன்மரோகம், பித்தபாண்டு,
கை கால் முடக்கு, மூக்காய்வு, பித்த ஏப்பம், நெஞ்
தொண்டை எரிச்சல், வயிற்றுப்புசம், அஜீரணம்,
பசியில்லாமை, தாதுவீனம், தேக உளைச்சல், கண்
ணில் நீர்வடிதல், சோம்பல், நித்திரை இல்லாமை
தலை சுழற்றல், நீர் இறங்குதல் போன்ற பொறுக்க
முடியாத பாதையைத் தரும் தந்தி ரோகம் முதலி
வைகளை ஆச்சரியப்படத்தக்க விதமாய்
விடும். இதற்கு இணையான லேகியம்
க்குமில்லை.

ஆரோக்கியத்தைத் தருவதேது?

அமிர்த சஞ்சீவி லேகியம்

அயக்காந்த செந்தூரம்

னலட்சுமி கம்பெனி, 6. லாயர்சின்னதம்பிமுதலி தெரு.

Edited Printed and Published by N. MUNISWAMI MUDALIAR, a... Chinnathambi...